293

T.N.L.C. Debates

Official Report

1983

Vol: CXCII

No: 1, 2, 3

D
V211,32'N83
N83.192.1-3
143132

293

T.N.L.C. Debates
Official Report

1983

Vol: LXCII

No: 1, 2, 3

D
V211,32'N83
N83.192.1-3
143132

(283)

[ISSUED 22—8—1983

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
EGMORE MADRAS-8

TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

MONDAY 7th FEBRUARY 1983

Volume CXCII (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009

Price *Rs.* 2.75 *Paise*]

(283)

பொருளடக்கம்

7—2—1982

பக்கங்கள்

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. i—v

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் vii

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. .. .. ix—xi

1. வினாக்கள்-விடைகள் 1—24

2. கவன ஈர்ப்பு—

தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேவையான டாக்டர்கள் இல்லாதது குறித்து .. .. .. 24—26

3. அரசின் தீர்மானம்—

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. 27—28

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 28—57

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 58—59

143132
600 008.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Khadi and Public Works in charge of Kadhi, Prohibition excluding grant of liquor Permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தொல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், மற்றும் இரும்பு, எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை, சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வளங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வாங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந்தொழில்கள், சுரங்கமும்–கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—

கதர், மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுது பொருள்–அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. புலவர் புலமைப்பித்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. பி. டெல்லிதுரை, பி. எஸ். சி., பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி. எல்., பி. எல.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்,

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அருணாசலம், திரு. க. ..	நியமனம்.
2 ஆறுமுகம், திரு. சோ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
3 ஆற்காடு தா. வீராசாமி, திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆனந்தம், திரு. வி.வி.வி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
6 இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்). ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராதா, திரு. எஸ். ஆர்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
8 இராமமூர்த்தி, திரு. க.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
9 இராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 சங்கரலிங்கம், திரு. ம. எம். ஏ. ..	திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
12 சந்தோஷம், திரு. த. எம். ஏ. பி. எல்.	தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி.
13 சனார்த்தனம், டாக்டர் இரா. ..	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). ..	நியமனம்.
15 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி.	நியமனம்.
16 சீத்தாபதி, திரு. ஆர். டி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
17 சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம்.	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
18 தாமஸ், திரு. பா. ரா. ..	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
19 தாமோதரன், திரு. ஏ. ஆர். ..	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
20 தாரா செரியன், திருமதி.	நியமனம்.
21 தாஸ், திரு. ஏ. ஜே. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
22 துரைசாமி, திரு. ஓ. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
23 நல்லசிவன், திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
24 நீலநாராயணன், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
25 ஜேப்பியார், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
26 புலவர் புலமைப்பித்தன், (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)	நியமனம்.
27 மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி.	நியமனம்.
28 மாணிக்கம், திரு. ப. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
29 மியாகான், திரு. ஜே. எம்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
30 மீனாட்சிசுந்தரம், திரு. க.	தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி.
31 முத்து, திரு. எஸ். ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
32 முத்துசாமி, திரு. செ. ..	சேலம்,தர்மபுரி, கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி.
33 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ.	நியமனம்.
34 முனுசாமி, திரு. பி. ..	நியமனம்.
35 லீலாவதி செல்வி, ஆ. ..	சென்னை, செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
36 லட்சுமிகாந்தன், திரு. சி. ரா. ..	வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி.
37 வசந்த பை, திரு. ஜி. ..	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
38 வள்ளிமுத்து, திரு. சு. வெ. அ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
40 வெங்கடேசன், திரு. சு. எஸ்.	நியமனம்.
41 ஹண்டே, டாக்டர் எச். வி.	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
42 வெற்றிடம் ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
43 ஷை	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
44 ஷை	ஷை
45 ஷை	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46 ஷை	ஷை
47 ஷை	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
48 ஷை	ஷை
49 ஷை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 ஷை	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 ஷை	கோயம்புத்தூர் நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52 ஷை	ஷை
53 ஷை	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54 ஷை	ஷை

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.		தொகுதி.
(1)		(2)
55	வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56	ஷை	ஷை
57	ஷை	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58	ஷை	ஷை
59	ஷை	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60	ஷை	ஷை
61	ஷை	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62	ஷை	ஷை
63	ஷை	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1983 பிப்ரவரி 7.

தை 25, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை நகரில் மின்சார வாரிய பல மாடிக் கட்டிடம்.

*41. வினா—திரு க. அருணாசலம் **(திரு. ஏ. ஜே. தாஸ் சார்பில்):** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை நகரில் மின்சார வாரியத்தின் பல மாடிக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

(இ) கட்டி முடிக்கப்பட்டபின், சென்னையில் வாடகைக் கட்டிடத்தில் உள்ள மின்சார வாரியத்தின் பல்வேறு அலுவலகங்களையும் இம்மாடிக் கட்டிடத்திற்குக் கொண்டுவர செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) அவ்வாறு கொண்டு வருவதன் மூலம் மின்சார வாரியத்திற்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1983-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் முழுதும் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) மின் வாரியத்தின் தலைமையாக அலுவலகங்கள் (களப்பணி அலுவலகங்கள் நீங்கலாக) புதிய பத்து மாடிக் கட்டிடத்திலும் மின் வாரியத்தின் வளாகத்தில் உள்ள மற்ற கட்டிடங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

(உ) தற்போதுள்ள நிலவரப்படி மாதம் ஒன்றுக்கு சுமாராக ரூ. 58,110 சேமிப்பு கிடைக்கும்.

செப்புக் கம்பிகள்.

* 42. வினா—திரு. க. அருணாசலம் (திரு. எ. ஜே. தாஸ் சார்பில்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மின்சார வாரியத்தில் செப்புக் கம்பிகளுக்குப் பதிலாக அலுமினியக் கம்பிகள் தற்போது உபயோகிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், தற்போது மின்சார வாரியத்திடம் பயன்படுத்தப் படாமல் இருக்கும் செப்புக் கம்பிகளின் மதிப்பு எவ்வளவு ?

(உ) அவற்றை விற்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) எடை சுமார் 525 மெட்ரிக் டன் ஆகும். தற்போது மதிப்பீடு செய்ய இயலாது.

(உ) இவற்றை விற்க மின் வாரியம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

திரு. ம சங்கரலிங்கம் : செப்புக் கம்பிகளுக்குப் பதிலாக அலுமினியக் கம்பிகளைப் பொருத்துவதால் மின் கடத்தலின் தரம் குறையாமல் இருக்கிறதா ? அதில் இழப்பு ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : செப்புக் கம்பிக்கு ஈடாக அலுமினியக் கம்பி இருக்காது. மின்சாரத்தைக் கடத்தும் தரம் அலுமினியக் கம்பியில் ஓரளவுக்குக் குறைவுதான். செப்புக் கம்பியின் விலை அதிகம். அதோடு மட்டுமல்லாமல், அந்தக் கம்பியை திருடர்கள் வெட்டி எடுத்துக் கொண்டு போகிறார்கள். அந்த நிலைமைகள் இதில் குறைவு.

திரு. ம. சங்கரலிங்கம் : செப்புக் கம்பியின் அளவுக்கு அலுமினியக் கம்பி தரம் இல்லாமல் இருப்பதால், மின் இழப்பு ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. மேலும் செப்புக் கம்பியைத் திருடிக்கொண்டுபோய்விடும் வாய்ப்பும், அது சம்பந்தமான தொல்லையும் இருப்பதால் திருட முடியாத அளவுக்கு தேவையான அமைப்புக்களை அமைத்து, திருட வருபவர்கள் அங்கேயே இறந்துபோய்விடும் நிலைமைகளை ஏற்படுத்தி, நம்முடைய கையில் இருக்கும் செப்புக் கம்பியை விற்காமல் அவைகளையும் பயன்படுத்தும் அளவுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவைகள் எல்லாம் பயன்படுத்த இயலாதவைகள். அப்படிப்பட்ட செப்புக் கம்பிகளைத்தான் விற்கின்றோம். திருடுகிறபோதே ஆபத்தை விளைவிக்கக்கூடிய நிலைமையை உருவாக்க வில்லை. இப்போது எல்லாம் விஞ்ஞானத் திருடர்கள் காலம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அப்படியே செய்தாலும், அவர்கள் மின்சாரத்தை நிறுத்திவிட்டு திருடிக்கொண்டு போய்விடுவார்கள். இருந்தாலும், மின் இழப்பைத் தவிர்க்க சாதாரண சிறிய செப்புக் கம்பியைப் போட்டு, அலுமினியத்தைப் பெரிய கம்பியாகப் போட்டால், இந்த இழப்பு சரியாகிவிடும்.

தலைஞாயிறில் துணைப்பதிவாளர் அலுவலகம்.

* 43. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு வணிகத்தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றை அமைக்க கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (இ) 1—6—1982 முதல் புதிய சார்பதிவாளர் அலுவலகம் தலைஞாயிறில் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைஞாயிறிலே ஏற்பட்டு செயல்பட்டு வருகின்ற சார்பதிவகத்திலே ஏறத்தாழ 17 கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தலைஞாயிறுக்குச் சுற்றுவட்டாரத்திலே பக்கத்திலே இருக்கும் பல ஊர்கள்—அதாவது திருத்துறைப்பூண்டிக்கும், வேதாரண்யத்துக்கும், திருப்பூண்டிக்கும் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. திருத்துறைப்பூண்டி சார்பதிவகத்திலே சேர்க்கப்பட்டுள்ள உம்பளச்சேரி, துளசாபுரம், நீர்முளை, நத்தப்பள்ளம், சித்தாய்மூர் ஆகிய ஊர்களையும் வேதாரண்யம் சார்பதிவகத்திலே சேர்க்கப்பட்டுள்ள கன்னிமேடு, நாலுவேதபதி ஆகிய கிராமங்களையும், திருப்பூண்டி சார்பதிவகத்திலே சேர்க்கப்பட்டுள்ள வெண்மணச்சேரி, திருவாய்மூர், ஆலங்குடி கிராமங்களையும் தலைஞாயிறு சார்பதிவகத்திலே சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ? அவைகளைச் சேர்க்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அப்படி மனு அனுப்பியிருந்தால், அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 'மனு அனுப்பப்பட்டிருந்தால்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே கோரிக்கை எழுப்பப்பட்டு பதில் தரப்பட்டிருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எழுப்பப்பட்ட பொருளை அரசுக்குத் தெரிவிக்கும் வழக்கம் இல்லையா? அப்படி இல்லையென்றால், இனிமேலாவது அந்தப் பழக்கத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்த விவரங்கள் ஆட்சியரிடத்திலே இருக்கும். நான் அந்தத் தகவல்களைக் கேட்டு நடவடிக்கை எடுக்கிறேன்.

பால் பெருக்குத் திட்டம்.

* 44. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (இ) தஞ்சை மாவட்டம், பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் (Operation food II) அமையவில்லை. ஆகவே பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் (Operation flood II) யாதொரு தொகையும் அதற்காக ஒதுக்கப்படவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சை மாவட்டத்திலே விவசாய காலம் தவிர மற்ற காலங்களிலே எப்படி இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைச் சேகரித்துப் பார்த்தால் தெரியும் ஏனைய இடங்களைவிட அதிகமான அளவிலே பால் உற்பத்தியாகும் நிலைமை அங்கே இருக்கிறது. இப்போது நாரமங்கலம், மதுக்கூர், மன்னார்குடி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலே கூட 5 கோடி ரூபாயை இரண்டு மாத காலத்திலே செலவழிக்க வேண்டும் என்று சொல்லி அரசு நிதி ஒதுக்கியதால், அந்தத் தொகையை 2 மாதத்திற்குள்ளே

செலவழிக்க வேண்டும் என்று இந்த மாவட்டத்திற்கு உள்ளேயே மாடுகளைத் தேடி, அங்கே மாடுகள் மிகவும் கிராக்கியாகி, அந்த அளவிலே பணம் செலவிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே பால் அபிவிருத்தித் திட்டம் இல்லாவிட்டாலும் கூட, அதற்காக ஒதுக்கப்படும் தொகையை ஆண்டு முழுவதுமாகச் செலவு செய்து கொள்வதற்கும் அனுமதிக்கு இருக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குச் சொன்னால் தான், அது பயன்தரும். ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் பெருக்கத் திட்டத்தின்கீழ் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், தமிழக அரசு தன்னுடைய சொந்தத் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து பால்வளப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்து வருகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதோடு மாநில அளவிலே, இந்தப் பெருக்கத் திட்டத்திற்கு மாநாடு அமைத்து அதற்கு அகில இந்திய அளவிலே கருத்து பெறும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்தினுடைய பால்வளப் பெருக்கத்திற்கு பல நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. ஒன்று, தஞ்சாவூர் நகரில் 7 லட்சம் ரூபாய் அளவில் கூட்டுறவுப் பால் வள ஒன்றியத்தில் பால் பக்குவிக்கும் தொழிற்சாலையை விரிவுபடுத்த உதவி செய்துள்ளது. இரண்டாவது, பட்டுக்கோட்டையில் 5 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (ஐ.ஆர்.டி.பி.) கீழ் பால் குளிரூட்டும் சில்லிங் சென்டர் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, தஞ்சாவூர் நகரில் பாலித்தின் பைகளில் பாலை நிரப்பி விநியோகிக்கும் சாதனம் அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நான்காவதாக, புதிதாக 500 பால் கூட்டுறவுச் சங்கங்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலே விரைவிலே அமைக்கப்படவிருக்கின்றன. அதற்காக ஒரு Spear Head Team துரிதமாக வேலைசெய்து வருகிறது. ஐந்தாவதாக, கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சை செய்ய தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவது நடமாடும் கால்நடை மருந்தகம் பட்டுக்கோட்டையில் செயல்பட இருக்கிறது. ஆறாவதாக, உறைவிந்து (Frozen Semon) இப்போது பெருமளவிலே தயாரிக்கப்பட்டு தஞ்சாவூர்

மாவட்டத்திலே இருக்கும் நாஞ்சிக்கோட்டை கால்நடைப் பண்ணையில் 1 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. இதன் மூலமாக, மேலும் பல கால்நடைகள் தஞ்சாவூர் மாவட்டத்திலே தோன்ற வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.) மூலமாக இன்றைக்கு ஆயிரக்கணக்கான கால்நடைகள் விவசாயிகளுக்கு வாங்கித் தரப்பட்டு உள்ளன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சாவூர் பால் பெருக்கத் திட்டத்தின்கீழ் வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் இல்லாவிட்டாலும், அந்தப் பகுதியில் செய்யப் பட்டிருக்கின்ற அது தொடர்பான பணி பற்றி அமைச்சர் இங்கே இந்த அவையிலே சொன்னது உண்மையிலேயே மனநிறைவைத் தருகிறது. கால்நடைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே ஏறக்குறைய 8 லட்சம் கால்நடைகள் இருக்கின்றன. அவைகளில் 30 ஆயிரம் மாடுகள் இப்போது புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தான் வாங்கப் பட்டிருக்கின்றன. இவைகள் மேய்வதற்கு குறைந்த அளவுக்கு 25 ஆயிரம் ஏக்கர் மேய்ச்சல் நிலம் தேவை. ஆனால் இப்போது 1 ஆயிரம் ஏக்கர் மேய்ச்சல் நிலம் கூட இல்லை. ஆகையால், அங்கே இருக்கும் கால்நடைகள் இப்போது அழிந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கே மேய்ச்சல் நிலத்தை அதிகப் படுத்தும் திட்டம் இந்த அரசிடம் இருக்கிறதா? மேலும் ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் அரசாங்கம் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தஞ்சை மாவட்டம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் உட்படுத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நமது மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்கள் பால் பெருக்குத் திட்டத்திற்குள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன? அவ்வாறு உட்படுத்தப்படுவதற்கான விதி முறைகள் யாவை? தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம் மாவட்டம் அவ்விதி முறைகளுக்கு அப்பாற்பட்டு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழகத்தில், தஞ்சை, திருச்சி, நீங்கலாக 9 முகவை, நெல்லை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக் மாவட்டங்கள் பால்வள பெருக்குத் திட்டத்தின்கீழ் கின்றன. 1971 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல்பட்டு வருகிற காரணத் தால், எந்த அடிப்படையின் கீழ் இவைகள் கொண்டுவரப்படுகின்றன என்ற விவரம் என்னிடம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Grade I Tamil Pandits

* 45. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that, as per G.O. Ms. No. 1828, Education, dated 19th August 1976, two-thirds of the vacancies in the category of Tamil Pandits, Grade I, should be filled up by promoting qualified candidates of teachers in service; and

(b) if so, the reasons for not implementing this order in Dindigul Municipality and the action to be taken thereon?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) அரசு ஆணைப்படி நியமனம் செய்ததால், இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திண்டுக்கல் நகராட்சியைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அரசாணை செயல்படுத்தப்படவில்லை என்ற விவரம் எங்களுக்கு வந்திருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக் கிறதா? இதுவரை அது கொண்டுவரப்படவில்லை என்றால், திண்டுக்கல் நகராட்சிக்குத் தக்க அறிவுரைகள் வழங்கி அரசாணையை அமல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இவ்வினாவை எழுப்பியதன் மூலம்தான் எனக்கே இத்தகைய தகவல்கள் எல்லாம் கிடைத்தன. ஆகவே, இனிமேல் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 7

விளம்பர வரி.

* 46. வினா—திரு. சி. இராமலிங்கம் (திரு. ஜேப்பியார் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் பொது இடங்களில் வணிக விளம்பரங்களுக்கு வைக்கப்படும் தட்டி மற்றும் அட்டைகளுக்கு கட்டணம் ஏதேனும் வசூலிக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், இத்தொகையினை மாநகராட்சி நேரடியாக வசூலிக்கிறதா ? அல்லது முகவர் மூலம் வசூலிக்கிறதா ?

(உ) மாநகராட்சியே நேரடியாக இதனை வசூலிப்பதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் வைக்கப்படும் தட்டி மற்றும் அட்டைகளுக்கு நேரடியாக விளம்பர வரி வசூலிக்கப்படுகிறது. இருப்பினும் சாலையோரங்களில் உள்ள மரங்களின் மீதும் சென்னை மாநகர மின்சார விளக்குக் கம்பங்களிலும் தொங்கவிடப்படும் தட்டி மற்றும் அட்டைகள் இவற்றிற்கான உரிமங்கள் பொது ஏலத்தில் விடப்பட்டு அதிகத் தொகை ஏலத்தில் கேட்பவர்களுக்கு வழங்கப்படுகிறது.

(உ) தற்போது இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் பேனர்கள் என்று சொல்லப்படும் தகரங்களாலான விளம்பரப் பலகைகள் பல்வேறு இடங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக வைக்கப்படுகின்றன. அவைகளுக்கான கட்டணங்களை வசூலிப்பதில்கூட தடைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அரசு இதில் தலையிட்டு, இவ்வாறு விளம்பரப்படுத்துவதற்காக ஆயிரக் கணக்கான ரூபாய் வாடகை வசூலிக்கும் தனியார்களிடமிருந்து அரசே இப்பணியை மேற்கொள்ள முன்வருமா ? அல்லது இவ்வாறு விளம்பரப்படுத்துவதை அரசே ஏலத்திற்கு விட்டு முறையான வகையில் வரி வசூல் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சென்னை நகரைப் பொறுத்தவரையில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஏற்கெனவே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியும் இதுபோன்ற விளம்பரங்களைச் செய்பவர்களிடமிருந்து, ஏலத்தில்

1983 பிப்ரவரி 7]

விடுவதன் மூலம், அதற்கான தொகையை வசூலிக்கிறது. நெடுஞ்சாலைகளில் உள்ள தட்டிகள் பேனர்கள் (ஹோர்டிங்ஸ்) போன்றவைகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்காகத் தனியாக சார்ஜஸ் வசூலிக்கப்படுகின்றன. மாநகராட்சியின் மூலமாக எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் எடுக்கப்படுகின்றன. போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடைஞ்சலைத் தனியார் தங்களின் சொந்தச் செலவில் விளம்பரம் செய்து வரி ஏய்ப்பு செய்கிற நிலைமை இருந்தால், அவைகள் கடவடிக்கையாகக் கண்காணிக்கப்படும்.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் கவர்ச்சிப் படங்களை விளம்பரப்படுத்துவதன் காரணமாக, டாக்சிகள், ஆட்டோக்கள் போன்றவற்றில் போகிறவர்கள் அவைகளை அதிசயமாகப் பார்த்து நிற்பதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அத்தகைய பார்த்து நிற்பதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அத்தகைய விளம்பரங்களை அப்புறப்படுத்த அரசு முன்வருமா ? அடுத்து, அறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் சிலைகளுக்குக் கீழ் தட்டிகளை ஒட்டி அசிங்கப்படுத்துகிறார்கள். அதைப் போக்க அரசு விளம்பரப்படுத்தி அசிங்கப்படுத்துகிறார்கள். அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் போன்றவர்கள் அத்தகைய ஆபாசக் காட்சிகளைப் பார்க்காமல் இருப்பதுதான் நல்லது. அப்படி ஆபாசக் காட்சிகள் விளம்பரப்படுத்தப்பட்டால், அரசாங்கம் அவை குறித்து தனியாக நடவடிக்கை எடுத்து [illegible] வருகிறது.

சுவரொட்டிகள் ஒட்ட வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சிக்கு ஏற்கெனவே அதற்குரிய வரியைச் செலுத்தி அனுமதியைப் பெற்று பிறகுதான், அவைகள் ஒட்டப்பட வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. இவ்வாறு உரிய அனுமதி பெறாமல், வரி செலுத்தாமல் தட்டிகளை ஒட்டியிருந்தால், அத்தகைய சுவரொட்டிகள் மீது இப்போது சாயத்தைப் பூசி அவைகள் தெரியாதவண்ணம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. சு. எஸ். வெங்கடேசன் : ஆபாசம் என்றால், என்ன ? ஆபாசக் காட்சிகள் என்று வரையறுத்து ஏதேனும் விதிமுறைகள் அல்லது வரைமுறைகள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆபாசம் என்பது அவரவர்களின் கண்களைப் பொறுத்தது, பார்வையைப் பொறுத்தது. சிலருக்கு அவை கவர்ச்சியாகத் தெரியும். எனவே ஆபாசம் என்பது அவரவர்களின் மனதைப் பொறுத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற குடிநீர்த் திட்டம்.

* 47. வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் கிராமப்புற குடிநீர் திட்டப் பணிகளுக்காக டென்மார்க் நாட்டின் உதவியைப்பெற மத்திய அரசு மூலம் மாநில அரசு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (இ) சேலம், தென் ஆற்காடு மாவட்டங்களில் குடி நீர் தட்டுப்பாட்டிற்குட்பட்ட 788 சிறு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், திண்டிவனம் மற்றும் திருச்செங்கோடு நகராட்சிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தவும், ஒரு கூட்டுத் திட்டம் ரூ. 12.65 கோடி செலவில் உருவாக்கப் பட்டு இத்திட்டத்திற்கு 'டானிடா' உதவிபெற வழிவகை செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு கேட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 788 கிராமங்களில் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் எத்தனை, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்கள் எத்தனை என்ற விவரத்தை அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதில் ஏற்கனவே ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 'Pruning of the plan is necessary' என்று சொன்னார்கள். இதற்காக ஒரு பேச்சுவார்த்தையே நடைபெற்றது. அதில் மத்திய அரசின் நிதித் துறையின் இணைச் செயலாளர், பொருளாதார விவகாரத் துறையைச் சார்ந்தவர் மற்றும் நமது நல்வாழ்வுத்துறைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு ரூ. 59 கோடிக்கு ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அத்திட்டம்

அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, ஒரு 'பிராக்மாட்டிக்' முறையில் திட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதோடு அந்த கிராமங்கள் "பிராப்ளம் வில்லேஜ்" என்று அடையாளம் காட்டி, இத்திட்டத்தைக் குறைத்து அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசின் கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில்தான் தற்போது தென் ஆற்காடு மற்றும் சேலம் மாவட்டங்களுக்குச் சரியான கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இத்திட்டத்திற்கு உதவி செய்ய டென்மார்க் நாடு முன்வந்த பிறகும், இத்திட்டம் தொடங்கப்படுவது இன்னும் தாமதப்படுத்தப்படுவதற்கான காரணம் என்ன ? டென்மார்க் அரசு இதற்குக் காரணமா அல்லது நமது மத்திய அரசு காரணமா ? இது குறித்த பேச்சுவார்த்தைகள் எந்த அளவில் இருக்கின்றன என்ற விவரம் தெரிவிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முதலில் எழுப்பப்பட்ட வினாவிற்கு, விவரமாகவும், விளக்கமாகவும் பதில் அளிக்க விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், 383 பிராப்ளம் வில்லேஜ்களும் சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரை, 405 பிராப்ளம் வில்லேஜ்களும் தேர்வு செய்யப்பட்டன. ஏற்கெனவே தென்னாற்காடு மாவட்டத்தில் 4,626 கிராமங்களும், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 4,654 ஹேபிடேஷன்களும் இருக்கின்றன. இதைத்தான் சரியாக இருக்கின்றது என்று நான் குறிப்பிட்டேன். இந்த டேனிடா திட்டம் மத்தியப் பிரதேசத்திற்கும் தமிழகத்திற்கும் மட்டும் கொடுக்கப்பட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே தெரிவித்திருப்பதைப்போல் "மினி எமர்ஜென்சி" டைம் வந்தபோது—பிப்ரவரியில் தொடங்கி மே மாதத்திற்குள்ளாக, 4 மாதங்களுக்குள்—இத்திட்டத்தைத் துரிதப்படுத்தப்பட வேண்டிய நல் வாய்ப்பை நழுவ விட்டுவிட்டார்கள். அதன் காரணமாகத்தான் தாமதப் பட்டது. மத்தியப் பிரதேசம் கையெழுத்துப் போட்டு 6 மாதங்களுக்குப் பிறகுதான் நாம் கையெழுத்துப் போட்டோம். அப்படி இருந்தாலும் நாம் அவர்களைவிட ஓராண்டு முந்திக் கொண்டிருக்கிறோம். செயல் முறையைப் பொறுத்த வரையில், we are a head by one year. நான் இதுபற்றி பலவகைகளிலும் யோசனை செய்து இன்னும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து, இதற்கு என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் பேசி, திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால் மத்திய அரசு பெரிய திட்டமாக அனுப்பக் கூடாது, குறைத்து அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

டெலிடாவின் எண்ணம் என்ன என்று எனக்குத் தெரியாது. டென்மார்க்கிலிருந்து ஒரு டீம்-ஐ இங்கே அனுப்புகிறார்கள். அந்த டீம் இங்கே வந்து பார்த்து உடனடியாக ஒப்புக் கொண்டால் திட்டத்திற்கு மத்திய அரசு தன்னுடைய கிளியரன்ஸைத் தெரிவிக்கும் என்பதுதான் இப்போது இருக்கிறது நிலை.

மின்சார ஜெனரேட்டர்.

*48. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) நாகப்பட்டினம் அரசினர் மருத்துவமனையில் புதியதாக அமைக்கப்பட்ட மின்சார ஜெனரேட்டர் இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (இ) இம்மருத்துவ மனையில் 26—4—1982-ல் தான் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டது. அன்று முதல் ஜெனரேட்டர் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(முற்பகல் 9-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் ஒரு நோயாளியை அங்கே அனுப்பிய போது, அந்த ஜெனரேட்டர் வேலை செய்யவில்லை என்பதால், அவர் வேறு இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்னாலேதான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை சரியாக வேலை செய்கிறது என்று அதிகாரிகளால் அமைச்சர் அவர்களுக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆகவே சரியான தகவல்களைப் பெற அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சரியான தகவல் இல்லையென்று மறைமுகமாக மாண்புமிகு உறுப்பினர் சொல்ல முயற்சிப்பது தெரிகிறது. ஆனால் அப்படிச் சொல்ல முடியவில்லை என்றால், ஏன் என்பது அவருக்கே தெரியும். அவர் கேட்ட கேள்வி 2—4—1982 அன்று. அன்றைய தினம் அங்கே ஜெனரேட்டர் இல்லை. ஆனால் 26—4—1982 அன்றுதான் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டது. அந்த நாளிலிருந்து இன்று வரை நன்றாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத்தான் என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பொதுவாக ஜெனரேட்டர்கள் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் நிறுவப்படுவதாக அறிகிறேன். ஆனால் வட்டத் தலைநகர்களிலும் கூட ஜெனரேட்டர் இருந்தால்தான், காலத்திலே நோயாளிகளுக்குத் தகுந்த முறையில் சிகிச்சை அளிக்கமுடியும். குறிப்பாக திருத்துறைப்பூண்டியில் இல்லை, திருவாரூரில் கூட இல்லை, நாகப்பட்டினத்தில் இருக்கிறது. ஏழையெளிய மக்கள் மாவட்டத் தலைநகர மருத்துவ மனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவது என்பது மிகவும் கடினமாக இருப்பதால், இதில் ஒரு கொள்கை மாற்றம் செய்து வட்டத் தலைநகர் மருத்துவமனைகளிலும் ஜெனரேட்டர்களை வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பல ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருந்த ஒரு காரியத்தைக் கண்டுபிடித்து சென்ற மூன்று, நான்கு ஆண்டுகளாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, படிப்படியாக "பேஸ்ட் மேனர்" என்ற முறையில் மாவட்டத் தலைநகர் மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்களைப் பொருத்தியிருக்கிறோம். அதுவே ஒரு பெரிய வெற்றி என்று நான் கருதுகிறேன். தஞ்சையைப் பொறுத்தவரையில், மாவட்டத் தலைமை மருத்துவமனை, கும்பகோணத்தில் பொருத்தியிருக்கிறோம். மேலும் உள்ள 117 தாலுக்கா தலைமை மருத்துவ மனைகளிலும் படிப்படியாக வெகு துரிதமாகப் பொருத்தவிருக்கிறோம். ஏனென்றால் ஒரே ஆண்டில் அத்தனை மருத்துவமனைகளிலும் பொருத்திவிட முடியாது. நாம் நம்முடைய நிதிநிலைமையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பணியை வெகுவாகப் பாராட்டுவார் என்று நான் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் கோரிக்கையை வைப்பது என்பது வேறு. தாலுக்கா தலைமை மருத்துவமனைகளில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு டிஸ்பென்சரியிலும் ஜெனரேட்டர் வைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுவல்ல பிரச்சினை. ஆனால் இதுவரையில் யாரும் செய்யாமல் இருந்ததைக் கண்டுபிடித்து அதைச் செய்திருக்கிறோம் என்பதற்காக நாங்கள் பாராட்டுதலை எதிர்பார்க்கிறோம்.

THIRUMATHI TARA CHERIAN : Sir, a few months ago, the mental patients in the Kilpauk Hospital did not have a generator. Have they been provided with one now, Sir ?

THE HON. DR. H. V. HANDE : Yes, orders have been passed.

[1983 பிப்ரவரி 7

Bus Stop near Tiruchendur Temple.

*49.—Thiru E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether it is a fact that various Transport Corporation buses plying to Rameswaram and Kanyakumari (via) Tiruchendur, do not touch the bus-stop near the Arulmigu Subramanyaswamy Temple, Tiruchendur, while other buses come there ; and

(b) if so, the reasons for the same ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மண்டபம்-நாகர்கோவில் வழித் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் விரைவுப் பேருந்துகள், திருச்செந்தூர் கோவிலுக்கருகாமையிலுள்ள பேருந்துகள் நிற்குமிடத்திற்கு செல்லாமல் நகர பேருந்து நிலையத்தில் நின்று செல்கின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகள் திருச்செந்தூர் கோவிலுக்குச் செல்லும் சாலை சந்திப்பில் நின்று செல்கின்றன.

(இ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் மண்டபத்திலும் நாகர்கோவிலிலுமே பயணிகள் நிரம்பி விடுவதால், திருச்செந்தூரில் பயணிகளை ஏற்றுவது மிகக் சொற்பமே. மேலும், திருச்செந்தூர் நகராட்சி பேருந்து நிலையத்திலிருந்து அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சென்றுவர சுமார் 3 கி.மீ. பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, விரைவுப் பேருந்துகள், கோவிலின் அருகிலுள்ள பேருந்துகள் நிற்குமிடத்திற்குச் செல்வதில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இப்போது திருச்செந்தூர் மிக முக்கியத் தலம் வாய்ந்த ஊராக இருக்கிறது. ஆண்டவன் அருள் எல்லோருக்கும் மிகவும் வேண்டியிருக்கிறது. ஆகவே திருவள்ளுவர் விரைவுப் பேருந்து அந்த ஆலயத்திற்கு அருகிலே நிற்க அரசு வழிவகை செய்தால், நன்றாக இருக்கும். நான் அங்கு போயிருந்த நேரத்தில் அங்குள்ள பலர் என்னிடம் முறையிட்டார்கள். ஆகவேதான் கேள்வியைக் கேட்கிறேன். பலருக்கு இதனால் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. பேருந்து அந்த ஆலயத்திற்குப் பக்கத்திலே நின்றால், நன்றி உடையவர்களாக இருப்பார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : விரைவுப் பேருந்து என்பது குறிப்பிட்ட இடத்திற்குத்தான் போக முடியும். திருச்செந்தூருக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆண்டவன் அருள் வேண்டும் என்றால், நகரப் பேருந்துகளில் சென்றாலே கிடைக்கும். விரைவுப் பேருந்துகளில் தான் செல்ல வேண்டும் என்பதில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பக்தியால் மட்டுமல்லாமல் சக்தியையும் காட்ட பலர் திருச்செந்தூருக்குப் போகவிருப்பதால், அதிகப் பேருந்துகளை விடும் யோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் போகிற அளவிற்கு விடப் பட்டிருக்கிறது. சக்திக்கு ஏற்பத் தேவையில்லை. மக்கள் போகிற அளவிற்கு பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : திருச்செந்தூருக்கு இப்போது பலர் போகிறார்கள் என்பதால், படுக்கை வசதிகள் உள்ள பேருந்துகள் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பல பேர் போவதால் படுக்கை வசதிகள் உள்ள பேருந்துகளை விட முடியாது. தேவையான நேரத்தில் விடலாம்.

திரு. செ. முத்துசாமி : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு பேர் போவதற்கு டீலக்ஸ் பஸ்ஸில் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். குறைந்தது ஒருவருக்காவது படுக்கை வசதிகள் உள்ள பேருந்தில் செல்ல பாஸ் கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ? இரண்டு பேர்கள் செல்லலாம் என்பதற்குப் பதிலாக ஒருவர் என்று சொல்வதால் ஒன்றும் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாது. ஆகவே அதை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இப்போதுதான் இரண்டே இரண்டு பேருந்துகளை விட்டிருக்கிறோம். அந்தச் சலுகையை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறபோது, பல இடங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்காமல் போகும். அப்படி பாரபட்சம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை. பின்னால் பார்ப்போம்.

மினி பஸ்கள் விட உரிமம்.

* 50. வினா.—திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் மினி பஸ்கள் விடுவதற்கு தனியார்கள் உரிமம் கோரியுள்ளார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மினி பஸ்கள் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றனவா ? எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட வழித் தடங்களில் மினி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மினி பஸ்கள் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. எங்கெங்கே பெரிய பேருந்துகளை இயக்க முடிய வில்லையோ அப்படிப்பட்ட வழித்தடங்களில் இந்த மினி பேருந்துகள் விடப் படுகின்றன.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : தனியார்களுக்கு அனுமதி இல்லை யெனில், அரசே எல்லா வழித்தடங்களிலும் பஸ்ஸை விட முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்த அடிப்படையிலேதான் நிறைய பேருந்துகளை இயக்குகிறோம். மேலும் தேவையென்றால், அரசாங்கம் முன்வரும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மினி பஸ் அதிகம் விடப்படுவதைப் போலவே சினி பஸ் (திரைப்படங்களைக் காட்டும் பஸ்) அதிகம் விடப் படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த நாட்டு மக்களுக்கு எது பயன் உடையதோ அதை அரசாங்கம் செய்யும்.

@ 60-61 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி : [illegible] பகுதியில் 14 நாடுகள் இருக் கின்றன. [illegible] இல்லை. வழித்தடங்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. [illegible] ஆகியிருக் கின்றன. [illegible] வரை மினி பஸ் விடுவதற்கு அரசாங்கம் என்ன [illegible] அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே அந்தப் பகுதியில் [illegible] இருக்கின்றன. இருந்தாலும் புதிதாகப் பாதைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அந்தப் பகுதியில் அவற்றை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

28—1—1983-நாளுக்கான வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்திப்போடப்பட்ட வினாக்கள். வினா எண் 25.

Laying Bypass Road at Tambaram.

* 25 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru P. R. THOMAS) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether there is any proposal to lay a bypass road linking the roads from the North with the roads from the South at Tambaram; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (இ) தேசிய நெடுஞ் சாலை 45-இல் தாம்பரம் பகுதியிலிருந்து தேசிய நெடுஞ்சாலைகள் 4 மற்றும் 5-ஐ இணைத்து 31.344 கி.மீ. நீளத்தில் சென்னை நகருக்கு ஒரு புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் உள்ளது. இப்பணியின் தோராய மதிப்பீடு 1980-81 ஆம் ஆண்டு விலைகளின்படி ரூ. 10 கோடி ஆகும். நில உரிமை பெறுவதற்காக மத்திய அரசு ரூ. 137.16 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இணைப்புச் சாலையைப்போட்டு ஆட்டோ பான் (Autobahn) என்று சொல்லப்படுவதை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ? மாநகராட்சிக்குள் [illegible] பஸ்களிடம் கட்டணம் வசூலித்து மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

[1983 பிப்ரவரி

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தச் சாலை புறவழிச்சா
(Bypass Road) ஆகவே புறவழிச் சாலையை விரைவுத் தட
(Express Way) மாற்றுவதற்கு மத்திய அரசுக்கு எ
விருக்கிறோம். அப்படி இதுவரையில் இல்லை. ஆகவே அவ்வாறு மா
வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சியைப் பொறுத்த வரையில் வருமானத்தை அதிகரிக்க வாகன
ளிடம் கட்டணம் வசூலிக்கலாமா என்பது அரசின் பரிசீலனையில் இ
கிறது.

(முற்பகல் 10-00)

திரு. பா. ரா. தாமஸ் : இத்தகைய பக்க சாலைகளை கன்னியாகு
வரையிலேயுள்ள அனைத்துப் பெரு நகரங்களிலும் உருவாக்க, கால தாமத
இல்லாத அளவிலே முழுமையாகப் புறப்பாதைகளை அமைக்க அமைச்ச
அவர்கள் முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எல்லாப் பெ
நகரங்களிலும் புறவழிச் சாலைகளை அமைக்க வேண்டுமென்ற திட்
அரசாங்கத்திலே இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலைகள், புறவழிச் சா
களை அமைக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசிடமிருந்து ஒப்பு
பெற்றுத்தான் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. பல்வேறு
வழிச்சாலைகளை எடுத்துக்கொண்டும் கூட, அதற்கு நிதி ஆதாரங்கள
மத்திய அரசு கொடுக்கவில்லை. அதன் காரணமாக அவைகள் எல்லா
நிறுத்தப்பட்டிருக்கின்றன. சமீபத்திலே, அப்போது அமைச்சரா
இருந்து இப்போது அமைச்சராக இல்லாமல் இருக்கின்ற திரு. வெ
அவர்களிடம் கூட அதைப்பற்றிப் பேசினேன். புறவழிச் சாலை கோவையிலே
திருநெல்வேலி, செங்கற்பட்டிலே அமைக்கவேண்டியிருக்கிறது. செங்க
பட்டிலே அமைக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னேன். நிலை
இல்லையென்று நிலைமையை அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நி
வசதி ஏற்படுகின்ற வரையிலே இவைகளுக்கெல்லாம் அனுமதி கொடுப்பார்கள்
என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

1983 பிப்ரவரி 7]

திரு. பா. ரா. தாமஸ் : இந்த புறச் சாலைகளுக்கு மத்திய அரசில் எந்த
அளவுக்கு மானியம் கொடுக்கிறார்கள் ? 75 பெர்சன்டா, 50 பெர்சன்டா
அல்லது 2/3 பங்கா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மத்திய அரசின் பணத்தை அவர்கள்
முழுமையாகக் கொடுத்துத்தான் தேசிய நெடுஞ்சாலைகள் குறித்த இந்த
வேலைகள் செய்யப்படுகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, நான் அண்மையிலே
வட மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளைப் பார்க்க முடிந்தது.
அங்கு தேசிய நெடுஞ்சாலைகளை இரட்டைப் பாதைகளாக ஏற்படுத்தி
சாலைகளுடைய குறுக்கே தடை அமைத்து, செடிகளை வளர்த்து விபத்துக்
களைத் தவிர்க்கும் அளவில் வைத்திருக்கிறார்கள். வாகனங்கள் ஒழுங்காகப்
போகின்றன. அங்கு அதிகமாகச் செலவிடப்படுவதைப் பார்க்கிறோம்.
தமிழகத்திலே இருக்கின்ற நெடுஞ்சாலைகளுக்குச் செலவிடுவதில் பாரபட்சம்
காட்டுகின்றார்களா, நிதி வசதி செய்து கொடுக்கவில்லையா ? இதுபற்றி
அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தேசிய
நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், இப்போது நமக்கு ஏறத்தாழ 1,865
கிலோ மீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. இந்த
நெடுஞ்சாலைகளைப் பொறுத்துத்தான் ' ஐலண்ட்ஸ் ', தீவுகளைப் போட
முடியும். அப்படிப்பட்ட தீவுகளைப் போட வேண்டுமென்று சொன்னாலும்,
மத்திய அரசின் அனுமதி பெற்று, அவர்களுடைய பணத்தை வைத்துத்தான்
தேசிய நெடுஞ்சாலைகளில் செய்துகொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு
புதிய நெடுஞ்சாலைகள் என்று எடுத்துக்கொள்வதற்கு 16 ரோடுகள் சொல்லப்
பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்கிறோம். அந்தச் சாலைகளைக்
கூட கடந்த 10 ஆண்டுக் காலமாகப் போடாத நிலைமை இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : நேஷனல் ஹைவேஸ் எண் 7, என்.எச். 7 என்ற
அந்தப் பாதையிலே, நாமக்கல்லிலிருந்து கரூர் செல்வதற்கு, இப்போது
வேலூர் வழியாகச் செல்லும்போது 12 மைல்கள் கூடுதலாக ஆகின்றன.
நாமக்கல்லிலிருந்து மோகனூர் வழியாக, வாங்கல்-கரூர் போகும்போது 12
மைல் குறைகிறது. இந்தத் தேசிய நெடுஞ்சாலையில் அங்கே ஒரு பாலத்தைக்
கட்டினால், 12 மைல்கள் குறையக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை தமிழக
அரசு நிறைவேற்ற முன்வருமா ? ஒவ்வொரு தடவையும் லாரிகள்
போக்குவரத்தில், அந்த என்.எச். 7-லே 12 மைல்கள் அதிகமாகின்றன.

போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் 3 ஆண்டுக்காலமாக இந்த 6 சுரங்கப் பாதைகள் கட்டப்பட்டன. இன்னமும் 2 சுரங்கப் பாதைகள் நாம் கட்ட இருக்கிறோம். நுங்கம்பாக்கம் ரெயில் நிலையம் அருகிலே ரூபாய் ஒரு கோடியே 13 லட்சம் செலவில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்து, தண்டையார்ப்பேட்டை ரெயில் நிலையம் அருகிலே ரூபாய் ஒரு கோடியே 90 லட்சம் செலவில் ஒரு சுரங்கப் பாதை அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைக்கூட நாம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். குறிப்பாக இந்த மாமன்றத்தின் மூலமாக பொது மக்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது, சுரங்கப் பாதையை நூற்றுக்கு முப்பது பேர்கள்தான் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். மீதம் உள்ள 70 சதவிகிதம் பேர்கள், சாலையின் குறுக்கேதான் கடந்துகொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மக்கள் சுரங்கப் பாதையை அதிகமாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இருக்கக் கூடிய நாளேடுகள் எல்லாம் இதற்கு விளம்பரம் கொடுத்து மக்களுடைய கவனத்தைத் திருப்ப வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : கோடம்பாக்கம் டிரஸ்ட் புரத்தில் இருந்து டைரக்டர்ஸ் காலனிக்குப் போக பழைய ஆற்காடு ரோடு இப்போது என். எஸ். கிருஷ்ணன் சாலையைக் கடக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சாலையிலே பேருந்துகள், லாரிகள், கார்கள், ஸ்கூட்டர்கள் போன்ற பெரிய வாகனங்கள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. அங்கே பாதையைக் கடப்பதற்கு மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கால தாமதம் ஆகிறது. மேலும் அந்த வழியாகக் கடக்கும்போது பீதியும் ஏற்படுகிறது. இதையெல்லாம் தவிர்க்க, அந்த இடத்திலே சுரங்கப் பாதைக்குப் பதிலாக மேம் பாலம் கட்ட அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதைப்பற்றிய குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பரிசீலனை செய்து தேவை என்று சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஒரு கொள்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். கொள்கை வழி என்று பார்த்தால், ஒரு வழிப்பாதையைத் தவிர வேறு வழியில்லை

என்பதை நான் அனுபவபூர்வமாகச் சொல்கிறேன். ஏறத்தாழ 21 ஆண்டுகள் சைனா பஜாரில் வாழ்ந்தவன் நான் என்ற அளவிலே சொல்கிறேன். அங்கே சுரங்கப் பாதை அமைப்பதற்கு நிச்சயமாக வாய்ப்பு இல்லை என்பதைச் சொல்லியிருக்கிறேன் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது அவ்வளவு நெருக்கமான இடம், நெரிசலான இடம் என்பதை இங்கு குறிப்பிட்டு, வேறு வகையில், ஒரு வழிப்பாதையாக அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : இருட்டு வேளையில் மாலையில் பெண்கள் சுரங்கப் பாதைகளில் செல்வதற்கு அஞ்சுவதாகப் பத்திரிகைகளிலே செய்திகள் வருவதைப் பார்க்கிறோம். குறிப்பாக பெண்கள் கல்லூரிகள், பெண்கள் பள்ளிகள் அருகிலே உள்ள அந்த சுரங்கப் பாதையிலே இரவு நேரத்திலே ஆரம்ப கட்டத்திலே, 6 மணி முதல் 9 மணி வரையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யக்கூடிய அளவிலே அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த நிலைமைகள் பற்றி என்னிடம் தகவல் வந்தது. அங்கு சில நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த நிலைமைகள், அவைகளைத் தடுப்பது குறித்து செய்திகள் வந்து, அதற்கேற்ப பல்வேறு வழிகளிலே நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அது மட்டுமல்ல. இங்கே வெளியிட முடியாத வகையில் யார் அதிகாரிகள், யார் பொதுமக்கள் என்று தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு, அங்கே பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த சுரங்கப் பாதைகள் நெரிசலைத் தடுப்பதற்கு பயன்படும் என்றுதான் அவற்றை அமைத்திருக்கிறோம். இருந்தாலும் கூட அங்கே ஏற்படுகின்ற அச்சங்களைத் தவிர்க்கின்ற முறையில் சுரங்கப் பாதைகளுக்குப் பதிலாக தொங்கு பாலங்கள், மேலே போகின்ற அளவுக்கு பாலங்களை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே. இரஷ்யா போன்ற நாடுகளில் இதுபோன்ற அளவில் அமைத்திருக்கிறார்கள். இதை சென்னையிலே செய்ய பரிசீலிக்க வேண்டு

மென்று நான் 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு யோசனை சொல்லியிருக்கிறேன். விளம்பரங்களைக் கூட அந்தப் பாலத்திலேயே வைத்துக்கொள்ளலாம், இங்கே சுவர்களை வீணாக்காமல் என்று யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. ஆக அதிகச் செலவாகிறதே என்ற அளவிலேதான் அதைப்பற்றி நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-10.)

2. கவன ஈர்ப்பு.

தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேவையான டாக்டர்கள் இல்லாதது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"மூன்று டாக்டர்கள் பணியாற்ற வேண்டிய தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண்டுக் கணக்காக ஒரு டாக்டர் மட்டுமே பணியாற்றி வருவதால், நோயாளிகள் போதிய கவனம் செலுத்தப்படாமல் அல்லல்படுவது குறித்து."

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை † அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே ஒரு மருத்துவ அலுவலருடைய பதவி 23—7—1981-லிருந்து காலியாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 1½ ஆண்டுக் காலம். மற்றொரு மருத்துவ அலுவலர் பதவி 2—10—1982-லிருந்து காலியாக இருப்பதாக அச்சிடப்பட்டுள்ளது.

† 28-83 ஆம் பக்கங்களில் இணைப்பு I [?]

பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 3 மாதக் காலம். ஆக, இந்த மருத்துவ மனையிலே கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக டாக்டர்கள் இல்லாமல் இருக்கின்ற நிலைமையிலே, எந்த அளவிற்குப் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசினுடைய கவனத்திற்கு வராமலிருப்பதற்கு நியாயமில்லை என்று கருதுகிறேன். இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் தருகின்ற இந்த நேரத்திலேதான், காரையூரில் இருந்து ஒருவரும், மலையூரில் இருந்து ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் எந்தத் தேதியிலிருந்து என்று குறிப்பிடப்படவில்லை. இங்கே குறிப்பிட்டிருப்பது புதிய தகவலாக இருக்கிறது. எனவே எந்தத் தேதி என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டி 40 கிலோமீட்டர் தூரமும், நாகப்பட்டினம் 25 கிலோ மீட்டர் தூரமும் இருக்கிறது. அங்கே மருத்துவ மனைகள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தவறு. தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டி 25 கிலோமீட்டர் தூரமும், நாகப்பட்டினம் 40 கிலோ மீட்டர் தூரமும் இருக்கிறது. இது மாற்றித் தரப்பட்டிருக்கிறது. இவ்வளவு தூரத்திற்கு ஏழைகள் சென்று வைத்தியம் பெற முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்கம் தருகிறாரா அல்லது விளக்கம் கேட்கிறாரா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, விவர அறிக்கையிலேயே தெளிவாக இருக்கிறது. காலி இடங்களை நிரப்ப என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். உத்தரவு போட்ட பிறகு, யாராவது பணியில் சேரவில்லை என்றால், 30 ஆண்டுக் காலமாக வரலாற்றில் இல்லாத அளவிற்கு, அவர்களையெல்லாம் ஒரு விசாரணையின் மூலமாக வேலை நீக்கம் செய்கிறோம். 116 டாக்டர்களை நாம் அதற்காக வேலை நீக்கம் செய்திருக்கிறோம். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க அஞ்சாமல், 30 ஆண்டுக் காலமாக தயக்கம் உள்ள நிலைமைகளை மாற்றியமைத்து, உத்தரவு போட்டிருக்கிறோம். இப்போது [?] டாக்டர்களைத் தற்காலிகமாக அமர்த்தியிருக்கிறோம். அவர்களிலே இருந்து இங்கே அமர்த்த ஏற்பாடு செய்திருக்கிறோம். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் 1982 அக்டோபர் மாதத்தில் ஆயிரம் டாக்டர்கள் நியமனத்திற்காக

விண்ணப்பங்கள் கோரியுள்ளது. இருந்தாலும் இன்னும் 500 டாக்டர்கள் அதிகமாகத் தேர்ந்தெடுங்கள், அவர்களை வெயிட்டிங் லிஸ்டில் வைத்துக் கொண்டு, வேண்டும்போது எடுத்துக்கொள்கிறோமென்று சொல்லி, நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அடிப்படையில் சில விவரங்களைப் பணிவோடு அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைஞாயிறு மருத்துவ மனையில் மூன்று டாக்டர்கள் பணியாற்ற வேண்டியிருந்தாலும், அங்கே ஒரு மருத்துவர் தங்குவதற்குத் தான் குடியிருப்பு வசதி இருப்பதால், மருத்துவர்கள் அங்கே தங்குவதில்லை என்று சொல்லப்படுகிறது. அங்கே இருக்கின்ற 3 வண்டிகளிலே, 2 வண்டிகள் பழுதுபட்டும், ஒரு வண்டி ஓடினால் நொறுங்கிவிடுமோ என்ற அளவிற்கும் இருக்கிறது. அதில் ஏறிச் செல்ல பயந்து, அங்கே டாக்டர்கள் வர அச்சப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல், எல்லா டாக்டர்களும் தங்குவதற்கான வசதிகளைச் செய்து வண்டிகளைப் பழுது பார்த்துத் தருவதற்கும் தக்க நடவடிக்கை எடுப்பதோடு, கிராமங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் அறிவிப்பதன் மூலம் கிராமங்களுக்கு டாக்டர்கள் செல்லாமல் இருக்கும் நிலைமையைத் தவிர்க்க முடியுமே என்று சொல்லி, அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, "பேஸ்ட் ப்ரோக்ராம்" என்ற அளவில், ஒவ்வொரு ஆண்டும் 20, 30 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டிடங்கள் கட்டி, மருத்துவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம். அதுமாதிரி 31 மருத்துவ மனைகளில், பிரிட்டிஷ் எய்ட் மூலமாக ஆப்பரேஷன் தியேட்டர் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்படி பல்வேறு மருத்துவ மனைகளில் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்தால், அங்கேயே டாக்டர்கள் தங்க வசதி ஏற்படுகிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று, சட்டத்தில் அடிபடாமல், என்னென்ன வாய்ப்புகள் தர முடியுமோ, அவற்றைத் தருகிறோம்.

3. அரசின் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"திரு. ம. சங்கரலிங்கம், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் 18—2—1982 ஆம் தேதியோடு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் முடிவடைந்துவிட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் 'வகுப்பு II —ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பின்கீழ், (h) பகுதியையொட்டி மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் மேலவை உறுப்பினர்களுக்குள் ஒருவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"திரு. ம. சங்கரலிங்கம், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் 18—2—1982 ஆம் தேதியோடு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் முடிவடைந்துவிட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் 'வகுப்பு—II —ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பின் கீழ், (R) பகுதியையொட்டி, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் மேலவை உறுப்பினர்களுக்குள் ஒருவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென கீழ்க் கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

நியமனத் தாள்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாளும், நேரமும்	}	9-2-1983 காலை 10-30 வரை
நியமனத் தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும்	}	9-2-1983 காலை 11-30 மணி
நியமனத் தாள்கள் திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும்	}	10-2-1983 காலை 11-30 மணி

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவர்களே, அழகிய தமிழிலே மேதகு ஆளுநர் அவர்கள் உரை துவக்கப்பட்டிருப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியான செய்தியாக இருக்கிறது. அதன்மீது சில கருத்துக்களைச் சொல்லத் தலைப்படுவதற்கு முன்பு, ஆளும் கட்சியைச் சார்ந்த நிலையில் எங்களுடைய எண்ணங்களுக்கும் கருத்துகளுக்கும் ஏற்ப தேவையான உரிமைகளை வலியுறுத்தும் நேரத்தில், எந்தக் காரணத்தைக் கொண்டும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக நாங்கள் இருக்கிறோமென்றோ இந்தியா ஒன்று என்ற கருத்துக்கு மாறுபட்டவர்களாக இருக்கிறோமென்றோ தவறுதலாக யாரும் கருதிவிடக்கூடாது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், அவருடைய அணியில் உள்ளவர்களாகிய நாங்களும் இந்திய ஒருமைப்பாட்டில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தால்தான், அந்த ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்திலேதான் எங்களுடைய கருத்துக்களை வலியுறுத்தி வருகிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். 60 வயதைக் கடந்த நிலையில் நம்மையெல்லாம் வாழ்த்தும் நிலையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணன் அவர்களும் 'அறுபதையும் தாண்டி ஆசை வரும்' என்பதுபோல, ஒருநாள் வராதா

என்ற ஏக்கத்தோடு அவர்கள் பேச்சு இருந்தாலும்கூட, சத்துணவுத் திட்டத்தினுடைய சிறப்பைப்பற்றி அவர்களாலே குறை சொல்ல முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது முதலமைச்சரவர்களுடைய உரையாக இருக்கிறதென்று அவர் சொன்னபோது, நான் நினைத்துக்கொண்டேன், ஆளுநர் ஆகட்டும், ஜனாதிபதியாகட்டும், 'மை கவர்ன்மெண்ட்'—'என்னுடைய அரசாங்கம்'—என்று சொல்வது, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படுவது இந்த அரசாங்கத்தினுடைய எண்ணங்களை, தமிழ் சமுதாயத்தினுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கிறதென்ற முறையிலே இருக்கிறதென்று நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், இதில் உப்பு சப்பு இல்லை என்று சொன்னாலும்கூட, ஜன்னி வந்தால் எதிலும் சுவை இராது, கொஞ்சம் ஊறுகாயை கடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடும். இருந்தாலும் எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியையும், தமிழ் சமுதாயத்திற்கு பெருமையையும் தரும் பல திட்டங்களெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓர் அரிய கருத்தைச் சொன்னார்கள். சத்துணவுத் திட்டம் சீரிய திட்டம் என்று விளக்கிவிட்டு, "இன்னமும் இதனுடைய சிறப்பு மக்களுக்கு சரியாகச் சொல்லப்படவில்லை, அதனால் திரைப்படம் எடுத்து, அதன்மூலம் சொல்லுங்கள்" என்று சொன்னார்கள். அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து இங்கே வந்து, பாரதியார் சிலையை பெற்றுப் போக வந்த அதிகாரிகள் ஒன்றைச் சொன்னார்கள். எங்களுடைய மாநிலத்தில், வானொலியில், மாநில அரசினுடைய திட்டங்களை, பல்வேறு துறைகளிலே செய்துள்ள சாதனைகளை எல்லாம் கூறுகிறோமென்று சொன்னார்கள். அதைப்போல்க்கூட வானொலியைப் பயன்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்ததுபோல, திரைப்படம் கூட எடுக்கலாம். திரைப்படம் எடுக்கலாமென்று அவர் சொன்னதில், ஒருவேளை உள் அர்த்தம் இருக்குமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களையும் நினைத்துப் பார்க்கிறபோது, நானும் அந்தத் திரைப்படத்தை மனக் கண் முன்னால் ஓடவிட்டுப் பார்த்துக்கொண்டேன். அந்தத் திரைப்படத்தினுடைய காட்சி வருமானால், 65 லட்சம் குழந்தைகள் சத்துணவை உண்ணும் காட்சி, அந்தக் குழந்தைகள் எல்லாம் மகிழ்ந்து கொண்டிருக்கும் அந்தக் காட்சியை ஒருபக்கம் காட்டி

(முற்பகல் 10-20.)

விட்டு, இந்தச் சத்துணவுத் தலைவர்களை என்று கேட்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுடைய உருவத்தைக் காட்டுவோமானால், இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கும் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர்கள், கைம்பெண்கள், ஆதரவற்றோர், பின்தங்கிய வகுப்பினர், ஆதி திராவிடர்; பழங்குடி மக்கள் ஆகியோர் எல்லாம் மகிழ்ச்சியோடு பார்ப்பதையும் காட்டிவிட்டு, "ஆசிரியர்களை இப்பணியிலிருந்து நீக்கிவிடுங்கள், நீக்கிவிடுங்கள்" என்று முழங்குகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களையும் காட்டினால், இன்னும் 35 ஆயிரம் அமைப்பாளர்களையும் காட்டி, இந்தச் சத்துணவினுடைய வெற்றியைக் காட்டி, எங்கே புதிதாக வந்துவிட்டார்களா இந்தப் பணியைக் கவனிக்க என்று அவசரப்பட்டு கல்வி மானியக் கோரிக்கை வருவதுவரை கூட காத்திராமல், கோபப்படுவார்களையெல்லாம் காட்டினால், நாட்டு மக்கள் முன்னாலே இவர்கள் நடமாடுவதற்குரிய நிலைமை எப்படி இருக்கும் என்பதை மறைமுகமாக உருவாக்குவதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படம் எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களோ என்னவோ என்ற பயம் எனக்கு வருகிறது.

திரு. செ. முத்துசாமி : சத்துணவுத் திட்டத்தை ஆரம்ப காலம் முதல் மனதார வரவேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போதே நான் பாராட்டியிருக்கிறேன். சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் சத்துணவு வேண்டாம் என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெயரைக் குறிப்பிட்டதனால் நான் அவரைத் திருத்த வேண்டும் என்று விரும்புகிறேன். என்னுடைய கருத்தை அவர்கள் திரித்துச் சொல்வது சரியல்ல. நான் தெளிவாகவே இத்திட்டத்தை வரவேற்றிருக்கிறேன். எங்களுடைய சங்கமும் வரவேற்றிருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு முடிவெடுத்து, ஆசிரியர்கள் கல்வியில் ஆழ்ந்து ஈடுபடுவதற்காக அவர்களை இப்பணியிலிருந்து விடுதலை செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அதை எதிர்த்துப் பேசுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சில இடங்களிலே ஆசிரியர்கள் இன்னும் கணக்கை ஒப்படைக்காமல் இருக்கிறார்கள். தயவுசெய்து புதிதாக வந்தவர்களிடம் அவைகளையெல்லாம் ஒப்படைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களைப் போன்றவர்கள் எல்லாம் சொல்லி உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் பொறுத்தவரையில், அவர்கள் அரசாங்கத் தரப்பிலே இருப்பதால், அவர்களுக்கு விவரங்கள் கிடைத்திருக்கலாம். கணக்கு கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பது ஒருவேளை தனியார் பள்ளிகளிலே இருக்கலாம். அரசு மற்றும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நிச்சயமாக ஆசிரியர்கள் தருவார்கள். அப்படி தராமல் இருப்பார்களேயானால், அவர்கள் செய்வது தவறு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அரசு நிச்சயமாக நம்பலாம், இந்த அரசு எடுத்த முடிவுக்கு முழுமையாக இந்தச் சங்கம் ஒத்துழைப்பைத் தருகிறது. இந்த அரசினுடைய முடிவை நாங்கள் மனதார வரவேற்றிருக்கிறோம். நாங்கள் ஒத்துழைக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும் போது சில பள்ளிகளில் கணக்கை ஒப்படைக்காமல் இருப்பதாகச் சொன்னார்கள். பொதுவாக, அரசிடமிருந்து அல்லது அதிகாரிகளிடமிருந்து செல்லுகின்ற ஆர்டர்கள், உத்தரவுகள் தெளிவாக இல்லை. அதிலே 'பொறுப்புக்களை ஒப்படையுங்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் நேரடியாக அவர்களை அழைத்து அந்தப் பணப்பொறுப்பை இப்போது ஒப்படைக்கவேண்டாம், பின்னர். பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கே அது விளங்கவில்லை. எப்படி அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது என்று அவர்களுக்கே தெரியவில்லை. ஆகவே, தெளிவான ஆணை வந்திருந்தால், இந்தச் சங்கடங்கள் ஏற்பட்டிருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவரவர்கள் அவரவர்களுடைய பொறுப்பிலே இருக்கின்ற உறுப்பினர்களைக் காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அரசாங்கத்தினுடைய உத்தரவு தெளிவான முறையிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் போன்றவர்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரியும். எப்போதோ ஸ்ட்ரைக் செய்து, தகராறு வந்து, ஏன் இன்னும் இந்த வேலைக்கு வேறு ஆட்களை வைக்கவில்லை என்று கேட்டவர்கள், இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று ஒப்புதல் கொடுத்த பிறகு, உத்தரவு சரியாக இல்லை என்று சொல்வது சரியல்ல. அதிகாரிகள் வாயளவிலே சொல்கிறார்கள் என்று சொல்வதே இந்த மேலவையிலே சொல்வதற்குப் பொருத்தமற்ற ஒன்று

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது கூடாது, அப்படி அதிகாரிகள் சொல்லியிருந்தால், தயவு செய்து அந்த அதிகாரிகளுடைய பெயரைத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவாதமாகப் போக வேண்டாம். அப்படியே போனால் அவையை நடத்த முடியாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் விவாதத்திற்குப் போகவில்லை. ஒரே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த வாசகத்தின் மூலமாக என்னுடைய அமைப்பு எங்கேயோ கணக்கை ஒப்படைக்காமல் இருப்பதாகத் தொனிக்கிறது. அப்படியல்ல. என்னுடைய அமைப்பு கணக்கை ஒப்படைத்துவிட்டது. யாரும் ஒப்படைக்காமல் இல்லை. பொதுவாக இதுதான் பிரச்சினை என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய நல்லெண்ணத்திற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்னை மீண்டும் அனுமதித்ததற்காக. 'என்னுடைய சங்கம், என்னுடைய சங்கம்' என்று சொல்கிறார்களே, பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களை மாண்புமிகு உறுப்பினர் எப்போது பார்த்தார்கள், அவர்கள் எல்லோரும் கணக்கு கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்பது எப்போது தெரிந்தது, உண்மைச் செய்தி என்ன, பொறுப்பு ஏற்கப்போகிறார்களா என்பதையெல்லாம் தயவுசெய்து சிந்தித்துச் சொல்ல வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக ஏதோ என்று எடுத்துக்கொண்டு, கற்பனையிலே குற்றங்கள் சாட்டுவது என்று இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் விவாதத்திற்காகச் சொல்லவில்லை. எங்கெங்கு நடைபெற்றிருக்கிறது என்பது குறித்து நான் நாளையதினம் பதில் சொல்ல விரும்புகிறேன். அந்தக் குறிப்புகள் வந்த பிறகுதான் இதை நான் இங்கே சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தச் சத்துணவுத் திட்டம்பற்றி அறிஞர்கள் மிகுந்த அளவிலே பாராட்டி கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மறைந்த காமராசர் அவர்களுடைய அன்பிற்குரிய டாக்டர் பி. நடராசன் அவர்கள் இந்தியாவினுடைய பொருளாதார ஆலோசகராகக் கூட பணியாற்றியவர், 'காமர்ஸ்' என்ற பத்திரிகையிலே:—

"There is absolutely no room to call this scheme a dole, for this Note given by the Committee on Indirect Taxation reveals that the rural areas contribute 75 per cent of the indirect taxes."

என்று குறிப்பிடுகிறார்கள்.

கிராம மக்கள் மீது மறைமுகமாக 75 சதவித வரி விதித்துப் பெறும்போது, இதுபோன்ற திட்டம் கிராம மக்களுக்கு ஒரு உறுதுணையாக இருக்கும் என்பது மட்டுமல்ல, $1\frac{1}{2}$ லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் ஒரு மகத்தான சாதனை என்றெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு 112 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இது மற்ற திட்டங்களைப் பாதித்து விடுமோ என்று அச்சம் தெரிவித்திருந்தாலும் கூட, இதை தனியாக தனித்த திட்டமாக உருவாக்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்குரிய காரியம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதை யார் கொண்டு வந்தார்கள், இது எப்படி வந்தது என்பது ஆராய்ச்சிக்குரியதாக இருந்தாலும், இந்தத் திட்டத்தை ஒரு காலத்திலே காமராசர் அவர்கள் பகல் உணவுத் திட்டம் என்று கொண்டுவந்தபோது, அதைக் கூட நாட்டிலே தவறாக விமர்சித்தார்கள். அப்போது அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். "இந்தத் திட்டத்தைப்பற்றிக் குறை சொல்கிறார்கள். சில இடங்களிலே தவறுகள் நடக்கின்றன என்று புகார் வந்திருக்கிறது. அதற்காக இந்தத் திட்டமே மோசம் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஜஸ்டிஸ் கட்சி காலத்திலே மாநகராட்சியினுடைய முயற்சியின் மூலமாக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட விவரங்களை எடுத்துச்சொன்னார்கள். ஒரு நிகழ்ச்சி நடந்தது என்னவென்றால், மறைந்த காமராசர் அவர்கள் தலைமையிலே ஒரு விழா நடந்தபோது, அப்போது கல்விப் பொறுப்பை ஏற்றிருந்த திரு. சுந்தரவடிவேலு அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். முதலிலே இதை உருவாக்கியது நீதிக் கட்சி, அந்தக் கட்சி தான் அதைத் துவக்கியது என்பதைச் சொன்னபோது, காமராசர் அவர்கள், 'அவர்கள் சென்னை நகரத்திற்குப் போட்டார்கள், நாங்கள் தமிழ் நாட்டிற்கு முழுவதும் போட்டோம்'

என்று சொன்னார்கள். இப்போது நாம் சத்துணவை வழங்குகிறோம். அ ஓர் உயர்வான திட்டம். குழந்தைகளுடைய நல்வாழ்விலே இந்த அ வைத்திருக்கும் மகத்தான பற்றுதலைத்தான் இது காட்டுகிறது.

அடுத்தபடியாக, பாரதியார் விழாவுக்கு இவ்வளவு செலவா என்று மாண் மிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் கவலை தெரிவித்தார்கள். உன் படியே செலவில் சிக்கனம் தேவை என்பது தந்தை பெரியார் அவர்களுடை வழியிலே வந்திருக்கும் எங்களுக்கும் ஆசைதான். ஆனால் என்ன செய்வ அப்படியிருந்தும் கர்நாடகத்திலே விழா நடத்துங்கள் என்று கேட்டோ ஆனால் அவர்கள் நடத்தவில்லை. நடத்தாததற்கு உரிய விளைவை நம் பார்க்க முடிந்தது. அங்கே திரு. பக்தவச்சலம் என்பவருக்கு அந் சட்டசபைக்கு உள்ளே நடந்த கதையையெல்லாம் இங்கே சொல்வது மாட மாடியிலே இருந்து எறிந்த கதையையெல்லாம் சொல்வது இங்கே தேவ யில்லை. ஆனால் வெளியே அவருக்குப் பாதுகாப்பு இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சொல்வது மாபல்ல, தேவையில்ல என்று சொல்லிவிட்டு, சொல்லவேண்டியதைச் சொல்வது சரியல்ல.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர் வெளியே வரும் அளவுக்கு இடையூ வந்தபோது நான் நினைத்துக்கொண்டேன்,

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனிற்
சிந்தனை ஒன் றுடை யாள்."

என்ற பாரதியினுடைய கருத்து அங்கே ஏற்கப்பட்டிருக்குமேயான இரத்தம் சிந்திய திருப்பூர் குமரனுடைய எண்ணத்திலேயிருக்கும் ந செக்கிழுத்த சிதம்பரனார் அவர்களுடைய வழியிலே வந்திருக்கும் ந தேசிய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை வைத்திருக்கும் நாம், என் சொல்வது ? அண்ணா அவர்கள் மொழிப் பிரச்சினை பற்றி விவாதிக் போது விளக்கமாகச் சொன்னார்கள். அண்ணாவைப்பற்றி "ந காந்தியார் வழியிலே வந்திருக்கிறோம். காந்திய சிந்தனையிலே பட்டிருக்கும் ஒருவரை நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம். இன்றும் அந் தலைமை நீடித்திருக்கிறது" என்ற வகையிலே, அப்போது மூக்கையாதே அவர்கள் சொன்னார்கள். மதிப்பிற்குரிய நம்முடைய ஜயப்பிரக

நாராயண் அவர்கள் இராஜாஜி அவர்களைச் சந்தித்து "நான் முதலமைச்சர் அவர்களை நேரில் பார்க்கும் முன்னால், ரொம்ப கொடுமையானவர், கோபக் காரர், வேகமானவர் போன்று இருப்பார் என்று நினைத்தேன். ஆனால் நேரில் பார்க்கும்போது காந்தியைப் பார்க்கும் எண்ணம் தான் வருகிறது' என்று சொன்னார்கள். "I accept your leadership and I am ready to follow you" என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் சொன்னார். இந்த அவையிலே திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இருந்திருந்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்பற்றி இதே கருத்தைத்தான் சொல்லி யிருப்பார்கள். அண்ணா அவர்கள் மேலும் சொன்னார்கள். 'எங்களுக்கு பிரிவினைக் கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எந்த நேரத்திலேயும் அந்த எண்ணம் எனக்கில்லை" என்று அவர்கள் தெளி வாகச் சொன்னார்கள். இந்தியப் பேரரசு, இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தம் செய்தது. லோக் சபையிலே பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. எம். சாப்ரு அவர்களும் நாகபுரியிலே இருந்து வந்த திரு. ஏ. டி. மணி அவர்களும் ராஜ்ய சபாவிலே பேசிய பேச்சு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். "ஒருவருடைய பேச்சுக் காக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டது இதுதான் முதல் தடவை" என்று கூறியுள்ளார். அது எங்களுடைய சாமர்த்தியத்திற்கு அடையாளம் என்றோ, அவர்களுடைய திறமைக் குறைவுக்கு அடையாளம் என்றோ சொல்லவில்லை. பிரிவினைப் பேச்சு மற்றவர்களுடைய செவியில் விழக் கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக் கின்ற கருத்திலே தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அந்த உணர்வு மற்ற மாநிலங்களிலும் வரவேண்டும், என்பது தான் * * *

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, * * * என்று சொல்லப்பட்ட வார்த்தைகளைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி அந்தப் பகுதியை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். அந்தப் பகுதியை பத்திரிகைகளும் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அடுத்து, கழிப்பிடங்களைப்பற்றி ஒரு சமூக உணர்வை நாம் மக்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும். மறைந்த திரு. இராஜாஜி அவர்கள் ஒருமுறை வேதனையோடு ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். நம்முடைய நாட்டிற்கு அல்லது தமிழ் நாட்டிற்கு ஒரு வெளிநாட்டைச் சார்ந்தவர் வந்து, நம் நாட்டு நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவர் ரயிலில் பயணம் செய்து, காலையில் ரயிலில் உள்ள ஜன்னலை மட்டும் எடுத்துவிட்டு வெளியே பார்த்தால் போதும், நம் நிலை நன்றாகத் தெரியும் என்றார். அந்த அளவுக்கு மிகுந்த வேதனையோடு அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதைப் புரிந்துகொண்டிருக்கிற நம் அரசு—அதிலும் குறிப்பாக பெண்கள் படும் வேதனையைப் பார்க்கிற அரசு அவர்களின் நிலையை மனதில் கொண்டு கழிப்பிடங்கள் கட்டுவதற்காக என்று மட்டும் ரூ. 22.56 கோடி ஒதுக்கியிருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், காசு கொடுத்து கழிப்பிடங்களைப் பயன்படுத்துகிற பழக்கம் நாட்டில் இப்போது மிகவும் பரவி வருகிறது. அதிலும் குறிப்பாக நமது அரசு இந்த வகையில் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இந்தப் பழக்கம் மிக வேகமாகப் பரவி வருகிறது. கோவையில் மாநகராட்சியின் சார்பாக 2, 3 கழிப்பிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். காசு கொடுத்துப் பயன்படுத்தப்படும் அந்தக் கழிப்பிடங்களை வைத்திருந்துவிட்டதன் மூலம் அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முழுப் பணமுமே கிடைத்துவிட்டது என்றால், இத்தகைய முயற்சிகளில் நாம் இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். முன்கூட்டியே சொல்லியிருக்கக்கூடாதா என்று கேட்டார்கள். கோபம்கூட கொண்டார்கள். முதலில் கேட்டால், அவசரப்பட்டு விட்டீர்கள் என்பார்கள். பின்னாலே கேட்டால் ஏன் விட்டுவிட்டீர்கள் என்பார்கள். ஆனால் இன்றையதினம் எப்படியோ ஒரு குழு வரப்போகிறது என்பதும் அதன் மூலமாக நம்முடைய குறை தீரப் போகிறது என்ற நம்பிக்கையும் உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரை, நமக்கு இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஒன்று மத்திய அரசைப் பார்த்து நீங்களே ஒரு குழுவை அமைத்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு சொல்லுங்கள் என்பது. இன்னொன்று நாமே வழக்கு மன்றத்திற்குப் போவது என்பதாகும். வழக்கு மன்றத்திற்குப் போனால் வழக்கு எப்போது முடிவுபெறும், அதனாலே நம் குறை தீருமா என்பது தெரியாது. மத்திய அரசிலிருந்து ஒரு குழுவை அமைத்து அவர்கள் சொல்லுவதை நாம் ஏற்பது என்பது அடுத்த நிலை.

தற்போது ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதாவது தமிழகத்திலும், கருநாடகத்திலும் மத்தியில் ஆட்சியில் இருக்கிற கட்சி ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காரணத்தால், மத்திய அரசு சொல்லுவதை அவர்கள் யார் பக்கமும் சார்ந்து சொல்லிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. இத்தகைய குறை சொல்ல இடமிருக்காது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் தஞ்சைத் தரணி வறண்டு கொண்டிருக்கிறபோது, இந்தப் பிரச்சினையைக் குறித்து நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. காரணம் ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்களே குறிப்பிட்டார்கள். தண்ணீர் வேண்டுமென்று சொன்னால், அந்தப் பிரச்சினையைப்பற்றி அதிகமாகப் பேசக்கூடாது என்றார்கள். அதிகமாகப் பேசி, வருவதும் போய்விடக் கூடாது என்பதால் நான் காவிரிப் பிரச்சினை பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரை, நமக்குப் பல நெருக்கடிகள் இருக்கின்றன. இன்று தமிழ் நாட்டில் அணு மின் நிலையம் என்று பார்த்தால், 1964ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கல்பாக்கம் அணு மின் நிலையம் 10 ஆண்டுக் காலத்தில் முடிக்கப்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டு, இப்போது 20 ஆண்டு காலத்தையும் தாண்டிவிட்டதையும் தற்போது கனடா நாடு கைவிரித்துவிட்ட செய்தியையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். எனவே இனி அணு மின் நிலையம் தமிழகத்திற்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும், எரி பொருளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் முயற்சியில் நாம் அதிகமாக ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலக நாடுகளிலெல்லாம் "வெல்த் ஃபிரம் வேஸ்ட்" என்ற முழக்கம் பரவிவருவதைக் கொஞ்சம் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கழிவுப் பொருட்களின் மூலம் மின்சாரத்தை எடுக்கிற முயற்சியில் தற்போது அமெரிக்காவும், ஸ்கேண்டிநேவியா நாடுகளும், கனடா நாடும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் ஈடுபட்டிருக்கின்றன. எனவே அதையெல்லாம் நாமும் கொஞ்சம் ஆராய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கிலாந்து நாட்டில் "எனர்ஜி" தயாரிப்பதில் "ஈஸ்ட் சசக்ஸ் கவுண்ட்டி கவுன்சில்" என்ற அமைப்பு ரூ. 1½ கோடி மூலதனம் செய்து 20,000 டன் கழிவுப் பொருளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறது என்று தெரிய வருகிறது. இப்படி கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரத்தை எடுக்க ஒரு கருவியை உருவாக்கி அதிலிருந்து, மின்சாரத்தை எரி

சொல்லப்படுகிறது. இதைப்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அடுத்து, சில நாட்டில் பிருக சக்தியை ஆண்டுக்கு 300 நாட்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்றும் தமிழ் நாட்டில் நாம் அவைகளை 150 நாட்களுக்குத்தான் பயன்படுத்துகிறோம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே நாம் இதிலெல்லாம் கொஞ்சம் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. மின்சாரத்தை விநியோகிப்பதில்கூட ஒரு புதிய சிந்தனை இருப்பது நல்லது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தியா தேயிலை உற்பத்தியில் முன்னணியில் இருக்கிற நாடாகும். ஒரு ஹெக்டேர் பரப்பில் மிக அதிகமான தேயிலையை நாம் இங்கே விளைவிக்கிறோம். பொதுவாக ஒரு ஹெக்டேரில் 10 சதவீதம் விளைகிறது என்றால், தமிழ் நாட்டில் நாம் 15 சதவீதம் விளைவைச் செய்து காட்டிக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் தேயிலை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலமாக மட்டும் ஆண்டுக்கு நம் நாட்டிற்கு 60 கோடி ரூபாய் அந்நியச் செலவாணி கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாகத்தான் இந்த அரசு, இன்றையதினம் தமிழ் நாட்டில் இந்த அளவுக்கு மின் தட்டுப்பாடு இருந்தாலும் கூட, விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களைக் கைவிட்டுவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நீலகிரித் தேயிலை பயிரிடும் விவசாயிகளுக்கு வழங்கும் மின் சாரத்தைத் தடைப்படுத்தக்கூடாது என்ற வகையில் தொடர்ந்து மின்சாரம் அளித்து வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயினும் அனைத்து விவசாயிகளுக்கும் இதை நீடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு 6 மாத காலத்திற்கு மின் தட்டுப்பாடு ஏற்பட்டால், அதன் காரணமாக நம் நாட்டுத் தேயிலை உற்பத்தியில் 25 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி நட்டமாகக் கூடும் என்றும், இதன் காரணமாக ரூ. 37-1/2 கோடி நட்டம் ஏற்படும் என்றும், தொழிலாளர்களுக்கு ரூ. 15 கோடி நட்டமேற்படும் என்றும், அரசுக்கு வர வேண்டிய வரியில் 5 கோடி நட்டமேற்படும் என்றும் சொல்லப்படுகிற கணக்கைப் பார்க்கும்போது அரசு இதில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே அனைத்து தேயிலை விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு மின் தட்டுப்பாட்டிலிருந்து விதி விலக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், நீலகிரியில் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மேட்டுப்பாளையத்தில் உள்ள ஒரு சில தனியாரின் கைப்பிடியில் சிக்கிக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்ற அரசு அதில் தலையிட்டு ஏல விற்பனையை நீலகிரியிலும், ஊட்டியிலும் தற்போது ஏற்படுத்தித் தந்திருப்பது உண்மையிலேயே அவர்களுக்கு மிகப் பெரிய நன்மையாகும் என்ற காரணத்தால், அரசு செய்த இந்தக் காரியத்திற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுற்றுலா வளர்ச்சியைப் பொறுத்த வரையில், நீலகிரியில் உள்ள தொட்ட பெட்டாவிலிருந்து ஒரு 'ரோப் வே' அமைக்க ஒரு குழுவை ஏற்கெனவே அரசு அமைத்து அந்தக் குழுவும் அதற்காக ஒரு நல்ல திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறது. நீலகிரியைப் பொறுத்த வரையில், ஒரு விமானப் போக்குவரத்து அல்லது குறைந்தபட்சம் ஹெலிகாப்டர் போக்குவரத்தை உருவாக்கித் தருவது மிகுந்த பயனுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இராணுவப் பயிற்சி முகாம் இருக்கிறது. வெடி குண்டு உற்பத்தித் தொழிற்சாலை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே அடிக்கடி நிலச் சரிவுகள் ஏற்படும்போது, பாதைச் சரிவுகள் காரணமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் திருவாளர்கள் குழந்தைவேலு அவர்களும் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் ஹெலிகேப்டர் மூலமாகத்தான் சென்றுபார்த்துவர வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இதையெல்லாம் மாண்புமிகு சுற்றுலா வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுத் துறைபற்றி . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அநேகமாக எல்லா இலாக்காக்களும் வந்துவிடும்போல் இருக்கிறதே !

டாக்டர் இரா. சனார்த்தனம் : உணவு நிலைமையைப்பற்றிச் சொல்லுகிற போது, மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டைப்பற்றி, 'காட்கில் பார்முலா' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒரு புதிய சிந்தனை இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எப்படியென்றால் ஒவ்வொரு மாநிலத்தில் வருவாயிலிருந்தும்—இன்கம்டாக்ஸ் மூலமாகவும், ரெயில்வே மூலமாகவும் மத்திய அரசு பெறும் தொகையிலிருந்து 80 சதவீதத்தை மாநிலத்திற்குத் தந்துவிட்டு, பாக்கியிருக்கிற 20 சதவீதத் தொகையைப் பின் தங்கிய மாநிலங்கள் எவை என்று பார்த்து தருகிற முறையை ஏற்றுக்கொள்ளலாம்.

(முற்பகல் 10-40)

என்ன சொல்லுகிறார்கள் என்றால், இரண்டு முறையிலே தீர்மானிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதிலே ஒன்று மக்கள் தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ் நாடு குடும்பக் கட்டுப்பாட்டில் முன் நிற்கிறது. அதனாலே தமிழ் நாடு தன்னுடைய பங்கை இழந்து நிற்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினர் திட்டச் செலவு ஒதுக்கீட்டை இரண்டு முறையிலே தீர்மானிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். காட்கில் ஃபார்முலாவிலே தீர்மானிக்கிறார்களா என்பது வேறு. சத்துணவுத் திட்டத்திலே இரண்டு முறையிலே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆந்திர அரசைப் பொறுத்த வரையில், 100 கோடி ரூபாயை திட்டச் செலவிலே ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 'திட்டச் செலவில் செய்யுமா? பேரா?' என்கிறார்கள். மத்திய அரசு என் இந்த முறையைக் கடைப்பிடித்திருக்கிறது என்பது தெரியாமல் இருக்கிறது. காட்கில் ஃபார்முலாவின்படி செய்தார்களா அல்லது அவர்களுக்கே உரிய முறையில் செய்தார்களா என்பது தெரியவில்லை. இந்த ஒதுக்கீடுபற்றி நமது அரசு என்ன செய்யவிருக்கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைய தினம் பேசும்போது குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அதே கருத்தைத்தான் திரு. சீனிவாசமூர்த்தி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

"The bulk of plan outlay on industry is in the hands of the Centre and the States have only a small share. So, how the Centre has distributed this outlay can be stated to have been the most important factor in determining regional industrial development. In the second and third plans, the Central Government took up 68 major industrial projects of which 29 were in the three States of Bihar, West Bengal and Madhya Pradesh."

அதனாலே இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், முறையாக நடந்துகொள்ளவில்லை என்பது அறிஞர் பெருமக்களின் கருத்தாக இருக்கிறது. ஆகவே புதிய சிந்தனையை வைத்துக்கொள்ள வேண்டும். தனி நபர் வருமானம் எப்படி உயரும்? இங்கே பல தொழிற்சாலைகள் வர வேண்டும். அப்போதுதான் இங்கே தனி நபர் வருமானம் உயரும். மத்திய அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒன்று இரண்டு என்று கூறியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு அதிகமான தொழில் முதலீட்டை இந்த மாநிலத்தில் செய்வதன் மூலமாக தனி நபர் வருமானத்தை தமிழகத்திலே உயர்த்த முடியும். ஆகவே அந்த முயற்சியில் மத்திய அரசினர் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியில் அதிகப் பற்று வைக்காத பெருமை நமக்கு இருக்கிறது. மேற்கு வங்காளத்திலே வந்தது போல், உடனே கட்டு என்று கோபம் நம் மீது வராத அளவிற்கு நம்முடைய மாநிலம் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்துஸ்தான் படச்சுருள் நிறுவனத்தைப்பற்றி நினைக்கின்றபோது, எந்த அளவிற்கு இந்த மாநிலம் ஏமாற்றம் அடைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறோம். முடிவு தெரிவித்துவிட்டார்களா என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லுகிறேன். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி ஊட்டிக்கு வந்த மத்திய அமைச்சர் திரு. சரண்ஜித் சனானா அவர்கள் நிருபர்களைப் பார்த்துப் பேசும்போது, 'இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலை ஊட்டிக்குத்தான் வரப்போகிறது' என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி 'இந்து' இதழைப் பார்த்தால், மத்திய அமைச்சர் திரு. திவாரி அவர்கள் பம்பாயில் பேசியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. நைனிடாலில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அவர் பேசியிருக்கிறார். அந்தத் தொழிற்சாலை நமக்கு வர வேண்டும் என்பதில் நமக்கும் தமிழ் நாட்டில் உள்ள மற்றவர்களுக்குமிடையே கருத்து வேறுபாடு இல்லை. டில்லி அதிகாரத்தில் இல்லை. 'இங்குதான்' என்று ஒரு வார்த்தை வருமானால், அதைப்பற்றி நாம் அதிகம் பேசத் தேவையில்லை. நம்முடைய வருத்தம் எல்லாம் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் அமைச்சராகவும், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. டாண்டன் அவர்கள் இந்த நிறுவனத்தின் அதிகாரியாகவும் இருப்பதுதான். இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்களை கர்நாடகா மாநிலத்திலுள்ள மாண்டியாவிலிருந்து பெற வேண்டும். கர்நாடகா மாநிலத்திலிருந்து ஊட்டிக்கு லாரியிலே வருவது சுலபமா அல்லது நைனிடாலுக்கு எடுத்துச் செல்லுவது சுலபமா? இதில் உள்ள அதிகாரிகளை விட்டுவிடுங்கள், ஆரம்பத் தொழிலாளிகளை எண்ணிப் பாருங்கள். இதை நைனிடாலுக்கு எடுத்துச் சென்றால், அங்கேயுள்ள சாதாரண தொழிலாளி அங்கே போக வேண்டும். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஊரைவிட்டுப் போகமாட்டார்கள். ஒரு ஆசிரியரை ஒரு

கிராமத்தை விட்டு மாற்றினாலே கொதித்துவிடுகிறார்கள். அப்படி இருக்கும் போது, தொழிலாளிகளை நைனிடாலுக்குப் போங்கள் என்றால், யார் அப்படிப் போகப் போகிறார்கள்? ஒன்று வேலையை விட்டு விடுவார்கள் அல்லது பதவி உயர்வு இல்லையென்று வீட்டிலேயே இருப்பார்கள். எல்லா வற்றுக்கும் மேலாக மேற்கு ஜெர்மனி தூதுக்குழு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வந்து, இந்தியா ஒன்று என்பதால், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சுற்றிப் பார்த்துவிட்டு நீலகிரி மாவட்டத்திலே உள்ள உதகமண்டலம் தான் இதற்குச் சரியான இடம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மூன்று மாதங்களுக்கு முன்பு ஆல்பா கலர் குழுவைச் சேர்ந்தவர்கள் கூட வந்து பார்த்துவிட்டு, ஓர் அறிக்கையை அனுப்பியிருக் கிறார்கள். ஆகவே இந்த நிலையில் அந்தத் தொழிற்சாலை அங்கே வரவில்லையென்றால், மூன்றாயிரம் பேர் வேலை வாய்ப்பை இழந்து விடுவார்கள். இந்தத் தொழிற்சாலை இப்போது மூன்று கோடி ரூபாய் இலாபத்திலே நடக்கிறது. தொழிற்சாலையையே வேறு இடத்திற்கு மாற்றினால், அது நஷ்டத்திலே நடக்கும். இந்த தேசிய நஷ்டம் நியாயம் தானா என்று தேசிய உணர்வோடு கேட்கிறேன். அப்படிக் கேட்கும் போது, 'உங்களுக்குத் தெம்பு இருக்கிறதா? திராணி இருக்கிறதா?' என்று கேட்பார்கள். இராஜாஜி கூட ஒரு முறை சொன்னார், 'இந்தி எதிர்ப்புப் போர் என்று சொல்லுங்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டம் அல்ல, ஆட்டம் வேண்டாம், விட்டுவிடுங்கள்' என்று. எங்களுடைய அமைதியின் காரணமாக, தேசிய உணர்வின் காரணமாக பணிவோடு இதையெல்லாம் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என்று நம்புகிறோம்.

இந்தி மொழிப் பிரச்சினையைப் பற்றியெல்லாம் நினைக்கிறேன். ஒரே காரணம், நாம் தமிழ் உணர்வோடு இருக்கிறோம். தமிழ் மொழிக்காக பேரறிஞர் அண்ணா வழியிலே நின்று போராடுகிறோம். அந்த ஒருமைப் பாட்டிற்கு நீங்கள் தருகிற விலை என்ன என்று காந்தி வழியில் இருப்பவர் களைக் கேட்கிறேன்.' பாகிஸ்தான் பிரிவினை வந்த நேரத்தில் மவுண்ட் பேட்டன் பிரபு, "இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காக ஒன்றாக இருப்பதற்கு என்ன வழி?" என்று காந்தியைக் கேட்டார்.

Mount Batten requested a special solution. Gandhiji advanced a novel idea that Jinnah should forthwith be invited to form the Central Imperial Government with Members of the Muslim League.

காந்திஜி இதை வேடிக்கையாகச் சொன்னாரா என்றால் இல்லை, உறுதியாகச் சொன்னார். இந்தியா பிளவுபடக்கூடாது என்பதற்காக காந்திஜி

"I am entirely sincere in my suggestion—

இந்தியாவின் பொறுப்பை ஜின்னாவே ஏற்க வேண்டும்" என்று சொன்னார். அந்த தேசிய உணர்விலே பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் நடந்து கொண்டார்கள். ஐதராபாத்தில் நிஜாம் அவர்கள் போர்க் கொடியை உயர்த்திய நேரத்தில் பட்டாளப் படை திரண்ட நேரத்தில், திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் "இந்திப் பிரச்சினையைக் கைவிட்டுவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டபோது, பெரியார் அவர்கள் இந்திப் பிரச்சினையைக் கைவிட்டார்கள். சீனா படையெடுப்பு வந்தபோது, அண்ணா அவர்களும் திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைக் கைவிட்டார் கள். இது நாங்கள் செய்த தியாகம். நாங்கள் விட்டுக் கொடுத்த மாற்றம். அதே மாற்றத்தை, அதே தேசிய உணர்வை, நாங்கள் மத்திய அரசிட மிருந்தும், அகில இந்தியத் தலைவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம். தமிழ் மொழிக்காக மாபெரும் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் இந்த நாட்டிலே. சின்னசாமி, அரங்கநாதன், சிவலிங்கம், சாரங்கபாணி, திருச்சி ஆசிரியர் வீரப்பன், கோவை சிவசாமி முத்து, நஞ்சுண்டு மாண்ட மாணவர் தண்டபாணி, விராலிமலை சண்முகம் போன்ற தியாகச் செம்மல்களை இந்த நாட்டிலே வைத்திருப்பதற்குக் காரணம் இன்றும் தேசிய நீரோட்டம், காவிரி வழியாக தஞ்சைத் தரணியிலே பாய வேண்டும், அதிலே தேசிய நீரோட்டம் வரும் என்பதற்காகத்தான்.

இங்கே உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. நீலகிரியில் அரிசி 5 ரூபாய்க்கு விற்கிறது, இன்னும் கூடுதல் விலை—அதைப் பிரச்சாரம் செய் கிறார்கள். இங்கேயிருந்து வேறு மாநிலத்திற்கு வேலை தேடிப் போகிறார்கள் என்ற செய்தி பக்கம் பக்கமாக வருகிறது. இந்த ஆர்வத்தை உணவுப் பங்கீட்டுக் கழகம் வேறு மாநிலங்களிலிருந்து உணவுப் பொருள் கொண்டுவர உள்ள தடையை நீக்குவதில் காட்டுவார்களேயானால், தேசிய நீரோட்டம் லாரிகளில், வேகன்களில் வரும் என்று நான் தெரிவித்துக் கொள் கிறேன். அதே நேரத்தில் நாம் இந்திய சமுதாயத்தின் குடிமக்கள் இந்தியா ஒன்று என்பதிலே நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆசிய இந்திய விளையாட்டில் ஒருவர் வெற்றி பெற்றபோது, நாம் வெற்றி பெற்றோம் என்ற உணர்வைத்தான் பெற்றோமே தவிர, மாநிலத்தை மனதிலே கொள்ளவில்லை.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1983 பிப்ரவரி 7

"அந்தத் தேசிய நீரோட்டத்தை நீங்கள் எங்களுக்கு விட்டுத் தாருங்கள்" என்று கேட்கிறேன். நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறோம், நீங்கள் விட்டுக் கொடுங்கள். தேசிய நீரோட்டம் காவிரி வழியில் வரட்டும். தேசிய நீரோட்டம் தஞ்சைத் தரணியில் வயல்வெளிகளில் விளைகின்ற செடிகளில் வளரட்டும். அந்தச் செடியில் வளர்ந்த நெல்லை உண்கிற பிள்ளை, "வாடியிருந்தது தஞ்சை, இந்தியப் பேரரசு கட்டளையிட்டது, நீர் வந்தது; பயிர் வளர்ந்தது; அந்த மணிக் கதிர்களைச் சாப்பிட்டு சத்துணவு உண்டேன்", என்றால் தேசியம் வளரும். தமிழ்நாட்டில் வறட்சி நிலை போகும்.

தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை என்றால், ஓடி வரவேண்டும். காரணம், தவித்துக்கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளிலிருந்து நிலக்கரி வரலாம் என்றால், இங்கிருந்தே தேவையான அளவிற்கு வரவில்லை. இங்கிருந்து சரியாக வருகிறதா என்றால் சரியாக வருவதில்லை. வழியிலே இட்டார்சியிலே 300 வேகன்கள் திருடு போயிருக்கின்றன. அதை பொதுக் கணக்குக் குழுவிலே விவாதித்திருக்கிறோம். பிறகு இரண்டாண்டுகள் கழித்து தேடிப் பிடித்துவிட்டோம் என்பார்கள். அப்போது நமது தேவை தீர்ந்திருக்கும். அதனாலே எவ்வளவு இடர்ப்பாடுகள்? நாம் கப்பலை வாங்கிக்கொண்டு வந்தால், வ.உ.சி. பிள்ளை கப்பல் என்றால், தானும் கப்பல் ஓட்டும் தமிழன் ஆக வேண்டும் என்ற காரணத்தாலே, காகிதத்தில் வண்ணக் கப்பல் கட்டி கடலிலே விட முடியாது என்று எண்ணி, வானத்திலே விட்டுக் காட்டி கப்பல் போர ஊழல் கதையைச் சொல்ல முடிந்ததே தவிர, தம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்க முடிந்ததா என்றால், இல்லை. இந்த அவையின் சார்பாக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு அருமையான நேரம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இது ஒரு அருமையான காலக் கட்டம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைக்கு உறுப்பினருக்கு அருமையான நாள்.

1983 பிப்ரவரி 7]

(முற்பகல் 10.50.)

டாக்டர் இரா. சனார்த்தனம் : இறுதியாக மொழிப் பிரச்சினை பற்றி தலைவர் அவர்கள் ஒரு கருத்து சொன்னார்கள். அதைப்பற்றிக் கூறி முடித்துவிடுகிறேன். நீங்கள் இந்த அவையிலே பேசியிருக்கிறீர்கள். மொழிப் பிரச்சினைக்கு என்ன வழி என்பதை அருமையாகத் தெரிவித்திருக்கிறீர்கள். தாங்கள் குறிப்பாக அதிகாரங்கள் குவிந்திருப்பதுதான் காரணம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். "பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புகளையும் மட்டும் மத்தியில் விட்டு, மற்ற அதிகாரங்களை மாநில அரசுக்கு மாற்றித் தந்தாக வேண்டும் என்று வலியுறுத்திக்கொள்கிறேன். அப்போதுதான் உண்மையான மாநில சுயாட்சி மலரும்" என்று தாங்கள் தெரிவித்திருக்கின்ற கருத்து உள்ளபடியே மொழிப் பிரச்சினைக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும் என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல, ஆளுநர் இறுதியாக அவரது உரையில் தெரிவித்திருக்கிறார். "தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வகுத்துள்ள திட்டங்களையும், பணிகளையும் செயல்படுத்த நீங்கள் அனைவரும் இணைந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்" என்று ஆளுநர் உரையிலே இருப்பதைக் குறிப்பிட்டு, அந்த இணக்கத்தையும் தோழமையையும் நாம் பெற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். காந்தியின் வழியிலே உருவான ஒரு தலைவரை தமிழகம் பெற்றிருக்கிறது. காந்தி கதர் சட்டை அணிந்து அவர் காந்தியவாதியாக விளங்கினார். அவர் மட்டுமல்ல, இன்று உரையாற்றிக்கொண்டிருக்கின்ற நானும், இன்று என்னுடைய தாயார் மருத்துவமனையிலே நோயுற்று இருக்கின்ற நிலையிலும், ஆரம்பகாலம் தொட்டு கதராடையை அணிந்தவர்கள். என் தந்தையார் அரசுப் பணியிலே இருந்த காலம் தொட்டு இன்றுவரை கதர் அணிந்தவர். ஒரு கூட்டத்திலே, நீங்கள் அப்போது திராவிட மகாநாடு நடத்திய காலத்திலே, தாயாரோடு அமர்ந்திருந்த நேரத்தில், இதையெல்லாம் மகன் படித்துவிட்டானா என்று நீங்கள் கோபப்பட்ட போதும் கூட, அது அல்ல, இந்த மகன் இவன் அண்ணன் என்று என்னைச் சொன்னபோது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திராவிடர் மாநாடு நான் நடத்தவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஈரோட்டில் நடந்த மகாநாட்டையும் பிரதிநிதிகள் மகாநாட்டையும் மற்ற மகாநாட்டையும் நான் குறிப்பிடுகிறேன். அப்படியெல்லாம் . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : திராவிடர் இயக்க எதிர்ப்பு மகாநாடா அல்ல திராவிடர் இயக்க மகாநாடா என்று சொல்ல வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அப்படிச் சொல்ல மனம் ஏற்றுக்கொள் வில்லை. பரவாயில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சரித்திரத்தைச் சொல்வதிலே என் தப்பு ?

டாக்டர் இரா. சனார்த்தனம் : நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் குழந்தையாக இருந்தபோது பெற்றோர்கள் எனக்குக் கதராடை அணிவித் கதர் குல்லா வைத்து, நேரு போல் அணியவைத்து, மூவர்ணக் கொடியை என் மார்பிலே குத்தி, அப்படியெல்லாம் தேசிய உணர்வோடு வளர்ந்தவன் தான் நான் எல்லாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அப்படி ஒரு தேசிய உணர்விலேயே ஈடுபடுத்திக்கொண்டு தலைவர் தந்தை பெரியார் அவர்கள் வழியிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே இருக்கின்ற புரட்சி தலைவர் அவர்களுடைய வழியிலே நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்காகத் தான் இவ்வளவு குரல் கொடுக்கிறோம். இந்நாடு பிளவுபடக்கூடாது என் எண்ணத்தோடுதான் என்பதை இந்த அவையின்முன் கூறி அமைகிறேன்.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே மதிப்பிற்குரிய திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்திற்கு முழுமனதோடு என் ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது மாணவர் அழகாகப் பேசிய பின்னர் எனக்குப் பேச வாய்ப்பளித் தமைக்கு மனமார்ந்த நன்றியை தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் மிக அழகாக கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த ஆளுநர் உரையிலே பெரிதாகக் கூறப்பட்டுள்ளது மாண்புமி முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம். அதற்கு ரூ. 120 கோ செலவுக்கு ஏற்பாடு செய்திருப்பதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற அந்தச் சத்துணவுத் திட்டத்தை நாட்டிலுள்ள அனைவரும் வரவேற்கிறார்க ஏதோ ஒரு சிலர் சில சந்தேகங்களைக் கேட்கின்றார்கள். அந் சந்தேகங்களை அவ்வப்போது அரசு நிவர்த்தி செய்து வருகிறது. அ இக்கட்டுக்களையெல்லாம் தவிர்க்க அரசு முயன்று வருகிறது. இந்த நல் திட்டத்தை உலக அறிஞர்கள் எல்லாம் பாராட்டுகின்றனர். நம் நாட்டி இருப்பவர்கள் சிலர், நம் நாட்டிலே உடனடியாக இருக்கக்கூடிய கஷ்டங் அவர்களுக்குத் தெரிவதால், "என்னய்யா, இப்படி 120 கோடி. கூடாமை

கொண்டுபோய் இதிலே போடுகிறார்கள். அதற்குப் பதிலாக, ஒரு தொழில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். பலருக்கு வேலை கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். அவர்கள் இளைஞர்கள். அதனால் அவர்கள் அப்படிப் பேசுகின்றார்கள். தொழிலைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் 'சையன்ஸ் அண்டு டெக்னாலஜி' படித்துக்கொண்டிருக்கின்ற கூட்டம். அவர்களுக்கு நான் சொன்னேன் : "தம்பி, நீங்கள் எல்லாம் உயர்ந்த மட்டத்திலே பிறந்தவர்கள். சிறுவயதிலேயே நன்கு சாப்பிட்டதால் அறிவுடையவர்களாக இருந்துகொண்டிருக்கிறீர்கள். அதனாலே அவர்கள் 'சையன்ஸ் அண்டு டெக்னாலஜி' பற்றிப் படிக்கிறார்கள், பேசுகிறார்கள். நம் நாட்டிலே ஏராளமான குழந்தைகள் கிராமப்புறங்களிலே கேட்பாரற்று தெருவிலே சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போ போ என்று சொல்வதற்குக்கூட ஆள் கிடையாது. அப்படி அவர்கள் போனாலும், அவர்களுக்குப் போதிய மூளை வளர்ச்சி இல்லாததால், ஆசிரியர்கள் சொல்வதை மனதில் ஏற்றுக்கொள்ள முடியாத, சிந்திக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு என்ன செய்வது என்று உலகம் சிந்தித்தது. அதற்கு விஞ்ஞானிகள், இவர்களுக்கு சத்துணவு கொடுக்க வேண்டும் ; சத்துணவு 7, 8 வயதிற்கு முன்னாலே கொடுத்தால் அவர்களுடைய நரம்பு பலமடையும், மூளை விருத்தியடையும் ; இளைஞர்களாக ஆகும்போது எதிர்காலத்திலே திறமையுள்ள நல்ல குடிமக்களாக இருப்பார்கள் ; அதற்காக சத்துணவு கொடுக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். இப்போது நடப்பது உணவுத் திட்டமல்ல, சத்துணவுத் திட்டம். அதனாலேதான் இதற்காக எத்தனை கோடி செலவு பண்ணினாலும், இது ஒரு இன்வெஸ்ட்மெண்ட் என்று நினையுங்கள். இது சரியான இன்வெஸ்ட்மெண்ட் என்று நினையுங்கள்" என்று சொன்னேன். இந்த இன்வெஸ்ட்மெண்ட் மூலமாக இன்னும் 10 ஆண்டுகள் 20 ஆண்டுகள் கழிந்த பிறகு இவர்களும் திறமைசாலிகள் ஆவார்கள். இவர்களின் அறிவுசார்ந்த உழைப்பின் மூலம் நம் நாடு பொருளிலே நல்ல வளர்ச்சியடையும். ஏனென்றால், தமிழ் நாட்டிலே இருக்கின்ற ஏழையெளியவர்கள்தான் மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்றார்கள். அங்கே ஸ்டெனோகிராபர் வேலை வேண்டுமென்று போகிறார்கள். நான் அங்கே இந்திய வேலை செய்துகொண்டிருந்தபோது, ஒரு ஸ்டெனோகிராபர் வந்தார். அவரிடம் நான் அசிஸ்டெண்ட் டைரக்டர் அளவுக்கு பதவி உயர்வுக்குப் போகிறாயா என்று கேட்டேன். அவர் தலையாட்டிவிட்டார். ஏனென்றால் அவருடைய படிப்பும் அப்படி. அப்படி அவர் வளரவில்லை. மிக எளிமையான நிலையிலே இருந்து வந்தவர்கள். அவர் இதுவே போதும் என்று சொல்லிவிட்டார். ஸ்டெனோகிராபர்

வேலையே போதும் என்று சொன்னார். ஆல்பிரேஷன் என்று சொல்வார்
களே, அது அவர்களுக்கு வர வேண்டும். இன்னும் கடுமையாக வேலை
செய்ய வேண்டுமென்ற உணர்வு வரவில்லை. இந்தச் சத்துணவு சாப்பிட்டால்
புரோட்டீன் என்று சொல்கின்றார்களே அதை அவர்களுக்குக் கொடுத்தால்
நல்லது. அப்பொழுது தான் அறிவும் ஆற்றலும் ஒருங்கேவளரும்.
சிலர் "நல்ல பருப்பையெல்லாம் வாங்கி சத்துணவிலே போட்டு விடுகிறார்கள்,
ஆதலால் நமக்குக் கிடைக்கவே இல்லை" என்று சொல்வதாகச் சொன்
னார்கள். அதுவே இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு ஒரு பெரிய பாராட்டு
என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் இதுவரையிலே பருப்பையே
சாப்பிடாத குழந்தைகளுக்கு பருப்பு கிடைக்க இந்த ஒரு திட்டத்தைப்
போட்டு, லட்சக்கணக்கான குழந்தைகள், 65 லட்சம் குழந்தைகள், இந்த
சத்துணவைச் சாப்பிடுகின்றனர், எதிர்காலத்திலே இவர்கள் எல்லாம் பெரிய
மேதாவிகள் ஆவார்கள். இப்போது ஒரு சில மேதாவிகளை வைத்துக்
கொண்டு காரியங்களை இயற்றிக்கொண்டிருக்கிறோம். காந்தியடிகள்,
"ஒரு சிலரிடத்திலே இந்த அதிகாரம் வந்துவிட்டால் போதாது, பல்லாயிரக்
கணக்கான குடிமக்களுக்கு இந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும்
திறமையும் வரவேண்டும்" என்று சொன்னார்கள். "ஒரு சிலர்தான்
ஆளுபவர்கள். ஆனால் அந்த ஆளுபவர்கள்தான் கொள்ளைக் கூட்டக்
காரர்களாக இருப்பார்கள். அவர்களைக் கட்டிக்காக்கின்ற பிரஜைகள் நம்
நாட்டிலே வந்து விட்டார்களானால், உண்மையான ஜனநாயகம் நிலைக்கும்.
இப்போதெல்லாம் யார் கேட்கப்போகிறார்கள் என்று சொல்லி ஏதோ காரியங்
களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் நல்ல
திட்டம், சரியான முறையிலே அமைந்திருக்கிறது என்பதை நாம் இன்னும்
விரிவாக பல துறைகளின் மூலமாக, படம் எடுத்துக் காட்ட வேண்டும்"
என்று சொன்னார்கள். எந்தெந்த வழிகளிலேயெல்லாம் இதை மக்களுக்குப்
புகட்டவேண்டுமோ, அப்படியெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல
வேண்டும். இது உணவுத் திட்டமல்ல என்பதை விளக்கிச் சத்துணவுத்
திட்டம் என்று சொல்ல வேண்டும். இதை யார் ஆரம்பித்தது,
எப்போது ஆரம்பித்தது என்றெல்லாம் விவாதம் செய்துகொண்டிருக்கின்றார்
கள். இது தமிழகத்திலே பண்பாட்டிலேயே இருந்துகொண்டிருக்கிறது.
உணவு அளிப்பது என்பது தமிழருடைய பண்பாட்டிலே இருந்துகொண்டிருக்
கிறது. ஒரு காலத்திலே வள்ளலார் வருகின்றவர்களுக்கெல்லாம் உணவு
போடு என்று சொன்னார்கள். 'உணவு போடுவது மட்டுமல்ல', அதற்கும்
அடுத்தாற்போல படிக்கவும் வேண்டும். சிந்திக்கவும் வேண்டும்" என்று சொன்
னார்கள். பல நிறுவனங்கள் முதலிலே உணவு கொடுத்து, பிறகு கல்வி

கொடுத்தார்கள். படிப்படியாக அதையெல்லாம் ஆராய்ந்து வள்ளலார்
அவர்கள் எப்படி இந்தத் துறையை வளர்த்திருக்கின்றார்கள் என்பதைச்
சொல்லியிருக்கிறார்கள். இந்த சத்துணவைப்பற்றிப் பேசும்போதே 'இது
கல்வியோடு இணைக்கப்படும்' என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். இது பெண்களாலேயே நடத்தப்படும் என்றும் தெரிவித்
தார்கள். இந்தக் காலம் தாய்மையையும் அருள் உணர்வையும் வளர்க்கின்ற
காலம். அருள் உணர்வு எல்லாம் ஆண்களைவிட பெண்களிடத்திலேதான்
அதிகமாக இருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அப்படியே இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதை பெண்களிடத்திலே,
அவர்கள் கையிலே கொடுத்திருக்கின்றார்கள். லட்சக்கணக்கான பெண்கள்
இப்போது அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குச்
சங்கடம் வருகிறது என்று பலர் சொன்னபோது, புதிய ஆட்களை நியமித்து
இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியே இப்போது நியமிக்கப்பட்
டிருக்கிறார்கள். கல்விமட்டும் தனியாக இயங்கிவிட முடியாது. கல்வியும்
மக்களும் சேர்ந்தே நடக்க வேண்டும். கல்வியாளர்களிடமிருந்து இந்தப்
பொறுப்பையெல்லாம் எடுத்துவிட்டார்கள் என்று கவலைப்பட வேண்டிய
தில்லை. கல்வியாளர்கள் மட்டுமே கல்வியைப் புகட்டிவிட முடியாது.
வெறும் அறிவை மட்டும் போதித்துவிடுவது என்றால் போதித்துவிடலாம்.
ஆனால் நல்ல ஒழுக்கத்தை, நல்ல ஆற்றலை வளர்க்க வேண்டுமென்றால்,
ஸ்கில், ஆப்டிடியூட், பிகேவியர் (Skill, Aptitude, Behaviour
இவற்றையெல்லாம் வளர்க்க வேண்டுமென்றால் பொதுவாக சமுதாயமே
அதிலே ஈடுபட வேண்டும். ஆண்கள் மட்டுமல்லாமல், பெண்களும் அதில்
ஈடுபட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, மிகவும் ஆனந்தமாக
இருக்கிறது. இந்தத் துறையிலே என்ன கஷ்டம் வந்தாலும், யார் என்ன
பேசினாலும், இதைச் சரிபடுத்திக் கொண்டு அவர்கள் உண்மையாகச் சொல்
கின்ற சங்கடங்களையெல்லாம் நிவர்த்திசெய்துகொண்டு சென்றால், இந்தத்
திட்டம் மேலும் மேலும் வளரும் என்று நம்புகிறேன். இந்த
நம்பிக்கைக்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை இருப்பதால், இதை
நான் மனதாரப் பாராட்டுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். அத்தோடுகூட
இந்தத் திட்டத்திலே இணைந்து பல காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.
கிராமங்களிலே ஒருங்கிணைந்த வளர்ச்சி, ஒருங்கிணைந்த வளர்ச்சி என்று
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான இடங்களிலே இப்படி
சமையல் அறையிலேகூட விஞ்ஞானம் போக வேண்டும். விஞ்ஞானம்
இதுவரை வசதியுள்ள பிள்ளைகளுக்குத்தான் உதவி செய்துகொண்டிருக்
கிறது. Science in the service of the well-to-do and the haves
என்றுதான் எங்கும் நடந்துகொண்டிருக்கிறது. இப்போது விஞ்ஞானத்தை

[திரு. க. அருணாசலம்] [1983 பிப்ரவரி 7

அடுப்படிக்கும் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். எரிசக்தி குறைவைப் பற்றிச் சொல்லுகிறார்கள். மின்சக்தி குறைவைப்பற்றிப் பேசுகிறார்கள். நான் ஒரு சமயம் ஒரு பள்ளிக்கூடத்திலே போய்ப் பார்த்தபோது, அரிசியை அடுப்பிலேற்றி வந்தவுடனே வைக்கோல் பெட்டியிலே வைத்து விடுகிறார்கள். ஒரு மணி நேரம் பின்னர் அது அந்த உஷ்ணத்திலேயே வெந்துவிடுகிறது. அந்தக் கணக்குப்படி அவர்களுக்கு மாதம் 45 ரூபாய் மிச்சம் ஆகிறது என்று சொல்கிறார்கள். இந்த விஞ்ஞானம் எங்கும் பரவவேண்டும். இப்படி வைக்கோலில் வைப்பதனை எல்லா இடங்களிலும் செய்யலாம். ஒரு சாக்குப் பைக்குள்ளே வைக்கோலைச் சுற்றி வைத்து ஒரு பெட்டிக்குள்ளே வைத்து, அந்தப் பாத்திரத்தை வைத்துவிட்டால் அதிலே காரியம் நடந்து விடும் விறகுச் செலவும் குறைவு. எரி சக்தி அதிகமாக மிஞ்சிவிடுகிறது. எரி பொருள் குறைவு, குறைவு என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு இங்கே ஒரு வாய்ப்பும் கிடைக்கிறது.

(முற்பகல் 11-00.)

இன்னொரு ஊரில், குஜராத்திலிருந்து ஒரு பெட்டி வாங்கி வந்தோம், அதில் வைத்து உணவைச் சமைக்கிறோம், கட்டை வைத்து எரிக்க வேண்டிய தில்லை, சூரிய ஒளியில் செய்யலாமென்று சொன்னார்கள். நான் பார்த் தேன். 1-1/2 மணி நேரம் வெயிலில் வைத்திருந்தார்கள். அரிசி, பருப்பு, உருளைக் கிழங்கு, மற்ற காய்கறிகள் எல்லாவற்றையும் வைத்துவிடுகிறார்கள். நன்றாக சமைந்திருந்தது. நன்றாக இருந்தது. அந்தப் பெட்டியை குஜராத்தில் எப்படிச் செய்கிறார்கள் என்று கேட்டபோது, அதைச் செய் வதற்கு 400 ரூபாய் ஆகிறது, அதற்கு 200 ரூபாய் சப்சிடி கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைய பத்திரிகையிலும் அது வந்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் சப்சிடி கொடுப்பார்களா என்று கேட்கிறார்கள். அதைப்பற்றி யோசிப்பார்கள் என்று நம்புகிறேன். என்னுடைய நண்பர் சொன்னார், அதுசம்பந்தமான 'செல்' உண்டாக்க வேண்டுமென்று. ஏராளி மான பணச் செலவில் செல் உண்டாக்கிவிட்டால் மட்டும் பிரயோசனமில்லை. ஆங்காங்குள்ள வசதிகளைக் கொண்டு பரவலாகச் செய்ய வேண்டும். அலுவல் கங்களைப் பெருக்குவதனாலேயே காரியங்கள் நடப்பதில்லை. the least governing Government will be the most powerful Government என்று சொல்லுவார்கள். இந்த யோசனைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு, எப்படி எரி சக்தியை மிச்சப்படுத்திடலாமென்று சொல்லி, அதற்

1983 பிப்ரவரி 7] [திரு. க. அருணாசலம்]

கேற்ப மக்களைத் தயார்படுத்த வேண்டும். இப்போது உஷ்ணத்தை உண்டு பண்ணி, நம்முடைய கல்லூரிகளிலே சூரிய சக்தியின் மூலமாகத் தண்ணீரைக் கொதிக்க வைக்கிறார்கள். இதை விரிவாக்க வேண்டும். நம்முடைய பாலிடெக்னிக்குகளில் இதைச் செய்ய வேண்டும். அவர்களுக்குப் பொறுப்பு கொடுத்து, பக்கத்திலுள்ள ஊர்களில் இதைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், கல்வி முறையும் மாறும், அதன் மூலமாக நம்முடைய பல பிரச்சினைகளும் தீர்ந்து போகும். ஆரம்பக் கல்வியிலேயே இதைச் செய்ய வைக்கலாம். எரி சக்தி என்பது எதிலிருந்து உண்டாகிறது? நாம் ஒரு நாளைக்கு 2,500 கலோரி உணவு உண்டால், அந்த சக்தியைப் பயன் படுத்தி வேலை செய்யும்போது நாட்டுக்கு நன்மை ஏற்படுகிறது. குழந்தை களுக்குச் சாப்பாடு போடுகிறோம். அதிலிருந்து உண்டாகும் சக்தி களையும் பயன்படுத்தலாம். நான் நான்காம் வகுப்பு ஆசிரியராக இருந்த போது ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்கிறேன். நான்காம் வகுப்பு மாணவர்கள் ஒரு வருடத்தில் 100 ரூபாய் வருமானமுள்ள அளவிற்கு நூல் உற்பத்தி பண்ணினார்கள். 1-1/2 அல்லது 2 மணி நேரம் வேலை செய் வார்கள். 4, 5 மணி நேரம் படிப்பார்கள். ஓரிரு மணி நேரம் விளையாடு வார்கள். ஆனந்தமாகத் தூங்குவார்கள். இப்போதும் உணவு உண்கிறார் கள். நல்ல சத்துணவு கிடைக்கிறது. 2 வயது முதலே கிடைக்கிறது. 4ஆம் வகுப்புக்கு வந்தவுடன் குறிப்பிட்ட ஏதாவது ஒரு தொழில் செய்ய வேண்டுமென்று சொல்லி, அதன் மூலமாக ஒரு வருவாயை உண்டு பண்ணினால், அவர்கள் வேலை செய்வதோடு, அறிவையும் பெறுவார்கள். இதனால் கல்விப் பிரச்சினையும் தீரும். இப்போது பள்ளிக்குப் போகிறவர்களில் 63 சதவிகிதத்தினர் நின்றுவிடுகிறார்கள், அவர்கள் வேறு வேலைக்குச் செல்ல அவசியம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நாட்டிலே எவ்வளவு தான் பெரிய தொழில்களை ஏற்படுத்தினாலும், அதனால் வாங்கும் சக்தியை அதிகரிக்க முடிவதில்லை. பீகாரில் பெரிய பெரிய தொழில்கள் இருக் கின்றன. அங்கேதான் தரித்திரமும் அதிகமாக இருக்கிறது. 'காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ்' மூலமாகத்தான் வாங்கும் சக்தியை அதிகப்படுத்த முடியும். அந்த வகையில் திறமைகளை வளர்க்க பள்ளிக்கூடங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்தச் சமயத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். காந்தி வழியில் வந்தவர், ராட்டையைத் தவிர வேறு என்ன சொல்லுவார் என்று சொல்லிவிடாதீர்கள். ராட்டைக்குள்ள சக்தியை, ஆற்றலை இப்போது புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் மிகவும் பெருக்கியிருக்கிறார்கள். கதிர் இல்லாமல் நூற்க ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நாங்குநேரி வட்டாரத்திலே அப்படி 200 இயந்திரங்கள் ஓடுகின்றன. கதிர் கிடையாது.

இது லேட்டஸ்ட் டெக்னாலஜி. புதுக் கருவிகளைப் பயன்படுத்தி, மாணவர்களிடம் உற்பத்தி செய்யச் சொன்னால், அதன் மூலமாக கிராமங்களுக்கு விஞ்ஞானம் போகும். அவர்கள் ஆற்றல் வளரும். எனவே இந்த வழிகளையெல்லாம் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்போது அதிகமாகப் பேசப்பட்டது மொழிப் பிரச்சினை பற்றியதாகும். காந்திய நண்பர்கள் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று சொன்னார்கள். காந்திஜி சொன்னவற்றையெல்லாம் நாம் கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். சொன்னாலும் நீங்கள், அதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டீர்கள் என்பது தெரியும். சவுகரியமானதை ஏற்றுக்கொள்வோம், சவுகரியம் இல்லாததை விட்டுவிடுவோம். அப்படித் தானே இருக்க வேண்டும். காந்திஜி எந்தக் காலத்திற்கும் பொருத்தமான சில உண்மைகளைச் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் எதையும் யார் மேலும் திணிக்க வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. இராஜாஜி அவர்கள் கட்டாயமாக எல்லாப் பள்ளிகளிலும் ஆரம்பிக்க வேண்டுமென்று 1939-லே சொன்னபோது, நான் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். "நீங்கள் செய்வது சரியல்ல, எல்லோருக்கும் நாம் போதுமான பள்ளிக்கூடம் வைக்கவில்லை, எல்லோருக்கும் இன்னும் தமிழே சொல்லிக் கொடுக்கவில்லை, இந்தியை வைக்கிறீர்களே" என்று எழுதினேன். எங்களுடைய தலைவராகிய மஷ்ருவாலா அவர்களுக்கும் அந்தக் கடிதத்தின் நகலை அனுப்பினேன். அப்போது காந்தி சேவா சங்கம் என்று இருந்தது. ஈ.வே.ரா. போன்றவர்களைச் சிறை செய்தது சரியல்ல என்று எழுதியிருக்கிறேன் என்று தெரிவித்தேன். இராஜாஜி சொன்னதற்கு மேலே சொல்ல உனக்கு கெட்டிக்காரத்தனம் இருக்கிறதா என்று கேட்டு, அதை அப்படியே போட்டுவிட்டார்கள். பின்னால் ஒருமுறை காந்திஜியைச் சந்திக்கச் சென்றபோது இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அனுமதி கிடைக்காது என்று சொன்னார்கள். அந்தக் காலம், தமிழிலே கூடப் படிக்காமல் இருந்த காலம். இப்போது எல்லோரும் தமிழ் படிக்கிற வாய்ப்பு உண்டு. அண்டை அயலார்கள் படிக்கும் பாடத்தை நம்மீது திணிப்பது என்பது வேறு, படிக்க வசதி செய்து கொடுப்பது என்பது வேறு. பல மாநிலங்களைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அங்கே சேரிகளில் தான் பல தமிழர்கள் இருக்கிறார்கள். சிலர் மட்டுமே மேட்டுக்குடியிலே இருக்கிறார்கள். அதிகமாகக் கூட்டமுள்ள பம்பாய், அகமதாபாத், பாட்னா போன்ற இடங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அரிசன மக்களாக, பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள். 4, 9

வகுப்புவரை படித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தி கொஞ்சமும் தெரியவில்லை. ஓரளவு தெரிந்திருந்தால் கஷ்டப்படமாட்டார்கள். இப்போது கல்லூரிகளில் பி.காமில் இந்தி படிக்கலாமென்று இருக்கிறது. பள்ளியில் படிப்பதற்கு வசதி கிடையாது. இந்தி எதிர்ப்பு இயக்கம் நடந்தபோது, சில இளைஞர்கள் என்னிடம் வந்தார்கள். அப்போது இந்திப் புத்தகம் என் பக்கத்தில் இருந்தது. இதையெல்லாம் வைத்திருந்தால், எரித்துவிடுவோமென்று சொன்னார்கள். பரவாயில்லை, எல்லாவற்றையும் எரிக்கும்போது என்னையும் எரிக்கலாம், சந்தோஷம்தான் என்று சொன்னேன். 'எனக்குச் சுதந்திரம் இருக்கிறது, படிக்க வேண்டுமென்று விரும்பிப் படிக்கிறேன் எனக்கு சுதந்திரம் இல்லையா' என்று கேட்டேன். இந்தி படிக்கக்கூடாது என்ற உணர்வினை வளர்ப்பது சரியல்ல. தமிழ் படிக்க வேண்டும். தமிழை நாம்தான் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். இன்னும் தமிழ் ஆட்சிமொழியாக முழு அளவிற்கு வரவில்லை. நொண்டி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. எப்போது ஆட்சிமொழியாக வரப் போகிறது? பல இடங்களில் ஆங்கிலத்தில் டைப் அடித்துக் கொடுத்தால், சீக்கிரம் பதில் அளிக்கிறார்கள். தமிழில் கொடுத்தால், அதற்கு இங்கிலிஷ் டிரான்ஸ்லேஷன் கேட்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற வேண்டும். தமிழின் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கிறது என்று யாரும் எண்ணக்கூடாது. இந்தி படிப்பதால் தமிழ் வளராது என்று கருதுதல் சரியில்லை. ஆனால் மத்திய ஆட்சியிலே இருக்கிறவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவந்தால் அதை எதிர்க்க வேண்டும். பாராளுமன்றத்திற்குப் போகிறவர்கள் எல்லாம் அங்கே இந்தி படிக்கிறார்கள். இங்கேயே படித்திருக்கலாம். படிக்காவிட்டால் முழு அளவிற்குப் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. இந்தி தட்டெழுத்து தெரியாவிட்டால், தட்டெழுத்தர்கள் அங்கே பிழைக்க முடியாது. துரதிருஷ்டவசமாக தமிழகத்தில் வேலை வாய்ப்பு அதிகமாக இல்லை. எனவே ஆலைகள் வைப்பதில் மிகவும் மும்முரமாக இருக்கிறார்கள். அந்த வேலையை கிராமத்துப் பெண்களுக்குக் கொடுத்தால் அவர்கள் அதனைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை ஏன் வரவில்லை? 30 பெண்கள் நூற்கும் இடத்தில் 20 பெண்கள் நெசவு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்—செமி ஆட்டமேடிக் லூம் மூலம் செய்கிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் 10 ரூபாய் முதல் 5 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கும் நிலைமையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் மிகக் குறைவாக நடந்துகொண்டிருக்கிறது. கதர் போர்ட் வைத்திருக்கிறார்கள். காதி கமிஷன் கொடுக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, இந்த வேலையைச் செய்கிறார்கள், 7 கோடி ரூபாய் செலவழித்து ஆரம்பிக்க

இருக்கும் ஆலைகளில், ஒரு ஆலையை நிறுத்தி வைத்து, ஏதாவது ஒ பிளாக்கில் மில் வேண்டாம், இங்கு வேண்டிய போதுமான துணியைப் பண்ணி கொடுங்கள் என்று சேலஞ்சாகக் கொடுத்தால், இதைச் செய்து காட்டலாம் ஒரு கோடி ரூபாயில் இராம நூற்பு நிலயங்களில் 7 கோடி ரூபாய் செலவாகு மில்லில் கிடைக்கும் நூலை உற்பத்தி செய்யலாம். இதற்கெல்லாம் ஆராய்ச் நடத்த வேண்டும். அதற்குப் பெரிய வசதி இருக்கிறது. நம்முடை அரசாங்கம் டெக்ஸ்டைல் டெக்னலாஜிஸ்டுகளைக் கூப்பிட்டு, கிராமத்து பெண்கள் இந்த வேலையில் ஈடுபடுகிறார்கள், அவர்களுக்கு உதவியாக ஆராய்ச் செய்யுங்கள் என்று சொன்னால், தன்னிறைவுள்ள கிராமங்களை உண் பண்ணலாம். சோமங்கலம் பற்றித் தெரியும். ஒரு காலத்தில் அ எடுத்துக் காட்டாக இருந்தது. இப்போது சோமங்கலத்தின் சோக கதையைப் பத்திரிகையாளர்கள் எழுதுவதை அமைச்சரவர்கள் பார்த்திரு பார்கள். இன்றையதினம் பழைய குருடி கதவைத் திறடி என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மண் போடுகிற வேலை, ரோடு போடுகிற வேலை கிணற்றை ஆழப்படுத்தும் வேலை போன்று செய்திருக்கிறார்களே தவி நிரந்தரமாக அந்தக் கிராமத்தைத் தன்னிறைவுப்படுத்த,—மினிமம் நீட் உணவு, உடை, குடியிருப்பு இவைகளை அவர்களே ஏற்படுத்திக்கொள் உதவிகளைச் செய்து, அவர்களையே பண்ணிக்கொள்ளச் செய்திருந்தால் அங்கே மகத்தான, பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சோமங்கலம் திட்டமும் தஞ்சை மாவட்டத்தில் சுவாமிமலைக்கு அருகில் உள்ள திட்டமும் எமர்ஜன் காலத்தில் பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்டது. அவர்கள் வந் போனவுடன், அந்த 2 ஆண்டுகளில்கூட, அதைப் பற்றிக் கவனிக்காம இருந்ததால், இந்த நிலைமை உருவாக்கப்பட்டது என்பதை அறிவிக்க விரும் கிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாத அவர்களுக்கு நன்றி. தொடர்ந்து நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை இந்தத் திட்டங்கள் கிராம மக்களுக்கு என்றே போட்ட திட்டங்கள் என் சொன்னார்கள். இந்தமாதிரி திட்டங்களைப் போட்டு, Infrastructure மட்டும் உண்டுபண்ணிவிட்டால் போதாது. அப்படி மட்டும் செய்தால் அதிகாரிகள் காலம் தாழ்த்திவிடுவார்கள். காந்தியடிகள் ஏழைகளைப்பற்றி சொன்னார்கள். அந்த ஏழைகள்தான் நம்மோடு இருப்பவர்கள்

The poor shall always be with us என்ற பழமையான வாசகம் ஒன்று உண்டு. ஆனால் காந்தியடிகளோ ஏழ்மை யையே விரட்ட வேண்டும் என்றார்கள். அந்த வழியிலே நின்று ஏழ்மையை விரட்ட வேண்டும் என்று சொல்பவர்கள் நிரந்தரமாகத் திட்டங்களைக் கொண்டு வந்து கிராமங்களிலே தன்னிறைவை ஏற்படுத்த வேண்டும். இந்த நாட்டிலே நாம் எவ்வளவு தான் வேகமாக வளர்ச்சித் திட்டங்களைப் போட்டுச் செய்தாலும், தெருவெல்லாம் தேனும் பாலும் திரண்டு ஓடும்படி செய்தாலும், அதற்குப் பக்கத்திலே சாராயக் கடைகளையும் ஓடும்படி செய்தால் ஏழ்மை எப்படி போகும் ? பஞ்சமா பாதகத்தில் இது ஒன்றாக இருக்கிறது. இப்போது எங்கே போனாலும் சாராயக் கடைகள் தான் இருக்கின்றன. ஒயின் கடைகளையும் எல்லா இடங்களிலேயும் பார்க்கலாம். என்னுடைய கிராமத் திற்குப் பக்கத்திலே ஒரு கருப்பசாமி கோயில் இருக்கிறது. கருப்பசாமிக்கு கள்வைத்து ஒருவேளை கும்பிடலாம். அது வேறு. ஆனால் அந்த இடத் திலே ஒரு சாராயக்கடை இருக்கிறது. அதற்குரிய விளம்பரமும் அதிக அளவிலே இருக்கிறது. மேலும் ஒரு கடைக்கு லைசென்ஸ் கொடுத்தால், 10 கடைகள் வைக்கிறார்கள். 'இல்லிசிட்' முறையிலே தப்பாக விற்கிறார்கள் ; அவர்களை ஒழிப்பதற்குத்தான் இந்தத் திட்டம் என்று சொல்லப்பட்டது. திட்டக் கமிஷன் திட்டத்திற்குரிய செலவுக்குப் பணம் வேண்டும் என்று கேட்டது. அதற்கும் இது உதவுகிறது என்று சொல் கிறார்கள். இந்தக் கொடுமைகளிலேயிருந்து இந்த நாடு விடுபட வேண்டும். எங்கே போனாலும் சாராயக் கடைகள் தான் இருக்கின்றன. அதைவிட்டு விட்டு விபரீதத்தைப் பார்த்தால் லாட்டரி சீட்டுக் கடை. கள் உண்ணல், களவாடல், பொய் சொல்லல் போன்ற பஞ்சமா பாதகங்களைத் தவிர்க்கவிட்டால், நாம் செய்யும் செயல்கள், ஆற்றும் திட்டங்களின் பலன்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் ஆகிவிடும் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாளைய தினம் பேசுவார்கள். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று அவை மீண்டும் நாளை 8—2—1983 ஆம் நாளன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 11-12)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A.—Statutory Rules and Orders.

128. The Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1976-77 (English). [Laid on the table of the House under section 125 (2) (a) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

129. The Audit Report on the Accounts of the Tamil Nadu Slum Clearance Board for the years 1977-78 and 1978-79 (English). [Laid on the table of the House under section 41 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971) read with section 125 (2) (a) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

130. Ninth Annual Report of the Pallavan Transport Corporation Limited for the year 1980-81 (English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]

131. Sixth Annual Report of the Thanthai Periyar Transport Corporation Limited for the year 1981 (Tamil and English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

132. Notification issued with G.O. Ms. No. 2513, Home, dated the 6th October 1982 in regard to an amendment to Rule 14 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

133. Notification issued with G.O. Ms. No. 2658, Home, dated the 21st October 1982 in regard to an amendment to sub-rule (9) of Rule 48-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Cenrtal Act IV of 1939).]

134. Notification issued with G.O. Ms. No. 2590, Home, dated the 18th October 1982 in regard to an amendment to rule 396 (A) (5) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

135. Notification issued with G.O. Ms. No. 2474, Home (Cinemas), dated the 27th September 1982 in regard to an amendment to rule 103 (2) (iv) of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

B. Reports, Notifications and Other Papers.

17. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussion on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1981-82 (Tamil and English).

இணைப்பு-I.

(16 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 50-க்கான விடையைக் காண்க.)

வரிசை எண்.	மாவட்டம்.	போக்குவரத்து ஆய்வில் தெரிந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களின் விவரங்கள்.			போக்குவரத்து ஆய்வில் தெரிந்தெடுக்கப்படாத வழித்தடங்களின் விவரங்கள்.		
		வழித் தடங்கள்.	தனியாரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.	வழங்கப்பட்ட உரிமங்கள்.	வழித் தடங்கள்.	தனியாரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.	வழங்கப்பட்ட உரிமங்கள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	சென்னை	—	—	—	—	—	
2.	செங்கல்பட்டு	—	—	—	2	2	1
3.	தென் ஆற்காடு	12	88	—	2	24	
4.	வட ஆற்காடு	3	14	3	11	142	11 (இதில் இன்னும் நான்கு உரிமங்கள் வழங்கப்படவில்லை.)
	இணைப்பு.						
5.	தஞ்சாவூர்	3	6	—	27	143	—
6.	திருச்சிராப்பள்ளி	6	76	2	3	9	—
7.	மதுரை	—	—	—	—	—	—
8.	இராமநாதபுரம்	—	—	—	—	—	—
.	திருநெல்வேலி	—	—	—	—	—	..
10.	பெரியார்	—	—	—	—	—	—
11.	கோயம்புத்தூர்	—	—	—	—	—	—
12.	தர்மபுரி	2	6	2 (ஒரு உரிமம் இன்னும் வழங்கப்படவில்லை.)	5	12	5
13.	கன்னியாகுமரி	—	—	—	—	—	—
14.	நீலகிரி	—	—	—	—	—	—
15.	புதுக்கோட்டை	1	1	—	10	10	—
16.	சேலம்	—	—	—	—	—	—
	மொத்தம்	27	191	7 (ஒரு உரிமம் இன்னும் வழங்கப்படவில்லை)	60	342	19 (நான்கு உரிமங்கள் இன்னும் வழங்கப்படவில்லை)

இணைப்பு II

(24 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை மூன்று. மருத்துவ அலுவலர் (பொது) பதவி 23—7—1981லிருந்து காலியாக இருந்தது. மேலும் மருத்துவ அலுவலர் (குடும்பநலம்) பதவி 2—10—1982 லிருந்து காலியாக இருந்தது. மூன்றாவது மருத்துவ அலுவலர் பணிபுரிந்துவருகிறார். மருத்துவ அலுவலர் (பொது) ஒருவர் பணியில் நியமிக்கப்பட்டார். அவர் பி.ஜி. மேற்படிப்பிற்காக சென்றதால் பணியில் சேரவில்லை. மருத்துவ அலுவலர் (குடும்பநலம்) பணியிடம் குடும்பநல மருத்துவ அலுவலர் (பெண்) இல்லாததால் நிரப்பப்பட முடியவில்லை.

2. இருப்பினும், மலைப்பிரதேச இடங்கள் மற்றும் கடின பிரதேசங்களுக்காகவே மருத்துவ அலுவலர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டதின் விளைவாக புதுக்கோட்டை மாவட்டம் (1) ஆரம்ப சுகாதார நிலையம், மலையூரில் இருந்து ஒருவரும் (2) ஆரம்ப சுகாதார நிலையம், காரையூரில் இருந்து மற்றொருவரும் விடுவிக்கப்பட்டு தற்போது தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். குடும்பநல மருத்துவ (பெண்) அலுவலரின் பதவி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவிடமிருந்து தேர்வு பட்டியல் கிடைத்ததும் பூர்த்தி செய்யப்படும். தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு அக்டோபர், 1982-ல் பணி வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கோரியுள்ளது என இங்கு குறிப்பிடலாம். இது இன்னமும் தேர்வாணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

3. தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அருகில் அரசு தலைமை மருத்துவமனை நாகப்பட்டினம், வட்ட அரசு தலைமை மருத்துவமனை திருத்துறைப்பூண்டியும் உள்ளன. இவைகளின் தூர அளவுகள் முறையே

25 கி.மீ. மற்றும் 40 கி.மீ. இருக்கும். மேலும் ஆரம்ப சுகாதார நிலைய மாகிய ஆலத்தம்பாடி இதற்கு சுமார் 15 கி.மீ. தூரத்தில் இருக்கிறது என குறிப்பிடலாம். எனவே தலைஞாயிறிலுள்ள பொது மக்கள் மேலே குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகளிலுள்ள மருத்துவ வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. எனவே தலைஞாயிறிலுள்ள பொது மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு அல்லல் இருக்காது.

[ISSUED 24 10— 1983]

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

TUESDAY 8th FEBRUARY 1983

Volume CXCII (No. 2)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009

[Rs. 2.75 Paise]

பொருளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்—விடைகள்	65—93
2. கவன ஈர்ப்பு—	
தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான சிமெண்ட் பற்றாக் குறை குறித்து.	93—96
3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி	96—151
4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்	152—153

143132

D 2 C 83—1

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1983 பிப்ரவரி 8

தை 26, துந்துபி, திருவள்ளுவராண்டு—2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9—30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுகள்.

* 51. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் 68-வது குலுக்கலுக்குரிய பரிசுச் சீட்டுகளில் ஒரே எண்ணில் இரண்டு சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 68வது குலுக்கலில் எண் 645323 என்ற எண்ணுள்ள இரு பரிசுச் சீட்டுகள் வெளியிடப்பட்டதாக 'தினகரன்' என்னும் நாளேடு செய்தி வெளியிட்டு அந்த இரு பரிசுச் சீட்டுகளையும் வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியைப் பார்த்த பிறகுதான் இந்த வினாவே எழுப்பப்பட்டது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் அப்படி ஏதுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய ஆதாரமாக "தினகரன்" நாளேட்டில் வந்த "போட்டோ-ஸ்டேட்" காப்பியே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் வேண்டுவார்களானால் அதை அமைச்சர் அவர்களிடமே தரத் தயாராக இருக்கிறேன். எனவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளுவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு பரிசுச் சீட்டு 63-வது குலுக்கலுக்கான பரிசுச் சீட்டுகள் கோவையில் விற்கப்பட்டதில் "ஐ. எண். 645323" என்ற எண் கொண்ட இரு பரிசுச் சீட்டுகள் வெளி வந்ததாக 17—4—1982 ஆம் தேதி 'தினகரன்' நாளேட்டில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக கோவை மாவட்டாட்சித் தலைவரை விசாரித்து அறிக்கை அனுப்பும்படி கோரப்பட்டிருந்தது. அவர் விசாரித்து அனுப்பியுள்ள அறிக்கையில் ஐ.எண். 645323 என்ற எண்ணிட்ட பரிசுச் சீட்டு திரு. கே. சோமசுந்தரம் என்னும் முகவருக்கு மற்ற பரிசுச் சீட்டுகளுடன் விற்கப்பட்டதாகவும், விற்பனைக்கு முன் சார்நிலைக் கருவூல அதிகாரி நூறு சதவீதம் பரிசோதனை செய்து சரியாக இருந்தன என்று சான்றிதழ் அளித்த பின்னரே விற்கப்பட்டன என்றும். முகவரும் தனக்கு அளிக்கப்பட்ட பரிசுச் சீட்டுகள் நூறு சதவீதம் பரிசீலித்து சரியாக உள்ளன என்றும் சான்றளித்து உள்ளதாகவும், அதற்குப் பிறகு மேற்கூறியபடி ஒரே எண்ணில் இரு பரிசுச் சீட்டுகள் வெளி வந்ததாகப் புகார் ஏதுமில்லை என்றும் மேற்கண்ட பத்திரிக்கைச் செய்தி ஆதாரமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்கூறியபடி தமிழ் நாடு பரிசுச் சீட்டு அலுவலகத்திற்கு 63-வது குலுக்கலில் ஒரே எண்ணில் இரு பரிசுச் சீட்டு வெளி வந்ததாகப் புகார் ஏதும் இல்லை. இந்த எண்ணிற்குப் பரிசு ஏதும் விழவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரே எண்ணுள்ள இரண்டு பரிசுச் சீட்டுகள் வெளியிடப்பட்டு அந்த விவரம் "கோவை தினகரன்" பத்திரிகையில் செய்தியாக விளம்பரப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கோவை தினகரன் நாளேட்டு அலுவலகத்தை அதிகாரிகளே சென்று சோதனையிட்டு, ஆதாரத்தைப் பார்வையிட்டு அந்தப் பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுக்காமல் வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட தவறு நடைபெறவில்லை என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். எனவே இது எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதை இனியாவது அரசு விசாரித்து அறியுமா? அரசுத் துறையில் இல்லையென்றாலும்கூட, தனியார் துறையில் இப்படி கள்ள டிக்கட்டுகள் அடிக்கப்படுவதாக அரசுக்குச் செய்தி உண்டா? அப்படி நடைபெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட செய்தி நாளேட்டில் வந்த உடனே கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இது [illegible] அனுப்பப்பட்டது. நான் ஏற்கெனவே படித்துக் காட்டியபடி, மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்தறிந்து சான்றிதழ் அளித்திருக்கிறார். அதோடு கருவூல அதிகாரியும் இது குறித்து சான்றிதழ் கொடுத்திருக்கிறார். மேலும் பரிசுச் சீட்டு முகவரும் இரண்டு சீட்டுகள் இல்லை என்று சான்றிதழ் அளித்திருக்கிறார். அதன் அடிப்படையில்தான் இங்கே எனக்கு இரண்டு பரிசுச் சீட்டுகள் ஒரே எண்ணுடன் வெளியிடப்படவில்லை என்று தகவல் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொல்லுவதைப்போல், அதற்கான எல்லாக் குறிப்புகளையும் மற்றவைகளையும் என்னிடம் தந்தால், மறுபடியும் இதுகுறித்து விசாரித்தறிந்து, உள்ளபடியே யாராவது தவறு செய்திருந்தால், அதாவது அதிகாரிகளோ, அலுவலர்களோ தவறு செய்திருந்தால் அவர்கள்மீது முறைப்படி நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசனை செய்யலாம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் எனக்கு வந்த தகவலுக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அவையில் தருகிற தகவலுக்கும் வித்தியாசம் இருப்பதால், ஒன்றுக்கொன்று வேறு மாதிரியாக இருப்பதால் அவரிடமிருக்கும் குறிப்புகளை என்னிடம் தந்தால், அதுபற்றி உரிய முறையில் விசாரித்துப் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தமிழ் நாட்டில் பல மாநிலங்களைச் சார்ந்த பரிசுச் சீட்டுகள் விற்பனையாகின்றன. இதன் காரணமாக, இங்குள்ள தனியார் அச்சகங்கள் அவைகளைப் போன்ற போலிச் சீட்டுகளை அச்சிட்டு விற்பனை செய்வதாகத் தகவல்கள் வருகின்றன. இதுவரை இப்படி பிற மாநில பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில்தான், போலிச் சீட்டுகள் வெளியிடப்படுகின்றன என்று நம்பிக் கொண்டிருந்தோம். இப்போது நம் மாநில பரிசுச் சீட்டில்கூட போலிச் சீட்டுகள் வருவதாகத் தெரிய வருவதால், அப்படிப்பட்ட நிலை தற்போது ஏற்பட்டிருந்தால், அதற்கான காரணங்களைக் கண்டறியவும், இதுபற்றி உண்மையை அறியவும் அரசு புலனாய்வுத் துறையைக் கொண்டு விசாரிக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்கத்தான் தற்போது 3 கட்டங்களில் பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில், பரிசோதனைகளை நடத்தி வருகிறோம். முதலாவது தனியார் அச்சகங்களில் பரிசுச் சீட்டுகளை அச்சடிக்கக் கொடுக்கக் கூடாது என்றே, அரசு அச்சகங்களிலேயே அனைத்து பரிசுச் சீட்டுகளையும் நாம் அச்சடித்து வருகிறோம். அடுத்து, மூவ்மெண்ட் செக்ஷன் என்று வைத்து அதிகாரிகள் அத்தனை பேரும் இருந்து, ஒவ்வொரு

]டாக்டர் இரா. நெடுஞ்செழியன்[[1983 பிப்ரவரி

பரிசுச் சீட்டாகப் பார்த்து பரிசீலனை செய்து அவைகள் சரியாக இருக்கின்றனவா என்று கண்டறிகிறோம். அதற்குப் பிறகு தாசில்தார் அந்தஸ்தில் ஒரு அதிகாரியைப் போட்டு பார்வையிடுகிறோம். அப்படியே ஏதாவது அச்சுப் பிழைகள் வந்தாலும் அப்போதே அந்தப் பரிசுச் சீட்டுகளை எடுத்துவிட்டு புதிய பரிசுச் சீட்டுகள் அச்சடித்து தயாரிக்கப்படுகின்றன. அடுத்து கருவூலத்திற்குச் செல்லுகிறபோது அவர்கள் 100க்கு 100 பரிசுச் சீட்டுகளை பரிசீலனை செய்த பிறகே முகவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அனைத்தும் சரியாக இருக்கின்றன என்று அந்த அதிகாரிகள் சான்றிதழ் அளித்திருக்கிறார்கள். அதோடு பரிசுச் சீட்டுகளை வாங்கும் முகவர்களும் அவைகளைச் சரிபார்த்து 100க்கு 100 சரியாக இருக்கிறது என்று சான்றிதழ் கொடுக்கிறார்கள். இப்படி எல்லோரும் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இரண்டாவது அல்லது மூன்றாவது கட்டங்களில் தவறு நடந்திருந்தால், அவைகளைப் பொறுத்த சீட்டுகளைத் தனியாக எடுத்து விற்பனை ஆகாத சீட்டுகளாகச் சேர்த்துக்கொண்டு விடுகிறோம். ஆனால் முதல் கட்டத்தில் அதிகாரிகள் யாராவது தவறு செய்தால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

தற்போது இரண்டு சீட்டுகள் ஒரே எண்ணுடன் அச்சிடப்படுகின்றன என்று உறுப்பினர் சொல்லுகிறார். உண்மையில் ஓரே சீட்டுதான் அச்சடிக்கப் பட்டதா என்று பார்க்க வேண்டும். ஒரே சீட்டை இரண்டு முறைகூட அச்சடிக்க முடியும். எனவேதான் நான் எதையும் திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து 100க்கு 100 சரியாக இருந்ததாகச் சான்றிதழ் அளித்திருக்கிறார். அந்த முகவரும் 100க்கு 100 சரியாக இருந்தது என்று சான்றிதழ் அளித்திருக்கிறார். எனவே மறுபடியும் இந்தக் குறிப்புகளை அனுப்பி வைத்து விசாரிக்கச் செய்யலாம் என்று நான் கூறியிருப்பதால், இதுபற்றி விசாரித்த பிறகு இதற்குரிய விளக்கத்தை அரசு அளிக்க இயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் மீண்டும் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். கோவை ‘தினகரன்’ பத்திரிக்கை அலுவலகத்திற்கு அதிகாரிகள் சென்று அங்கே உள்ள இரண்டு ஓரே எண் கொண்ட பரிசுச் சீட்டுகளைப் பார்வையிட்ட பின்னர் திரும்பியிருக்கிறார்கள். எனவே இது குறித்து அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். ஓரே சீட்டு அல்ல, இரண்டு சீட்டுகள்தான் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

1583 பிப்ரவரி 8]

அடுத்து தமிழக அரசு மாதாந்திர பரிசுச் சீட்டுக் குலுக்கல்கள் நடத்தும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா? சத்துணவுத் திட்டத்திற்காகத் தனியாக லாட்டரிச் சீட்டு நடத்துவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருந்தாரே. அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தற்போது மாதத்திற்கு 3 முறை என்ற வகையில் பரிசுச் சீட்டுக் குலுக்கல்கள் நடைபெறுகின்றன. ஆனால் மாதத்திற்கு 4 முறை என்று நடத்துவதானால் அதற்கான வசதிகளை நாம் செய்தாக வேண்டும். முதலில் அச்சகத்தில் கூடுதலான வசதிகளை நாம் செய்தாக வேண்டும். அதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. புதிய சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படும் வகையில் லாட்டரி சீட்டுக் குலுக்கல் நடத்தலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து அந்தத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர். எந்த முறையில் அதை நடத்தலாம், எப்படி நடத்தினால் தற்போது நடக்கிற திட்டத்திற்கு மாறுபடாமல் இருக்கும், அப்படி நடத்த இயலுமா என்பதைப்பற்றி எல்லாம் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ந்து செயற்குறிப்பு அனுப்பிய பிறகு அரசு அதன்மீது தக்க முடிவெடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்புகளைத் தந்தார்.)

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நமது மாநிலத்தில் நம் மாநில பரிசுச் சீட்டுகளைவிட மற்ற மாநிலங்கள் வெளியிடும் பரிசுச் சீட்டுகளே அதிகமாக விற்பனையாகின்றன என்று சொல்லப்படுகிறது. நம் மாநில பரிசுச் சீட்டுக்களைத் தவிர மற்ற மாநிலங்கள் வெளியிடும் பரிசுச் சீட்டுகளை இங்கே விற்பனை செய்யக்கூடாது என்று தடை விதிக்க நம் அரசு முன்வருமா? காரணம் வேறு பல மாநிலங்களில் அவர்கள் வெளியிடும் பரிசுச் சீட்டுகளைத் தவிர மற்றவைகளை விற்கக் கூடாது என்ற தடை இருக்கிறது. எனவே அது போன்ற தடையை நம் மாநிலத்தில் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்த மாநிலங்கள் நம் மாநில அரசோடு உடன்பாடு வைத்துக் கொண்டுள்ளனவோ அந்த மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் மட்டுமே நம் மாநிலத்தில் விற்பனை செய்யப்படலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே நம் மாநில பரிசுச் சீட்டுகள் அந்த மாநிலங்களிலும் விற்பனை செய்வதற்கான நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் எந்த மாநில அரசு நம் மாநில

அரசோடு உடன்பாடு வைத்துக் கொள்ளவில்லையோ, எந்த அனுமதியும் இல்லாமல் இருக்கிறதோ அந்த மாநில அரசு வெளியிடும் பரிசுச் சீட்டுகள் நம் மாநிலத்தில் விற்பனை செய்யப்பட்டால், அவைகளை தடுத்து நிறுத்தும் முயற்சிகளை நம் அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு நமது காவல் துறையினருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9—40)

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்த மாதிரியான எண் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்க பரிசுச் சீட்டின் எண்களை பெரிய அளவிலே அச்சிட்டால் பயன் உள்ளதாக இருக்கும். சாளேஸ்வரம் கண் இருந்தாலும் பார்க்க வசதியாக இருக்கும். ஆகவே பெரிய அளவிலே எண்களை அச்சிட அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி குறைபாடுகள், தகராறுகள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அது பற்றி விற்பனையாளர்கள், முகவர்கள், பொதுமக்கள் தெரிவிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அதை அரசு ஆராயும்.

தைவான் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள்.

*** 52. வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982-ஆம் ஆண்டு ஜூலை மாதம், தைவான் நாட்டைச் சார்ந்த மீன்பிடிக் கப்பல்கள் இராமநாதபுரம், மண்டபம் கடற்கரையில் மீன்பிடித்ததாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) கடந்த மூன்றாண்டுகளில் தைவான் மீன்பிடி படகுகள், கப்பல்கள், தமிழ் நாட்டு கடற்கரையில் எத்தனை முறை ஊடுருவி மீன் பிடித்துள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(உ) 1980-ஆம் ஆண்டு தூத்துக்குடி பகுதியில் ஒரு முறையும் 1981-ல் கன்னியாகுமரி பகுதியில் ஒருமுறையும் ஊடுருவல் செய்ததாகத் தகவல் வந்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1982ஆம் ஆண்டு தைவான் நாட்டைச் சேர்ந்த மீன்பிடி கப்பல் இராமநாதபுரம் கடற்கரை பகுதிகளில் வந்ததாகவும் அதை அதிகாரிகள் துரத்தியதாகவும் செய்திகள் "இந்து", 'எக்ஸ்பிரஸ்' போன்ற நாளிதழ்களில் வந்தன. அதையொட்டித்தான் இந்த வினாவை எழுப்பினேன். அதைப்போலவே பிற நாட்டினுடைய கப்பல்களும் குறிப்பாக இலங்கை, தைவான் போன்ற நாட்டுக் கப்பல்களும் அடிக்கடி தமிழகத்தின் கடற்கரையையொட்டி மீன் பிடிக்க வருவதால், அங்கேயுள்ள மீனவர்களின் நிலை கடினமாக இருப்பதாகவும், அவர்கள் படகுகளில் சென்று பிடித்த மீன்களையும் தட்டிப் பறித்ததாகவும் அரசுக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அவர்களுடைய பாதுகாப்பிற்கு என்ன தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் கூறுவது போன்று, 1982ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. தூத்துக்குடி கடற் பகுதியில் அயல்நாட்டுக் கப்பல்கள் ஊடுருவல் செய்ததாகத் தகவல் வந்தது. உடனடியாக ரோந்துப் பணியை மேற்கொள்ளவும், அயல் நாட்டுக் கப்பல்களைப் பிடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள சென்னைக் கடற்கரைக் காப்பாளரைக் கேட்டுக் கொண்டதன் பேரில், அவரும் ரோந்துப் பணி மூலம் தேடியதில் அம்மாதிரி கப்பல்களின் நடமாட்டம் இல்லையென்று தெரிவித்தார்கள். மேலும் மண்டபம் சுங்க இலாகா ரோந்து விசைப் படகு, தூத்துக்குடி கடற்பகுதியில் ரோந்து சுற்றியதன் பயனாக தைவான் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் நடமாட்டம் இல்லை எனவும், தற்போது மீனவர்கள் பயமின்றி தொழில் செய்கிறார்கள் எனவும் மீனவர்களின் நலனைக் கருதி மீன்துறை இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட விரைவு நடவடிக்கைக்கு, மீனவர்களின் சார்பில் முத்தும் சங்கும் குளிப்போரின் சங்கத் தலைவர் திரு. சம்சுமுகமது நன்றி தெரிவித்துள்ளார். ஆகவே செய்தி வந்தது உண்மை. கடற்கரைக் காப்பாளரும், சுங்க இலாகாவினரும் ரோந்துப் பணியை மேற்கொண்டதன் விளைவாக, அப்படி மீன் பிடிக்க 1982-ல் யாரும் வரவில்லை. அதற்குப் பிறகு அப்படி யாரும் வரவில்லை என்று தெரிவித்ததற்குப் பிறகு மீனவர்கள் வழக்கம்போல் சென்று மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, 1980-81ஆம் ஆண்டில் தூத்துக்குடி கடற் பகுதியில் மற்ற நாட்டுக் கப்பல்கள் வருவதும் பிறகு கண்ணுக்கு அகப்படாமல் போவதும், நம்முடைய வலைகளை அறுத்துக்கொண்டு போவதும் போன்ற நடவடிக்கைகள் நடந்ததால், நம்முடைய மீனவர்களுடைய வலைகள் சேதத்திற்குள்ளாயின. ஆகவே 1980ஆம் ஆண்டு 80 ஆயிரம்

[1983 பிப்ரவரி

ரூபாய் நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்
தஞ்சாவூர் மாவட்டம், ஆற்காட்டுத் துறை கடற் பகுதியில் இரு அயல்நாட்
மீன்பிடிப்பு படகுகள் மீன்பிடி தொழில் புரிந்து மீனவர்களின் வலைகளை
சேதப்படுத்தியதற்காக இதைக் கேட்டிருக்கிறோம். இது 1980-ல் நடைபெ
திருக்கிறது. கன்னியாகுமரி கடற் பகுதியில் 24—8—1980 அன்று
6—10—1980-ல் முட்டம் கடற்கரை அருகிலும், 13—10—1980-ல் குளச்ச
கடற்கரை அருகிலும் 23—10—1980 மற்றும் 27—10—1980-ல் கொல்ல
கோடு கடற்கரை அருகிலும், 17—7—1981-ல் முட்டம் கடற்கரை அருகிலு
5—10—1081-ல் மணக்குடி கடற்கரை அருகிலும் அயல்நாட்டுக் கப்பல்க
ஊடுருவல் செய்துள்ளன." கன்னியாகுமரி பகுதியில் 4—11—198
அன்று தைவான் நாட்டைச் சார்ந்த "டிரான்ஸ்மோராய்" என்ற மீன்பிடி
கப்பலைப் பிடித்ததாக சென்னை கடற்கரைக் காப்பாளர் தெரிவித்துள்ளார்
கடற்கரைக் காப்பாளருக்குத் தெரிவித்து ரோந்து செய்ய வேண்டிய சூ
நிலை இருக்கிறது. மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம். தமிழ்நாட்
கடற்கரைப் பகுதியில் அப்படி தைவான் நாட்டு 'கப்பல்களும், பிற நாட்
கப்பல்களும் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபடாமல் இருக்கவும், இந்
நாட்டைச் சேர்ந்த மீனவர்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கக் கூடி
வகையில் நடந்துகொள்வதைத் தடுக்கவும் நிலையான ரோந்துப் பணியை
அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கி
றோம். அதைப்பற்றிப் பரிசீலிப்பதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, what is the distance in the
sea which is prohibited for fishing by international vessels, because
India has come to an agreement with other nations? May I know
what the distance is that has been prohibited for the international
vessels?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கடற்கரையில் 200 மைல்
அளவிற்கு அந்தந்த நாட்டுக்குச் சொந்தம். 200 மைல்களுக்கு அப்பால் எந்த
நாட்டுக் கப்பல்களும் மீன் பிடிக்கலாம். 200 மைல்களுக்கு உட்பட்ட தூரம்
இந்தியாவிற்குச் சொந்தம். அதற்குள் மற்றவர்கள் வரக்கூடாது. அப்படி
வந்தால், அந்தக் கப்பல்களைக் கைப்பற்றவோ, அவற்றைப் பிடிக்கவோ இந்த
அரசுக்கு உரிமை இருக்கிறது.

Thiru A. R. DAMODARAN: If that is the case, what is the
distance between Sri Lanka and Tamil Nadu that is prohibited for
international fishing because the distance between Sri Lanka and
Tamil Nadu does not exceed 200 miles? Is there any other
distance prohibited for Sri Lanka?

1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஸ்ரீலங்காவில் இருக்கின்ற கட்டுமரக் கப்பல்கள் இராமேஸ்வரம் பகுதியில் அடிக்கடி வந்து மீன் பிடிப்பதால், அடிக்கடி தகராறு வருகிறது. அவரவர் அவரவர் எல்லைக்குள்ளாக இருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். அதற்குள்ளேதான் தம்முடைய கட்டுமரக்காரர்கள் மீன் பிடிக்கிறார்கள். அதற்குமேல் போவார்களேயானால், அவர்களைப் பிடித்து வைத்து விடுவார்கள். அதற்குப் பிறகு நாம் வாதாடி அவர்களைத் திரும்பப் பெற்று வருகிறோம். ஸ்ரீலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தனி ஒப்பந்தம் இருக்கும் என்று கருதுகிறேன். அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : நமது அரசு மத்திய அரசிடம் இத்தகைய புகாரைத் தெரிவித்ததன்பேரில் மத்திய அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது? வெளிநாட்டிலாக்கா வழியாக தைவான் நாட்டுடன் தொடர்பு கொண்டு அவற்றைத் தடுக்க எடுத்த முயற்சியைப் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அவர்கள் என்ன முயற்சி செய்தார்கள் என்பதை அறிய இந்த அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவ்வப்போது மத்திய அரசுக்குத் தெரிவிக்கிறோம். அயல்நாட்டுப் பிரச்சினையாக இருப்பதால், இதுபற்றி மத்திய அரசுதான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்பதை நமக்கு அறிவிக்கவில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்திருக்கிறோம். மீன் பிடிக்க வருகிறார்கள் என்ற அளவிலே போர்க் கப்பல்கள் கூட தெரியாமல் உள்ளே நுழைந்துவிடக்கூடும். இந்தியாவினுடைய பாதுகாப்பு மிக மிக முக்கியமானதாக இருக்கிறது. ஆகவே அதற்காகவாவது நிலையாக ரோந்துப் படை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். மாநில மீன்துறை அமைச்சர்களின் மாநாட்டில் இதுபற்றி வலியுறுத்தப்பட்டபோது மத்திய அரசின் அமைச்சர் அது பற்றிப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரக் குறிப்பு வரவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : நம்முடைய இந்திய அரசு மக்கள் சீனாவுடன்தான் ராஜ்ய தொடர்பு கொண்டிருக்கிறது. தைவானுடன் அப்படிப்பட்ட தொடர்பு கிடையாது. தைவானை அமெரிக்கா சட்டவிரோதமான முறையில் தன்னுடைய கையில் வைத்திருப்பதால், அமைச்சர் அவர்கள் கூறியபடி,

யின். பிடிக்க வருவதாகக் கூறிக்கொண்டு உளவு பார்க்க வந்திருக்கலாம். ஆகவே அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது பற்றி தமிழ்நாடு உள்துறை அமைச்சருடன் பேசி, மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவ என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அமெரிக்க என்று சொல்லுகிறார். அமைச்சர் பெயர் சொல்லாமலே சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசு அயல்நாடுகளைப் பொறுத்த வரையில், கூட்டு சேரா நாடாக இருந்து எல்லா நாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கக்கூடிய முறையில் இருக்கிறது. சீனாவுடனும், தைவானுடனும் உறவு வைத்திருக்கிறது. ஆனால் யாரிடமும் கூட்டு சேரா முறையைக் கடைப்பிடித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்கள் உளவுக்காக வந்தாலும் வரக்கூடும். ஆகவே இது தடுக்கப்பட வேண்டும் என்ற குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதையொட்டித்தான் நிலையான ரோந்துப் படை ஒன்று அவசியம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம்.

Transfer of Prisoners from one Jail to another.

*53 Q.—E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) the grounds on which the prisoners are being transferred from one Jail to another; and

(*b*) whether it is a fact that such transfers are made with the permission or consent of the Magistrates or the Judges, who had committed the prisoners to various Jails ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சிறைவாசிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் அல்லது மருத்துவ அடிப்படையில் அல்லது நிர்வாகக் காரணங்களுக்காக ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றப்படுகிறார்கள்.

(ஆ) இல்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நீதிமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட கைதியை குறிப்பிட்ட சிறைச்சாலைக்கு அனுப்பி அவரை எவ்வளவு காலம் சிறைச்சாலையில் வைக்க வேண்டும் என்று அந்த சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு நீதிபதி உத்தரவிடுகிறார். அவருடைய அனுமதி அல்லது ஒப்புதல் இல்லாமல் அந்தக் கைதியை அனுப்பப்பட்ட சிறைச்சாலையிலிருந்து மற்றொரு சிறைச்சாலைக்கு மாற்றினால், கோர்ட் உத்தரவை மீறியதாக ஆகாதா, நீதிபதியை அவமதிக்கும் குற்றமாகாதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மதராஸ் பிரிசன்ஸ் Madras Prisons and Reformatories Manual விதி 79, பிரிவு 468-ன்படி சிறைத் துறை அதிகாரிக்கு அந்த மாறுதல் செய்யக்கூடிய அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் பிரிக்கப்படுவதற்குப் பல காலத்திற்கு முன்னாலே வந்தது. அதை மாற்றியமைக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : Transfer on administrative grounds என்று சொல்லக்கூடிய நிர்வாகக் காரணங்களுக்காக செய்யப்படுகின்ற மாற்றங்களுக்கெல்லாம் நீதிபதியிடம் அனுமதி பெற்று மாற்றவேண்டிய தேவையில்லை. Transfer on request என்று வருகின்றபோது, 'டிரான்ஸ்பர்' வருகிறது. சில இடங்களில் இடநெருக்கடி காரணமாக மாற்றப்படுகிற நிலைமை வருகின்றது. இதுபோன்ற பிரச்சினைகள் காரணமாகத்தான் மாற்றப்படுகிறது. இருக்கின்ற விதிகளை மாற்றம் செய்வது என்பது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தக் கைதிகளில் 'ரிமாண்ட் பிரிசனர்ஸ்' இருக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று விடுதலை செய்ய வேண்டியதாகவும் இருக்கும். அவர்களையும் தண்டிக்கப்பட்ட கைதிகளுடன் இங்கும், இந்தியா எங்கும், வைக்கிறார்கள். அதை மாற்றி இருவரையும் வேறு வேறாக வைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தண்டிக்கப்பட்ட கைதிகளும் தண்டனை பெறாத, குற்றவாளிகளா இல்லையா என்ற நிலையில் உள்ளவர்களும் ஒரே அறையில் இருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். அவர்கள் ஒரே அறையில் இருந்தாலும், ஒரு துறையில்தான் இருக்கிறார்கள். ரிமாண்ட் பிரிசனர்ஸ்-களுக்கு பிரத்தியேகமாக வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோருகிறார் என்று கருதுகிறேன். அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆ. நல்லசிவன்: கைதிகளைச் சிறையிலே வைக்கும்போது அவர்களுடைய இருப்பிடங்களுக்குப் பக்கத்திலே, அவர்களுடைய உறவினர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குப் பக்கத்திலேயுள்ள மத்திய சிறையில் வைக்கப்பட வேண்டும் என்று பொதுவான விதி இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அப்படி விதி உருவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்கள் இருக்கின்ற பகுதியில், அதாவது எந்தெந்த மாவட்டமோ அதற்கு அருகிலே இருக்கின்ற பகுதியிலே, ஆங்காங்குள்ள பகுதியிலேதான் வைக்கவேண்டுமென்று நடைமுறையில் இருக்கிறது. சில நேரங்களில் இட நெருக்கடி காரணமாக அதை மாற்றவேண்டி யிருக்கிறது. உதாரணமாக மதுரை சிறையிலே இட நெருக்கடி அதிகமாக இருந்ததால், அங்கே கட்டிடத்தைப் புதுப்பிக்க வேண்டிய நிலை இருந்ததால், தற்காலிகமாக அங்கிருந்த கைதிகளை மற்ற சிறைகளுக்கு மாற்றினார்கள். அந்த நிலை சென்ற ஆண்டு ஏற்பட்டது. அந்தக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்ட பிறகு, மீண்டும் இந்த ஆண்டு அவர்கள் மதுரைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்

Construction of Lawyers' Chambers in Madurai

* 54 *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state:

(*a*) whether the scheme to construct Lawyers' Chambers inside the Court Campus in Madurai, has been dropped; and

(*b*) if not, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(இ) இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் "வழக்கறிஞர்கள் அறைகள்" கட்டித் தருவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற தலைமை நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் அறைகள் தனியாகக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. நிதிக் கட்டுப்பாடு தடைக்கல்லாக இருக்கிறது. ஆனால் அவ்வப்போது இருக்கின்ற நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப ஆங்காங்கு வழக்கறிஞர்களுக்காக அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில்தான் தற்போது மதுரை, ஈரோடு போன்ற பகுதிகளில் எல்லாம் வழக்கறிஞர்கள் அறைகள் கட்ட அரசு உத்தேசித்திருக்கிறது.

கட்டிடத் தொழிலாளர்கள்.

* 55. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது கொண்டு வரப்படும் ?

(உ) அதன் முக்கிய அம்சங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) இதற்கான சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மத்திய அரசு ஒத்திசைவு பெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சட்ட முன்வடிவு மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக முன்கூட்டியே அனுப்பப்பட்டிருக்கின்றதா? அப்படியென்றால் அது எப்போது அனுப்பப்பட்டிருக்கிறது? அதிலே மத்திய அரசினுடைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லி அதனுடைய டிராப்டை இங்கே அனுப்பினார்கள். அதற்கு நம்முடைய கருத்தைத் தெரிவித்து அனுப்பினோம். அப்படியிருந்தும் மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிந்த காரணத்தினாலே, மாநில அரசே ஒரு சட்ட முன்வடிவு தயாரித்து, முதல்வர் அவர்களுடைய அனுமதியும் பெற்று, அதற்கு ஜனாதிபதியினுடைய அனுமதி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கட்டிடத் தொழிலாளர்கள் பணிப் பாதுகாப்பு மற்றும் கூலியுயர்வு போன்ற கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அவர்கள் மீது வழக்குகள் பதிவில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

டாக்டர் இரா சனார்த்தனம் : கட்டிடப் பணியாளர்களுடைய நன்மைக்காக இந்த அரசு எடுத்திருக்கின்ற முயற்சிகள் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு நல்ல கூலி கிடைக்கிறது. அதை அவர்கள் ஒழுங்காகச் சேர்த்து வைத்துக்கொள்ள, அந்தப் பணத்தைப் பாதுகாத்து வைப்பதற்கு வேண்டிய நல்ல ஆலோசனையை அவர்களுக்குக் கூற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : Provision has been made for creating a welfare fund to provide Family Benefit Scheme. குடும்ப நலத் திட்டத்திற்காக ஒரு வெல்பேர் பண்ட் ஏற்பாடு செய்வதற்கு சட்டத்திலே விதியில் வகை செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் பணத்தைச் சேர்த்து வைப்பதற்கு அது ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

Thiru A. R. DAMODARAN: May I know whether there is any Constitutional objection to the Government of Tamil Nadu circulating this Bill to elicit public opinion before sending it to the President of India for his assent|concurrence?

The Hon. Thiru S. RAGHAVANANDAM: There is no Constitutional objection. But normally decisions are taken at the Chief Minister's level and Cabinet level.

Construction of Houses for Government Servants.

* 56 Q.—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Labour be pleased to state, whether there is any proposal with the Government to acquire lands out of the vast stretch of vacant lands within the compound of the bungalows of Officers like the District Collectors, District Judges, Deputy Inspector-Generals of Police, Superintendents of Police, Superintendents of Jails, Forest Officers, Superintending, Executive and Divisional Engineers for construction of houses for Government servants?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அரசு அதிகாரிகள் குடியிருப்புகளில் உள்ள காலியிடங்களில் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவை இருப்பதை அடிக்கடி மறந்து விடுகிறார்கள் போல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மேலவைத் தலைவர் அவர்களே, எல்லா அரசு அதிகாரிகள் இருக்கின்ற குடியிருப்புகளில் உள்ள காலியிடங்கள் அனைத்தும் அரசுக்கே சொந்தமானவைகள். ஆனதால், அக்காலியிடங்களை அரசு ஆர்ஜிதப்படுத்த வேண்டுமென்ற கேள்விக்கு இடமில்லை.

அரசின் பொதுப் பணித் துறை மற்றும் வீட்டு வசதி வாரியத்தால் அரசு அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தத் துறை மூலம் தேவைக்கு ஏற்ப, குடியிருப்புகள் காலியிடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அதிகாரிகள் இருக்கின்ற இடத்தில் உள்ள காலியிடங்களைக் கையகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்கிறார்கள். அது வாஸ்தவம்தான். இந்த அதிகாரிகள் எல்லாம் பல ஏக்கர்கள் ஒதுக்கப்பட்ட இடத்தில் பெரிய பங்களாக்களில் இருக்கிறார்கள். அமைச்சர்கள் இருக்கின்ற இடத்தைக் காட்டிலும் பெரிய பெரிய இடமாக இருக்கிறது. அதிலே இருக்கின்ற காலியிடங்களில் கட்டிடம் கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையிலே எந்தெந்த மாவட்ட ஆட்சியாளர்கள், போலீஸ் அதிகாரிகள், இன்னும் பொறியாளர்கள் பங்களாக்களிலே உள்ள காலியிடங்களில் மக்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோயம்புத்தூர் மாவட்ட
காவல் துறை கண்காணிப்பாளர் குடியிருப்பில் உள்ள 4.377 ஏக்கர் பரப்பில்
402 குடியிருப்புகள் கட்ட திட்டமிட்டு அரசு 384 குடியிருப்புகள் கட்ட திட்டம்
மேற்கொள்ளப்பட்டு, 378 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்
பட்டிருக்கிறது என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சேலத்தில்
கலெக்டர்ஸ் பங்களா, கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் ஆபிசர்ஸ் பங்களா,
சூப்பிரண்ட்டண்ட் ஆப் போலிஸ், டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபிசர்ஸ் பங்களா,
ஜட்ஜஸ் பங்களா காம்பௌண்ட் இங்கெல்லாம் இடம் இருக்கிறது. வட ஆற்காட்
டில், சூப்பிரண்டெண்ட் ஆப் போலிஸ், டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபிசர்கள் காம்
பௌண்ட், மதுரை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட், கேம்ப்
அட் மதுரை இந்த இடங்களில் இடமிருக்கிறது. கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட்
ஜட்ஜஸ் பங்களா காம்பௌண்ட் டி. எஸ். 1423, கோயம்புத்தூர் சீப் எஜுகே
ஷனல் ஆபீசர்ஸ் பங்களா காம்பௌண்ட் டி. எஸ். நெம்பர் 1094, கோயம்
புத்தூர் அடிஷனல் ஜட்ஜஸ் பங்களா காம்பௌண்ட் டி. எஸ். 1437, இந்த
இடங்களில் உள்ள காலியிடங்கள் எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அதிக நேரம் ஆகும் என்பதால் எல்லா விவரங்களையும் படிக்கவில்லை. இவை
களை எடுப்பதாகவும் அந்த இடங்களிலே எல்லாம் வீடுகள் கட்டுவதாகவும்
முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும்
இது ஏற்கெனவே தெரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : எனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தால்
இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டேன்.

Thiru A. R. DAMODARAN: May I know whether the Government will take a decision to prescribe a ceiling for the vacant land that may be available with the Government offices and utilise this land for other productive purposes, in view of the fact that the philosophy of the Government is to impose urban land ceiling?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது அந்தந்த பங்களாக்
களில் எவ்வளவு இடம் அதிகமாக இருக்கிறது என்று பார்த்து, அதில் இருப்
பவர்களுக்கு இடையூறு இல்லாமல் ஒதுக்கிவிட்டு, மீதியுள்ள எந்த இடத்தை
எடுத்து, அதில் அரசு ஊழியர்களுக்குக் கட்டிடம் கட்டலாம் என்ற கணக்கு
எடுத்துப் பார்த்து, அவர்களுக்கும் தொல்லையில்லாமல், நமக்கும் லாபகரமாக
இருக்கக்கூடிய வகையிலே கட்டப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட நீதிபதி
போன்றவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் 50 செண்ட்டும், அதுபோலவே
சென்னை போன்ற நகரத்தில் பெரிய அதிகாரிகள் இருக்கக்கூடிய இடத்தில் 50
செண்ட்டும் என்று எடுத்து, அதை அவர்களுக்குக் குடியிருப்புக்கு என்று
நிர்ணயம் செய்துவிட்டு, மீதியுள்ள இடங்களிலே வீடு கட்ட பயன்படுத்திக்
கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்
களே, இது போன்ற பிரச்சினைகள் பற்றி நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்
கிறோமென்று சொல்வதில் நான் மன நிறைவு கொள்கிறேன். இங்கே
இருக்கும் உறுப்பினர்களும் திருப்தி அடைவார்கள் என்று கருதுகிறேன். சில
நேரங்களில் நடவடிக்கைகள் எடுக்கும்போது, சில பிரச்சினைகளை
ஆங்காங்கே உருவாக்கும்போதுதான் எங்களுக்கு நெருக்கடி ஏற்படுகிறது.
ஆனாலும் அதைப்பற்றிக் கவலையுறாமல், நீதிக்குப் புறம்பாகச் செயல்படா
மல், எல்லோருக்கும் மன நிறைவு அளிக்கும் வகையில் இந்த அரசு செயல்
படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Large Scale Industries

* 57 Q.—Thiru K. RAMAMOORTHY and Dr. T. R. JANARTHANAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the Large-Scale Industries, that where initiated and have started functioning in the Public and Private Sectors, after January 1977 in this State?

மாண்புமிகு திரு.சு. திருநாவுக்கரசு : விவர அறிக்கை @ அவை முன்
வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. ஜனார்த்தனம் : மத்திய அரசாலே துவங்கப்பட்ட திட்டங்
கள் எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : 1977க்குப் பின்னாலே ராணிப்
பேட்டையில் சுமார் 22 கோடி ரூபாய் மூலதனத்தில் பி.எச்.இ.எல். நிறுவனத்
தின் தொழிற்சாலை வந்திருக்கிறது. அது தவிர மத்திய அரசாலே வேறு
எந்த இடத்திலும் தமிழகத்திலே தொழிற்சாலைகள் துவங்கப்படவில்லை.

@154-195 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே
'நடுத்தர மற்றும் பெரும் தொழிற்சாலைகள்' என்று ஒருங்கிணைந்த பட்டிய
லாக இருக்கிறது. அதிலே 299 தொழிற்சாலைகள் என்று குறிப்பிடப்பட்
டிருக்கிறது. அந்த 299 தொழிற்சாலைகளில் நடுத்தரத் தொழிற்சாலைகள்
எத்தனை, பெரும் தொழிற்சாலைகள் எத்தனை என்று அறிய விரும்பு
கிறேன். 31—12—1981க்குப் பிறகு நம்முடைய மாநில அரசால் மத்திய
அரசுக்கு அனுப்பப்பட்டு, இன்னமும் மத்திய அரசாலே அங்கீகரிக்கப்படாத
அல்லது ஒப்புதல் தரப்படாத தொழிற்சாலைகளின் பட்டியல் இருக்கிறதா?
அதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவரவர்களே, கேள்வி, 1977க்
குப் பின்னாலே தமிழ் நாட்டில் எத்தனை நடுத்தர, பெரிய தொழில்கள்
துவங்கப்பட்டன என்பதால், 1977க்குப் பின்னாலே துவங்கப்பட்ட அனைத்து
நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் பெயர்களை அப்படியே அச்சடித்துக்
கொடுத்துள்ளோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனித் தனியாக வேண்டு
மென்று விரும்பினால், தனித்தனியாக அச்சடித்துக் கொடுக்கப்படும். மத்திய
அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதைப் பொறுத்தவரையில், 1977லே 61;
1978-ல் 45, 1979-ல் 49 ; 1980-ல் 108 ; 1981-ல் 92 ; 1982-ல் 88 லைசன்ஸ்
கிடைத்தது, 1977-லே 46, 1978-லே 33, 1979-லே 32, 1980-லே 57, 1981-லே 39,
1982-ல் 37. மத்திய அரசிடத்திலே தேங்கியிருப்பது 1981-லே 28, 1982-லே 144.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் கொடுத்த விவரப்படி 1981லே 28 தொழிற்சாலைகளுக்கும், 1982லே
144 தொழிற்சாலைகளுக்கும் இன்னமும் மத்திய அரசு ஒப்புதல் அளிக்க
வில்லை என்று தெரிகிறது. ஒப்புதல் தருவதில் ஏற்படும் தாமதத்திற்குக்
காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவரவர்களே, பல்வேறு
காரணங்கள் சொல்லப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச்
சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், மதுரை பகுதி
யிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நில ஆர்ஜிதப் பணி
களைச் செய்து, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்து, மற்ற பணிகளையும்
செய்துவிட்டது. முதலிலே அதற்கு உரிமம் மறுக்கப்படுகிறபோது,
திண்டுக்கல் ரயில் பாதை இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது. அதுவும்
சேர்க்கப்பட்ட பின்னர், நிலக்கரி ஒதுக்கீடு செய்ய இயலாது என்று சொல்லி,
மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படி மறுத்து நமக்குக் கடிதம் வந்ததற்குப் கரூர்-
திரு. [illegible] தனியார்களுக்கு சிமெண்ட் தொழிற்சாலை

அமைக்க அனுமதி கொடுத்துள்ளது. அவர்களுக்கு நிலக்கரி கொடுக்கவும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று தஞ்சை மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை அமைக்க மனு செய்திருக்கிறோம். அதற்கு கரும்புப் பயிர் எவ்வளவு விஸ்தீரணம் இருக்க வேண்டுமென்று ஆய்வு செய்து அனுப்பியிருக்கிறோம். இருந்தாலும் நிலம் போதுமானதா, போதுமான கரும்பு கிடைக்குமா என்பதுபோல் சந்தேகம் எழுப்பி, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கேள்வியோடு, ஒவ்வொன்றும் திருப்பி அனுப்பப்படுகிறது. கேள்வி கேட்பது எளிது. அது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கே தெரியும். ஏதாவது கேட்டு திருப்பி அனுப்பப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN: From the reply of the Hon. Minister, it seems that he is concerned only about his own public sector industries. May I point out that in Gujarat, the Government of Gujarat are anxious that private sector industries should also be established ? May I request the Government of Tamil Nadu kindly to take some interest in seeing that the applications made by the private sector also receive some attention, instead of being biassed only in favour of the applications of the public sector ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : எப்படி தமிழக அரசினுடைய அரசுத் துறை நிறுவனங்கள் உரிமம் கேட்டு அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் கூட முறையாகப் பரிசீலிக்கப்படவில்லை என்பதற்குச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. தனியார் மனுச் செய்கிறபோது, அதையும் இந்த அரசு முறையாக அனுப்புகிறது. தொடர்ந்து, அவற்றுக்கு உரிமம் பெற மைய அரசிடம் வற்புறுத்தி, முயற்சி செய்கிறது. டி. வி. எஸ். நிறுவனமும், இந்தியன் ஆர்கானிக் கெமிகல் நிறுவனமும் புது லைசன்ஸ் பெற, அவற்றின் மனுக்களை லைசன்சிங் கமிட்டியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காக உடனே டெலக்ஸ் கொடுக்கிறோம், கடிதங்கள் எழுதுகிறோம். லைசன்சிங் கமிட்டியில் அந்த மனுக்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உரிமம் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசுகிறோம். இங்கேயிருந்து முதல்வரவர்கள் டெல்லிக்குப் போகும்போது, அமைச்சர்களிடம் சொல்லி, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசுத் துறை நிறுவனங்கள் மிகக் குறைவாகத்தான் தொழிற்சாலைகளை நிறுவ முடியும். அந்த அளவிற்கு அரசின் நிதி ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு தனியார்களைத்தான் நம்பியிருக்கிறோம். அவர்களுக்கு உரிமம் கிடைக்க, மாநில அரசு மத்திய அரசோடு தொடர்ந்து தொடர்பு கொள்ளும்.

[1983 பிப்ரவரி 8

Thiru A. R. DAMODARAN: There is a senior Officer of the Tamil Nadu Government who is acting as Liaison Officer in Delhi. May I know whether the Hon. the Minister for Industries is getting monthly reports from the Officer in Delhi regarding the letters of intent granted, licences granted and the progress in the Licensing Wing of the Government of India because these matters are being pursued by other States, while there is a feeling that Tamil Nadu Government are not pursuing such matters with sufficient interest?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவரவர்களே, டெல்லியிலே இருக்கிற தனி அதிகாரி மூலமாக அறிக்கைகள் வருவதில்லை. ஏனென்றால் மத்திய அரசு நேரடியாக நமக்கு அந்த உரிமங்களைத் தருகிறது. எதில் எல்லாம் விளக்கம் கேட்கிறார்களோ, அந்த மனுக்களைத் திருப்பி அனுப்புகிறார்கள். அவை நேரடியாக நமக்கு வந்து விடுகின்றன. டெல்லியிலே உள்ள தனி அதிகாரியிடம் தொடர்பு கொள்கிறபோது, தனியார்கள் தொழில்கள் துவங்க விரும்பிப் போகும்போது, அவர்களுடைய உரிமங்களுக்காக மத்திய அரசின் அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டு, உரிமங்களைப் பெற அவர் முயற்சி செய்கிறார். அதே போன்று ஸ்பெஷல் ரெப்ரசென்டேடிவ் அவர்களும் முயற்சி செய்கிறார். மற்ற மாநிலங்களில் கூறிக்கொள்வதுபோல், தமிழக அரசு அக்கறை காட்டவில்லை என்று சொல்வது வாதமாகாது. எவ்வளவு உயர்ந்தபட்சமாக அழுத்தம் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு எல்லா மட்டத்திலும் மத்திய அரசோடும், அமைச்சர்களோடும் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகிறோம்.

சிமெண்ட் மூட்டைகள் பறிமுதல்.

* 58 வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதத்திற்கு கருஞ்சந்தையில் விற்பனை செய்வதற்கு வைத்திருந்த ஒரு நபரிடமிருந்து 1,000 மூட்டைகள் சிமெண்ட் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவ்வழக்கு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1983 பிப்ரவரி 8]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி போட்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. ஒரு வருடத்திற்கு முன்னால் வந்த செய்தி குறித்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் எழுப்பி, அதற்கான ஆவணங்களையும் வாங்கி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி, நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னதால், மேற்கொண்டு நான் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இப்போது மாநிலங்களுக்கு மத்திய அரசின் அல்லாட்மெண்ட் மிகக் குறைவாக இருக்கிறது. ஆனாலும் பிளாக்-மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைக்கிறது. சிமெண்ட் தட்டுப்பாடு என்றால் தேவை எந்த விலை கொடுத்தாலும் கிடைக்கக்கூடாது. கிடைக்கிறது என்றால் கூடுதல் விலைக்கு விற்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த நிலை இல்லாமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: இதற்கு முன்னால் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களிடம் இருந்த ஆதாரத்தை வைத்துச் சொன்னார்கள் 'தினத்தந்தி' பத்திரிகையிலே வந்த செய்திக் குறிப்பைக் கொடுத்தார்கள். அதிலே சம்பந்தப்பட்டவர் யார், எந்த இடம் போன்ற விவரங்கள் இல்லை. போன ஒரு அதிகாரியினுடைய பெயர் மட்டும் இருந்தது. அதைக்கொண்டு உடனடியாக விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டு, மேலும் அங்கேயுள்ள உணவுப் பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு இதுபோன்று ஏதாவது சம்பவம் நடந்திருக்கிறதா என்று அறிக்கை அனுப்ப வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்.

பள்ளித்துணை ஆய்வாளர் பதவிகள்.

* 59 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் நலத்துறை நடத்தும் பள்ளிகளை மேற்பார்வையிட தென் ஆற்காடு மாவட்டத்திற்கென பள்ளித்துணை ஆய்வாளர் (Deputy Inspector) தரத்தில் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், இப்பதவிகள் எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம். தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப்பள்ளிகளைக் கண்காணிக்க மூன்று பள்ளித்துணை ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) இப்பதவிகள் நிரப்பப்பட்டுவிட்டன. நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்களில் ஒருவர் 12—2—1982 அன்றும் மற்ற இருவர் 15—2—1982 அன்றும் பணியில் சேர்ந்துவிட்டனர்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: முதல்முறையாக நலத்துறையில் இப்படிப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் முன்னோடித் திட்டம் என்று அறிவிக்கப்பட்டு, தென்னார்க்காடு மாவட்டத்தில் 3 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகள் நலத்துறையைச் சாராத வேறு துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் மூலம் நிரப்பப்பட்டிருக்கின்றன. இந்த மாதத்துடன் அந்தப் பதவிகள் முடிவடைகின்றன. அவர்களை நீக்கிவிட்டு நலத் துறையிலிருந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. ஆகவே, அதை அமுல்படுத்த விரைவான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தென்னார்க்காடு மாவட்டத்திலே நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் 213. அவற்றின் தரத்தைக் கண்காணிக்கும் வகையில் இந்தத் திட்டத்தை தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வகையிலே, முன்னோடித் திட்டமாக, ஓராண்டு காலத்திற்கு கல்வித் துறையிலேயிருந்து அனுமதிக்கப்பட்டிருக்கும் துணை ஆய்வாளர்களைக் கொண்டு இந்தப் பதவிகள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய பதவிக்காலம் இந்த மாதம் 15 ஆம் தேதி முடிவடைகிறது. நலத்துறையிலே பணியாற்றும் பணி மூப்புப் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் தகுதித் தேர்விலே தேர்ச்சி பெற்றிருப்பவர்களைத் தேர்வு செய்து வரும் 15 ஆம் நாள் முதல் அவர்களை அந்தப் பதவிகளிலே அமர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக இருக்கிறது என்று இப்போது தெரிய வருவதால், இதை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தும் கருத்து இருக்கிறதா? இதே நலத்துறையில் மாவட்டக் கல்வி அதிகாரி (District Educational Officer) என்ற அந்தஸ்தில்

ஒரு பதவி உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்திருக்கிறாரா? அப்படிப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது என்றால், என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, இதை ஒரு முன்னோடித் திட்டமாக நாம் செயல்படுத்துவதற்கு நலத்துறையிலே இருக்கும் பள்ளிகளிலே கல்வியின் தரத்தை உயர்த்துவதும் கல்வியின் தரத்தை நல்ல முறையிலே கண்காணித்து செயல்படுத்துவதும் முக்கிய காரணம். அந்த வகையிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்தியதன் காரணமாக அது நல்ல பலனைத் தந்திருக்கிறது. இந்த நிலைமையிலே மற்ற மாவட்டங்களுக்கும் இதைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதையும் அரசு பரிசீலித்து வருகிறது. மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடுவதுபற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்மையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தலைமையிலே பிற்படுத்தப்பட்ட துறையின் மூலமாக இருக்கும் பள்ளிகளின் தரத்தையும் ஆய்வு செய்து தையும், நலத்துறையின் கீழ் இருக்கும் பள்ளிகளின் தரத்தையும் ஆய்வு செய்து நாங்கள் அதிலே கலந்து நிர்ணயிக்க ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, மாண்புமிகு நிதி அமைச்சர் கொண்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் டி.ஈ.ஓ. பதவிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்த வகையிலே அதையும் ஒரு முன்னோடித் திட்டமாக, தற்போது இயக்குநர் அலுவலகத்திலே இருக்கும் டெபுடி டைரக்டர் அவர்களுக்கு அடுத்தபடியாக, இந்தப் பள்ளிகளின் தரத்தை ஆய்வு செய்யும் பணியினை செய்ய, டி.ஈ.ஓ. அளவிலே அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்ட அந்தக் கருத்தின் மீது தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

ஆதி திராவிட நல உயர்நிலைப் பள்ளி, அரக்கோணம்.

*60.வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரக்கோணத்தில் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி 1978-ம் ஆண்டில் கட்டத் தொடங்கியது கட்டி முடிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதில் எத்தனை மாணவர்கள் தற்போது படிக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் பணியானது 1978-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இராணுவத் துறையின் (கடற்படை) தலையீட்டால் மற்றொரு பணியானது இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது. மற்றொரு இடத்தில் ரூ. 21.20 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்காக இப்போது ஆணை அரசினால் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. விரைவில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்படும்.

(இ) அரக்கோணம் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 1,450 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நல உயர் நிலைப்பள்ளி 1978ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு, அதற்கான கட்டிட வேலைகள் தொடங்கப்பட்டதற்குப் பிறகு, அந்த இடம் இராணுவத் துறையைச் சார்ந்தது என்று சொல்லப்பட்டு அந்தப் பணி நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடம் ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்டதா? அல்லது இராணுவத் துறைக்கு ஒதுக்கப்பட்டதா? தாலுக்கா அலுவலகத்திலே இடத்திற்கான ரெக்கார்ட் எப்படி இருந்தது? ஏன் நாம் ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகையைச் செலவு செய்த பிறகு அந்தப் பணியை நிறுத்தும் நிலை ஏற்பட்டது? இவ்வாறு தடைப்படக் காரணமாக இருந்த நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போன்று நிலைமைகள் இல்லை. தற்போது அரக்கோணத்தில் இருக்கும் அந்தப் பள்ளி அதற்கென்று தனியாக இருக்கும் ஒரு கட்டிடத்திலே இயங்கி வருகிறது. புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று புறம்போக்கு நிலத்தில் ஏற்கெனவே விடுதி இருக்கும் இடத்திற்கு அருகில் கட்டிடம் கட்டும் பணிகளைச் செய்ய அரசு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஏறத்தாழ 40 ஆயிரம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்து கட்டிடம் கட்டும்போது, "இந்தியப் பாதுகாப்புத் துறைக்கு, அந்தப் பள்ளிக் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகாமையில் பாதுகாப்புக்குத் தேவையான 'ஏரோட்ரோம்' இருக்கிறது. ஆகவே, நாம் கட்டிடம் கட்டிக் கொண்டிருந்த அந்தப் பகுதியும் இந்தியப் பாதுகாப்புத் துறைக்குத் தேவை" என்று அவர்கள் சொன்னதன் காரணமாக, அவர்கள் முறையாக தலைமைச் செயலாளர் அவர்களுக்கு எழுதிக் கேட்டு, அதற்கிணங்க அந்தப் பணி நிறுத்தப்பட்டது. தற்போது வேறு ஒரு இடத்தில் தனியாருடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்தப் பணி

முடிவுறும் தருவாயில் இருக்கிறது. அதை நிறைவேற்றிய பின்பு ஒதுக்கப்பட்டிருக்கும் 21.20 லட்சம் ரூபாய் அளவிலே விடுதியோடு கட்டிடம் கட்டும் நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம்: பாதுகாப்புத் துறைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதிலே எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. நாம் கட்டுவதற்கு முன்னாலேயே அவர்கள் நம்மிடம் கேட்டு அதற்குப் பின் நாம் கட்டினோமா? அல்லது அப்படியில்லாமல் நாம் கட்ட ஆரம்பித்ததற்குப் பிறகுதான் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தால், நாம் செலவழித்திருக்கும் 40 ஆயிரம் ரூபாயையும் அவர்கள் திருப்பித் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை கோரி பெறப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: கட்டிடம் நாம் கட்ட ஆரம்பித்து அது கூரை அளவுக்கு வந்த பிறகுதான் அவர்களிடமிருந்து இந்த எண்ணம் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலே தற்போது செலவழிக்கப்பட்டிருக்கும் தொகை அவர்கள் மூலமாக அரசுக்குக் கிடைக்கும்.

29—1—1933 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள்.

தொரையர் பிரிவினர்.

*39 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் வாழும் 'நாயக்' சாதியினரில் தொரையர் பிரிவினரை கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் மலை சாதியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுபோல், தமிழ்நாட்டிலும் மலை சாதியினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1983 பிப்ரவரி 8

"அச்சகரை வெள்ளாளர்" சமூகம்

*40 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) "அச்சகரை வெள்ளாளர்" என்னும் சமூகத்தினை தாழ்த்தப் பட்ட வகுப்பினர் வரிசையில் சேர்த்திட வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அச்சகரை வெள்ளாளர் என்ற பிரிவினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத் இனர் இருக்கும் இடங்களிலேயேதான் இப்போதும் இருக்கிறார்கள். குறிப் பாக தலைஞாயிறு பகுதியில் உள்ள மாரியம்மன் கோயில் பகுதியிலும், கேசவ னோடை பகுதியிலும், நாகையில் திருப்பூண்டி பகுதியிலேயும், வேதாரண்யம் வட்டாரத்திலே சில பகுதிகளிலேயும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் புள்ளிவிவரக் கணக்கு எடுத்தபோது, அவர்கள் தங்களை வெள்ளாளர் என்று சொன்ன காரணத்திற்காக அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்க்கப்பட்டதால், அவர்கள் எல்லாவிதமான சலுகைகளையும் இழந்திருக்கி றார்கள். ஆகவே, மீண்டும் அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே தாங்கள் இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கையைப் பரிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப் பார்களா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியில் இருந்தாலும்கூட, அதிகாரிகள் விசாரணை செய்வதற்காக அவர்களிடம் சென்றபோது, அவர்களாகவே தாங்கள் "அச்சகரை வெள்ளாளர்" சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று எடுத்துச்

1983 பிப்ரவரி 8]

சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையைக் கொண்டு தற்போது அந்த இனம் பிற்பட்டோர் பட்டியலில் வரிசை எண் 4-ல் இடம் பெற்றிருக்கிறது. அதன் காரணமாக பிற்பட்டோர் பெறுகின்றவற்றுக்கு கொடுக்கப்படவேண்டிய சலுகை கள் அவர்களுக்கு தற்போது தரப்பட்டு வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இவர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றால், அதற்குப் பல பிரச்சினைகள் உரு வாகின்றன. அதாவது இந்திய அரசின் அனுமதியுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் "தாழ்த்தப்பட்ட பிரிவில்—அந்தப் பட்டியலில் இடம் பெறுவ தற்கு உரிய ஒரு இனம் பாரம்பரியமாகத் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாகி, சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருத்தல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்தக் குறிப்பிட்ட சமூகத்தினர்களைப் பொறுத்த வரையில், அத்தகைய பிரச்சினைகள் இல்லை என்பதால் அரசின் மூலமாக அந்தப் பரிந்துரை செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் அந்தப் பகுதியில் இருப்பவன் ஆதி திராவிடர்கள் இருக்கிற அந்தப் பகுதியில் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். சமூக நிலையிலும் சரி, பொருளாதார நிலை யிலும் சரி, கல்வியிலும் சரி மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பவர்கள். ஆதி திராவிடர்களில் பள்ளர், பறையர் என்று பல வகுப்புகள் இருப்பதைப்போல அவர்கள் தங்களை "வெள்ளாளர்கள்" என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களை வெள்ளாளர் என்று சொல்லிக் கொண்டதாலே, அவர்களெல் லாம் ஏதோ முற்போக்குச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு அவர்களை "பிற்பட்டோர் பட்டியலில்" சேர்த்துவிட்டிருக்கிறார்கள். இது தவறுதலாக நடைபெற்று விட்டது. எனவே இந்தத் தவறை நீக்கும் வகையில் அரசு பரிவோடு அதிகாரிகளை மீண்டும் விசாரணை செய்வதற்காக அனுப்பி விசாரணை செய்து, தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே அவர்களைச் சேர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதே கருத்தைத்தான் சொல்லுகிறார். அதிகாரிகள் ஏற்கெனவே விசாரணைக்குச் சென்றபோது, அதிகாரிகளே தவறுதலாக இவர்களை பிற் பட்டோர் பட்டியலில் சேர்த்துவிடவில்லை. இவர்கள் அவர்களிடம் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில்தான் அதிகாரிகள் இவர்களை பிற் பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அடுத்து, இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் வாழ்கிறார்கள்

என்ற காரணத்தால், இவர்களை நாம் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து விட முடியாது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது என்று நான் கருது கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதை உணர்ந்துகொள்வார் என்றுதான் நினைக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பலர் பிற்பட்டோர் வகுப்பில் தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடும் இந்த நாளில் ஏதேனும் ஒரு வகுப்பினராவது தாங்கள் சமுதாயத்தில் உயர்ந்து விட்டோம் ஆகவே எங்களை முற்போக்கானவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை விட்டிருக்கிறார்களா? அப்படி கோரிக்கை இருந்தால், அதை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள் பவர்கள் தான் தங்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த வர்கள் யாரும் தாங்கள் யாரும் முற்பட்ட வகுப்பில் அதாவது உயர்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம் என்று சொல்லி முற்போக்கு சமுதாயத்தில் தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடவில்லை. எனவே இப்படியே பேசிக்கொண்டே போனால், திராவிடர்கள் எல்லோரும் பிற்பட்டவர்கள் என்றும் திராவிடர்கள் அல்லாதவர்கள் அனை வரும் முற்பட்டோர் என்றும் சொல்லுகிற நிலைமை வந்தாலும் வந்துவிடும். அதற்கும் தற்போது இடமில்லை. காரணம் அவர்களும் இங்கேதான் இருப் பார்கள். எனவே இதை அதிகமாக விவாதத்திற்கு உட்படுத்தாமல் இருப்பது நல்லது. இப்போது பிற்பட்டோர்பற்றி ஆராய்ந்து சொல்வதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோம். அவர்கள் முடிவெடுத்து கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு தருவதுதான் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: பிற்பட்ட வகுப்பிலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப் பிற்குப் போக வேண்டும் என்று நினைக்கிறவர்கள்தான் அதிகமாக இருக்கி றார்கள். தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து அதற்குக் கீழே போக வேண்டும் என்றாலும் வழியில்லை. அந்த நிலையில் இப்போது ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. ஆனால் சில இடங்களில் சமூக அநீதிகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தும் கூட, தங்களை வெள்ளாளர்கள் என்று சொல்லிக்கொள்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது அரசே அவர்

களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வந்திருக்கும் காலம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அத்தகைய பாதுகாப்பு இல்லாத நேரத்தில், அவர்கள் தங்களை உயர்ந்த ஜாதியோடு இணைத்துக்கொண்டு பாதுகாப்பு தேடிக் கொண்டிருக்கி றார்கள் என்ற காரணத்தால், இப்போது நாம் அவர்களுக்கு உரிய பாது காப்பை அளித்து தாழ்த்தப்பட்டவர்களாக அறிவிப்பதில் தவறு இல்லை என்பதால், அரசு இதைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைத்துப் பேசுகிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்கள். கடந்த காலத்தில் பாதுகாப்பு தேவைப்பட்டபோது அங்கே போனார்கள். நிகழ்காலத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்ற காரணத்தால், இங்கே வர விரும்புகிறார்கள். உணர்வால் அவர்கள் அப்படிக் கருதவில்லை. சமுதாயத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டால், இத்தகைய பிரச்சினைகள் இருக்காது என்று தான் நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான சிமிண்ட் பற்றாக்குறை குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்:

"தமிழ்நாட்டில் சிமிண்ட் பற்றாக்குறை கடுமையாக இருப்பதால் ஏற்பட் டுள்ள பாதிப்புகள் குறித்தும் பிரச்சினை தீர நடவடிக்கை எடுப்பது குறித்தும்."

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

@ 196-197 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : [1983 பிப்ரவ
யின் பத்தி 3-ல், மூன்றில் ஒரு பங்கு சிமிண்டை "தொழிற்சாலை
வெளிச் சந்தையில் எந்தவித விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடின்
விற்கலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. விநியோகக் கட்டுப்பா
இல்லை என்பது முன்பே தெரிந்த ஒன்றாகும். ஆனால் அதற்கு விலை
கட்டுப்பாடு இல்லை என்பது உண்மையா? ஏனென்றால் பொதுச் சந்தையி
விற்கக் கூடிய ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக செய்தித் தாள்களி
செய்தி வந்தது. எனவே இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்குவாரா
அடுத்து, கொரியாவிடமிருந்து 2 லட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் வாங்கப்பட
இருக்கிறது. அதில் 6-ல் ஒரு பங்குதான் இதுவரை இறக்குமதி செய்யப்பட்
டிருக்கிறது. இன்னும் ஒரு மாதம்தான் பாக்கியிருக்கிறது. அதாவது மார்
மாதம் வரைதான் இறக்குமதி செய்ய காலவரையறை இருக்கிறது. எனவே
எஞ்சியுள்ள சிமெண்ட்டை மார்ச் மாதத்திற்குள் இறக்குமதி செய்துவிட
முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறதா? அப்படியானால் அத
என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, சிமெண்
ஆலைகளில் உற்பத்தியாகிற சிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு சிமெண்
லெவிக்குத் தர வேண்டும் என்றும், 3-ல் ஒரு பங்கை அந்தத் தொழிற்சால
கள் தாங்களாகவே வெளியே விற்றுக் கொள்ளலாம் என்றும் மைய அ
தன்னுடைய கொள்கையை அறிவித்திருக்கிறது. அதற்கு ஏற்ப இரண்
நிலைகளில் இரண்டு விலைகளில் விற்கிற நிலைமை இருக்கிறது. வெளியே
விற்கும் சிமிண்ட்டைப் பொறுத்த வரையில், இன்ன விலைக்குத்தான் விற்
வேண்டும் என்று சட்ட பூர்வமாக மாநில அரசு அவர்களை நிர்பந்திக்
இயலாது. அப்படி நிர்பந்தித்து எந்த உத்தரவும் இடவுமில்லை. வெளியே
அதிகமான விலைக்கு விற்று லாபம் பெற்றுக் கொண்டு அந்த ஆலைகளை
நட்டத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று தான் மைய அரசு இரு
இரட்டை விலைக் கொள்கையை அறிவித்திருக்கிறது.

1983 பிப்ரவரி 8] [திரு. சு. திருநாவுக்கரசு]

வட கொரியாவிலிருந்து 2 லட்சம் மெட்ரிக் டன் சிமிண்ட் இறக்குமதி செய்ய ஏற்கெனவே அரசின் சார்பில் தமிழ் நாடு சிமிண்ட் கார்ப்பரேஷன் உத்தரவு அல்லது அனுமதியை வழங்கியிருக்கிறது. அதில் சுமார் 40,000 டன் வரைதான் இப்போது இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. மார்ச் மாதத்திற்குள் மீதமிருக்கிற சிமிண்ட் வந்தாக வேண்டும். தமிழ்நாடு சிமிண்ட் கார்பரேஷன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அப்படி வந்து சேரவில்லை என்றால், காண்ட்ராக்ட்டில் உள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : எனக்கு மேலும் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. கண்ட்ரோல் விலையை விட இரண்டு மடங்கு அதிகமாக அதாவது ரூ. 74-க்குத்தான் விற்க வேண்டும் என்ற உத்தரவு தனியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அடுத்து தற்போது மின்வெட்டு அமுலில் இருக்கிறது. அதன் காரணமாக சிமிண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை, சுமார் 80 சதவீதம் அவற்றின் உற்பத்தி குறைந்து விட்டது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரை, மின் வெட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

வட கொரியாவைத் தவிர வேறு பிற நாடுகளிலிருந்து சிமெண்ட் பெறுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு சந்தேகமில்லை, பல சந்தேகங்கள் வந்திருக்கின்றன. முதல் சந்தேகத்தைப் பொறுத்தவரையில், லெவி அல்லாத நான்-லெவி சிமிண்டைப் பொறுத்த வரையில் இந்த விலைக்குத்தான் அதை விற்க வேண்டும் என்று மாநில அரசு உத்தரவு எதுமிடவில்லை. அப்படி உத்தரவிடவும் முடியாது.

இரண்டாவது, வட கொரியாவைத் தவிர மற்ற எந்த வெளிநாட்டோடும் எந்தவிதமான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே அங்கேயிருந்து 2 லட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்யத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2 லட்சம் டன் வந்த பிறகு இன்னும் நமக்குத் தேவை இருக்குமானால், தேவைக்கு ஏற்ப மீண்டும் டெண்டர்கள் கோரி இறக்குமதி செய்துகொள்ள தமிழ் நாடு சிமிண்ட் கார்ப்பரேஷன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[திரு. சு. திருநாவுக்கரசு] [1983 பிப்ரவரி
மின் வெட்டு இருக்கிற காரணத்தால், சிமிண்ட் உற்பத்தி குறைவா
இருக்கிறது. சிமிண்ட் ஆலைகளைப் பொறுத்தவரை, மின் வெட்டிலிருந்து
விலக்களிக்கப்படுமா என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடம்
தான் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.

(முற்பகல் 10-30)

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே
மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தி
மீது என் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரு
கிறேன். தமிழகத்தில் இன்று என்றும் காணாத அளவிற்கு வறட்சியின்
கொடுமை விஞ்சிக் காணப்படுகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன். இப்போது நாம் வறட்சியால் வருகிற விளைவுகளைப்பற்றி முறை
யாகச் சிந்தித்து செயல்படுகிறோமா என்று நம்மீது மக்களுக்கு ஐயம்
வருகிற நிலையில் வறட்சியின் கோர நிலை எல்லா மாவட்டங்களிலும் காணப்
படுவதை நாம் காண்கிறோம்.

1981 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் வட ஆர்க்காடு மாவட்டமும், தெ
னார்க்காடு மாவட்டமும் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று கூறப்பட்டது
1982-ல் 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று சொல்லப்
பட்டது. 1983-ல் தமிழ்நாடு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது
என்பதை சுட்டிக்காட்டக்கூடிய அளவிற்கு வறட்சியினுடைய கோர தாண்டவம்
இருக்கிறது. வட ஆர்க்காடு, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள்
மழைக் குறைவால், வறட்சியால், தண்ணீர் இன்மையால், விளைவு
இன்மையால் சென்ற மூன்று ஆண்டுகளாக வறண்டு இருக்கின்றன.
13 மாவட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சியால் துன்பத்தை
அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எஞ்சி
மாவட்டங்களில், குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இதற்கு முன்
னால் வறட்சி இல்லாமல் இருந்தது. இந்த ஆண்டு அந்த இரண்டு மாவட்டங்
களிலும் வறட்சி காட்சி அளிக்கக் கூடிய நிலை ஏற்பட்டதிலிருந்து தமிழ்
நாடு முழுவதும் வறட்சியை சந்தித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது
பிப்ரவரி மாதத்தில் இருக்கிறோம். ஜூலை மாதம் வரையில் வறட்சியைத்

1983 பிப்ரவரி 8] [திரு. ம. சங்கரலிங்கம்]
தணிக்கிற எந்தவிதமான இயற்கை உதவியும் வரப்போவதில்லை. அரசின்
உதவியும், மத்திய அரசின் உதவியும், நாம் ஒருவொருக்கொருவர் செய்து
கொள்ள வேண்டிய உதவியும் தவிர இயல்பாக இயற்கை உதவும் நிலை
இல்லை. இயற்கை ஒருவேளை விதிவிலக்காக உதவலாம். இல்லையென்றால்
ஜூலை மாதத்திற்குப் பிறகுதான் மழையைப் பெற வேண்டிய நிலையில்
இருக்கிறோம். வறட்சியினுடைய கோர நிலை என்ன என்பதைச் சுட்டிக்
காட்டுவதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

இந்த ஆண்டிலேயே கூட தஞ்சையில் உள்ள 15.5 இலட்சம் எக்கர்
நிலத்தில் மூன்றரை இலட்சம் எக்கர் நிலத்திலே இரண்டாவது போகம் பயி
ராகவில்லை. அது மட்டுமல்லாமல், அந்தப் பயிர்களைப் பாதுகாக்க
அமைக்கப்பட்டிருக்கிற 14 ஆயிரம் வடிமுனைக் குழாய்களும் ஃபில்டர்
பாயின்ட் குழாய்களும்) சரியாக மின்சாரம் கிடைக்காததால் இயங்க முடிய
வில்லை. 'ஏ' கிளாஸ் வாய்க்கால்களில் முறையாக மணல் எடுக்காததால், நிலங்
களுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலையும், தண்ணீர் பத்து நாட்களுக்குக்
கொடுக்காவிட்டால் நெற்பயிர் தீய்ந்துவிடுகிற நிலையில் பாதிக்கப்பட்டிருக்
கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். காவிரி, பெண்ணாறு, கிராண்ட்
அணைக்கட்டு கால்வாய்களில் தேவையான அளவிற்குத் தண்ணீர் வராததால்,
ஆரம்பக் காலக் கட்டத்திலே பயிர் செய்யாமல் வைத்ததால், தஞ்சாவூரில் உள்ள
பெரும்பகுதி நிலங்கள் பாதிக்கப்பட்டு நெல் விளைவு 50 சதவீதத்திற்குக்
குறைவாகத்தான் எதிர்பார்க்கப்படுகிறது என்ற நிலை உருவாகியிருப்பதைக்
காண்கிறோம்.]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தஞ்சைக்குப் பக்கத்தில் உள்ள திருச்சி மாவட்டத்திற்கு வந்தால்,
அங்குள்ள 918 வருவாய்க் கிராமங்களில் 530 வருவாய்க் கிராமங்களில்
முழு அளவு வறட்சியால் பாதிக்கப்பட்டு பயிர்கள் அழிந்து விளைவு
இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது, 89 வருவாய்க் கிராமங்களில் பாதி அளவு
பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் திருச்சி, லால்குடி, குளித்தலை, முசிறி,
கரூர் போன்ற தாலுக்காக்களில் காவிரி பாசனத் தண்ணீர் ஒழுங்காகக் கிடைக்
காததால், காவிரி ஆற்றில் கர்நாடக அரசு தண்ணீரை முறையாகத் தராத
தால், அங்குள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதில் இரண்டரை
இலட்சம் எக்கர்களில் சம்பா, தாளடி பயிர்கள், முறையாகத் தண்ணீர் கிடைக்
காததால், பாதிக்கப்பட்டதாகத் தகவல் வருகிறது. புள்ளம்பாடி, புதுக்
கட்டளை மேட்டுக் கால்வாய் உட்பட 70 ஆயிரம் எக்கர் நெற்பயிர்
தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். . . தமிழகத்தின்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 பிப்ரவ

நெற் களஞ்சியமான தஞ்சையும், திருச்சியும் இந்த நிலைக்கு ஆளாக்
பட்ட பிறகு ஓரளவிற்குத் தண்ணீரைப் பெற்றிருந்த தென்னாற்காடு,
ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் எப்படிப்பட்ட நிலை இ
கிறது என்று பார்த்தால், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள
கிராமங்களில் 1954 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு பயிர்
அழிந்துகொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் சுமார் ஏழரை இலட்சம் வி
சாயிகள், விவசாயக் கூலிகள், வேலை இல்லாத நிலையில் இருக்கிறார்கள்
திண்டிவனம், வானூர், செஞ்சி, விழுப்புரம் உளுந்தூர்பேட்டை திரு
கோயிலூர் ஆகிய தாலுக்காக்களில் முழு அளவில் பயிர்கள் அழி
திருக்கக்கூடிய நிலையும், விருத்தாசலம் தாலுக்காவில் உள்ள 128 கிராம
களில் 102 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையும், கள்ளக்குறிச்
தாலுக்காவில் உள்ள 221 கிராமங்கள் தண்ணீரின்றி பாதிக்கப்பட்டிருக்கி
நிலையும், சிதம்பரத்தில் உள்ள 155 கிராமங்களில் 74 கிராமங்கள் பாதிக்க
பட்டிருக்கிற நிலையும் ஏற்பட்டு, காட்டுமன்னார்குடி தாலுக்காவில் உள்ள 15
கிராமங்களில் 41 கிராமங்களும், கடலூரில் உள்ள 112 கிராமங்களில் 10
கிராமங்களும் பாதிக்கப்பட்டு அங்குள்ள நெல் விளைவு பாதிக்கப்பட்டிரு
கிறது. குறுவைப் பயிர் 22,200 எக்டேருக்குப் பதிலாக 9,342 எக்டேரில்தான்
பயிராகி இருக்கிறது. அதிலும் எவ்வளவு விளையப் போகிறது என்பது தெரிய
வில்லை. ஆனால் பாதியளவுதான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. சம்ப
பயிரும், 13,500 எக்டேருக்குப் பதிலாக 4,500 எக்டேரில்தான் பயிரா
யுள்ளது. அவற்றிலும் பாதியளவிற்காவது விளையுமா என்று எண்ணுகிற நிலை
ஏற்பட்டிருக்கிறது. இது தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் இந்த போகத்திற்கு. இதற்கு முந்திய போகத்தில்கூட பயிர்கள்
தண்ணீர் இல்லாமல் கடைசியில் பாதிக்கப்பட்டதாக ரெவின்யூ ரெகார்டுகளில்
இருந்து நமக்குத் தெரிகிறது. அங்கு இருக்கக் கூடிய 2,472 குளங்களில்
1,778 குளங்களில் தண்ணீர் இல்லாத நிலையும், எஞ்சிய 694 குளங்களிலும்
பாதி அளவுக்குத்தான் தண்ணீர் உள்ள நிலையும் இருக்கிறது. இதனால்
ஒன்றரை இலட்சம் டன் நெல் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்றும்
இரண்டரை இலட்சம் டன் சோளப் பயிரும் பாதிக்கப்படுகிறது என்றும்
மதிப்பீடு செய்கிறார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நான் முன்பு குறிப்
பிட்டதைப் போல, 1981, 1982, 1983 ஆகிய மூன்று ஆண்டுகள் தொடர்ந்து
வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது
வறட்சியின் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக செங்கம்

1983 பிப்ரவரி 3] [திரு. ம. சங்கரலிங்கம்]

தாலுக்காவில் உள்ள மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி அண்மையில் பத்திரிகையில் வந்திருக்கிறது. இது மிகைப்படுத்தப்பட்டிருக்குமோ என்றுகூட நான் நினைத்தேன். ஆனால் 1981-82ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே நாம் வறட்சியைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். 1983 ஆம் ஆண்டும் தொடர்ந்து வறட்சி வந்த பிறகு அவர்களாலே அங்கே இருக்க முடியாத நிலையில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவிலூர் பகுதியில் உள்ள மக்களும், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் பெங்களூர் மற்றும் பெரிய நகரங்களை நோக்கிச் செல்லுகிற அளவிற்கு "டெசர்டெட் விலேஜ்" என்ற நிலை உருவாவதைப் பார்க்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆங்கிலத்தில் "லேக் டிஸ்ட்ரிக்ட்" என்று சொல்லுவார்கள். ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் பிறந்தது ஒரு "லேக் டிஸ்ட்ரிக்டில்", தமிழகத்திலே அண்ணா அவர்கள் பிறந்ததும் ஒரு "லேக் டிஸ்ட்ரிக்டில்". அந்த அளவிற்குப் பெரிய ஏரிகளை உடையது செங்கற்பட்டு மாவட்டம். மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய ஏரிகளிலும், உத்திரமேரூர், கோவிந்தவாடி, அகரம், மணிமங்கலம் ஆகிய ஏரிகளிலும் தண்ணீர் இல்லை. 90 சதவீதம் குளங்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்திலே குளத்துப் பாசனம், ஆற்றுப் பாசனம் ஆகியவற்றுக்கு அப்பால் நிலத்தடி நீரைப் பயன்படுத்த அதிக அளவில் மின் விசை கொடுத்து அதன் மூலமாகத் தண்ணீரைப் பெற்றோம் என்பது தெரியும்.

(மேற்பகல் 10-40)

இந்த ஆண்டு மின்சாரப் பற்றாக்குறையினால், மாநிலத்திற்குச் சலுகையைக் கொடுத்தாலும் கூட, குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் வராத, மின்சாரம் வராத நிலை உருவானதால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களை நோக்கி விவசாயிகள் வருகின்ற நிலைமைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சேலம் மாவட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு வட்டப்பகுதிகளில் எல்லாம் கிணற்றுப் பாசனம் தண்ணீரின்றி பாதிக்கப்பட்டது. கிணறுகளில் எல்லாம் தண்ணீர் இல்லை. ஏரிகளிலே தண்ணீர் இல்லை. ஆகவே 25 சதவிகிதம்தான் அங்கே விளையும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே அதே நிலைதான். 70 சதவிகிதம் அங்கே கிணற்றுப் பாசனம்தான். மதுரையிலேயே கிணற்றுப் பாசனம்தான். அங்கே கிணற்றில் தண்ணீர் இல்லை. மழை குறைவு. அங்கே பாசனம் போதாமல் இருக்கிறது. 481 ரெவின்யூ

கிராமங்களில் 310 செவின்ரூ கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிரு தாகவும், 1½ லட்சம் விவசாயிகள் வேலையில்லாமல் இருப்பதாக தெரிகிறது. நீலகிரியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. பு கோட்டை, வட ஆற்காடு மாவட்டங்களில் 3 ஆண்டுகளாக இந்த நிலைமை தொடர்ந்து இருக்கின்றன. அந்த மாவட்டங்கள் தொல்லைகளை அ வித்துக்கொண்டிருக்கின்றன. அங்கே அறந்தாங்கியில் மாத்திரம் காவிரி தண்ணீர் வரவேண்டும். ஆனால் காவிரித் தண்ணீரே அங்கு செல்லவில்லை ஆதலால் குறுவைப் பயிரிலே 23,500 லட்சம் எக்கர் பயிராக வேண்டியதில் 8,85 லட்சம் எக்கர்தான் பயிராகி இருக்கிறது. சம்பா பயிரும் பாதிகூட பயிரா வில்லை. அங்கே உள்ள குளங்கள் எல்லாம் வறண்டு அங்குள்ள விவசா மக்கள் வேலையின்றி தவிக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். இராமநா புரம் மாவட்டத்திலே ஆர். எஸ். மங்கலத்தில் உள்ள பெரிய குளங்களி தான் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் இய பாகவே தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற பகுதி. அங்கே ஆர். எ மங்கலத்தில் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. மற்ற குளங்கள் எல்லா வறண்டே இருக்கின்றன. மதுரை மாவட்டத்திலே வைகை அணையிலே தேனி பள்ளத்தாக்கு பகுதிகளிலேதான் கொஞ்சம் தண்ணீர் இருக்கிற கொஞ்சம் பயிர் இருக்கிறதே தவிர, மற்ற இடங்களில் எல்லாம் தண்ண இல்லை. பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 9 லட்சம் விவசாய கூலிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று மதிப்பீடு செய்து மாவட் வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இந்த விஷயங்கள் எல்லாம் விவாதிக்கப்பட்ட அதைத் தான் சொல்கிறேன். இது பத்திரிகைச் செய்தி மட்டுமல்ல. இ ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்ட 'டிரௌட்' பற்றி கடந்த கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டதைத்தான் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல திருநெல்வேலி மாவ டத்திலே 32 தாலுக்காக்கள் முழுதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அங்கே சுமார் 2 லட்சம் எக்கர்கள் தண்ணீர் இன்றி பயிர் வாடிவி நிலைமை இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகு மாவட்டத்தில், மொத்தத்திலே 75 ஆயிரம் எக்கர்தான் பாசன நிலம். அதி 40 சதவிகிதம்தான் விளையும் என்ற நிலையும் 60 சதவிகித நிலம் தண்ணீ இன்றி தொலைந்துவிட்டது என்ற நிலையும் இருப்பதை நாம் அறிகிறோம் இவைகள் எல்லாம் ஜனவரி மாதம் 10 தேதிக்குமேல் மாவட்ட கலெக்ட அவர்கள், அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய பொதுமக்களுடைய பிரதி கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களையெல்லாம் அழைத்து, டிசம்ப 31ஆம் தேதி வரையுள்ள நிலையைக் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி றோம் என்று அவர்களால் தகவல் சொல்லப்பட்டு விவாதிக்கப்பட்ட விஷய

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 20 ஆம் தேதி இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. அரசுக்கு அனுப்பிய அறிக்கையினுடைய சுருக்கத்தைத்தான் அங்கே தந்தார்கள். அதைப்பற்றி நாங்கள் விவாதித்தபோது "டிசம்பர் 31 ஆம் தேதியன்று இந்த நிலை இருந்தது என்பதை அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்" என்பதை அவர்கள் தெரிவித்தார்கள். 20 நாட்கள் கழித்து அது 5 மடங்கு அதிகமாகிவிட்டது. 5 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் அழிந்துவிடும் என்று இருந்த நிலைமை மாறி, 20 ஆம் தேதி பரிசீலனை செய்யும்போது 25 ஆயிரம் எக்கர் நிலத்தில் பயிர் அழிந்துவிடும் என்ற நிலைக்கு வந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் எதற்காக இதை விரிவாகச் சொல்கிறேன் என்றால், டிசம்பரில் எப்படி இருந்தது, 31ஆம் தேதி எப்படி இருந்தது என்று ரிப்போர்ட் அறிக்கை வாங்கி, அதற்குப் பிறகு இப்போது எப்படி இருக்கிறது என்று இன்னொரு அறிக்கை வாங்கி, அதற்குப் பிறகு இன்னும் எப்படி இருக்கிறது என்று பெரிய பெரிய அதிகாரிகளை அனுப்பி எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்ட பிறகு முழு அறிக்கையை டெல்லிக்கு அனுப்புவது என்றால், எப்போது நமக்கு வறட்சி நிவாரணத்தைச் செய்துகொள்ள முடியும்? அக்டோபர் மாதம் மழையில்லை என்று தெரிந்த உடனே, இந்த போகம் பயிர் இல்லை என்று தெரிந்துவிடும். இனிமேல் மழை பெய்வது இராது என்று சொல்லிய உடனே நவம்பரிலேயே இந்த வேலையை ஆரம்பித்திருக்க வேண்டாமா? இந்தப் பிரச்சினையைப் பற்றி வேண்டியதைச் செய்ய வேண்டும். குளங்கள் காய்ந்துவிடும் என்று தெரிந்த பிறகு, மத்திய அரசுக்கு மாநில அரசு சொல்வதற்குச் செயல்பட்டிருக்க வேண்டாமா? மாவட்டங்களில் மழை அளவு குறைந்து, கிணற்றில் தண்ணீர் இல்லை என்று இருக்கும்போது, அதற்கேற்ப செயல்பட்டிருக்கவேண்டாமா? கன்னியாகுமரியில் 46 சதவிகிதம் மழைதான். வட ஆற்காடு மாவட்டத்தில் 39 சதவிகிதம் மழை. சென்னையிலே 37 சதவிகிதம் மழை. இனி மேல் மழை பெய்யாது என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு பெய்ய வேண்டுமோ அதைவிடக் குறைவாக ஆகியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை நவம்பரிலேயே ஏற்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய ரிப்போர்ட் வந்த பிறகு, அதைப்பற்றி மத்திய அரசிடம் கேட்டுக்கொள்வது என்று இருப்பது முறையா என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வறட்சி நிலை எப்படி இருக்கிறது? குடிநீர் பிரச்சினை தீர இன்னும் 6 மாதங்கள் ஆகும். ஜூலையில் தான் மழை பெய்யும். ஆனால் உணவுப் பிரச்சினை இன்னும் 11 மாதம் இருக்கும். அதாவது அதிலிருந்து 5 மாதங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும். மழை பெய்த பின் பயிராகி விளைய வேண்டும். அதற்குப் பிறகு பெறுகின்ற அளவுக்கு ஏதாவது வழிவகை செய்திருக்கிறோமா

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 பிப்ரவரி 8

என்றால், இல்லை. உண்மையிலேயே நம்முடைய மாநிலத்திலே உள்ள அனை
வருக்குமே அச்சம் வருகின்ற நிலை இருக்கின்றது. இந்த நிலையிலேதான்
மத்திய அரசிலேயிருந்து உணவு கேட்டிருக்கிறோம். மாதந்தோறும் 70
ஆயிரம் டன் உணவு தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம் என்று சொல்லப்
படுகிறது. அதற்கு என்ன பதில் அவர்களிடமிருந்து வந்தது என்பதைப்
பற்றி நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன முயற்சி எடுத்
திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. 70 ஆயிரம் டன் அரிசி முறை
யாக வரும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். வரவேண்டுமென்று நாங்
களும் விரும்புகிறோம். அனுப்ப வேண்டுமென்ற அவர்கள் உணர்வோடு
நாங்களும் சேர்ந்து கேட்டுக் கொள்கிறோம். ஆனால் இந்த அளவுக்கு
நெருக்கடியான கட்டத்தில் நாம் எதிர்பார்த்துவிட்டு, ஏமாந்துவிடுகின்
சூழ்நிலை வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நாம் எச்சரிக்கையா
இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்
போது உண்மையிலேயே அரிசி கையிருப்பு இருக்கிறது. அதைக்கொண்டு
இன்னும் ஒரு மாதம் சமாளிக்கலாம் என்று சொல்லக்கூட, நடைமுறையில்
ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன கையிருப்பு இருக்கிறது? அரிசி கடை
யிலே கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? திருச்சியிலே ஒரு கிலோ
அரிசி ரூ. 4.20க்கு விற்கிறது. அதேசமயத்தில் பொது விநியோகத்தில்
ரூ. 2.80க்குக் கிடைக்கிறது. என்றாலும் ரூபாய் ஆயிரம் சம்பளம் வாங்கு
கின்றவர்களுக்கு இது கிடையாது என்ற நிலை இருக்கிறது. அவர்கள் வெளி
யில்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். திருச்சியில் 4.20 ரூபாய் என்றா
கன்னியாகுமரியில் ரூ. 5.20க்கு விற்கிறது. ஒரு கிலோ திருநெல்வேலியில் ரூ.
என்று சொல்கிறார்கள். சேலத்தில் ஒரு கிலோ ரூ. 5 என்று இருக்கிறத
இன்றைய எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே மார்க்கெட் நிலவரங்கள் எல்லா
போட்டிருக்கிறார்கள். திருச்சியில் ஒரு கிலோ அரிசி ரூபாய் 4.2
விலையாக இருக்கிறது. அதே சமயம் திருச்சிக்குப் பக்கத்திலேயும் தெ
ஆற்காட்டுக்கு அருகிலேயும் இருக்கக்கூடிய பகுதிகளில்—அது வைரிசெட்டி
பாளையம் என்ற ஊரில்—கிலோ அரிசி ரூ. 5.20-க்கு விற்கிறது. அடுத்த மாவ
ட்டத்திற்கு எல்லையோரமாக உள்ள கிராமம் வைரிசெட்டிப்பாளையம். ஆதலா

1983 பிப்ரவரி 8] [திரு. ம. சங்கரலிங்கம்]

விலையுயர்ந்து இருக்கிறது. சேலத்திலும் அதற்குப் பக்கத்தில் உள்ள
பகுதிகளிலும் ஒரு கிலோ அரிசி ரூ. 5-க்கு விற்கிறது. இவ்வளவு ரூபாய்
கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.
இதிலிருந்து நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பது தெரிகிறது. ரூ. 2,000
சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு ரேஷன் அரிசி இல்லை. அவர்கள் அரிசி
கிடைக்காதபோது, எங்கே போவார்கள்? அவர்களுக்கு, வேண்டுமென்றால்
ரேஷனில் முதல்தர அரிசியைக் கொடுக்கலாம். 3-ம் ரகத்தை சாதாரண மக்க
ளுக்குக் கொடுக்கலாம். அரிசி இல்லை என்றால், அவர்கள் எங்கே போய்
வாங்க முடியும்? அவர்கள் விலை கொடுத்துப் பெறுவதற்காவது வழி செய்ய
வேண்டும். நான் வங்காளத்தில் ஏற்பட்ட நிலைபற்றிச் சொல்ல விரும்ப
வில்லை. அங்கே அரிசி இல்லாததால் என்ன தொல்லைகள் ஏற்பட்டிருக்
கின்றன என்பது தெரியும். அரிசி நமது மாநிலத்திலும் விநியோகத்திற்கு
ஒரு மாதத்திற்குத்தான் கையிருப்பு இருக்கிறது. தஞ்சையில் 30 சதம்தான்
நெல் விளைந்திருக்கிறது. திருச்சியிலே 30 சதம்தான் விளைந்திருக்கிறது.
மொத்தத்தில் 20 சதம்தான் இருக்கிறது. ஐந்து மாதத்திற்குப் பிறகு,
ஜூலைக்குப் பிறகு என்ன செய்வது? பத்து அல்லது 11 மாதங்களுக்கு
மாதத்திற்கு 70 ஆயிரம் டன் அரிசி பெற வேண்டும், மத்திய அரசிடமிருந்து
வருவதற்கு ஒரு முறையை வகுத்துச் செய்ய வேண்டுமென்ற நிலைமையில்
இருக்கிறோம். மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
என்ன செய்ய இருக்கிறார்கள்? ... இருந்தால் ... வராது.
இங்குள்ள உணவு அமைச்சர் அவர்கள், டெல்லிக்குப் போய் வாங்கிக்கொண்டு
தான் திரும்ப வருவேன்' என்று போக வேண்டும்.

(முற்பகல் 10.50)

டெல்லியிலே இருந்து உணவை வாங்காமல் ... மாட்டேன் என்று ... பூலி
வேண்டும். நாமும் போகலாம். அந்த அளவிற்கு ... தொகுப்பிலிருந்து கேட்க
பிருந்து பெற்றாக வேண்டும். ஆனால் மத்திய தொகுப்புக்குக் கொடுக்க
நியாயம் அதிகமாக இல்லை. காரணம், நாம் மத்திய தொகுப்புக்குக் கொடுக்க
வில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது 1974-வரை
நாம் மத்திய தொகுப்பிற்குக் கொடுத்தோம். 1974-ல் வறட்சி நிலை
இருந்தது. அப்போது 57 லட்சம் டன் அரிசி நமக்கு இரண்டாம் பருவத்
திற்குத் தேவை. விளைவு 55 லட்சம் டன்தான். அப்போதும் மத்தியத்
தொகுப்புக்கு 50,000 டன் அரிசி கொடுத்தோம். மற்ற மாநிலங்களுக்கு 50,000
டன் அரிசி கொடுத்தோம். 1973-ல் மத்தியத் தொகுப்புக்கு 1,11,435 டன்
அரிசி கொடுத்தோம். இரு தாப்பு உதவித் திட்டத்தில் மேற்கு வங்கம்
கேரளா உட்பட 6 மாநிலங்களுக்கு 34,000 டன் அரிசி கொடுத்தோம். நமக்கு

பற்றாக்குறை இருக்கிறபோதுகூட மத்தியத் தொகுப்பிற்குக் கொடுத்தோ பிறகு அவர்களிடமிருந்து வாங்கும் நிலையை தி.மு.க. அரசு உருவா யிருந்தது. தாய்லாந்திலிருந்து மத்திய அரசு அனுமதி பெற்று இறக்கு செய்தோம். இந்த நடவடிக்கைகளை இப்போதும் எடுக்க வேண்டும். மத்தியத் தொகுப்புக்குக் கொடுக்கவில்லை என்பதை மனதிலே வைத் கொண்டு மத்திய அரசு தராமல் இருந்தால், அவர்கள் இந்தியாவின் தேசி திற்குச் செய்யும் துரோகம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இ அரசு மத்தியத் தொகுப்பு தேவையில்லை என்று கருதியிருக்கலாம். வின மத்தியத் தொகுப்பு வைக்க வேண்டுமா என்று இந்த அரசு உண கொள்கையில் எண்ணியிருக்கலாம். மத்தியத் தொகுப்புக்குக் கொடுக்கா பெரிய தவறு என்று நான் சொல்லவில்லை. அப்போது கொடுத்து வந்தோ இந்த அரசு புதிய முறையை அமைத்துக்கொண்டு, மத்திய தொகுப்புக் கொடுக்கத் தேவையில்லை என்று சொன்னார்களே தவிர, மத்திய அரசுக் விரோதமாகச் செய்ததாக நான் கருதவில்லை. அவர்கள் இதை மனதி வைத்துக்கொண்டு பேரம் பேசும் ஒரு நிலையில் தமிழக மக்களின் உயிரோடு தமிழக மக்களின் உணர்வோடும், தமிழகத்தின் வளர்ச்சியோடும் அவர்க விளையாடக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தி நாட்டின் ஒரு பகுதி பஞ்சத்தால் வாடினாலும், பிற பகுதிகள் அதற்காக துடிக்க வேண்டுமென்ற நிலை இந்தியத் துணைக் கண்டத்தில் வர வேண் மென்றால், 'தமிழகத்திற்கு எந்த அளவிற்கு அரிசி தேவையோ அதை கொடுக்கத் தயாராக இருக்கிறோம், குழு பரிசீலித்த பிறகு, அதைக் கொடு கிறோ'மென்று சொல்ல மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது. அவர்க அப்படிச் சொல்ல வேண்டுமென்று, மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசு உணவுக் கொள்கையில் ஒரு நிலையான கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இப்போது 'அட்ஹாக்' முறையில்தான் உணவுக்கொள்கை வைத்திருக்கிறோம். அந்தந்த ஆண்டுக்கு ஒரு தற்காலிகக் கொள்கையைப் பின்பற்றுகிறோம். அப்படி இல்லாமல் நிரந்தரக் கொள்கையைக் கொள்ள வேண்டும். இயற்கை பொய்த்துவிட்டால், நாம் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும், மத்தி யோடு சேர்ந்து, அந்த முறையைப் பின்பற்றுவது தவறு அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சாதாரண மக்களுக்கு இரண்டு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. உணவுப் பிரச்சினை, குடி நீர் பிரச்சினை. குடிநீர் பிரச்சினை அப்படி, இப்படியல்ல. கிராமங்களிலே குளங்களிலே குருளி குடிக்க தண்ணீர் இல்லை. பயிர்களைக் காப்பாற்ற, தோண்டித் தோண்டி இறைத்துவிட்டார்கள். பிப்ரவரி மாதத்தில் பயிர்கள் அறுவடையானாலும் ஏப்ரல் வரை தண்ணீர் இருக்கும். குளிக்கலாம். அந்த அளவிற்கு இருக்கும். இப்போது. பிப்ரவரி மாதத்திலேயே ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை. எல்லாப் பகுதிகளிலும் தண்ணீர் இல்லாமல் இருந்தபோது. கிணற்றில் தண்ணீர் வற்றிவிடுகிறது. இன்னும் 5, 6 மாதங்களுக்கு கிராமங்களிலும், சென்னையிலும் குடிநீர் பிரச்சினை சாதாரணமானதல்ல. 'போர்' போட்டு தண்ணீர் தர, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தயாராக இருந்தாலும், தண்ணீர் உள்ள இடத்தில் போட்டால்தான் பயன் ஏற்படும். ஆகவே ஆற்றுப் படுகையிலே பெரிய பெரிய ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டி, எல்லாப் பகுதிகளுக்கும் அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஒரு மாஸ்டர் பிளானை, 5 மாதங்களுக்கு தேவையானதை, இன்னும் 5 நாட்களில் அமுல்படுத்த வேண்டிய நிலையில் இந்த அரசு இருக்கிறது.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், ஓபன் மார்க்கெட்டில் 1982-ல் அரிசி முதல் ரகம் ஒரு கிலோ ரூ. 3.30; இப்போது ரூ. 5.40. அரிசி இரண்டாவது ரகம் ரூ. 3.00, இப்போது ரூ. 4.90. அரிசி மூன்றாவது ரகம் ரூபாய் 2.80, இப்போது ரூ. 4.20. பருப்பு, 1982-லே ரூ. 6, இப்போது ரூபாய் 7.30. உளுந்து 1982-லே ரூ. 3.60, இப்போது ரூ. 4.80. தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ 1982-லே ரூ. 13.50, இப்போது ரூ. 13.70. நல்லெண்ணெய் 1982-ல் ரூ. 14.30, இப்போது ரூ. 16.30. கடலெண்ணெய் 1982-ல் ரூ. 14.20, இப்போது ரூ. 15.40. விறகு 1982-ல் 0.40, இப்போது ரூ. 0.75. சாதாரண மக்களுக்கு இன்றியமையாதவை இவை. ஆடம்பரப் பொருள்களைப்பற்றி நான் சொல்லவில்லை. இன்றியமையாத உணவிலே இந்த அளவிற்கு விலைவாசி ஏற்றம் இருக்கிறது. உணவு இல்லாத நிலைமை, குடிநீர் இல்லாத நிலைமையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில், நாம் எப்படி அந்தத் துயரில் பங்கு கொண்டு, அவர்களுடைய துயரைத் துடைக்கத் துணிந்திருக்கிறோமென்பதை நாங்கள் அறியக் கடமைப்பட்டிருக்கிறோம். அறிவதோடு அல்ல, அரசு செய்கிற ஒவ்வொரு முயற்சிக்கும் துணையாக நின்று, மக்களுடைய துயரைக் களைய நாங்கள் தயாராக இருக்கிறோம். சென்னையிலே குடிநீர் பிரச்சினை லே அரசு என்னவெல்லாமோ செய்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது எம்.எல்.ஏ. விடுதியில்கூட உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. கார்ப்பரேஷன் தண்ணீர் கொஞ்சம் வருகிறது. அதனுடன் அங்கேயுள்ள கிணற்றுத் தண்ணீரைச் சேர்த்து விடுகிறார்கள். எல்லாமே உப்புத் தண்ணீ

ராகி விடுகிறது. சிலர், அதைச் சாப்பிட்டால் ஸ்டோன் பார்ம் ஆகுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக, மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் நல்ல தண்ணீர் வரும் நிலையை ஏற்பாடு செய்தால், பாவமில்லை என்று நினைக்கிறேன். சென்னைப் பெருநகரில் எப்படி நாம் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறோம்? இப்போது வறட்சியால் பிரச்சினை வந்துள்ளது. எப்படி நிரந்தரமாகத் தீர்க்கப் போகிறோமென்பதைப் பார்க்க வேண்டும். இப்படியே பேசிப் பேசி, எத்தனை ஆண்டுகளுக்கு குடிநீர் திட்டத்தை மாற்றிக் கொண்டிருப்பது? இப்போதும் சொல்கிறோம், கிருஷ்ணா நீர் வர ஏற்பாடு செய்கிறோமென்று. ஆந்திர மாநிலத்தில் புதிய பொறுப்புக்கு வந்துள்ள முதலமைச்சரின் கீழுள்ள நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். 15 டி.எம்.சி. 3 மாநிலங்களும் சேர்ந்து கொடுப்பதில், 5 டி.எம்.சி.-யைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதுபற்றி பேச்சு முடிந்து, பண ஒதுக்கீடு செய்து, அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு வருகிறபோது மாநில உணர்வுகள் எப்படி இருக்குமென்பது தெரியாது. பிற மாநிலங்களில் உள்ள தண்ணீரை நம்பி நாம் இருந்தால், நமக்கு எந்த நிலை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். * * *
தலைவரவர்கள் மூலமாக, பத்திரிகைகளிலும் இந்தக் குறிப்பு வர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * * பேசிய பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். அதுபற்றிய எந்தச் செய்தியையும் எந்த இதழும் வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இது முக்கிய பிரச்சினை. நம்முடைய உணர்வுகளை நாம் சொல்லாமல் இருக்க முடியாது என்பதால் சொல்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. க. இராமமூர்த்தி: எந்தப் பேச்சும் "It is he propetry ofthe House" தான். அதிலே ஒன்றும் தவறான செய்திகள் இல்லை. இரண்டாவது சொல்லியிருக்கும் விவரங்களிலே அந்தப் பேச்சுவார்த்தை இரண்டு மாநில

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

களுக்கிடையே இருக்கும் [illegible] சீர்கேடு அடையச் செய்யும் நிலைமையில் இல்லை. [illegible] உணர்வுகளை, கண்ணியத்தோடு நாசூக்காகத்தான் சொல்லியிருக்கிறோம். அதைத் தெரிந்துகொள்வது நல்லதுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒரு சின்ன ஐயப்பாட்டுக்கு வழி வகுத்தாலும், அதை ஏன் வெளியிட வேண்டும்?

திரு. ம. சங்கரலிங்கம்: அவர்களுடைய உணர்வுதான் எனக்கும். நான் [illegible] சொன்னேன். நேற்று மாண்புமிகு [illegible] சொன்னார். அது முடியும் வரை நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் [illegible] வெற்றிகரமாக முடியவேண்டும் வெளியிட வேண்டாம். நான் அந்த [illegible] வெளியிடப்பட்டதால், அது என்று நினைப்பதால், அவர்களுடைய செய்தி [illegible] இந்தச் செய்தி நமக்கு எவ்வளவு [illegible] அதைப்போல [illegible] என்பதால்தான் நான் அவை அவர்களுக்குத் [illegible] என்று சொல்லுகளை வாபஸ் பெறுகிறேன். [illegible] நீக்க வேண்டும் [illegible] இடையூறு இருக்கிறது. [illegible] இன்றேன். பிற மாநிலங்களை நாம் நம்புவதிலே [illegible] சொல்லவில்லை. ஆனால் அந்த இப்போது கிருஷ்ணா நதி நீர் வராது என்று [illegible] நம்ப வேண்டும். [illegible] நம்பாமல் நமக்கு இருக்கும் [illegible] திட்டத்தை [illegible] அண்ணா அவர்கள் 1968-லே வீராணம் திட்டத்தை [illegible] என்று நிர்ணயம் செய்தார்கள். அதற்கு என்று 20 கோடி ரூபாய் செலவு என்று [illegible] வைத்தார்கள். பிறகு [illegible] தார்கள். அவர்களே அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 66 இஞ்ச் டையா சுமார் 14 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப்பட்டது. [illegible] மீட்டர் பைப்கள் 11 ஆயிரம் செய்யப்பட்டன. அதை [illegible] தப்பு இருந்தது என்று சொல்லி, அப்போது இருந்த தமிழக அரசைக் கலைப்ப தற்கு மத்திய அரசு இதை ஒரு காரணமாகச் சொல்லி அதிலே குறை கண்டு பிடித்து கலைத்து, பின்னர் அது சர்க்காரியா கமிஷனுக்குப் போய், அதிலேயும் ஒன்றுமில்லை என்று வந்து, பின்னர் ஒரு நிபுணர் குழுவை அமைத்து, வீராணத் திட்டம் [illegible] சாத்தியமா என்று அதனுடைய அறிக்கை கேட்டு, அதுவும் வந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே அது உண்மையிலேயே சாத்தியமானது, [illegible] என்று சொல்லப்பட்டிருந்தால், அதைச் செய்ய வேண்டும். வீராணம் திட்டத்தை இந்த அரசு கைவிடவில்லை. அதைக் கைவிட்டது மத்திய அரசுதான். இந்தத் திட்டம் அண்ணா அவர்கள் கொண்டுவந்த திட்டம். தமிழக மக்களுக்கு அதிலேயும் குறிப்பாக சென்னை பெருநகர் மக்களுக்கு இருக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை அது தீர்க்கும் என்று அவர்கள் நம்பினார்கள். ஆகவே, எந்தவிதமான உணர்வையும் [illegible] பின்னால் இணைக்காமல் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

என்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் அந்த
உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு ஆராய்ந்ததில் சென்னை நகருக்கு
வந்திருக்கும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே திட்டம் இதுதான்.
மற்ற எல்லாத் திட்டங்களும் வெற்றி காணுமா என்பது ஐயப்பாடாகவேதான்
இருக்கிறது. நீங்களும் இதை நல்ல முறையில் சிந்தித்து நல்ல முடிவு எடுக்க
வேண்டும். இந்தக் குடிநீர் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை.
மிகவும் சிக்கலான நிலைமையில் தமிழகத்திலே நம்மை ஆட்டிப் படைக்கும்
ஒன்றாக இப்பிரச்சினை இருக்கிறது. இவ்வளவு பெரிய தண்ணீர்ப் பஞ்சம்
நமக்கு ஏற்பட்டதற்கு ஒரு காரணம் காவிரியிலே உள்ள தண்ணீரை நமக்கு
ஒழுங்காகத் தராததுதான். தேவையான அளவுக்கு நமக்கு வரவேண்டிய
தண்ணீரைத் தந்திருந்தால், 2 மாவட்டங்களிலேயும் நல்ல விளைச்சல் இருந்
திருக்கும். சுமார் 30 லட்சம் ஏக்கர்களிலே நெல் விளைந்திருக்கும். மற்ற
மாவட்டங்களிலே பெரிய பாதிப்பு வந்தால்கூட, ஓரளவுக்குப் பற்றாக்குறை
ஏற்பட்டு 2 மாத காலத்திற்குத்தான் தேவையான உணவை நாம் மத்திய அரசிட
மிருந்து வாங்க வேண்டிய நிலைமை வந்திருக்கும். இதுபோல 6 மாத காலம்
வாங்க வேண்டிய நிலைமை வந்திருக்காது. ஆகவே, அவ்வளவு முக்கியமான
தாக இருக்கும் இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையிலே தீர்வு காண தேவையான
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்வ
கட்சிக் கூட்டத்தை பல முறை கூட்டியாகிவிட்டது. இன்னும் கூட்டுவதாகச்
சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், சர்வ கட்சிக் கூட்
டத்திலே மிகத் தெளிவாக 'இந்த அரசின் எல்லா நடவடிக்கைகளுக்கும்
நாங்கள் துணையாக பின்னால் இருக்கிறோம்' என்று சொல்லியாகிவிட்டது.
இனிமேல் செயல்பட வேண்டியது, செய்ய வேண்டியதைச் செய்வது இந்த
அரசுதான். மீண்டும் மீண்டும் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி எங்களை
மீண்டும் மீண்டும் அதையே பேச வைக்க வேண்டாம். 1924-ம் ஆண்டு ஒப்பந்தம்
பற்றி மீண்டும் வற்புறுத்த வேண்டும். அவர்களே யூனிலேட்டராக முடிவெடுக்க
அதிகாரம் இல்லை. நாம் இரண்டு பேரும் சேர்ந்து தேவையான மாற்றங்களை
தேவைக்கேற்ப செய்ய வேண்டும். நம்முடைய ரைப்பேரியன் ரைட்ஸை நாம்
பாதுகாக்க வேண்டும். நாம் தொடர்ந்து 2,000 வருட காலமாகப்
பயன்படுத்தி வந்த உரிமை நமக்கு இருக்கிறது. அந்த நினைப்போடு என்ன
நிலைமைகளைக் கையாள்வது என்று பார்த்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அந்த வகையில் கையாளும்போது, அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு
நாங்கள் துணையாக இருக்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.
ஆகவே, மீண்டும் மீண்டும் கூட்ட வேண்டாம் என்பதைச் சொல்லிக்கொள்
கிறேன். அரசு நிபுணர்களைக் கலந்து ஒரு முடிவுக்கு வந்து, ஒன்று இப்போது
கர்நாடக அரசு கட்டிக்கொண்டு இருக்கும் அணைத் திட்டங்களை தடுத்து

நிறுத்த ட்ரிபூனலுக்குச் செல்ல வேண்டும் அல்லது சுப்ரீம் கோர்ட்டுக்குப்
போய் அவர்களிடம் நீதி கேட்டு தண்ணீரை ரிலீஸ் பண்ண ஆர்டர் வாங்க
வேண்டும். மேலும் அவர்கள் கட்டிக்கொண்டிருக்கும் அணைகளை தொடர்ந்து
கட்டக்கூடாது என்று 'ஸ்டே ஆர்டர்' வாங்க வேண்டும் என்றும் நான்
சொல்லிக்கொள்கிறேன். ஒவ்வொரு மாநில அரசும் அந்தந்த மாநில
மக்களின் உணர்வுகளை மதித்துத்தான் செயல்பட வேண்டும். அப்படித்தான்
செயல்பட முடியும். கோலத்திலே நடிலே போகும் தண்ணீரை நமக்குத்
தரவேண்டும் என்று நாம் கேட்கிறோம். அங்கே அவர்களுக்கும் கூட அதிக
அளவில் உபயோகம் இல்லாமல் அங்கேயும் தண்ணீர் கடலிலேதான் போய்
விழுகிறது. ஆனால் அங்கே இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள்? மேதகு
கவர்னர் அவர்களின் உரையிலே பல திட்டங்களைப்பற்றிச் சொல்லியிருக்கி
றார்கள். அதில் தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.
அது முடியும் தருவாயில் இருக்கிறது. இரண்டு, மூன்று வருடங்களாக அந்தத்
திட்டம் செயல்படுத்தப்பட்டு, எல்லா மாவட்டங்களிலும், மாநிலத்திலே உள்ள
378 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமல்லாமல் அனைத்து கிராமங்களிலும்
செயல்படுத்தப்பட்டிருக்கிறது. Food for work—உணவுக்கு வேலை என்ற
திட்டமும், தன்னிறைவுத் திட்டமும் இணைந்து பல திட்டங்கள் செயல்
படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: இது உணவுக்கு வேலையல்ல, வேலைக்கு உணவு.

திரு. ம. சங்கரலிங்கம்: வேலைக்கு உணவு அல்ல. உணவுக்கு வேலை
தான். அந்த நிலைமையிலே இந்தத் திட்டங்களையெல்லாம் மாவட்டவாரி
யாகப் பரிசீலிக்க ஒரு ஆய்வுக் குழு அனுப்பி, எவ்வளவு தூரம் நாம் அதிலே
வெற்றி பெற்றிருக்கிறோம், நாம் செலவழித்த பணம் எப்படி போய்ச் சேர்ந்
திருக்கிறது என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குக்
காரணம் என்னவென்றால், நாம் பணத்தை ஒதுக்குகிறோம், திட்டங்களைச்
செயல்படுத்துகிறோம். அப்படி திட்டங்களைச் செயல்படுத்துகின்றபோது.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இப்போது ஒன்றிய அளவிலே
எங்கேயும் இல்லை. அதிகாரிகளை நம்பியே நாம் செயல்படுத்துகிறோம்.
அதிகாரிகள் எப்படி செயல்பட்டிருக்கிறார்கள் என்றால், 'ஒரு சொட்டுத்
தண்ணீர்கூட கொடுக்கமாட்டோம்' என்று சொல்கிறார்கள். அப்படிச் சொன்
னால்தான், அவர்கள் அரசியல் நடத்த முடியும். அரசியலில் அந்தச்
சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமை எல்லா இடங்களிலும் ஏற்பட்டு
விட்டது. திரு. குண்டுராவாக இருந்தாலும், திரு. ஹெக்டே அவர்களாக
இருந்தாலும், அவர்களாகவே மனமுவந்து தரமாட்டார்கள். இந்த நிலைமை

யிலேதான் இருப்பார்கள். தமிழ் மக்களுடைய ஒருமித்த நோக்க நட்சி மனப்பான்மைக்கு அப்பாற்பட்டு காவிரி ஆற்று நீரைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல முடிவு அடுத்த ஆண்டுக்குள்ளாகக் கண்டு, அதுவரையிலும் 1924 ஆம் ஆண்டு கிடைத்த அளவுக்கு, அந்த ஒப்பந்தப்படி தண்ணீரை இங்கே கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாநில மக்களுடைய ஒருமித்த கருத்தும் இதற்கு ஆதாரமாக இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்திலே ஒரு சர்வாதிகாரியைப்போல தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் இந்த மாநில முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமான இதுபோன்ற பிரச்சினைகளில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளித்திருப்பதைப்போல, இப்போது ஏற்பட்டிருக்கும் வறட்சி, அது சம்பந்தமான உணவு நிலைமை போன்ற நிலைமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினையில் மக்களுக்குத் தேவையான அளவுக்கு உதவவும் இந்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் துணை நிற்கத் தயார் என்று நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய செயல் நாம் எதிர்பார்த்த பலனை அளித்திருக்கிறதா என்பதைப் பார்த்து மதிப்பிட்டு மதிப்பிட்டு நம்பிக்கையோடு சொல்லக்கூட ஊராட்சி ஒன்றியங்களும், மன்றங்களும் இல்லை. அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. பாட்டு அமைப்பாகிய சட்ட மன்ற இரு அவைகளும் ஆகவே, தேர்ந்தெடுக்கப் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்கள் இருந்திருந்தால், அவர்கள் அதைக் கண்காணிக்க அந்தப் பணியைச் செய்திருப்பார்கள். இப்போது நமக்கு ஒரு தார்மீகக் கடமையிருக்கிறது. ஏனென்றால் மாநிலத்திலுடைய நிதியிலிருந்தும், மத்திய அரசினுடைய வேலைக்கு உணவு என்ற நிலையில் இருந்தும் நிதியைப் பெற்று எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பியிருக்கிறோம். அப்படி அனுப்பப்பட்ட . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது உணவுக்கு வேலைதான்.

திரு. ம. சங்கரலிங்கம்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்தான் கொஞ்சம் குழப்பத்தை உண்டாக்கினார்கள். அந்தத் திட்டம் மத்திய அரசு கொண்டுவந்த திட்டம். உணவைக் கொடுத்து, அந்த உணவுக்கு வேலை என்பது. உணவு சும்மா கொடுக்கக்கூடாது என்பதால் தான் வேலைக்காக உணவு அல்ல. அவர்களுக்கு உணவு கொடுப்பதுதான் முக்கிய நோக்கம். உணவு சும்மா கொடுத்தாலும், வாங்கினாலும் தப்பு. 'ஈ' என்று இரத்தல் இழிவு 'தா' என்று கேட்டாலே இழப்பு. இழிவு என்று சொல்வது தமிழ் நாகரிகம். ஆகவே, அப்படி இருக்கக்கூடாது என்ற அடி விலேதான் உணவுக்கு வேலை கொடுக்கிறோம்.

(முற்பகல் 11—10)

நமது ஊரில் பலர் பச்சைக்கு வருகிறபோது ஒரு பாட்டைப் பாடித்தான் பிச்சை கேட்கிறார்கள். பாட்டுக்குத்தான் உணவை வாங்குகிறோம் என்று நினைக்கிறார்கள். காரணம் அவர்களே கூட பிச்சை எடுப்பதைத் தவறு என்றுதான் நினைக்கிறார்கள். ரூ. 10,000 கொடுத்து பாட்டுக் கச்சேரி வைப்பதை விட நான் [redacted]

திரு. ஜி. சுவாமிநாதன்: உணவுக்காக வேலை என்று சொல்லுகிறபோது, நீ வேலை செய்கிறாய், ஆகவே நான் உணவு தருகிறேன் என்று பொருளாகும். ஆனால் வேலைக்காக உணவு என்று சொல்லும்போது, 'மரியாதையோடு நீ வேலை செய்வதால் நான் உனக்கு உணவு அளிக்கிறேன்' என்று பொருள்படும். அப்படிச் சொல்வதுதான் கண்ணியமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: "ஃபுட் ஃபார் ஓர்க்" என்று சொல்லும்போது வேலைக்குக் கூலி பணம். எனவே வேலைக்கு உணவு என்பதுதான் சரியாக மொழிபெயர்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வேலைக்கு உணவு என்பதற்கும் வேலைக்காக உணவு என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வேலைக்கு உணவு உழைப்பு. எனவே வேலைக்காக உணவு என்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதைப்போலவே உணவுக்காக வேலை என்பதும் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இரண்டிலும் நோக்கம் என்னவோ "உணவு" தான்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு உறுப்பினரின் கருத்தையும் மற்றவர்களின் கருத்தையும் பிறகு ஒரு விவாதமாக எடுத்துக் கொள்ளலாம் . . . .

திரு. க. இராமமூர்த்தி: இதற்கான மொழி பெயர்ப்பைக் குறித்து அமைச்சரவைக்குள்ளேயே பிளவு இருப்பதாகத் தெரிகிறது. எனவே இதில் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கற்பனை இதில் வேண்டாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஆக இப்படி இரண்டு திட்டங்களுக்குமா மொத்தம் ரூ. 150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆனா இவைகள் எந்த அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை கண்காணிக்க வேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம் பல இடங் களில் ஓரே வேலை இரண்டு முறைகள் குறிப்பிட்டிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியா குமரி மாவட்டத்தின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடந்து முடிந்த வேலை களின் பட்டியல் மாவட்ட வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடந்து முடிந்த வேலை களின் பட்டியல் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்தின்போது எங்களுக்குத் தரப்பட்டது. அதில் தோவாளை ஒன்றியத்தின் இணைப்புச் சாலைகள் என்ற தலைப்பில் மொத்தம் ரூ. 1,79,733 செலவழிக்கப்பட்டிருக் கிறது. அதில் 30 தலைப்புகளின் கீழ் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 11வது தலைப்பின் காட்டுப்புதாரிலிருந்து தோவாளை செல்லும் சாலையை மேம் பாடு செய்தல் 1 கிலோ மீட்டர். 1.10 கிலோ மீட்டர். ரூ. 21,802 செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதே பட்டியல் 18வது தலைப்பின் பூதபாண்டியிலிருந்து காட்டுப்புதார் சாலையை மேம்பாடு செய்தல். 80 கிலோ மீட்டர் ரூ. 34,815 செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சாலைகளும் ஒன்றுதான். காட்டுப் புதாரிலிருந்து பூதப்பாண்டிக்கு வந்து பூதப்பாண்டியிலிருந்து செல்ல வேண்டும். எனவே 11வது தலைப்பின் காட்டுப்புதாரிலிருந்து தோவாளை இணைப்புச் சாலை 1.00 கி. மீ., 1.10 கி. மீட்டர் என்று சொல்லப்பட்டு மீண்டும் 18வது தலைப்பில் 80 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைக்கு ரூ. 34,000 சொச்சம் செலவு செய்கிறார்கள். இப்படி இரண்டு பட்டமாகக் கூட செலவு செய்திருக்கலாம். அல்லது இரண்டு ஒன்றாகக்கூட இருக்கலாம். இதைப்பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர் அதிகாரிகளை அனுப்பி அங்குள்ள பிரதிநிதிகளுக்குத் தெரியப் படுத்தி இந்தத் திட்டங்களுக்காக உண்மையிலேயே எவ்வளவு செலவு செய்யப் பட்டிருக்கிறது, எவ்வளவு உண்மையாகச் செலவழித்திருக்கிறது என்பதை யெல்லாம் பார்க்க வேண்டும். காரணம் இனி நகர பஞ்சாயத்துகளுக்கும் இத்திட்டத்தை அரசு விரிவுபடுத்தப் போகிறது என்றும், அதற்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. எனவே இப்படிப்பட்ட ஆய்வு செய்த பிறகுதான், இந்தத் தொகையைச் செலவழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது, அதன் சிறப்புகள் என்ன, அதன் சீரிய நிலைமைகள் என்ன என்பதெல்லாம ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் உண்மையிலேயே உயர்ந்த திட்டம்தான் என்பதில் இரண்டுவிதமான கருத்துக் கள் இருக்க முடியாது. அப்படி அதற்கு ஒரு மாற்றுக் கருத்து இருப்பதாக யாராவது நினைத்துக்கொண்டாலும் தவறு. அந்தத் திட்டத்தைக் குறித்து நாங்கள் ஏதேனும் சொல்லுகிறோம் என்றால், அவையெல்லாம் அந்தத் திட்டம் இன்னும் சிறப்பாக வெற்றி பெற வேண்டும் என்ற அடிப்படையில் தான் சொல்லப்படுகின்றன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

திட்டத்தைத்தான் ஒருவர் உருவாக்க முடியும். அதை அமுல்படுத்தும் போது, எல்லாத் தரப்பினரின் ஆலோசனைகளையும் சேர்த்து அமுல்படுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அப்போதுதான் அதில் என்னென்ன குறைபாடு கள் வருகின்றன, அவைகளை எப்படியெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியும். அதைத்தான் கழிந்த ஓராண்டுக் காலமாக இந்த மன்றத்திலும் சரி, இந்த மன்றத்திற்கு வெளியிலும் சரி, பலர் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு இன்றையதினம் ஆசிரியர்களை அந்தப் பணியிலிருந்து விடுவித்து, அந்தப் பணியைக் கவனிப் பதற்காக தனியான பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டுகிறேன்.

பொறுப்பாளர்களை நியமிக்கும் நிலையில் முதலில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சில கைடுலைன்ஸ் கொடுக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்களே இன்னின்ன முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். விதவைகளுக்கு முன்னுரிமை தர வேண்டும். இந்த வேண்டும் வேலையில்லாத பெண்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் அடிப்படையில் அந்தப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டது. அதற்குக் கொஞ்ச காலதாமதம் ஆனது. உடனே அதற்கான காரணம் என்ன என்ற வினா எழுந்தது. கால தாமதம் ஆனாலே வினா எழுவது சகஜம். முதல் லிஸ்ட் போயிருக்கிறது என்றார்கள். அப் படியானால் இன்னும் எத்தனை லிஸ்ட் போகும் என்று கேட்க ஆரம்பித்தார் கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 5,000 பேருக்கான லிஸ்ட் போயிருக்கிறது, அது அங்கீகரிக்கப்பட்டு வரும் என்று சொன்னார்கள் [illegible] அந்த முறையை ஏற்காமல், அரசாங்கத்திலிருந்து மாவட்ட ஆட்சித் [illegible] தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டன. அதாவது விண்ணப் [illegible]கள் அனைவரின் லிஸ்டையும் இங்கே அனுப்பு என்றார்கள். எல்லா

விண்ணப்பங்களும் இங்கே வந்து [illegible]. இதை யார் சொன்னார்கள் என்றால் அதைப் பின்னால் சொல்கிறேன்—அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்களை அழைத்து வைத்து "அந்த விண்ணப்பங்களைப் பார்த்து பொறுக்கி யார் யார் நம்முடைய ஆட்கள் என்று பார்த்துச் சொல்லுங்கள். காரணம் இந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்றால், நமக்கு நம்பிக்கையானவர்களைத்தான் இந்தப் பணிக்குப் போட வேண்டும்" என்று சொன்னார்களாம். அப்படிப் பொறுக்கி எடுத்துப் போடப்பட்டதாகத் தான் எங்களுக்குச் சொன்னார்கள். சொன்னவர்களே ஆளும் கட்சியைச் சார்ந்த எம். எல். ஏக்கள்தான். நாங்களே போய் லிஸ்டைப் பார்த்து செலக்ட் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறோம். எல்லா லிஸ்டும் அங்கே வந்திருக்கிறது என்று சொன்னார்கள். இப்படிச் சொல்வதென்றால் நிர்வாகத்தில் ஆளும் கட்சியின் தலையீடு ஏற்படுகிற நிலை உருவாகிவிட்டது என்று பொருள். அப்படிப்பட்ட நிலை உருவாகியிருந்தால், அது தவறு. விதிமுறைகளின்படியே கூட தேர்வு நடத்தியிருக்கலாம், அது வேறு விஷயம். ரூ.150 சம்பளக்காரர்களாக யார் வந்தாலும், குழந்தைகளுக்குப் பொங்கிப் போடத்தான் போகிறார்கள். எம்.எல்.ஏ. எடுத்த ஆளானாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்த ஆளானாலும் சரி, மாணவர்களுக்குப் பொங்கிப் போடத்தான் போகிறார்கள். ஆனால் தேர்வு முறைகளில் இப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்யக்கூடாது, தலையீட்டை அனுமதிப்பது கூடாது என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்டத்திலும் அதற்கு இடம் தரக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களெல்லாம் இப்போது பொறுப்பேற்றிருக்கிறார்கள். அதில் எல்லோரும் ஒத்துழைத்தால், அத் திட்டம் வெற்றிபெற உதவியாக இருக்கும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில், சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்துவதன் காரணமாக புதிதாக 2.63 லட்சம் சிறுவர்கள் அதிகமாக வகுப்புகளுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 50 சதவீதம் உண்மை இருக்கிறது. முழுவதும் உண்மையில்லை. சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இல்லாதபோதே இந்த அளவுக்கு இல்லை என்றாலும் இதில் பாதியளவுக்காவது மாணவர்கள் சேர்க்கை இருந்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டுக்கான கல்விக் கொள்கைக் குறிப்பில் பக்கம் 7ஐ எடுத்துப் பார்த்தால் அதில் "மாணவர் சேர்க்கை" என்ற தலைப்பின்கீழ் வயது 1 முதல் 5 க்குரிய வயதுத் தொகுதியில் [illegible] சதவீதம் மாணவர்கள் வகுப்புக்குக் கொண்டு

வரப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பக்கம் 8, 9, 10 ஆகியவைகளில் [illegible] உணவுத் திட்டத்தைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லி 20.25 லட்சம் மாணவர்கள் நண்பகல் உணவு சாப்பிடுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு 4 லட்சம் மாணவர்களுக்கு உணவு அளிக்கிற நிலையில் தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கை மாவட்டங்களில் மைய சமையற்கூடங்கள் செயல்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1980-81ஐ எடுத்துக் கொண்டால்கூட 94.6 சதவீத மாணவர்கள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்று பக்கம் 9-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போலவே 1978-79ல் 1.93 லட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சத்துணவுத் திட்டம் அமுலில் இல்லாதபோது இந்த நிலை. 1979-80ல் 1.2 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே ஒவ்வொரு ஆண்டும் 1½ லட்சம் மாணவர்களுக்குக் குறையாமல் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது 1980-81ல் 1½ லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று விவரம் தொடர்ச்சியாகத் தரப்பட்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளுக்கான கல்விக் கொள்கைக் குறிப்பைப் பார்த்தால், இந்த விவரங்கள் நன்கு விளங்கும். எனவே இன்றையதினம் சத்துணவுத் திட்டம் செயல்படுத்துவதன் காரணமாக மேலும் ஒரு லட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தமாகும். மொத்தம் 2.3 லட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டாலும் கூட, இந்தத் திட்டத்தினாலேயே இவ்வளவு மாணவர்களும் சேரவில்லை. ஏறக்குறைய ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1½ லட்சம் மாணவர்கள் சேர்ந்து கொண்டே இருந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக இப்போது மேலும் 1 லட்சம் பேர் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள். இது ஒரு வரவேற்கத் தக்க அம்சம்தான். இதற்காக நான் பாராட்டக்கூட கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சத்துணவை நல்ல முறையில் தரத்தோடு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய சிலர் இதைப்பற்றிய ஆராய்ச்சியை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். "இது இவர்கள் கொண்டு வந்த திட்டமா, அவர்கள் கொண்டு வந்த திட்டமா? நண்பகல் உணவுத் திட்டம் முதலில் எங்கே கொண்டு வரப்பட்டது", என்றெல்லாம் பேசினார்கள். நண்பகல் உணவுத் திட்டம் முதலில் கொண்டுவரப்பட்டபோது 23,000 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. 3 மாவட்டங்களில் மைய சமையற்கூடங்கள் இருந்தன. அது 5 [illegible] மேற்பட்ட மாணவர்களுக்குத்தான் தரப்பட்டது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

இரண்டு வயதில் உள்ள குழந்தைகளுக்கு உணவு கொடுத்த பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களையே சாரும். இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள கல்விக் கூடங்களுக்கு போகாத மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளித்த பெருமை முதலமைச்சர் அவர்களையே சாரும். அது அவரது கடமையும்கூட. பெருமை அவரையே சாரும், ஆனால் அது அவருடைய கடமை. ஏனென்றால், இந்த ஆட்சியிலேதான் மதுவிலக்கை தாராளமாகத் தளர்த்தி விட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு கூட மதுவிலக்கைத் தளர்த்திய காலம் உண்டு. அப்போது இன்று இருப்பதைப் போல் அவ்வளவு கடைகள் இல்லை. இது எல்லோருக்கும் தெரியும். இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு லைசென்ஸ் எடுத்தவர் ஐந்தாறு கடைகளை, பஸ் ஸ்டாண்ட், இரயில்வே நிலையம் போன்ற இடங்களில் கூட வைத்துக் கொள்ளலாம். அப்போது அப்படி இல்லை. விதியிலே அப்படி சொல்லப்படவில்லை. அரசாணை எண் 532, நாள் 21—7—1982-ன்படி சாலையில் இருந்து 150 அடி தள்ளியிருக்க வேண்டும். பள்ளி, மருத்துவமனை, தொழுகிற இடங்கள் ஆகியவற்றுக்கு அரை பர்லாங் தள்ளியிருக்க வேண்டுமென்று விதித்திருக்கிறது. எங்கேயாவது இந்த விதி பின்பற்றப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. இதை ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. எங்கே போனாலும் பார்க்கலாம். இப்படி மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை மக்கள்தான் இதற்குப் பலியாகியிருக்கிறார்கள். பணக்காரன் என்றைக்கும் குடித்துக் கொண்டிருந்தவன். இங்கு இல்லையென்றால், பாண்டிச்சேரிக்குப் போவான், கேரளத்திற்குப் போவான். கோயம்புத்தூரிலிருந்து கேரளா போய் குடித்துக் கொண்டிருந்தவன் பெங்களூருக்குப் போவான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கிடைக்கிற இடங்களையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஆனால் ஏழைகள் அவ்வளவு தொலைவு சென்று குடிக்க மாட்டார்கள். வீட்டுக்குப் பக்கத்திலே இருந்தால் குடிப்பார்கள். இல்லையென்றால் கள்ளச் சாராயத்தைக் குடிப்பார்கள். கடைகளைத் திறந்து வைத்த காரணத்தாலே, அவர்கள் தாராளமாகக் குடிக்க பழக்கப்பட்டு விட்டார்கள். பகல் முழுவதும் வேலை செய்தாலும் அதில் வரும் கூலியை வீட்டிற்குக் கொண்டு போகாமல் போதையோடு வந்து வீட்டில்

உள்ள குழந்தைகளையும் தொல்லைப்படுத்துகிற சூழ்நிலையால் அனாதையாகி விட்ட இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உணவு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் கடமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்ததற்காகப் பாராட்டுகிறேன். என்னுடைய வேண்டுகோள் மூன்று நேரமும் கொடுக்க வேண்டும் என்பதுதான். ஒரு வேளை கொடுத்தால் போதாது. இரண்டு வேளையாவது கொடுக்கலாம். அவர்கள் பள்ளியை விட்டுப் போகும்போது, ஒரு முட்டையையும், ஒரு ரொட்டித் துண்டையும் கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கடமை பாண்டிச்சேரியில் உள்ளவர்களுக்கு இல்லையா?

திரு. ம. சங்கரலிங்கம் : கட்டாயம் உண்டு. செய்யாமல் இருப்பது தப்புதான். தப்பு யார் செய்தாலும், அதைச் சொல்லுவதிலே கஷ்டமில்லை. இந்த நிலையில் சத்துணவுத் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழில் வளர்ச்சியைப் பற்றி தொழில் துறை அமைச்சர் அவர்கள் வினா நேரத்தில் பட்டியல் போட்டுத் தந்தார்கள். அதிலே சுமார் 300 தொழில்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தொழிற்சாலைகள் நல்ல முறையில் செயல்படும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிலாளர்களுடைய கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்து ரப்பர் தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று 1977-ல் விண்ணப்பம் கொடுத்தோம். அப்போது அரசே அந்தத் தொழிற்சாலையை அமைக்க முயற்சி எடுக்கிறது என்று அரசு சார்பிலே சொல்லப்பட்டது. 1979 ஆம் ஆண்டிலே, "அந்த முயற்சியை நிறுத்தி விட்டோம், நீங்களே ஆரம்பிக்கலாம்" என்று அரசு சார்பிலே சொல்லி விட்டார்கள். ஆனால் 1983 வரையில் ஆரம்பிக்கவில்லை. இதற்காக இட ஒதுக்கீடு தருவதற்கு முடியாத நிலை ஏற்பட்டதால், அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை சுட்டிக்காட்டி, கல்குளம் தாலுக்காவில் உள்ள ஒரு இடத்தை ஒதுக்க வேண்டும் என்று ரப்பர் உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை அரசு ஒப்புக்கொண்டது. ஆனால் அந்த இடத்தை ஆக்கிரமித்திருப்பவர்கள் இங்கே தலைமைச் செயலகத்திலே தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்திலே அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அந்த ஸ்டேவை வெகேட் செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். ஆனால் இன்று வரை வெகேட் செய்யப்படவில்லை. மாநிலத்திலிருந்து மனுக்களை அனுப் ... கன்னியாகுமரி ... டில்லியிலிருந்து வரவில்லை என்று சொல்லுகிறோம்,

யில் இருந்து இங்கே அனுப்பினாலே வரவில்லை என்றால், டில்லியிலும்
அப்படித்தான் இருக்கும். ஆகவே இலாக்காவில் உள்ள "லெத்தர்ஜி"
"ஸ்லோ வொர்க்" நிலையை மாற்ற முயற்சி செய்ய வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்

நாங்குனேரி தாலுக்கா தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக
அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே தொழிலை ஆரம்பித்தால், 15 சதவீதம்
'காபிடல் சப்சிடி' கொடுக்கிறோம். இப்போது இராதாபுரத்தை நாங்கு
நேரியிலிருந்து பிரித்திருக்கிறோம். இராதாபுரம் நாங்குநேரியைவிட வறட்சி
யானது, பின்தங்கியது. நாங்குநேரி தாலுக்காவிற்கு பின்தங்கிய தாலுக்கா
என்று பெயர் வந்ததே இராதாபுரத்தை வைத்துத்தான். இப்போது இராதா
புரம் தனி தாலுக்காவாக ஆகியிருக்கிறது. இரண்டும் ஒன்றாக இருக்கும்
போது, வள்ளியூரில் பிரேமா இண்டஸ்டிரீஸ் என்ற தொழிற்சாலைக்கு அரசு
கூட 18,300 ரூபாய் சப்சிடி சாங்ஷன் பண்ணி உத்தரவு பிறப்பித்தது. இராதா
புரம் தனியாகப் பிரிந்து போனபோது வள்ளியூர் அதிலே அகப்பட்டுக்
கொண்டது. ஆகவே அந்தத் தொழிற்சாலைக்கு சப்சிடி கிடையாது என்று
அரசு ஆணையிட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இன்று வரை அந்தத்
தொழில் அதிபர் அந்த சப்சிடியை வாங்க முடியவில்லை. இப்படி மாநில
அரசு தொழிலதிபருக்கு எப்படி உதவி செய்கிறதோ அதைப் போலத்தான்
மத்திய அரசு இந்த மாநில அரசுக்கு உதவி செய்கிறது என்று சொன்னால்,
தவறு அல்ல. இப்படிச் செய்தால், யார் தொழிலை ஆரம்பிப்பார்கள்? புத்தி
சாலிகள் யாரும் தொழிலை ஆரம்பிக்க மாட்டார்கள். தன்னுடைய
பணத்தையும் போட்டு, தொழிலாளர்கள் தொல்லையையும் மற்ற தொல்லையை
யும் சமாளிப்பதைவிட சும்மா இருக்கலாம் என்று விட்டுவிடுவார்கள். ஆகவே
தொழில் வளத்தைப் பெருக்குவதோடு வேலை வாய்ப்பை உருவாக்கவும் உதவி
செய்ய வேண்டும். அந்த நிலையை நம் மாநிலத்திலே முதலிலே உருவாக்கி
விட்டு நம்மை மாதிரி மத்திய அரசும் நடக்க வேண்டும் என்று அவர்களை
வற்புறுத்தக்கூடிய அளவில் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சிமெண்டைப் பற்றி மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கேள்வி
நேரத்தின்போது பதில் சொன்னார்கள். தமிழகத்திலுள்ள சிமெண்ட்
பற்றாக்குறைக்கு எல்லையே இல்லை. கொஞ்ச நாளைக்கு முன்பு, ஏசிசி
1982 முடிந்தால் சிமெண்ட் வந்துவிடும் என்று சொன்னார்கள். இப்போது
அது முடிந்த பிறகும் சிமெண்ட் கிடைக்காததால், தொழிலாளர்கள் அவதிப்
...ழியர்கள் வீடு கட்டக்கடன் வாங்கி விட்டு வீ...

கட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். சிமெண்ட் பற்றாக்
குறை இருந்தாலும், 120 ரூபாய் கொடுத்தால் சிமெண்ட் கிடைக்கிறது என்றால்
எப்படி? ஓர் இடத்திலே சிமெண்ட் இல்லாமல் இருந்தால் எங்குமே இல்லாமல்
இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் 120 ரூபாய்க்கு விற்பவர்கள் யார்
என்று கண்டுபிடித்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமே அதைச் செய்ய
முடியாது. அரசு சிமெண்ட் வெளிச் சந்தையில் என்ன விலையில் விற்கப்
படுகிறது? அதைக் கட்டுப்படுத்த அதிகாரம் இல்லை. மாண்புமிகு தொழில்
அமைச்சர் அவர்கள் காலையில் வினாவிற்குப் பதில் அளிக்கும்போது
சொன்னதைக் கேட்டேன். கட்டுப்பாட்டு விலையில் 30 ரூபாய்க்கும், அது
போக உள்ள மீதியை வெளிச் சந்தையில் விற்கிறார்கள் என்றும் சொனனார்
கள். அதை 62 ரூபாய்க்கு மேல் விற்கக் கூடாது என்று விதி வகுக்கப்
பட்டது. 62 ரூபாய்க்கு மேல் வாங்காதீர்கள் என்று விளம்பரமும் செய்யப்
பட்டது. ஆனால் இப்போது மனம் போல் விற்கிறார்கள். அதைக் கட்டுப்
படுத்த முடியாது என்ற நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். அரசு சிமெண்டை
யாவது வெளிச் சந்தையில் முறை வைத்துக் கொடுக்க வேண்டும். சிமெண்ட்
விநியோக முறையை தாராளமாக்கி வசதியுள்ளவர்களின் நெருக்கடியைத்
தீர்க்க கண்ட்ரோல் மார்க்கெட் (ஓப்பன் மார்க்கெட்) வெளிச் சந்தை முறை
யைக் கொண்டு வந்தது. இப்போது கண்ட்ரோல் மார்க்கெட், ஓப்பன்
மார்க்கெட் எல்லாம் ஒரே மார்க்கெட்டாக இருக்கிறது. மீண்டும் முழு அளவை
யும் கண்ட்ரோல் முறையில் கொண்டு வந்து எல்லோருக்கும் முறையாக
சிமெண்ட் கிடைக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய சட்டம், ஒழுங்குப் பிரச்சினையை
சமாளிப்பதில் மக்கள் எல்லோரும் விரும்புகிற நிலையில், பாதுகாப்பு அளிக்கிற
நிலையில், காழ்ப்பு உணர்வு அற்று காவல் துறையினர் செயல்பட வேண்டும்
என்று எல்லோரும் சேர்ந்து கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பொறுப்
பேற்றுள்ள அரசு அதைச் செயல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த
நிலையிலே பாகுபாடற்ற நிலைமை எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது என்று
கட்சி சார்பற்றவர்களிடமிருந்து வர வேண்டும். நாங்கள் சொன்னால் எதிர்க்
கட்சியில் இருந்து சொல்லுகிறோம் என்றும், அவர்கள் சொன்னால் ஆளும்
கட்சியில் இருந்து சொல்லுகிறோம் என்றும் சொல்லுவார்கள். நம் இரண்டு
பேரையும் தவிர கட்சி சார்பற்ற 60 சதவீதம் மக்கள் என்ன சொல்லுகிறார்
கள் என்று அறிய வாக்கெடுப்பு எடுக்க இந்த அரசு முன்வர வேண்டும்.
ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே ஏதாவது
ஓர் இடத்திலே பெட்டியை வைத்து அதிலே ஒவ்வொருவரும் தன்னுடைய
பெயர், விலாசம் போன்றவற்றை எழுதிப் போட வேண்டும்.

(முற்பகல் 11-30)

போலீஸ் இலாகா நல்ல முறையில் நேர்மையாக ஊழலற்ற நிலையில், பட்ச பாதமில்லாமல் செயல்படுகிறதா என்ற வினாவைக் கொடுத்து, கட்சி சார்பற்ற வர்கள் ஓட்டு போட்டுப் பார்க்க வேண்டும். கட்சி உறுப்பினர்கள் ஓட்டு போடக்கூடாது என்று வைத்து நிலைமையை அறிய வேண்டும். சங்கரலிங்கம் பேசினார், மற்ற கட்சியினர் பேசினார் என்று சொல்லாமல், பொதுமக்க ளுடைய கருத்தை அறிய வேண்டும். பொதுமக்கள் என்ன கேட்கிறார்கள் என்று அறிய முனைய வேண்டும். காரணம் காவல் துறை முறையாகச் செயல்பட வேண்டும். முறையாக பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

நாம் இப்போது பல வளர்ச்சிப் பணிகளையும் வறட்சிப் பணிகளையும் செய்து கொண்டிருந்தாலும், பயிர்கள் அழிந்து விடும் என்று சொல்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. பல இடங்களிலிருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. நானும் ஒரு மணி நேரத்திற்குள்ளே பேசி முடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக முடித்துக் கொள்கிறேன். இன்னும் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

நான் காவல் துறையிலே ஏற்படுகின்ற நிலையை மாத்திரம் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட காவல் துறை முறையாக செயல்பட வேண்டும். அவர்களுடைய சம்பளம் இன்றைய விலைவாசிக்கு ஏற்ப இருக்க வேண்டும். அதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்போது கொஞ்சம் செய்து கொடுத்திருக்கிறார்கள். போலீசாருக்கு இப்போ தெல்லாம் ஒரு பிக்சட் டி. ஏ. என்று கொடுக்கிறார்கள். ஒரு இன்ஸ்பெக்ட ருக்கு ரூபாய் 250. ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ரூபாய் 175, ஒரு எட் கான்ஸ்டேபிளுக்கு ரூபாய் 120, ஒரு கான்ஸ்டேபிளுக்கு ரூபாய் 100 என்று கொடுக்கிறார்கள். இது தவிர பஸ் வாரண்ட் கொடுக்கிறார்கள். மதுரை யிலே ஒரு களவு போய்விட்டால், அந்தக் கள்வன் மெட்ராஸ் வந்துவிட்டால், அந்த போலீஸ்காரர் மதுரையிலிருந்து மெட்ராஸ் வந்து இங்குள்ள போலீஸ் உதவியோடு தேடிப்பிடித்து கைது செய்து கொண்டு போவார்கள். விசாரித்து கொண்டு போவார்கள். சேலத்திலே யானைத் தந்தத்தை எடுத்துக்கொண்டு கர்நாடகத்திற்குப் போய் விட்டால், அவனைத் தேடிக்கொண்டு அங்கு போக வேண்டும். சிலர் பிற மாநிலங்களுக்கே போய் விடுவார்கள். கன்னியாகுமரி யிலே ஒரு ரப்பர் தோட்டத்திலே களவு செய்துவிட்டு கேரளாவிலே போய் இருந்து கொண்டிருப்பான். அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க காவல் துறை யில் போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்லாம் போகிறார் கள். அவர்களுக்கெல்லாம் பஸ் வாரண்ட் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இப்போது 3 மாதத்திற்கு முன் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். பஸ் வாரண்டுக்கு உச்சவரம்பு விதித்திருக்கிறார்கள். உச்சவரம்பினை மிஞ்சினால் பிக்சட் டி.எ.யைக் குறைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதி இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய சம்பளம் குறைந்து விடுகிறது. ரூபாய் 250-க்கு மேல், சில நேரத்தில் அதிகமாகச் செலவாகிவிட்டால், அவர்கள் சம்பளம் குறைந்து விடும் நிலைமைகள் இருக்கின்றன. மாவட்டங்களிலே அப்படி இருக் கின்றது. காவல் துறையில் சப்-இன்ஸ்பெக்டரை எடுத்துக்கொண்டால், எந்தக் காவல்காரர் நன்கு செயல்படுகின்றவர் என்பது அவர்களுக்குத் தெரியும். சொல் வதை திறம்படச் செய்பவர் யார் என்பது தெரியும். அரசியலை வைத்துக் கொண்டு, அவர்களை மிரட்டிக் கொண்டிருக்கக்கூடிய கான்ஸ்டேபிள் யார் என்பது தெரியும். அவர்கள் நாம் பிரித்து வைத்துக்கொண்டு செயல்படு கின்றார்கள். களவுக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு செயல்படுபவர்கள் யார் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களை இன்ஸ்பெக் டர்கள் அங்கு அனுப்ப மாட்டார்கள். சம்மனைக் கொடுத்துவிட்டு வாச் சொன்னால்கூட, அங்கே போய் படுத்துறங்கிவிட்டு, 3 நாட்களாகப் பார்த் தேன், அங்கே அவர்கள் இல்லை என்று சொல்லி விடுவார்கள். எப்படியாவது 'சார்ஜ்' பண்ணிவிட்டு வருகின்றவர்களும் அவர்களுக்குத் தெரியும். அவர் களையே அவர்கள் திரும்பத் திரும்ப போகச் சொன்னால், அவர்கள் வேறு யாரையாவது அனுப்புங்கள் என்று சொல்வார்கள். அவர்களுக்கு இந்த பஸ் வாரண்ட்டு குறைந்து விட்டது. திறம்படச் செயல்படும் கான்ஸ்டேபிள் போக மாட்டார். வேறு யாரையாவது அனுப்புங்கள் என்கிறார். மற்றவர் கள் போனால் அவர்களோடு பங்கு போட்டுக் கொள்வான் என்றால், அப்படிப் போட்டுக் கொண்டால் நமக்கு என்ன என்று சொல்லி விடுகின்றான். அப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அப்படி நிலைமைகள் உருவாகியிருக் கின்றன. இப்போது இருக்கின்ற செயல்பாடே போதாது என்ற நிலையில், இந்த உத்தரவினால் இன்னும் கொஞ்சம் செயலற்ற நிலை உருவாகிக் கொண் டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே பழைய முறை யிலே பஸ் வாரண்ட்டும் பிக்சட் டி.ஏ.-வும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, தமிழகத்தின் உறுதியான நிலையினை கட்சி சார்பற்ற எல்லா மக்களுடைய ஒருமித்த உணர்வை, கொள்கையை ஆளுநர் அவர்கள் மொழிக் கொள்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். இது தமிழகத்தினுடைய கட்சிப் பிரச்சினையல்ல. தமிழ் இனத்தினுடைய பிரச்சினை. தமிழ் மொழிதான் ஆட்சி மொழி. இரு மொழிக் கொள்கை நம்முடைய ஒரே மொழிக் கொள்கை. அதுதான் நம்முடைய நிலை. இணைப்பு மொழி இருக்க வேண்டும் என்று இந்திய துணைக் கண்டத்தின் பிற

பகுதிகளிலே எல்லாம் விரும்பினால், எல்லோருக்கும் பொதுவாக ஒரே
விதமாக பளு அல்லது பாரம் அளிக்கிற நிலையில் ஆங்கிலத்தினை அவர்கள்
ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு
என்று சொல்கின்றபோது, அவர்களிடத்திலே ஆங்கிலத்தைத் திணிப்பதற்கு
உங்களுக்கு என்ன உரிமை என்று கேட்டதன் காரணமாகத்தான், நாம்
எல்லோரும் பாரத்தை ஏற்றுக்கொண்டு தாய்மொழியைப் படிப்பது நம்முடைய
கடமையாகவும் ஆங்கிலத்தைப் படிப்பதை ஒரு பாரமாகவும் ஏற்றுக்கொள்
கிறோம்; நீங்கள் வேண்டுமானால் இந்தியை எடுத்துக் கொள்ளுங்கள்
என்றோம். ஆகவே இரு மொழிக் கொள்கை என்று சொல்கின்றபோது,
இணைப்பு மொழி ஆங்கிலமும் இந்தியும் இருக்கிறது. அவர்கள் இந்தியை
இணைப்பு மொழியாக வைத்துக் கொள்ளட்டும். இணைப்பு மொழியாக,
மத்திய அரசோடு தொடர்பு கொள்கின்ற மொழியாக பிற மாநிலங்களுடன்
தொடர்பு கொள்கின்ற மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளு
கிறோம். மத்திய அரசினுடைய பல துறைகளில் இந்தியைத் திணிப்பது
என்பதை கட்சி சார்பற்ற முறையில் எந்த மனிதனும் ஒப்புக் கொள்ள
முடியாது. அது இந்த மாநிலத்தினுடைய தேசிய பிரச்சினை. தமிழ்
இனத்தினுடைய தேசிய பிரச்சினை. அந்த நிலையில் உறுதியான கொள்கை
யைக் குறிப்பிட்டு ஆளுநர் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அதற்கு
நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதை எல்லோரும் ஒருமுகமாக
அமுல் நடத்த வேண்டும். உண்மையிலேயே தேசியம் வேண்டுமென்று நினைக்
கின்ற நாம், வேண்டுமென்று நினைப்பதன் காரணமாகத்தான், ஆங்கிலத்தை
ஏற்றுக்கொண்டோம். தமிழ்தான் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்
என்றுகூட சொல்லலாம். 14 தேசிய மொழிகளையும் இணைப்பு மொழி
யாக நாம் உயர்த்த வேண்டுமென்று சொல்லலாம். அதிலே நிர்வாகச் சிக்கல்
கள் நிரம்ப வருகின்றன. ஆகவே இந்தியாவினுடைய துணைக் கண்டத்திலே
இந்தி மொழியைப் பேசுகின்ற 4 மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு
மொழியே இணைப்பு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அமையும்போது,
பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாம் இரண்டு மொழி பளு
வருகிறது. நாமும் அதை ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் ஆங்கிலத்தை
ஏற்றுக்கொள்வதானால், அவர்களுக்கும் நம்மைப்போல் சம பளு இருக்கும்.
உலகெங்கும் பரவி வருகின்ற அறிவு வளர்ச்சியிலே உலகத்தோடு தொடர்பு
கொள்வதற்கு ஆங்கிலம் நமக்கு வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறோம்.
அது அவர்களுடைய பிரச்சினை. அவர்கள் பிரச்சினையிலே நாம் தலையிட
வேண்டியதில்லை.. பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்றத்திலே
தெரிவித்தார்கள். அன்றைய பிரதமரும் இன்றைய பிரதமரும் அதை

ஒத்துக் கொண்டார்கள். அந்தக் கொள்கையினின்று அவர்கள் தவறுவார்
களானால், தமிழகத்தில் இந்தியைப் புகுத்துவதற்கு முயல்வார்களானால்,
தேசியத்திற்கு ஊறு விளைவிப்பவர்கள் அவர்களேயாகும். தமிழ்
நாட்டைச் சேர்ந்தவர்கள் அப்படி யாரும் இருக்க மாட்டார்கள். இந்தியாவின்
தேசியத்தை வளர்க்க வேண்டுமென்று நினைக்கின்ற நமக்கு அவர்கள்
தேசியத்தை வளர்க்க வேண்டுமென்று நினைக்கின்ற நமக்கு அவர்கள் எதிராக
இடையூறாக அமையக்கூடாது. நமது இரு மொழிக் கொள்கைக்கு எதிராக ஊறு விளை
இருப்பார்கள் என்றால், அவர்கள்தான் இந்திய தேசியத்திற்கு ஊறு விளை
வித்தவர்கள் ஆவார்கள். அப்படி அவர்கள் வெறி கொள்ளாமல் இருந்தால்
நல்லது. அப்படி வெறி கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். இங்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்
கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத்
தலைவர் அவர்களே, இந்த மேலவையில் ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற
தீர்மானத்தின் மீது 31 உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 939
நிமிடங்கள் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். இதில் எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் பேசிய நேரம் சேர்க்கப்படவில்லை என்று கருதுகிறேன். ஆனால்
ஏறத்தாழ 60 நிமிடங்களில் இந்தப் பேச்சுக்களுக்கெல்லாம் பதில் அளிக்க
வேண்டுமென்ற நிலையிலே நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பலர் பல கருத்துக்களை வெளி
யிட்டிருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் நான் விரிவாக பதில் சொல்லிக்
கொண்டிருக்க முடியுமா என்பதைப்பற்றி யோசிக்குமாறு மாண்புமிகு
மேலவைத் தலைவர் அவர்கள் மூலம் சொல்லிக்கொள்கிறேன். உறுப்பினர்
கருத்தைச் சொல்லி அவர்கள் தெரிந்துகொள்ள நான் முயற்சிக்கவில்லை என்று கருது
வெளியிட்ட உள்ளங்களுக்குத் திருப்தியளிக்கும் முறையில் என் கருத்தைச்
சொல்லி அவர்கள் தெரிந்துகொள்ள நான் முயற்சிக்கவில்லை என்று கருது
வார்கள் என்று சொல்லவில்லை, நான் கோடிட்டுக் காண்பித்தால்கூட, உறுப்
பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால், அந்த முறையில்
எல்லோருக்கும் குறிப்பிட்டு நான் பதில் சொல்லவில்லை என்ற எண்ணத்தைக்
கொள்ளாமல், பொதுவாக இங்கே பேசப்பட்ட கருத்துக்களுக்கு நான் பதில்
சொன்னேன் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முதலிலேயே
கேட்டுக்கொள்கிறேன்.

முதலிலே நான் இந்த மேலவை உறுப்பினர்களுக்கு பெரிதும் நன்றி கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக குற்றம் கூறியவர்கள்கூட, கண்ணிய
மான முறையிலே தமிழிலே, ஆங்கிலத்திலே சிறப்பாக, தெளிவாக, எந்தவிதமான உள்
நோக்கமும் இன்றி வெளியிட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக்
கண்டு, அறிந்ததில் பெருமைப்படுகிறேன். என்பதை எடுத்துச் சொல்ல

விரும்புகிறேன். எங்கே தொடங்குவது, எங்கே முடிப்பது என்பதிலேதான்
நான் நிச்சயப்படுத்திக்கொள்ளாமலே, பூர்வ பீடிகை' என்பார்களே. அ
போல அங்கேயே நின்று கொண்டிருக்கிறேன். ஏனென்றால் ஒவ்வொரு
பிரச்சினையிலும் ஏதாவது முக்கியமான நாட்டுப் பிரச்சினையை உள்ளடக்
யிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

நண்பர் திரு. மாணிக்கம் அவர்களுடைய கருத்தை எடுத்துக் கொண்டாலும்
அதேபோன்று திரு. நல்லசிவன் அவர்களுடைய பேச்சிலிருந்து கருத்து
களை எடுத்துக் கொண்டாலும், ஆசிரியப் பெருமக்களுடைய பிரதிநி
களுடைய பேச்சிலிருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டாலும், பொ
வாக படித்தவர்களுடைய பிரதிநிதிகளுடைய பேச்சிலிருந்து கருத்துக்களை
எடுத்துக் கொண்டாலும், கட்சி சார்புள்ளவர்கள் பேச்சிலிருந்து கருத்து
களை எடுத்துக் கொண்டாலும், இந்த நாட்டுக்குத் தேவையான ஏதாவது
ஒன்றை இணைத்துத்தான் பேசியிருக்கிறார்களே தவிர, ஆட்சியிலே உள்ள
எங்களைக் குறை கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு நின்றுவிடாமல்
நாட்டுக்குப் பயனளிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்
என்பதைச் சுட்டிக்காட்ட கடமையிருப்பதால், அதற்குப் பதில் சொல்லாமல்
இடவும் முடியவில்லை, பதில் சொல்லிக் கொண்டிருக்க நேரமும் இல்லை என்ற
நெருக்கடியில் இருக்கிறேன். ஆனால் மின்சாரத்தைப் பற்றியெல்லாம் பதில்
சொல்லியிருப்பதால், நான் அந்தப் பிரச்சினைக்குள் போகாமல் விட்டு வி
கிறேன். இங்கே குறிப்பாகச் சொல்லப்பட்ட தண்ணீர்ப் பஞ்சம், கு
தண்ணீர் பஞ்சம், உணவுப் பற்றாக்குறை, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை
தொழில் ஆகியவற்றைப் பற்றியதாகும்.

நாட்டிலே தொழில் அமைதியிருந்தால் வேலை வாய்ப்பு அதிகமாகு
மென்பதும், பலர், தொழில்களைத் துவங்க விரும்புகிறவர்கள் துணிவாக முன்
வந்து இங்கே அந்தப் பணியை மேற்கொள்ளுவார்கள் என்பதற்கு நல்ல அடிப்
படையான காரணம் என்பதையும் எடுத்துக் கூறி விவாதித்திருக்கிறார்கள்.
தொழிலைப்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.
நாங்கள் ஏறத்தாழ 115 தனி நபர்களுக்கு பரிந்துரை செய்திருக்கிறோம்.
அதேபோல் அரசனுடைய நிறுவனம் என்ற வகையில் தொழில்கள் இங்கே
அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இன்று
கேட்டு பல நாட்கள் ஆகிவிட்டன, பல மாதங்கள் ஆகிவிட்டன. எந்தவிதமான
நியாயமான பதிலும் நம்பிக்கை ஊட்டத்தக்க வகையில் கிடைக்கவில்லை
என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள விழைகிறேன். பல பேர்கள் கேட்டு

கிறார்கள். நாடு முழுவதும் கேள்வி கேட்கிறார்கள். இங்கே வந்திருந்த
பாதுகாப்பு அமைச்சர்கூட ஒரு இடத்திலே பேசி அதற்குப் பதில் சொல்ல
வாய்ப்பு கிடைத்தபோது, அவர்கள் இருக்கும்போதே, அந்த மேடையிலேயே
நான் பேசினேன் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்
பட்டவனாக இருக்கிறேன். அந்த வகையில் நான் கொஞ்சம் அழுத்தமாகச்
சொல்ல விரும்புவது, மேடு பள்ளங்களைச் சமப்படுத்த வேண்டுமென்ற
தத்துவம், அதாவது பொருளாதாரத்திலும் சரி, சமூக அமைப்பிலும் சரி,
அந்த நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற பொதுக் கொள்கை நிச்சய
யாக வரவேற்கக்கூடியது மட்டுமல்ல, எப்படியும் கொண்டு வர வேண்டுமென்று
ஒத்துழைக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோ
மென்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால்
மாவட்டங்கள் என்கிற வகையில் 'பிற்பட்ட' என்ற பெயரைச் சேர்த்து, 'பின்
தங்கிய' என்ற பெயரைச் சேர்த்து அல்லது 'முன்னேற்றம் அடையாத' என்ற
பெயரைக் கொடுத்து, இந்தியத் துணைக் கண்ட நடுவண் அரசு அதை வெளி
யிடும்போது நானே கேட்டேன், 'ஏன் இப்படிப்பட்ட நிலைமையில் தமிழகத்
திலிருந்து ஒருசில மாவட்டங்களைக்கூட நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல
வில்லையே' என்று. அங்கே ஏதாவது ஒரு தொழில் இருக்கிறதே என்று
சொன்னார்கள். நான் திருப்பிக் கேட்டேன், ஒரு மாவட்டத்தில் ஒரு
தொழில் இருந்தாலே அது முன்னேறிய மாவட்டம் என்ற கருத்துக்கு முற்
படுகிறோமா என்று. அப்படியும் இல்லை, மற்ற மாநிலங்களில் உள்ள மாவட்
டங்கள் மிகவும் பின் தங்கி இருக்கின்றன. தமிழகம் முன்னேறிவிட்டது
என்று சொன்னார்கள். என்னிடம் அந்த பதிலைச் சொன்ன, அந்தப்
பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சர் அவையைச் சேர்ந்த ஒருவர்தான் பாது
காப்பு அமைச்சரவர்கள். நான் மேடையில் இல்லை. அவர்கள் அங்கே
சொன்னாலும்—ஒரு இடத்திலே அவர்கள் குறிப்பிட்டார்கள், இரண்டாம்
இடத்திலிருந்து ஒன்பதாம் இடத்திற்குப் போய்விட்டதென்று. ஒன்பதாம்
இடத்திற்குப் போய்விட்டது என்று அந்தக் கேபினெட்டில் இருக்கும் பாது
காப்பு அமைச்சர் தமிழகத்தில் பேசுகிறார். நான் போய் கேட்கும்போது
"உங்கள் மாவட்டங்களில் ஏதாவது ஒரு தொழில் இருக்கிறது. ஆகவே நீங்கள்
முன்னேறியவர்கள், ஆகவே பின்னுக்குத் தள்ளப்பட்ட மற்ற மாநிலங்களில்
உள்ள அந்த மாவட்டங்களை உயர்த்த வேண்டியிருக்கிறது" என்று சொல்லு
கிறார். சரி, தாலூக்கா வாரியாக எடுத்துப் பாருங்கள் என்று கேட்டேன்.
அப்படிப் பார்த்தால் அவ்வளவு செலவு செய்வதற்கோ அல்லது சொல்வதற்கோ,
வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க நிதிநிலை சரியாக இல்லை என்று
சொன்னார்கள். இது விதண்டா வாதமா, நியாயமான வாதமா என்பதை
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் உள்ளத்திற்குள்ளே கேள்வி
எழுப்பிக்கொண்டு பதிலைப் பெற்று, மக்கள் முன்னால் அதை வைக்க

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1983 பிப்ரவரி

வேண்டிய பொறுப்பை உங்களுக்கே விட்டுவிடுகிறேன். தொழில், தொழ்
என்றால் அறிவியல் துறையிலே பல தொழில்களை உருவாக்க முடியும். அதை
போல உடல் உழைப்பிலே பல தொழில்களை உருவாக்க முடியும். அதை
அரசைப் பொறுத்தவரையில், வெளிநாட்டுச் செலாவணி, வெளி மாநிலங்களி
விற்று வருகிற பணம் இது போன்றவைகளில் பல பெரிய தொழில்களை
உருவாக்க வேண்டுமென்பது கொள்கை. ஆனால் அதே நேரத்தில் கோடி
கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்க, இராமப்புறங்களிலே வேலை வாய்ப்பு
வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பது எங்களுடைய தலையாய
கொள்கை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதில் கூட்டுத்
துறையா, தனியார் துறையா, கூட்டுறவுத் துறையா, பொதுத் துறையா என்று
பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. தனியார் துறை என்ற முறையில்கூட
யாராவது அப்படித் தொடங்க முன் வந்தால், அவர்களுடன் ஒத்துழைக்கக்
கூடிய அந்த அளவு இருக்கிறதே, அந்த அளவு வரையில் எங்களுடைய சக்தி
யைப் பயன்படுத்தி ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோமென்று வெளியிட்
டிருக்கிறோம், சொல்லப்பட்டிருக்கிறது. நம்பிச் சென்றார்கள். ஆனால்
நிலைமைகள் நான் முதலிலே கூறியதுதான். ஆகவே தொழில்களைப்
பொறுத்தவரையில், தமிழகத்திற்கு ஒரு செய்தியைத் தருகிறார்கள். மற்ற
மாநிலங்களுக்கு, குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு வேறு தகவல்களைத் தரு
றார்கள். வசதி வாய்ப்பை, அனுமதியைத் தருகிறார்கள். நான் மத்திய
அரசைக் குறை கூறுகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. நாட்டின்
நிலைமையைப்பற்றிப் பேசும்போது இந்த அரசு எதையெதைச் செய்யவில்லை,
செய்ய முனைய வேண்டும் என்று யோசனை சொல்லும் அருமை மாண்புமிகு
உறுப்பினர்களுக்கு நான் எங்களுடைய நிலைமையை பலகீனமானாலும் சரி
அல்லது நெருக்கடியானாலும் சரி அல்லது அலட்சியப்படுத்தப்படுகிறோம்
என்று இருந்தாலும் சரி அல்லது ஒதுக்கப்படுகிறோமென்று இருந்தாலும்
சரி, அவை தமிழ்நாட்டைப் பாதிக்கும் ஒரு நிலைமையானதால், அவைகளை
சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தொழில்களைப் பொறுத்தவரையில், ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்
முடியும். வன வளத் துறையை எடுத்துக்கொள்ளலாம். அந்தத் துறையில்
முன்னாலே யார் செய்தார்கள், யார் பணம் சம்பாதித்தார்கள் என்பதுபற்றி
கவலையில்லை. மரங்கள் அழிக்கப்பட்டதன் விளைவாக, வெட்டி போன
இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதன் விளைவாக, மழை பொய்த்துப் போகின்ற
நிலைமையினாலும், நல்ல பல உறுதியான புளிய மரங்கள்கூட வெட்டி
வீழ்த்தப்பட்டன என்பது, தமிழகத்திலே பல கோப்புகளிலே மட்டுமல்லாம
பல ஏடுகளிலே தெளிவாக சிலபல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட உண்

பிப்ரவரி 8] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

...நான் குறிப்பிட வேண்டியது என் கடமையாகிறது. அதைப்போல
...ம் நடைபெறக்கூடாது என்ற எண்ணம் வரும்போது, நாம் எச்சரிக்கை
... இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில்
...உழைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள், ஆங்காங்கே சில வீடு
... கட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், அங்கே ஆக்கிர
...க்கொண்டிருக்கிறார்கள் என்ற பெயரிலே அவர்களை வெளியிலே
... வேண்டிய கட்டாயம் எங்கள் தலையிலே விழுகிறது என்பதை இந்த
...வையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

... நினைத்துப் பார்க்க வேண்டும். உத்தரவு எங்கிருந்தோ வருகிறது.
... பாதுகாக்கப்பட வேண்டும். அவைகளை அங்கே வெட்டி வீழ்த்தி
...றார்கள். ஆகவே, அந்த மக்களை வெளியேற்றித் தீர வேண்டும். வெளி
...லாம். வெளியேற்றப்படுகின்றவர்கள் இங்கே குடிசைகள் புதியதாகப்
...க்கொண்டு வந்தவர்களை வெளியேற்றினால் என்ன நிலைமையோ
...போலவே மோசமான நிலைமை அங்கே தோன்றும். இப்படி ஒவ்வொன்
...ம் இரண்டுவிதமாகப் பொறுப்பு ஏற்கும் நிலைமையிலும், செய்ய முடியாத
நிலைமையிலும்தான் நாங்கள் இருக்கிறோம். இந்த நிலைமை அந்த ஒன்
...லே மட்டுமல்ல, எல்லாவற்றிலேயும் இருக்கிறது. இன்னொன்றையும் நான்
...ஞ்சம் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. சில பிரச்சினை
...ல் வருகின்ற உத்தரவுகள் அல்லது யோசனைகள் வேறு. யோசனைகள்
...கின்றன. சில பல ஆண்டுகளுக்கு முன் திராவிட முன்னேற்றக் கழகம்
ஆட்சியிலே இருந்தபோது உணவு உற்பத்தி பெருக்கப்பட வேண்டும் என்ற
...சனை அங்கிருந்து சொல்லப்பட்டது. அதற்கேற்ப உணவு உற்பத்தி
பெருக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அதைத் தொடர்ந்து
...றோம். எவ்வளவோ அதிகமாக உற்பத்தியாகிவிட்டது. எவ்வளவு
...து வைத்துக் கொண்டாலும், 55 லட்சம் டன் அல்லது அதற்குக் கொஞ்சம்
...வு என்று கூட வைத்துக்கொண்டாலும், அதை நாம் நிறைவேற்றி,
...த்து அத்தனை பேருடைய ஒத்துழைப்போடு பயிர்களை உற்பத்தி
..., நெல்லை அதிகமாக உற்பத்தி செய்யும் நிலைமைகளை உருவாக்கி
...நிலம் என்ற நிலைமைக்குச் செய்துவிட்டு, காவிரி நீர்ப் பிரச்சினை
...லே போகும்போது, மத்திய அரசினுடைய குறிப்பிட்ட அமைச்சர்
... நீங்கள் உற்பத்தி செய்தீர்களே, அந்த அளவு நெல்
...இப்போது உற்பத்தி செய்கிறீர்கள்?" என்று கேட்கிறார். இது என்ன
... இந்த நாட்டிலே உற்பத்தி செய்யவில்லை என்று ஒரு பக்கம்
...ட்டு. நீங்கள் உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று சொல்லி

அதற்குத் தேவைப்படும் பண உதவியும் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கிய தற்குப் பிறகு, ஏன் தண்ணீர் தரவில்லை ,அணை கட்டுகிறார்களே என்று கேட்டால், அதற்கு அவர்களே நியாயத்தைக் கற்பித்துக்கொண்டு கேட்கி றார்கள், 'நீங்கள் முன்பு இருந்ததுபோல்தானா இப்போது பயிர் செய்கி றீர்கள்' என்று கேட்கிறார்கள். இந்தப் பக்கம் உற்பத்தியைப் பெருக்குங்கள், உபரி மாநிலம் என்ற அளவுக்கு உழைக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்பட்டு அந்தப் பணியைச் செய்தால், மறுபக்கம் உங்களை யார் செய்யச் சொன்னது என்று கேட்டால் இது விதண்டாவாதமல்லாமல் வேறு என்னவா. இருக்க முடியும்? நாட்டிலே எங்கு உற்பத்தி அதிகமானாலும் அது நாடு முழுவதற்கும் பயன்படும் என்பது ஒருமைப்பாடு பற்றிப் பேசுபவர்களுக்குத் தெரியாது என்று நினைத்தால், அது என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய அறியாமை என்றுதான் நான் கருதுவேன். அந்த வகையில் அவர் களுக்குத் தெரிந்த ஒன்று இது. அவர்கள் சொல்வதைக் கேட்டு அப்படிச் செய்து வெற்றி பெற்ற காரியத்திற்காக மைய அரசு இப்படிப்பட்ட ஒரு காரணத்தைச் சொல்ல முன்வந்தால், "நீங்கள் ஏன் அப்படிச் செய்கிறீர்கள் ஆகவே தண்ணீர் இல்லை" என்று சொன்னால், அதிலே என்ன நியாயம் இருக்கிறது? "இவ்வளவும் உற்பத்தி செய்ய உங்களிடம் யார் சொன்னது? இருபது அம்சத் திட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? உற்பத்தியைப் பெருக்க வேண்டும். குழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்திற்குத் தேவைப்படும் சிலேட்—புத்தகங்கள் எல்லாம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால், இப்போது இந்தத் திட்டத்தை யாரைக் கேட்டு போட்டீர்கள் என்று கேட்கிறார்கள். குழந்தைகள் அதிகமாகப் பள்ளிக்கூடங் களுக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் களுக்கு கல்வியும் சொல்லித்தர வேண்டும் என்றுதான் இதைச் செய்தோம் அப்போது. அதைப்போலவே, நாங்கள் ஒரு—தவறோ, சரியோ, —நல்லது என்று நினைத்துதான் நடைமுறைப்படுத்தினோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள், எனக்குப் பாராட்டு நிச்சயமாகத் தரவேண்டும் என்று பாராட்டுவதுபோலச் சொல்லி, "மதுக் கடைகளைத் திறந்து வைத்திருப்பதால், நீங்கள் மூன்று வேளையும் கூட சோறு போடலாம். ஆனால் போனால் போகிறது இரண்டு வேளை யாவது போடுங்கள்" என்று எவ்வளவு இழிந்தமாக என்னை தாம் தாழ்த்திச் சொல்ல முடியுமோ அவ்வளவுக்கு அழகாக அவர்களுடைய கல்வித் திறமை யைப் பயன்படுத்தி பாராட்டியிருப்பதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்போது, இந்த கண்ணியமான பேச்சுதான் தேவை. இப்படியே பேசிக்கொண்டிருந்தால், சிரிப்போமே தவிர வேறல்ல. ரசிப்பதற்குத் தான் இது பயன்படும். இரண்டு மூன்று ஆண்டுகளாக பள்ளி

களுக்குப் பிள்ளைகள் வருகிறார்கள், போன வருஷத்திற்கு முன்னால்கூட பள்ளிக்கூடங்களிலே ஒரு லட்சம் குழந்தைகள் வந்தார்கள், அதற்கு அடுத்த வருஷம் ஒரு லட்சம் பிள்ளைகள் வந்தார்கள், இந்த வருஷமும் ஒரு லட்சம் வந்தார்கள் அவ்வளவுதான் என்றார்கள். அதே நேரத்திலே நாயுடு அவர்கள் ஒரு கருத்தையும் மேடையில் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொன்னார் என்றால், இனிமேல் சிறுவர்கள் வேலைக்குக் கிடைக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். என்ன காரணம்? முன்பு சிறுவர்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள், ஆனால் இப்போது சாப்பாடு கிடைத்தவுடனே அவர்கள் படிக்க வந்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் வேலைக்குப் போக முடியாது. ஆகவேதான் இப்போது பள்ளிகளிலே அந்த எண்ணிக்கை உயர்ந்திருக் கிறது. இரண்டு முதல் ஐந்து வயது வரையில் குழந்தைகள் ஆண்டுக்கு ஆண்டு வயது அதிகமாகிக்கொண்டே வருகிறது. மூன்று வருஷத்திற்கு முன்னாலே 3 வயதிலே இருந்த பையனுக்கு இப்பேது 6 வயது ஆகியிருக்கும். ஆகவே. வளர்ந்துகொண்டிருக்கும் குழந்தைகள் எண்ணிக்கையை அதிகமாக்கும்போது, அவர்களை, படிப்புக்கு இழுக்கும் சத்துணவுத் திட்டமானது நல்ல திட்டம் என்று ஏற்றுக்கொண்டு சொல்ல வேண்டிய நிலையில் சொல்லிவிட்டார்களோ அல்லது நகைச்சுவையாக இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒட்டுமொத்தமாக, பொதுவாக 2 லட்சத்திற்கும் மேல் குழந்தைகள் சேர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் முன் பெல்லாம் நெருக்கடியிலே இருந்தார்கள். நான் பலமுறை சொல்லியிருக் கிறேன், அதை மீண்டும் இங்கே சொல்கிறேன். இத்தனை குழந்தைகள் இருந்தால்தான் வேலை. அந்தக் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையில் குழந்தைகள் இல்லை என்று சொன்னால், வேலைக்கு ஆபத்து என்ற நிலைமை யிலேதான் அவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு அந்த விதமான ஆபத்து இல்லை. குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாயிருக் கிறது. ஆகவே, அவர்களுக்குப் பிரச்சினையில்லை. காலையிலே ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று குழந்தைகளை அனுப்பி வையுங்கள் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. கடையிலே சென்று அரிசி வாங்கிக்கொண்டு, அதற்கு வேண்டிய பணத்தையும் கேட்டு வாங்கிக்கொண்டு சென்று அரிசியை சமைத்துப் போட வேண்டும் என்ற பொறுப்பும் இல்லை. ஏற்கெனவே 1¼ லட்சம் பேர்களுக்கு இதில் வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறோம். அதே நேரத்தில் ஆசிரியர்களுடைய பளுவையும் குறைத்திருக்கிறோம். முன்னால் இருந்த அந்தச் சுமையைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லும்போது இந்தத் திட்டத்தின் மூலகர்த்தா நான் என்றோ, நான்தான் இந்தத் திட்டங் களுக்கு எல்லாம் ஆதிகர்த்தா என்றோ, எனக்குத்தான் உரிமை என்றோ நான் சொல்லிக்கொள்ளத் தயாராக இல்லை. என்று சொல்லிக்கொள்ள இந்த

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1983 பிப்ரவரி 8

வாய்ப்பை எடுத்துக் கொள்கிறேன். காரணம் ஏதோ இதைச் சொல்வதாலே எனக்குப் புகழ் வந்துவிட வேண்டும் என்று விரும்புகிறேன் என்று தயவு செய்து யாரும் எண்ண மாட்டார்கள். மக்கள் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் ஒரு தனி மனிதன் என்ற முறையில் நான் சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், நான் மக்களுக்காக என்ன செய்தேன் என்பதைவிட மக்கள் என் மீது அன்பு காட்டியது அதிகம் என்பதையும் நான் எப்போதும் மறக்கவில்லை. இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பு கூட அப்படித்தான் நினைத்தேன். இந்த அரசியல் என்பது ஒரு தொழில் என்று சிலர் சொல்கிறார்கள். ஒரு பிரச்சினை வந்தபோது ஒரு பெரிய தலைவர்—பெருந் தலைவர் என்று சொன்னால் அது காமராசர் அவர்களைக் குறிக்கும்—ஆகவே, பெரிய தலைவர் என்று சொல்கிறேன்—அவர்கள் சொன்னார்கள் அப்படி. நாவலருக்கும் எனக்கும் இது தொழில் என்று சொன்னால், எம். ஜி. ஆர். அவர்கள் வேறு தொழில் செய்யலாம். நாவலர் அவர்களுக்கு இதை விட்டால் வேறு தொழில் இல்லையா? இப்படி அரசியல் ஒரு தொழில் என்று அவருடைய வாயிலிருந்து வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அரசியல் ஒரு தொழில் அல்ல. நான் அனுபவத்துடன் சொல்கிறேன். வேறு எந்தத் தொழிலும் தொழிலாக இருக்கலாம். ஆனால் அரசியல் என்பது ஒரு தியாகமே தவிர, அதிலே சம்பளம், அல்லது வரவு செலவுக் கணக்கும் பார்க்க இடமில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

நான் கட்சியில் இருந்தபோது இரண்டு நண்பர்களுக்கு, தேர்தலுக்காகப் பணம் கொடுத்தேன். ஒருவருக்கு அதிகம், மற்றவருக்குக் கொஞ்சம் குறைவு என்றில்லாமல், இருவருக்கும் ஒரே மாதிரியாகத்தான் கொடுத்தேன். ஆனால் அதில் ஒருவர் மட்டும் 3 நாள் கழித்து திரும்பி வந்து என்னிடம் வந்து "என்ன அண்ணா என்மீது உங்களுக்கு இவ்வளவு கோபம்?" என்று கேட்டார். என்ன சமாச்சாரம் என்று நான் திரும்பக் கேட்டேன். அவருக்குப் பணம் கொடுத்தீர் என்றார். "ஆமாம் உங்களுக்குக் கொடுத்த மாதிரிதான் அவருக்கும் [illegible] என்று நான் பதில் சொன்னேன். அவர் அதை எனக்கு

1983 பிப்ரவரி 8] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

வட்டிக்குக் கொடுத்துவிட்டார் என்று அந்த நண்பர் பதில் சொன்னார். (சிரிப்பு) அப்படிப்பட்டவர்களுக்கு அரசியல் ஒருவேளை தொழிலாக இருக்கலாம். ஒருவேளை அப்படிப்பட்ட அரசியலை எண்ணிக் கொண்டுதான் அந்தத் தலைவர் சொன்னாரோ என்னவோ தெரியாது. அப்படிச் சொல்லியிருந்தால், நான் கவலைப்படவில்லை. இதை நான் அன்றே வேறு ஒரு தலைவரிடம் சொன்னேன். அன்றைக்குப் பேச சந்தர்ப்பமில்லை. அதனால் பேசாமல் விட்டுவிட்டேன். ஆனால் இங்கே வாய்ப்பு கிடைத்திருப்பதால் சொல்லுகிறேன்.

நான் அரசியலுக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவர் மறைந்த பாமேதை கலைவாணர் அவர்கள்தான். சிறுவயதிலிருந்தே எனக்கு காங்கிரஸ் மீது ஒரு பற்றிருந்தது. கதர் பக்தி, பதி பக்தி, கவர்னர்ஸ் கப் என்றெல்லாம் நாடகங்கள் அப்போது நடக்கும். நாட்டில் அதைப்பற்றிப் பேசி, கதரைப் பற்றிப் பேசி, மதுவிலக்கு பற்றிப் பேசி காங்கிரஸ்காரனாக இருந்த நேரம். அப்படியே வளர்ந்து வந்தேன். 17 வயதாக இருக்கும்போது, நான் முதல் படத்தில் நடித்துக்கொண்டிருந்தேன். அப்போது கலைவாணர் அவர்கள், "அரசியல் தெரிந்துகொள்வதற்கு நீ முதலில் குடியரசுப் பத்திரிகையைப் படிக்க வேண்டும். அப்போதுதான் நீ சமுதாயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியும்" என்று சொல்லி நான் எப்போதும் மதிக்கிற, அரசியலில் தமிழ் நாட்டில் முதன் முறையாக பொதுவுடைமைக் கொள்கையைப் போதித்து அதில் நீங்காத பற்று கொண்டு செயலாற்றி வந்த மறைந்த தலைவர் திரு. ஜீவா அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். அன்றுமுதல் நான் அந்தக் கொள்கையில் ஊறிப் போனேன். என்னை அறியாமலேயே என்னை அந்தக் கொள்கைக்குச் சொந்தக்காரனாக்கிக் கொண்டேன்.

அந்த வகையில்தான் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் திரைப்படங்களில் அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையைச் சொல்லிக் கொண்டு வந்தேன். மக்கள் அவற்றை நம்பினார்கள். என்னை இன்றைக்கு ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். இது திடீர்ப் பிரவேசமே தவிர திட்டமிட்ட பிரவேசமல்ல. அடுத்த தேர்தலில் நிற்பதற்காக இன்றையதினமே எந்த இடத்தை உருவாக்கலாம், எங்கே போய் நிற்கலாம் என்று இடம் தேடுகிறார்களே அதைப்போல் அரசியலை நான் வைத்துக்கொள்ளவில்லை. இன்றைக்கும் சொல்கிறேன்—நான் அரசியலுக்கு வந்தது, கொள்கை என்கிற வேதனைக்கு அடிப்படையில் எதைத் தீர்க்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அந்த வேதனையின் அடிப்படையில் உருவாகிய ஒரு கொள்கை என்னை அரசியல்வாதியாக ஆக்கி

அண்ணாவின் 'பணத்தோட்டம்' என்ற புத்தகத்தைப் படித்ததன் பிறகு தான் நான் தி.மு.க.வில் சேர்ந்தேன் என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த வகையில் பார்த்தால், தனியாருக்குத் தொழில் நிறுவனங்கள் அமைத்துக் கொள்ள வாய்ப்புகள் கொடுக்கும்போது, பொதுக் கொள்கை என்று சொல்லுகிறோமே, அரசு ஏற்றுக்கொள்கிற அந்தக் கொள்கை, அரசே நடத்துகிற கொள்கை, தனியாருக்கு உரிமை இல்லாமல், கூட்டுறவுத் துறையில், கூட்டுத் துறையில் அல்லது பொதுத் துறை என்று சொல்லுகிறோமே அவைகளையெல்லாம் விட்டுவிட்டு தனியார் வந்தாலும் பரவாயில்லை என்று ஏன் சொல்லுகிறோம். மூன்று ஆண்க் காலம், 4 ஆண்டுக் காலம் பதவியில் இருந்த பிறகு அதன் காரணமாக ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக தனிப்பட்ட முறையில் அரசு மட்டும் இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் எல்லோருக்கும் வேலைவாய்ப்பைக் கொடுத்துவிடும் என்றோ எல்லோருக்கும் நல்வாழ்வு கொண்டுவந்து விடும் என்றோ நான் முழுமையாக நம்ப இயலவில்லை.

ஆகவே, தனியார்களின் திறமை, வசதி வாய்ப்புகள் ஆகிய அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டி, பெறுகிற லாபத்தைக் கொஞ்சம் குறைவாக இருக்கட்டுமே என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டுக் கொடுக்கச் செய்து, அதை நிறைவேற்றுவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டும் என்று எண்ணுகிற போது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வந்தால், நாங்கள் தொழிலையும் காப்பாற்ற வேண்டும், அந்தத் தொழிலைத் தொடங்கியவர்களின் நிதியையும், சொத்துக்களையும் காப்பாற்றியாக வேண்டும். அதுமட்டுமல்ல, இன்னும் பலர் தொழில் செய்வதற்கு வருவதற்குரிய நம்பிக்கையையும் உருவாக்க வேண்டும். தொழிலாளர்களுடைய உரிமையையும் நாம் பாதுகாக்க வேண்டும். தொழிலாளர்களுடைய திறமை இருக்கிறதே, அதையொட்டி அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய அளவுக்கு உழைத்தும் பயனில்லை என்று எண்ணுகிற நிலை ஏற்படாமல், அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு வருமானம் கிடைக்கிற நிலையையும் நாம் பாதுகாத்தாக வேண்டும்.

இன்றையதினம் ஆவடியில் என்ன நடந்தது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்பவில்லை. ஆனால் எப்படியோ இப்போது அமைதியாக இருக்கிறது என்று எண்ணும்போது, நமக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிறது. சரி அன்றையதினம் நாம் எடுத்த நடவடிக்கைகள் சில நண்பர்களுக்குத் வேதனையை அளித்தாலும், இன்றையதினம் அந்தத் தொழில் காப்பாற்றப்பட்

டிருக்கிறது, இந்தியப் பாதுகாப்புப் படைக்குத் தேவையான கருவிகள் அங்கே உற்பத்தி செய்யப்படும்போது, அவைகள் அங்கே ஒழுங்காக உற்பத்தி செய்யப்படுகிற சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. அதே நேரத்தில் சங்கங்களுக்கு இடையே தகராறுகள் இருந்தாலும்—காலப் போக்கில் தலைவர்கள் மாற்றப்படுவதைப்போல்—அவர்களின் எண்ணங்கள் மாறாவிட்டாலும், அமைதியான செயல்முறைகளோடு உரிமையைப் பெறுகிற நிலைமை உருவாகும் என்று நம்பும்போது, நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இப்போது அங்கே அமைதி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அமைதியேகூட சூழ்நிலைக்கு ஏற்ப இருக்கிறதே தவிர, எங்களின் மன ஒப்புதலோடு இல்லை என்று சொல்லுவார்களானால், காலம் கனிகிற வரை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எப்படியானாலும் நாட்டின் ஒட்டு மொத்தமான சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. அப்படிக் காக்கும்போது, உள்நாட்டுச் சுதந்திரத்தையும் நாம் பாதுகாத்தாக வேண்டும். உள்நாட்டுச் சுதந்திரம் என்பது தனி மனிதனின் சுதந்திரத்தை விட முக்கியமானதாகும். கூட்டு முறையில் மக்களுடைய சுதந்திரம். அதைப்போல் தனி மனிதனின் சுதந்திரம் தேவைதான். அந்தத் தனி மனிதனுடைய சுதந்திரம் என்பது பலருடைய வாழ்க்கைக்கு இடையூறாக இருந்தால், அது சரியாக இருக்குமா? ஒருவரால் ஆயிரம் பேர் கஷ்டப்படுவதா அல்லது ஆயிரம் பேருக்காக ஒருவர் கஷ்டத்தை ஏற்றுக்கொள்வதா என்று பரிசீலிக்கும்போது—மைனாரிட்டிகள் என்று—பெரும்பான்மை அல்லது சிறுபான்மை என்று கருதாமல், நாட்டுக்கு என்ன நன்மை தரும் என்று தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

சிமிண்ட் பற்றி இங்கே பேசினார்கள். ஒரு பக்கம் லெவி சிமிண்ட். ஒரு பக்கம் பொது விநியோகம். இதை நான் தனிப்பட்ட முறையிலும் சொல்லுகிறேன், முதலமைச்சர் என்ற முறையிலும் சொல்லுகிறேன். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக நான் பேசாமல் இருக்கிறேனே தவிர, இப்போது மேலவையில் சொல்ல வேண்டிய அவசியம் வந்திருப்பதால் சொல்லுகிறேன். பொதுவில் விற்கிற உரிமை இருக்கிறதே அந்த உரிமை யாருக்கும் இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய திட்டவட்டமான கொள்கையாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிமிண்ட் தயாரிக்கும் கம்பனிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தால், நீங்கள் உங்கள் இஷ்டம்போல் எந்த விலைக்கும் விற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னால், நாம் தெரிந்தே "நீ சம்பாதித்துக்கொள்" என்று சொல்லுகிற முறையாக [illegible] இருக்குமே தவிர, வேறு ஒன்றுமல்ல. ஒரு அரசாங்கம் அதை ஏற்றுக்

கொள்ள முடியாது. ஆனால் நாம் இன்றைக்கு அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். திரும்பத் திரும்ப எதையும் சொல்ல வேண்டாம் என்பதற்காக என்னுடைய உள்ளத்தையும் உள்ளத்தில் இருக்கிற உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாமல் இருக்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைகளை நாம் மாற்றியமைத்தாக வேண்டும். முழுமையாக நியாய விலைக் கடைகள் மூலமே சிமிண்ட் விற்கப்பட வேண்டும். இல்லையென்றால் இதற்கு மேல் விற்கக்கூடாது என்று தனியாருக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அப்படி எழுதி வைத்தாலோ சொன்னாலோ மட்டும் போதாது, மிகவும் கடுமையான தண்டனை தருகிற நிலையை நமக்குக் கொடுக்க வேண்டும்.

ஆனால் இன்றைய தினம் இருக்கிற துரதிருஷ்டம் என்னவென்றால், நாம் எதை எடுத்தாலும் அரசியலாக்க முயற்சிக்கிறோம். அந்த நிலை இருப்பதால், திடீரென்று நாளையதினம் ஒரு கூட்டம் நடக்கலாம். வியாபாரிகள் சங்கக் கூட்டம் என்று சொல்லலாம், உழைப்பாளர்கள் சங்கக் கூட்டம் என்பதைப் போல், அல்லது ஜாதியின் பேரால் நடைபெறும் கூட்டத்தைப்போல் அனைத்துக் கட்சிகளின் பேரால் நடைபெறும் கூட்டத்தைப் போல் நடத்தலாம். நான் இதை வாதத்திற்காகத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி வியாபாரிகள் சங்கக் கூட்டம் என்று ஒன்றைப் போட்டு அவர்கள் பேசலாம். "என்ன? எங்கள் உரிமை பறிக்கப்பட்டது, அப்படியானால் விடாதே. போ கோர்ட்டுக்கு போய் ஸ்டே வாங்கு" என்று பேசலாம். பிறகு அவர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்குகிறார்கள். அங்கே சட்டம் பேசுகிறது. மனச்சாட்சி பேச முடிவதில்லை. காரணம் சட்டம் அப்படி இருக்கிறது. அதை நாங்கள் எதிர்க்காமல் இருக்க முடியாது. அதை மாற்ற முயற்சித்தால் மேல் வழக்கு மன்றத்திற்கு போகவேண்டும். ஆக அதுபற்றிய உரிமை இருக்கிற வரை, இதுபற்றிய கருத்து இருக்கக்கூடாது என்று சொல்வதற்கான உரிமை யாருக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

(பிற்பகல் 12-10)

எனக்குச் சொன்ன சட்ட நிபுணர்கள் அந்தக் கருத்தைச் சொல்வதற்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மன்றத்தில், இம் அவையில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்பதை இங்கே திட்டவட்டமாகச் சொல்ல [illegible]றேன்.

ஒரு நன்மையைச் செய்கிறோம். அந்த நன்மைக்காக சட்டத்தைப் போட்டால், எத்தனை இலட்சம் குடும்பங்கள் வாழப் போகிறார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அங்கே 'ஸ்டே' கொடுக்கிறார்கள். பணிவோடு கேட்கிறேன். ஒரு உத்தரவு நீதிமன்றத்தில் போடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கட்டளைக்குச் சட்டப்படி கீழ்ப்படிய வேண்டியவன், கீழ்ப்படிந்தேயாக வேண்டும், நிறைவேற்றியாக வேண்டும். தேர்வை தேர்வு செய்யும் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். சரியில்லை என்றால், நீதிமன்றத்திற்குப் போகிறது. அங்கே தீர்ப்பு வழங்குகிறார்கள். மாணவருக்கு இடம் கிடைக்க வேண்டும். அதை தவறு என்று கருதினால் மேல் நீதிமன்றத்திற்குப் போய் கேட்கலாம். அது வேறு விஷயம். ஆனால் தீர்ப்பு வழங்கியவர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், அந்தத் தேர்விற்கு எந்த நிபுணர்கள் தேர்வை நடத்துவது? அவர்களுக்கு என்ன உத்திரவாதம்? அவர் செய்தது தவறா? இல்லையா? பிழை இருக்கிறதா இல்லையா? தீர்ப்பு சொல்லட்டும், எனக்கு ஆட்சேபணையில்லை, தண்டனை ஏற்றுக்கொள்ளத் தயார். தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர்களைத் தேர்வு என்றால், நாளைக்கு நான்கு பேர் உட்கார்ந்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டாமா? தேர்வு செய்ய வேண்டாமா? இதைப் போன்ற பிரச்சினைகள் வரும்போது, மற்றவர்களுடைய நிலைமையைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். சொன்னால் அதற்காக உரிமைப் பிரச்சினை, அதற்காக நீதி மன்றம் போகிறார்கள். இன்றைய தினம் சிமெண்ட் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். "கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்க வேண்டும், அணை கட்டினால் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும், அப்போது நாங்கள் உங்களோடு இருப்போம்" என்று சொன்னார்கள். அது போன்ற பிரச்சினைகள் முன் வரும்போது, யாரை நம்பிப் போகிறோம்? பிரதம அமைச்சர் அவர்களே கூட பேசியிருக்கிறார்கள். வெளியே இருக்கின்ற அரசியல்வாதிகளுடைய அந்த வார்த்தை ஞாபகம் இல்லை, அந்த வார்த்தையாக எடுத்துக் கொள்ள வேண்டும், அதை பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்கிறேன், பத்திரிகையில் வந்திருக்கிற அந்த வார்த்தையை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வெளியேயுள்ள அரசியல்வாதிகள் குறுக்கிடுகிறார்கள் நீதிமன்றத்தில் என்ற நிலைமை ஏற்படுகிறது என்றால், நியாயம் எப்படி இருக்கும்? யாரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்திய துணைக் கண்டத்தின் தலைவராக இருக்கிறார் அவர். இந்தியத் தலைவர் பதில் சொல்ல வேண்டியவராக இருக்கிறார். அப்படிப்பட்டவர் சொல்லுகிறார். சட்டப்படி அல்ல, விதிப்படி [illegible]மட்டுமே நடப்போம் என்ற வரையறை காரணமாக சில சமயங்களில்

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1983 பிப்ரவரி 8

நம்மால் நகரவே இயலவில்லை என்றார் பிரதம அமைச்சர். கோர்ட்டுகளில்
உள்ள வழக்குகளில் காலதாமதம் ஏற்படுவதால், நீதிமன்ற அமைப்பின்
மீது ஏழைகளுக்கு நம்பிக்கை விட்டுப் போகும் என்று பிரதமர் எச்சரித்தார்.
அதை நான் சொல்லுகிறேன். கோர்ட்டுகளை அரசியல் நோக்கங்களுக்காகப்
பயன்படுத்தும் போக்கு கவலை தரும் அம்சம் என்று திருமதி இந்திரா காந்தி
அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுதான் செய்தி.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதல்வர் அவர்கள் அருமையான கருத்தைக் குறிப்பிட்டார்கள். முதல்வர்
அவர்கள் குறிப்பிட்டபோது, ஒரு தேர்வுக் குழுவில் நடந்திருக்கக்கூடிய
தேர்வு பற்றி தீர்ப்பு நீதிமன்றத்திலே வழங்கப்பட்டிருப்பதைப்பற்றிக் குறிப்
பிட்டிருக்கிறார்கள். நிபுணர் குழுவின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி நடவடிக்கை
எடுத்தால், மீண்டும் எப்படி நிபுணர்கள் வருவார்கள் என்று கேட்கிறார்கள்.
தவறு செய்த நிபுணர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான்
தீர்ப்பிலே இருக்கக் கூடிய விஷயம். நிபுணர்கள் தவறு செய்தால், அவர்கள்
மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றால், அப்படி எடுத்தால் இன்னுமொரு
நிபுணர் வரமாட்டார் என்றால், தவறை எப்படிக் களைவது என்று
முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஏனென்றால் இப்படி அவையிலே
சொல்லும்போது, நிபுணர்கள் தவறு செய்தால், நடவடிக்கை எடுக்க
வேண்டுமா, வேண்டாமா என்ற சந்தேகம் எழுகிறது. அதற்கு முதலமைச்சர்
அவர்கள் பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: திரு. முத்துசாமி அவர்கள்
என்னைப் பாராட்டினார்கள். நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன்
என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு என்னைச் சந்தேகப்படுகி
றார்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை. சிறந்த கருத்துக்களைச்
சொல்லிய பிறகும் சந்தேகப்படுகிறார் என்றால், எனக்கு அவருடைய சான்
றிதழைப்பற்றிச் சந்தேகம் வருகிறது, அண்ணா சொன்ன மாதிரி. நான்
சொல்ல வருவது இதுதான். தேர்வாணைக் குழு என்று வைத்துக் கொள்
ளுங்கள். அதுவல்ல—அது போன்ற தேர்வு செய்கின்ற ஒரு குழு—அவர்களுக்கு
என்ன பாதுகாப்பு இருக்கிறது? அவர்கள் இலஞ்சம் பெற்றிருந்தால், நிரூபிக்
கப்பட்டால் தண்டனை உண்டு. சாதி உணர்வைக் காட்டி, வேறு சலுகை
காட்டி செய்திருந்தால் தண்டனை உண்டு. நான் அங்கே போகவில்லை. தவறு
நடந்திருக்கிறது. கொடுக்க வேண்டியவர்களுக்கு நிபுணர்கள் கொடுக்கவில்லை.
இங்கே தவறு நடந்திருக்கிறது. இதுதான், வேறு ஒன்றுமில்லை. எக்ஸ்ரே

1983 பிப்ரவரி 8] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

பார்த்தார்கள், அடையாளம் இருக்கிறது. அதே சமயத்தில் நாம் தீர்ப்பு
அளித்ததிலே தவறு இருக்கிறது என்று நீதிபதி கருதுகிறார்கள். அங்கேயும்
நான் குறுக்கே இல்லை. அந்தச் சிறுமிக்கு அந்த இடம் கொடுத்தாக
வேண்டும் என்று சொல்கிறார். அதற்கும் நான் குறுக்கே இல்லை. தீர்ப்பு
எப்படி? அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது வேறு கோர்ட்டுக்குப்
போகிறோமா என்பது வேறு விஷயம். தேர்வு செய்தவர்கள் மீது, இந்த ...
தவறைச் செய்தவர்கள் மீது தண்டனை என்றால், "இந்த தண்டனை
நமக்கு எதற்கு, யாரோ ஒருவர் செய்துவிட்டு எங்கள் மீது பழி சுமத்திவிட்டு
எங்களை தண்டனைக்குள்ளாக்கிவிட்டார்கள், நாங்கள் ஏன் பதவிக்கு வர
வேண்டும்" என்று கருதுகிறார்கள். மேலவையின் உண்மையான நோக்கம்
என்ன? சட்டமன்றத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வருகி
றார்களே, படித்தவர்கள் மத்தியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகி
றார்களே அவர்கள் இவ்வளவு யோசிக்கிறார்கள். நமக்கு ஏன் வம்பு, தேர்தலில்
நின்று தோற்று, பணம் செலவு செய்வது ஏன் என்று கருதுகிறார்கள்.
நம்பிக்கையில்லாதவர்கள் வருகிறார்கள். ஆகவே நியமனம் மூலம் வருகி
றார்கள். சட்டமன்றத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள்.
தேர்தலுக்கு நிற்க விரும்பாதவர்கள், போட்டியிட்டுக் கொண்டு, சாதி,
பணம் இந்தத் தொல்லைகள் எல்லாம் நமக்கு எதற்காக என்று
வெளியே இருந்து கொண்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள், படித்தவர்கள்,
விவரம் தெரிந்தவர்கள் ஒதுங்கியிருக்கக் கூடாது. அவர்களையும் பயன்படுத்த
வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த மேலவை அமைக்கப்பட்டிருக்
கிறது என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே தேர்வு நடத்துகிறார்கள்.
வேண்டுமென்றே தவறு செய்தார்கள் என்றால், அதற்குத் தண்டனை
உண்டு. ஆனால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லும்போது,
தண்டனை கொடுத்தோம் என்றால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகி
றார்களா இல்லையா, அதை ஏற்றுக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பது
வேறு. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால்——நாங்கள்
யாரை நியமித்தோமோ, யாரை பணிவோடு நீங்கள் பணி செய்ய வேண்டும்
என்று வேண்டிக் கொண்டோமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்றால், யாரைச் சந்திப்பது என்பதுதான் கேள்வி. ஆகவே நீதி
மன்றத்தைப் பொறுத்த வரையில், எங்களைவிட அதிகம் நம்பிக்கை
வைத்திருப்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பதை இங்கே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவரைச் சுட்டிகாட்டுவதற்காக அவர்
தவறாக நினைக்கக்கூடாது. முன்னாள் நீதிபதி திரு. வெங்கடேசன் அவர்கள்
இருக்கிறார்கள். அவர் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னாலும் பின்னாலும்
என்ன ஆகும் என்பது அவருக்குத் தெரியும். இதை சூட்சுமமாகக் குறிப்பிட்டு

விட்டுப் பேசுகிறேன். இதைப் போன்று எந்த நீதிபதியிடமாவது சென் சலுகையைப் போல இதைச் செய்யுங்கள் என்று உத்தரவு பிறப்பிக்கிறோமே என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நீதியில் குறுக்கிடாத ஓர் அரசாங்கம் இதைவிட நல்ல அரசாங்கம் வேறு எங்கேயாவது இருக் லாம்—மோசமான அரசாங்கமும் இருக்கலாம்—அதைவிட கொஞ்சம் நல் தாகக் குறிப்பிடத்தக்கவர்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அந்த வகையில் அந்தச் சட்டத்தை இயற்றும்போது பல பிரச்சினைகள் வருகின்றன என்பது மட்டுமல்ல. கொள்கை என்றால் பொதுவாக மக்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் கிடைத்தாக வேண்டும். அப்படி மலிவான விலையில் பொருள்கள் கொடுக்கும்போது, ஒரு பகுதியிலே அதிகமான விலையில் விற்பதற்கு இடமிருக்கக்கூடாது.

இங்கே வறட்சிபற்றிப் பேசினார்கள். அதிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நாங்கள் மத்திய அரசுக்கு அவ்வப்போது ஏற்பட்டிருக்கின்ற வறட்சியைப் பற்றி எடுத்துச் சொன்னோமா என்ற எண்ணத்தை இங்கே சொல்லியிருக் கிறார்கள். இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கனார் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்பு கிறேன். அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாத நிலைமைகளைச் சொன் னார்கள். வடகிழக்குப் பருவக் காற்றுக்குப் பிறகு வந்த மழை குறைவு. அது வருமா வராதா என்பதைப்பற்றித் தெரியாதா என்றார்கள். இது இயற்கை. நாங்கள் மட்டுமல்ல, பல அரசுகள் இப்படியெல்லாம் எதிர்பார்த்து பல முறைகள் தங்கள் கடமையையாற்ற முன்வந்திருக்கிறார்கள். உதாரண மாக திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒருமுறை ஜனவரி 23 ஆம் தேதியில் தான் அறிக்கை தந்திருக்கிறார்கள், மத்திய அரசுக்கு. இதில் அவர்களுக்கு ஏன் தாமதம் என்று சொல்ல முடியாது. தொடர்ந்து வறட்சி இருந்தது. ஆகவே அப்படிச் செய்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கனார் அவர்கள் நன்றாகப் பேசினார்கள். அவர்கள் எனக்காகப் பேசினார்கள். 31—12—1982-ல் வறட்சி நிலைமைபற்றிச் சொன்னார்கள். அதிலேயும் எந்த எந்த இடங்களில் வறட்சி என்றும், எப்படியெல்லாம் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். 20—1—1983-க்குள் அதுவே 10 மடங்காகப் பெருகிவிட்டது என்று சொன்னார்கள். 31—12—1982-லிருந்து 20—1—1983-க்குள் இவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும்போது, அதற்கு முன்னால் நாங்கள் அறிக்கையைத் தயார் செய்து அனுப்பியிருந்தால்,

இந்த அவையில் என்ன கேட்டிருப்பார்கள்? "என்ன அவசரம்? அப்போது 100 கோடி ரூபாய் என்று இருந்தால் போதும், இப்போது ரூ. 200 கோடி வேண்டுமே. ஏன் அவசரப்பட்டு 100 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு அனுப்பினீர்கள்? பொறுத்திருந்து, தமிழகம் முழுவதும் ஆராய்ந்து நீங்கள் அனுப்பியிருக்க வேண்டாமா?" என்று கேட்பார்கள். 1 ஆம் தேதி நாங்கள் தகவல் கொடுத்தோம். 21 ஆம் தேதி நாங்கள் அறிக்கை அனுப்பியிருக்கி றோம். 13 ஆம் தேதி என்று கருதுகிறேன், தகவல் அனுப்பினோம். 21 ஆம் தேதி அன்று அந்த இடைக்காலத்தில் தலைமைச் செயலாளர் உடனே அறி வித்தார்கள். அதற்குப் பிறகு அவர் கையெழுத்து போட முடியாத நிலையில் இருந்தார்கள். பிறகு நாங்கள் அறிக்கை அனுப்பியிருக்கிறோம். இதிலே தாமதம் இல்லை, அலட்சியம் இல்லை. மற்றவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் எதையும் செய்யக்கூடாது என்பது மட்டுமல்ல, நிலைமைகளை முழுமையாக உணர்ந்து நாம் செய்தாக வேண்டும் என்ற அளவில் செய்தோம். இந்த நிலைமை வேறு விதமாக மாறிக் கொண்டிருக்கிறது. அந்தக் குழு வரும் போது எவ்வளவு கேட்க வேண்டியிருக்கும் என்பதை இப்போது நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

இங்கே வறட்சியைப்பற்றிச் சொல்லும்போது, காவிரியைப்பற்றிச் சொன் னார்கள். காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். கூட்டம் போடுவது, பேசுவது, போவது என்று நாம் இருக்கிறோம். அதாவது ஒருங்கிணைக்கப்பட்ட, ஒருமைப்பாட்டோடு, ஒன்றுபட்டு வாழ்கின்ற ஒரு கண்டத்தில், துணைக் கண்டத்தில் தமிழ் நாடு இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். ஆகவே வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டுமென்றால், யோசிக்க வேண்டும். திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர்கள் நம்பினார்கள். இன்றைக்கு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செல்லுபடி ஆகாது என்று அவர்கள் சொல்கின்றார்கள். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் உயிரோடு இருக்கிறது. இன்னொரு ஒப்பந்தம் எழுதப்படுகின்ற வரையில் அதற்கு உயிர் இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். கல்யாணம் செய்தால் பைத்தியம் தெளியும். பைத்தியம் தெளிந்தால் கல்யாணம் செய்யலாம். இது எப்படி முடியும்? அவர்கள் 1934 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை விடுவதாக இல்லை. அப்போது மத்திய அரசு கேட்கிறது. அந்த மாநில அரசும் கேட்கிறது. "எப்படி இவ்வளவு அதிகமாக உற்பத்தியைத் தொடங்கலாம், தொடங்கினீர்கள்?" என்று கேட்கிறார்கள். அப்படி கேட்கும்போதுதான், உண்மையிலேயே நாம்

தனி நாடாக ஒதுக்கப்படுகிறோமா இந்திய தேசிய கண்டம் முழுவதற்கும் பயன்படுத்தப்படக்கூடிய அளவில் இருந்து கொண்டிருக்கிறோமா என்பது சந்தேகத்திற்குரிய ஒரு கேள்வியாக இருக்கிறது.

இன்னொன்றை இங்கே சொன்னார்கள். நீங்கள் வறட்சியைப்பற்றி என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள் என்று கேட்கிறார்கள். பொதுவாக எவ்வப்போது எல்லாம் சந்தித்தோமோ அப்போதெல்லாம் சொன்னோம். அதிகாரிகள் இங்கிருந்து எப்போது சென்றார்களோ அப்போதெல்லாம் அந்த நெருக்கடிபற்றி, அரிசி நெருக்கடி பற்றி குறிப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அறிக்கையைத் தயார் பண்ணி வைத்திருக்கிறேன். தப்பு வந்துவிடக்கூடாது என்பதற்காக அதை அப்படியே படிக்க வேண்டும் என்று இருக்கிறேன். என்ன எழுதினார்கள் என்றெல்லாம் கேட்டார்கள். எவ்வளவோ உணர்ச்சியோடும், உணர்வோடும் அரசு சரியான முறையில், நியாயமான முறையில் எடுக்கின்ற காரியங்களுக்கு ஆதரவு தருவோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இருக்கின்ற ஒவ்வொருவரும் அப்படித்தான் இருப்பார்கள். சந்தேகமே இல்லை. அவர்களும் அப்படித்தான் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

"இந்த ஆண்டு இரு பருவ மழைகளும் பொய்த்துவிட்ட காரணத்தால், 58 லட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தியில் 20 லட்சம் டன் குறைந்து விட்டது. பொது விநியோக முறை, சத்துணவுத் திட்டம் ஆகியவற்றுக்கு தற்போது நமது தேவைகள் மாதந்தோறும் 90,000 டன்களாக உள்ளன. கையிருப்பில் ஒரு இலட்சம் டன் அரிசியும், 2 இலட்சம் டன் நெல்லும் உள்ளன. இவற்றைக் கொண்டு நமது 2 மாத தேவைகளைத்தான் நிறைவேற்றிக் கொள்ள முடியும்."

இதை நான் குறிப்பிடும்போது, தெளிவுபடுத்த விரும்புகிறேன். மின்சாரப் பற்றாக்குறையினால் அரவை நிறுத்தப்பட்டு அந்த மில்கள் சரியாக இயங்க முடியவில்லை. எங்களுக்குக் கொஞ்சம் கூலி உயர்வு தர வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதிலே பிரச்சினை எழுந்தது. அதற்குப் பிறகு இசைவு தாவேண்டுமென்று சொல்லி, ஒரு மாதத்திற்கு அந்த முயற்சியில் அவர்கள் செயல்பட்டால்கூட, 20 ஆயிரம் டன்தான் அரைக்கலாம் என்று அவர்கள் செயல்பட்டால்கூட, 20 ஆயிரம் டன்தான் அரைக்கலாம் என்று டோம், வற்புறுத்திக் கேட்டோம், அதிலேதான் நிலைமை இப்படி இருக்கிறது.

"உபரி நெல்லைக் கொள்முதல் செய்து வருகிறோம். ஆயினும், வறட்சி காரணமாக இதில் கணிசமான அளவு அரிசி நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. எனவேதான், இக்கட்டான நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, மைய அரசிடம் நாம் மத்திய தொகுப்பிலிருந்து அரிசி வழங்குமாறு கேட்டோம். ஆனால் அவர்கள் நாம் மத்திய தொகுப்பிற்கு இதற்கு முன்பு அரிசி கொடுக்காததால்தான், மத்திய தொகுப்பிலிருந்து இப்போது அரிசி ஒதுக்கீடு செய்ய முடியவில்லையென்று சொல்லி வருகிறார்கள்.

இது உண்மைக்கு முழு எதிர்ப்பான, 'பொய்' என்று இங்கு சொல்லக் கூடாது, மாறுபட்ட ஒன்று என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனெனில் மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள்கூட இதே கேள்வியைக் கேட்டார்கள். ஆகவே கேபினட்டிலேகூட நான் சொல்கின்ற நிலைமையில், அவர்களிடம் வைக்கப்படவில்லை என்றோ அவர்களிடம் சொல்லப்படவில்லை என்றோ நாம் எண்ணவேண்டியிருக்கிறது.

"நாம் மத்திய தொகுப்புக்கு அரிசி கொடுக்கவில்லை என்பது முற்றிலும் தவறானது. 1970-லிருந்து மத்திய தொகுப்புக்கு வாய்ப்பும் வசதியும் உள்ள போது தமிழக அரசு கீழ்க்கண்டவாறு அரிசி கொடுத்து வந்துள்ளது.

1971-ல் 50,000 டன்கள். 1972-73-ல் 1.11 இலட்சம் டன்கள், 1975-76-ல் 3.93 இலட்சம் டன்கள்.

1978-79-ல் இந்த அரசு மையத் தொகுப்புக்கு இரண்டு லட்சம் டன்கள் அரிசி அளிக்கத் தயாரென்று மைய அரசுக்கு 15—2—1979 அன்று கடிதம் மூலம் தெரிவித்தது. மைய அரசின் உணவுத்துறை, தனது 30—3—1979 நாளிட்ட கடிதத்தில், இந்த 2 இலட்சம் டன் அரிசியை எடுத்துக் கொள்வதாக மாநில அரசுக்குத் தெரிவித்தது.

(பிற்பகல் 12-30)

மைய அரசின் உணவுத் துறைச் செயலர், மைய உணவுத் துறை துணைச் செயலருக்கு 26—4—1979-ல் எழுதிய கடிதத்தில், இந்திய உணவுக் கழகத் தின் மூலம் குறிப்பிட்டவாறு 2 லட்சம் டன் அரிசியை 31—5—1979-க்குள் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

21—5—1979 நாளிட்ட கடிதத்தில் இந்திய உணவுக் கழகத்தின் முதுநிலை பிராந்திய மேலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 24—5—1979 அன்று அவரிடம் எந்தெந்த உணவுக் கிடங்குகளிலிருந்து, இந்த 2 இலட்சம் டன் அரிசியை இந்திய உணவுக் கழகம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற பட்டியல் ஒன்று நேரில் கொடுக்கப்பட்டது. பின்னர் இது குறித்து 20—6—1979 அன்று அவருக்கு ஒரு கடிதமும் எழுதப்பட்டது.

ஆனால் மைய அரசின் இந்திய உணவுக் கழகம் இதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலந்தாழ்த்தியது. இந்த அரிசியை விரைவில் எடுத்துக் கொள்ளுமாறு மைய அரசுக்கு 25—5—1979 அன்று கடிதம் எழுதப்பட்டது. அதில் 31—3—1979-லிருந்து இரண்டு மாத காலம் முடிந்துவிட்டபடியால் விரைவில் அரிசியை எடுத்துக்கொள்ளுமாறு இந்திய உணவுக் கழகத்திற்கு அறிவுறுத்துமாறும் மைய அரசைக் கேட்டுக் கொண்டது. அதைத் தொடர்ந்து 10—7—1979 அன்றும், 8—8—1979 அன்றும், 29—8—1979 அன்றும் அனுப்பப்பட்ட தந்திகள் மூலம் மத்திய தொகுப்புக்கு மாநில அரசு ஒதுக்கி வைத்திருக்கும் அரிசியை விரைவில் எடுத்துக்கொள்ளுமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. 12 மண்டலங்களில் உள்ள கிடங்குகளில் மத்திய தொகுப்புக்காக மாநில அரிசியை வைத்துள்ளது என்ற பட்டியல் 24—5—1979 அன்றே இந்திய உணவுக் கழகத்தின் முதுநிலை பிராந்திய மேலாளரிடம் நேரில் கொடுக்கப்பட்டதோடு 20—6—1979 அன்று கடிதம் மூலமாகவும் எழுதப்பட்டிருந்தது. இரண்டு மாதங்களுக்குள் நாம் ஒதுக்கீடு தந்த 2 இலட்சம் டன் அரிசியை அவர்கள் ஆய்வு செய்து முடித்து எடுத்துக் கொள்ள வேண்டியிருக்க, ஏழு மாதங்களுக்குப் பின்னும் பெரும் பகுதியை ஆய்வு செய்யாமல் ஒரு பகுதியை மட்டும் ஆய்வு செய்து, அதிலும் 3,220 டன் அரிசியை மட்டும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். மாநில அரசின் உணவுத் துறை அதிகாரிகள் வெவ்வேறு மட்டங்களிலுள்ள இந்திய உணவுக் கழகத்தின் அதிகாரிகளை அணுகியபோதிலும் எவ்விதப் பலனும் இல்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் இந்திய உணவுக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்ட அரிசியைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திற்கு மாநில அரசு தள்ளப் பட்டது. இப்படி 9 மாதங்களுக்கு அரிசி கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்ததற் கான செலவு (கேரியிங் சார்ஜ்) மட்டும் ரூ. 4 கோடியே 54 இலட்சத்து ... ஆயிரம் என்று கணக்கிடப்பட்டது. இந்திய உணவுக் கழகம் இந்த அரிசியை எடுத்துக்கொள்ள விருப்பம் இல்லையென்பதை முன்பே தெரிவித்திருந்தால் இந்தக் கையிருப்பை வெளிச் சந்தையில் எல்லோருக்கும் லாபம் பயக்கும் ... விற்பனை செய்து இருக்க முடியும் என்பதையும், இந்திய உணவுக் ... 9 மாத காலம் காமதப்படுத்தியதாலேயே கேரியிங் சார்ஜ் மூலம் ...

இழப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ளதென்றும் 28—12—1979 நாளிட்ட கடிதத்தில் மைய அரசுக்கு மாநில அரசால் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்கிடையில் மைய அரசு, தமிழக அரசுக்கு இப்போது சந்தேகம் தீருமென்று நினைக்கிறேன்—வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. இந்தத் திட்டத்திற்காக மைய அரசு நமக்கு அளிக்க வேண்டிய அரிசியை நாம் மத்திய தொகுப்புக்காக ஒதுக்கி வைத்திருந்த 2 இலட்சம் டன்னிலிருந்து எடுத்துக்கொள்ளலாமென்று மைய அரசிடம் அனுமதி பெற்று அவர்கள் அதற்கான விலையையும் தந்தார்கள்.

தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு ஒதுக்காத அரிசியாக இருந்தால் அவர்கள் பணம் தரவேண்டிய தில்லை. அவர்களே ஏற்றுக்கொண்டார்கள் என்பதுதான் இதிலுள்ள உண்மை.

அதன்படி, 9 மாத காலத்திற்குப் பிறகு 73 ஆயிரம் டன் அரிசி வேலைக்கு உணவுத் திட்டத்துக்கு எடுத்துப் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய அரிசி பொது விநியோக முறையில் வழங்கப்பட்டது. உண்மை இவ்வாறு இருக்க, தமிழக அரசு மத்திய தொகுப்புக்கு அரிசி தரவில்லை என்று கூறுவது நம்மிடம் முற்றிலும் தவறானது. மேலும் நாம் ஏற்கெனவே சொல்லியபடி நாம் மத்திய தொகுப்புக்கு அரிசி கையிருப்பு உபரியாக இருந்தபோதெல்லாம் நாம் மத்திய தொகுப்புக்கு வழங்கியுள்ளோம். ஆனால் மாநிலத் தேவைக்கே வேண்டிய அரிசி உற்பத்தி இல்லாத நிலையில்தான், நாம் மைய அரசுக்குக் கொடுக்க இயலாத நிலையில் இருந்து வருகிறோமே தவிர மத்தியத் தொகுப்பிற்கு அரிசி கொடுக்கக்கூடாது என்ற காரணத்தினால் அல்ல. மாநிலத்தில் அரிசி உபரியாக இருந்தபோது, மத்திய மத்தியத் தொகுப்புக்கு வழங்கிய நாம், பற்றாக்குறை ஏற்பட்டபோது, மத்திய அரிசி தொகுப்பிலிருந்து அரிசி கேட்க வேண்டிய நிலைக்கு ஆளானோம். அவர்கள் எடுத்துக் இருக்கிற நேரத்தில் நாம் கொடுக்கத் தயார் என்று கூறியும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது நமக்குப் பற்றாக்குறை. நாம் வழங்கக் கூடிய நிலையில் இல்லை. கேட்கக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்று சொல்கிறேன்.

நாம் 17,700 நியாய விலைக் கடைகள் மூலம் தமிழகம் முழுவதிலும் உள்ள 1,17,00,000 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி என்று வினியோகித்து வருகிறோம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி

பிரதம அமைச்சருடைய 20 அம்சத் திட்டத்தில் 17-வது அம்சம் அதி மான நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தி, பொது விநியோக முறையை விரிவுபடுத்துதல், தொலை தூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்துதல், தொழிற்சாலை, தொழிலாளர்கள் மற்றும் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல், வலுவான ஒரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல் போன்றவை ஆகும். இதையெல்லாம் நாம் செய்யவில்லை. ஆனால் 17,000 கடைகளைத் துவக்கி மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறோம். மத்திய அமைச்சரின் பாராட்டையும் பெற்றிருக்கிறோம். தற்போது இந்த அம்சத்தைத் தொடர்ந்து சிறந்த முறையில் நடத்த அரிசி கேட்கும்போது வெறும் அறிவுரை வழங்கு கிறார்கள். இதுதான் 20 அம்சத் திட்டத்தில் 17-வது அம்சத்தை நிறை வேற்றுவதற்குக் கிடைக்கும் பரிசு.

1982 ஏப்ரல் மாதம் முப்பத்தி ஆறாயிரத்து எழுபத்தி எட்டு டன் அரிசி குடும்பக் கார்டுகள் மூலம் விநியோகிக்கப்பட்டது. இந்தத் தேவை படிப்படி யாக உயர்ந்து, டிசம்பர் மாதம் 86,625 டன் என்ற அளவுக்கு வந்துள்ளது. எனவே இப்பொழுது மாதம் 90,000 டன் அளவுக்கு நமக்குத் தேவைப்படு கிறது. 1980-ம் ஆண்டு முழுவதற்கும் நாம் மத்திய அரசிடம் கேட்ட அளவு 1,91,000 டன்கள். அவர்கள் அந்த அளவு ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் அவர்களிடமிருந்து உண்மையில் நமக்கு வந்து சேர்ந்தது 93,205 டன்கள்தான். 1981-ல் வறட்சி நிலை அதிகமானதால் 11,26,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்யு மாறு கேட்டோம். அவர்கள் 6,10,000 டன்கள் ஒதுக்கீடு செய்வதாகக் கூறி னார்கள். ஆனால் வந்ததோ 4,08,000 டன்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கேட்டார்கள், 3 ஆண்டுகளாக வறட்சி நிலை இருக்கிறதே, என்ன செய்தீர்கள், என்ன அக்கறை காட்டினீர்கள் என்று கேட்டார்கள். அப்போது இந்தத் தகவல்களைச் சொல்லவில்லை. உண்மை நிலை இதுதான். ஆனால் வந்ததோ 4,08,000 டன்கள்தான். 1982 மே மாதம் வரை நாம் 5 லட்சம் டன்கள் கேட்டோம். ஆனால் அவர்கள் ஒதுக்கீடு செய்தது 1,95,000 டன்கள். ஆனால் வந்து சேர்ந்ததோ 1,61,000 டன்கள்தான். ஆக, நாம் கேட்டது 5 லட்சம் டன்கள், வந்து சேர்ந்தது 1,61,000 டன்கள். 1982 மே மாதம் முதல், மாதம் ஒன்றுக்கு 1 லட்சம் டன் அனுப்பும்படி கேட் டோம். பிறகு 80,000 டன்கள் அனுப்பும்படி கேட்டோம். ஜூன் மாதத்தி லிருந்து இன்றையவரையில் அதாவது கடும் வறட்சியும், பெரும் அரிசிப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், மையத் தொகுப்பிலிருந்து நமக்கு அரிசி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அரசு கேட்கவில்லை அரசு அக்கறை இல்லாமல் இருக்கிறது, மக்களோடு விளையாடுகிறார்கள் மக்களுடைய உண்மையான நிலைமையைப் புரிந்துகொள்ளவில்லை, அப்

1983 பிப்ரவரி 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பிலே இருக்கிறோமென்ற அகங்காரத்தில் எல்லோரையும் அலட்சியப்படுத்து கிறார்கள் என்று பேசுகிறவர்கள் இந்த உண்மைகளைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள் என்பதால் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இதை வெளியே சொல்லி, கட்சிக்காரர்களிடம் உண்மையைச் சொல்லி, இதுதான் உண்மை, எம்.ஜி.ஆர். இடமிருந்து கிடைத்துள்ள பதில் என்று சொல்லி, இதை மக்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அக்டோபர் மாதம் டெல்லி சென்றிருந்தபோது நான் பிரதமரைச் சந்தித்து மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்குமாறு கோரிய கடிதம் ஒன்றை நேரில் கொடுத்தேன். பிறகு 7—1—1983 அன்று பிரதமருக்கு மற்றொரு கடிதம் ஒன்றையும் அனுப்பினேன். இதுவரை அந்தக் கடிதத்திற்கு பதில் இல்லை. நவம்பர் மாதம் டெல்லி சென்றிருந்தபோது நான் மைய வேளாண்மை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களை நேரில் சந்தித்து நமது கோரிக்கையை வலியுறுத்தினேன். இந்தச் சந்திப்பை நினைவூட்டி 7—1—1983-ல் அவருக்குக் கடிதம் எழுதினேன். 8—11—1982 அன்று நிதியமைச்சர் மத்திய வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களுக்கு மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கடிதம் எழுதினார். 14—10—1982 மற்றும் 13—11—1982 ஆகிய தேதிகளில் மைய அமைச்சர்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை

(பிற்பகல் 12-40)

வலியுறுத்தினார். 13—11—1982 ஆம் நாளன்று முன்னாள் மைய விநியோக அமைச்சர் திரு. பகவத் ஜா ஆசாத் அவர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டபோதும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். உணவுத் துறை இணைச் செயலாளர் 1982 நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் மற்றும் 21—1—1983 அன்றும் மத்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்து நிலைமை களை விளக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், 8—9—1982, 19—9—1982, 14—10—1982, 12—11—1982 மற்றும் 22—12—1982 ஆகிய தேதிகளில் மாநில உணவுத்துறை செயலர், மத்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். 23—10—1982 அன்று முன்னாள் மத்திய வேளாண்மை இணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமி நாதன் சென்னையில் உயர் அதிகாரிகள் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதும், அரிசி நிலைமை பற்றி எடுத்துச் சொல்லி கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. 10—1—1983 அன்று மத்திய வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு ராவ் பிரேந்திர சிங் அவர்களிட மிருந்து வந்த கடிதத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அரிசியை நலிந்த பிரிவின

ருக்கு மட்டும் நியாயமாகப் பங்கீடு செய்வதன் மூலம் நிலைமையைச் சமாளிக்குமாறு தெரிவித்திருக்கிறார்கள். இருபது அம்சத் திட்டத்தைச் சொல்கிறார்கள். எங்கே இருபது அம்சத் திட்டம்? 17,500 நியாயவிலைக் கடைகள் வேண்டும் என்று சொல்பவர்கள், 20 அம்சத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டங்களையெல்லாம் அறிவித்திருப்பவர்கள்—நாம் கேட்டதற்குத் தந்திருக்கும் பதில் இது. நாம் அரிசி கேட்டதற்கு அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். இங்கு இருக்கின்ற நெருக்கடி நிலைமையை அவர்கள் அனுதாபத்துடன் அணுகியதாகத் தோன்றவில்லை, புரிந்துகொண்டதாகவும் தோன்றவில்லை. பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு அவர்களுக்குக்கூட இந்தத் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்ற ஒரு பரிதாபகரமான நிலைமையை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில் நாம் கோதுமையைக் கொண்டு ஓரளவு நிலைமையை சமாளிக்கலாம் என்று கருதினால், ஒரு ஆண்டுக்கு முன் 65 ஆயிரம் டன் கோதுமையை அரவை ஆலைகளுக்குக் கொடுத்து வந்ததைக் கூட 33 ஆயிரம் டன்களாகக் குறைத்துவிட்டார்கள். நாம் அதற்குப் பிறகு, குறைந்த அளவு 40 ஆயிரம் டன்களாவது ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகின்றோம். ஆனால் மத்திய அரசு 33 ஆயிரம் டன் என்ற அளவிலேயே அரவை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்கிறார்கள். பொது விநியோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 11 ஆயிரம் டன் கோதுமை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கேட்டு வந்தோம். ஆனால் மத்திய அரசு 4 ஆயிரம் டன்கள்தான் கொடுத்து வருகிறார்கள். இந்த அளவைக் கொண்டு ஒரு குடும்பக் கார்டுக்கு ஒரு மாதத்துக்கு ஒரு கிலோ கோதுமை கூட கொடுக்க முடியாது.

இப்போது உள்ள உணவு நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கேட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆந்திரா நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமோ அல்லது வேறு மாநிலக் கழகங்களோடு தொடர்பு கொண்டு, அரிசி வாங்குவதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து அரிசியை நேரிடையாகக் கொள்முதல் செய்வதற்கும், மாநில அரசுக்கு அதிகாரமும், வழியும் இல்லை. சீராகக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரிசி உணவுப் பங்கீட்டு முறையில் நாடு முழுவதும் ஒரே மண்டலம் என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மைய அரசு கடுமையான பற்றாக்குறையைச் சந்திக்கும் தமிழகத்துக்கு மட்டும் அரிசி வாங்கும் அனுமதியை [illegible] கொள்கையின் அடிப்படையில் என்று தெரியவில்லை.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான உணவுத் தட்டுப்பாட்டு நிலைமையைச் சமாளிக்க இந்த மாநில அரசு இயன்றவரையில் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் முறையாகவும், நியாயமாகவும் உறுதியாகவும் செய்து கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் உணவு நிலைமை மிக நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதற்கு முழு பொறுப்பும் பொதுவாக மத்திய அரசும், குறிப்பாக மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராவ் பீரேந்திர சிங் அவர்களும் தாம் ஏற்க வேண்டியவர்களாகிறார்கள். மத்திய வேளாண்மை அமைச்சர் இந்தப் பிரச்சினையில் அக்கறையோ, அனுதாபமோ, அனுசரணையோ காட்டாமல் இப்போது இருந்து வருவது வேதனை தருவதாக இருக்கிறது. அவரது 10—1—1983 கடிதத்தின் மூலம் அரிசி அனுப்புவதற்குப் பதிலாக அறிவுரை மட்டுமே தந்திருப்பது வருந்துவதற்குரியதாக இருக்கிறது. இவற்றைச் சொல்லும்போது, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், இனி வேறு என்ன செய்யவேண்டும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கே எதிர்க்கட்சி . . , . .

திரு. ஜி. சுவாமிநாதன்: திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது தாய்லாந்திலிருந்து அரிசியை கப்பல் மூலமாக வரவழைக்க மத்திய அரசை அணுகி அவர்களும் அனுமதியளித்து, கப்பல்கள் மூலமாக அரிசி வரவழைக்கப்பட்டது. அதுபோல ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா அதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நாம் இப்போது அனைத்து முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆந்திராவில் இருந்து வாங்க வேண்டும் என்று சொன்னால், அங்கே இருக்கும் உணவுக் கார்ப்பரேஷன் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கொடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுதான் நிலைமை. ஆதலால் சொல்கிறேன், இங்கே இந்த அரசு தமிழக மக்களுடைய பரிதாபகரமான நிலைமைகளை நீக்க, நடவடிக்கை எடுக்குமானால் பூரணமான ஒத்துழைப்பு தருவதாகச் சொன்னார்கள். நான் இப்போது எந்த நடவடிக்கையும் கட்சியின் சார்பிலோ அரசின் சார்பிலோ சொல்ல முனையவில்லை. இருந்தாலும் தலைவர் அவர்களே தங்கள் மூலம் ஒன்றைச் சொல்கிறேன். இந்த அரிசிப் பிரச்சினையில், இவ்வளவு உண்மைகளையும் நாட்டு மக்களுக்கு மறைத்துவிட்டு, நீங்கள் சென்ட்ரல் பூலுக்குக் கொடுக்கவில்லை, ஆகவே, நாங்களும் கொடுக்க முடியாது என்று உண்மைக்குப் புறம்பாகச் சொல்லும் ஒரு உணவு அமைச்சர் அங்கே [illegible] கொண்டு, அவருடைய சக அமைச்சர்களுக்குக் கூட தெரியாமல் [illegible] நிலைமையில் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று இப்படி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 8

உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிடும் நிலைமையில் நாம் எடுக்க வேண்டிய முடிவுகள் தவிர்க்க முடியாத முடிவுகள் என்று நான் நினைக்கிறேன். இந்த உண்மை தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் தெரிய வேண்டும். ஆகவே, நாளையதினம் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் நான் முதலமைச்சர் என்ற முறையில் உண்ணாவிரதம் மேற்கொள்கிறேன் என்றும் அதற்குப் பிறகாவது அந்த அரசு உண்மைகளை வெளியிட்டு தமிழகத்திற்கு ஏதாவது செய்யப் போகிறதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்க நான் தீர்மானித்திருக்கிறேன் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் அவர்களின் உரையின் மீது கொண்டு வந்திருக்கும் நன்றி அறிவிப்பு தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: முக்கிய தேவையான, வேண்டிய, தகவல்களை உணவு நிலைமைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனக்கு ஒரேயொரு சந்தேகம் அதையும் நிவர்த்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய சென்ட்ரல் பூலுக்கு தமிழகம் தன்னுடைய பங்கைத் தரவில்லை, தராத நிலைமையிலே எப்படி அரிசி கொடுப்பது என்று கேட்டபோது, நம்முடைய தரப்பிலேயிருந்து 10 நாட்களுக்கு முன்னதாக அப்படி கொடுக்கவில்லை என்றால் என்ன? அப்படியிருந்தாலும் மத்திய அரசு நமக்கு கொடுக்க வேண்டுமே என்று பதில் கொடுக்கப்பட்டதே, அது எந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்டது. இவ்வளவும் நடந்திருக்கும்போது . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நாங்கள் சொல்லிவிட்டோம். நாங்கள் கொடுத்திருக்கிறோம். கொடுக்க முயன்றோம் வாங்குங்கள் என்று சொன்னோம். அதற்கு எந்தவிதமான மறுப்பும் இல்லாமல் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்கொண்டு இருந்த காரணத்தினால்தான் அப்படியே இல்லை என்று சொன்னாலுங்கூட, இந்திய ஒருமைப்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு மாநிலத்தில் கஷ்டம் வரும்போது அந்த மாநிலத்திற்குக் கொடுக்கக்கூடாதா? அந்த நிலைமையில் அரிசி அல்லது விளை பொருள்கள் என்பது ஏதாவது தனிப்பட்ட அமைச்சருக்கு சொந்தமாக்கப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் என்ன நிலைமை? இங்கே தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கும்போது அரிசி அனுப்ப முடியாது என்று சொல்வது மட்டுமல்ல, நீங்கள் கொடுக்கவில்லை, ஆகவே, நானும் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஒருமைப்பாடு எங்கிருந்து வரும்? ஆதலால்தான் அந்தக் கேள்வியை உரிமை யோடு கேட்டோம்.

1983 பிப்ரவரி 8]

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு அடிப்படைப் பிரச்சினையை நான் பேசும்போது எழுப்பினேன். ஆளுநர் அவர்களின் உரையில் ஒரு கொள்கையாக மிகவும் அருமையான ஒரு கொள்கையை அமைச்சரவை முடிவெடுத்து அறிவித்திருக்கிறது. அதை ஆளுநர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர் எதிராக ஒரு முடிவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களை முழுமையாக விடுவித்து ஆழ்ந்த கல்விப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற ஆளுநருடைய உரையைத் தெளிவாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு நேர் மாறான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவர் இந்த அமைச்சரவையில் நீடித்து இருப்பது நியாயம்தானா என்பதை . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது வினா எழுப்புவதல்ல, விவாதத்தை எழுப்புவது.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவுப் பிரச்சினையில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தையும், தொடர்பையும் உண்மை நிலைமைகளையும் தெளிவாக தெரிவித்து இருக்கும் நிலைமையில், அந்த உணர்வோடு நாங்களும் ஒன்றுகிறோம். அதை மத்திய அரசு உணரும் நிலைமையில் நாளை காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொன்னார்கள். நாளையதினம் பேரவையும் கூடுகிறது. மேலவையும் கூடுகிறது. அதைவிட, இரண்டு அவைகளிலேயும் மத்திய அரசினுடைய கொள்கைக்கு எதிராக ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து, ஆளும் கட்சிகளும், எல்லா இதர கட்சிகளும் சேர்ந்து அதை நிறைவேற்றி அனுப்புவது மிகவும் சிறந்தது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையைச் செய்துவிட்டு அந்த உண்ணாவிரதத்தை நிறுத்திவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுதான் இதைவிட வலிமையையூட்டும் என்று நம்புவதால் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தால்கூட இந்தத் தீர்மானம் வரவேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்றி உண்ணாவிரதத்தை நிறுத்தி வைக்கலாம் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்து நானும் இந்த அவையோடு இணைந்து மத்திய அரசினுடைய போக்குக்குக் கண்டனம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சிக்காரர்கள் யாரும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்திருக்கிறேன். அண்ணா சதுக்கத்தில்தான் நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் எவ்வளவு பொறுத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவு பொறுத்துக் கொண்டாகிவிட்டது. அவர்கள் உண்மை தெரிந்திருக்கிறார்களா அல்லது தெரியாமல் இருக்கிறார்களா என்று பார்த்தால்—ஒரு பாதுகாப்பு அமைச்சருக்குக்கூட இந்த உண்மை தெரிவிக்கப்படாமல் மறைக்கப்பட்டிருக்கிறது, அவருக்குச் சொல்லப்படவில்லை என்றால் அந்த உண்மை இந்த நாடு முழுவதும் தெரிந்தாக வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வதன் மூலமாகத்தான் இந்த நாட்டில் உள்ள தமிழகம் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்படுகிறது என்பது தெரிய வரும். அப்போதுதான் இதை நாட்டு மக்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். நான் இதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளப் போவதில்லை என்பதை இங்கே சூசகமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னைத்தான் நான் துன்பப்படுத்திக்கொள்ளப் போகிறேனே தவிர யாரையும் நான் துன்பப்படுத்தப் போவதில்லை. என்னுடைய கட்சிக்காரர்கள் இந்த மன்றத்திலேயும் சரி அந்த மன்றத்திலும் சரி, மற்ற கட்சியைச் சேர்ந்த தலைவர்களோடு பேசி என்ன முடிவு செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்கள். என்னைப் பொறுத்தவரையில் அண்ணா சதுக்கத்தில் நாளை காலை 10 மணி முதல் 5 மணி வரை இந்தப் போக்கைக் கண்டித்து உண்ணாவிரதம் இருப்பதாக முடிவு செய்திருப்பதால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களின் கோரிக்கையை ஏற்க முடியாது இருக்கிற காரணத்தால், என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி பேச எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் இதை அனுமதிக்கப் போவதில்லை. தயவுசெய்து உட்கார வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது அடிப்படைப் பிரச்சினையானது. இதை அனுமதிக்கவில்லை என்றால்...

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விவாதம் எழுப்புவதற்கு இதுவல்ல நேரம் என்பதைக்கூட உணரவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? நான் அனுமதிக்கப் போவதில்லை....

(உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் தான் பேச அனுமதிக்கப்படாததால் வெளிநடப்புச் செய்வதாகக் கூறி அவையை விட்டு வெளியேறினார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் தம் தீர்மானத்தை வற்புறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் நான் திருத்தங்களைத் தந்திருந்தாலும், அவைகளைவிட நெருக்கடியான பிரச்சினையை இந்த மாநிலம் சந்தித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் என்னுடைய திருத்தங்களின் மூலம் நான் கொண்டு வர விரும்பிய நோக்கங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணர்ந்து நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையோடு என்னுடைய திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினரின் திருத்தம் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிற உணர்வில் ஒன்றிப்போய் வேறு எந்த நினைவும் இப்போது தேவையில்லை என்ற அடிப்படையில் நான் தந்திருக்கிற என்னுடைய திருத்தங்களைத் திரும்பப் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினரின் திருத்தம் திரும்பப் பெறப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேறியது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 9—2—1983 அன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.53)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

136. Notification issued with G.O. Ms. No. 668, Prohibition and Excise, dated the 11th September 1982 regarding certain amendments to the Tamil Nadu Indian-made Foreign Spirits (Supply by Wholesale) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

137. Notification issued with G.O. Ms. No. 21, Prohibition and Excise, dated the 18th January 1982 regarding amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981. [Laid on the table of the of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

138. Notification issued with G.O. Ms. No. 1797, Rural Development and Local Administration, dated the 22nd November 198[illegible] regarding declaration of certain villages as gramdhan villages [Laid on the table of the House under section 28(4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958).]

139. Sixteenth Annual Report of the Tamil Nadu Small Industries Corporation Limited for the year 1980—81 with the Audit Report and Supplmentary comments of the Comptroller and Auditor-General of India (Tamil and English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

140. Sixth Annual Report of the Tamil Nadu Civil Supplies Corporation Limited, Madras for the year 1977-78 (Tamil and English). [Laid on the table of the House under Section 619 (e) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. *Reports, Notifications and Other Papers.*

* 18. Speech of the Hon. Thiru S. Ramachandran, Minister for Electricity, initiating the discussion on the Annual Financial Statement for 1982-83 and the Supplementary Financial Statement for 1981-82 of the Tamil Nadu Electricity Board (Tamil and English).

* Circulated to M. L. Cs. on 7th February 1983.

19. Twenteth Report on the Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for the years 1976-77 and 1977-78. (Tamil and English).

20. Twenty first Report on paragraphs 3.01 to 3.05 of the Report (Commercial) of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 relating to the Southern Brick Works Limited. (Tamil and English).

21. Twenty Second Report on action taken by the Government on the recommendations contained in the Nineth Report of the Committee on Publir Undertakings (1977-79) on the points pertaining to the Tamil Nadu Electricity Board in the Report (Commercial) of the Comptroller and Auditor-General of India for the year 1972-73 (Tamil and English).

இணைப்பு—I.

(81ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 57-க்கான விடையைக் காண்க).

1977-ஆம் ஆண்டு ஜனவரி திங்களிலிருந்து, 31–12–1981-ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டிலுள்ள நடுத்தர மற்றும் பெருந் தொழிற்சாலைகளின் பட்டியல்.

வரிசை எண்.	கம்பெனியின் பெயர்.	இடம்.		பொருள்.
(1)	(2)	(3)		(4)
1	அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்கினிங்ஸ் லிமிடெட், அரக்கோணம்.	அரக்கோணம்	..	காஸ்டிங்ஸ்.
2	அரவிந்த லெதர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 9, வுல்ஹூகேட்டன் தெரு, பெரிய மேடு, சென்னை.	ஆர்க்காடு	..	செமிபினிஷ்டு லெதர்.
3	அமராவதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பேப்பர் மில்ஸ் லிமிடெட், மிடப்பாடி, முடத்துக்குளம், மதுரை.	திண்டுக்கல்.	..	பேப்பர்.
4	அஸிட்டிலின் மற்றும் இண்டஸ்ட்ரியல் கேஸ் சிலிண்டர்ஸ், 6, சாரதாம்பாள் தெரு, கோகுலம் காலனி, சென்னை.	அம்பத்தூர்	..	கேஸ் சிலிண்டர்ஸ்.
	அஸ்ரா வெல்டிங் எலக்ட்ரோ மான்யூபேக்சரர்ஸ் லிமிடெட், 58, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.	சென்னை	..	வெல்டிங் எலக்ட்ரோட்ஸ்
6	அலைய்டு பைப்பிங் அண்டு ப்ராடெக்ஸ் லிமிடெட், சிப்காட் இண்டஸ்ரையல் காம்ப்லெக்ஸ், ஹோசூர், தர்மபுரி.	ஹோசூர்.	..	பைப் கப்லிங்ஸ்.
7	ஐயப்பன் டெக்ட்ஸ்டைல்ஸ் லிமிடெட், அச்சுதன் வாயல் ராம்நாடு.	ராம்நாடு	..	டெக்ஸ்ட்டைல்ஸ்.
8	ஸ்ரீ அய்யனார் ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், மல்லாங்கிணர்.	மல்லாங்கிணர்	...	டெக்ஸ்ட்டைல்ஸ்.
9	சி. எ. அக்தார் அண்டு கம்பெனி, கன்னிகாபூராக் கிராமம், வாலாஜா தாலுகா, வட ஆற்காடு.	வாலாஜா	..	லெதர்.
10	ஆற்காடு மில்ஸ் லிமிடெட், உலகம் நாதன் கிராமம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.	கள்ளக்குறிச்சி.	..	டெக்ஸ்டைல்ஸ்.
11	பெனில் லெதர் கார்ப்பரேசன் நேவல் ஹாஸ்பிடல் ரோடு, பெரியமேட், சென்னை.	செங்கல்பட்டு	...	லெதர்.

வரிசை எண்.	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
12	பாலாஜி ஆயில் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம் ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை ..	எடிபிள் ஆயில் ரிபைனிங்.
13	சோழன் இன்ஜினீயரிங் கார்ப்பரேசன் லிமிடெட், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.	கும்பகோணம் ..	இன்ஜினீயரிங் இண்டஸ்ட்ரீஸ்.
14	காரனேசன் லித்தோ, திருதங்க ரோடு, சிவகாசி, இராமநாதபுரம் மாவட்டம்.	சிவகாசி ..	.. பிரிண்டிங்.
15	கோரமண்டல் லெதர் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண். 22, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை ..	லெதர்.
16	ஸ்ரீ தனலெக்ஷ்மி கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ், முகந்தபுரம் கிராமம், ராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை ..	எத்தில் ஈதர்.
17	டெக்கான் கெமிசி பிரைவேட் லிமிடெட், விருதுநகர், இராமநாதபுரம்.	திருமங்கலம் ..	பருத்தி விதை எண்ணெய்

[illegible]	[illegible] கோசன் பிரைவேட் லிமிடெட், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ஒசூர், தர்மபுரி மாவட்டம்.	ஒசூர் ..	.. கோசஸ்.
19	என்ஜினீயரிங் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், 99/100 தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ஒசூர், தர்மபுரி மாவட்டம்.	ஒசூர் ..	.. கன்வேயர்ஸ்.
20	எம்.பி. டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், கொளத்தூர் கிராமம், வேடசந்தூர் வட்டம், மதுரை (மாவட்டம்).	கொளத்தூர் ...	டெக்ஸ்டைல்ஸ்.
21	ப்ளோரிண்ட் ஸ்சூல் பிரைவேட் லிமிடெட், எம். சி. சாலை, சூலூர் கிராமம், வட ஆற்காடு மாவட்டம்.	சூலூர் ..	லெதர்.
22	ஒசூர் கிரேங்க்சாப்ட்ஸ், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ஒசூர், தர்மபுரி மாவட்டம்.	ஒசூர் ..	கிரேங்க்சாப்ட்ஸ்.
23	இன்டர் கான்டினென்டல் லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண். 24, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், ராணிப்பேட்டை.	ராணிப்பேட்டை ...	லெதர்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள் (4)
24	கே. எச். லெதர் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், பிஞ்சி கிராமம், வட ஆற்காடு மாவட்டம்.	வட ஆற்காடு மாவட்டம்.	லெதர்.
25	இனிட்வேல் நீடில்ஸ் லிமிடெட், தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ஓசூர், தர்மபுரி மாவட்டம்.	ஓசூர் ...	... நிட்டிங் நீடில்ஸ்.
26	கெம்ப் இந்தியா லிமிடெட், பி.பி. எண். 2717, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர்.	மேட்டுப் பாளையம்	... நிட்டிங் நீடில்ஸ்.
27	குவாலிட்டி இண்டஸ்டிரீஸ், 43, என்பி தொழிற் பேட்டை, அம்பத்தூர், சென்னை-600 058.	அம்பத்தூர்	.. நிட்டிங் நீடில்ஸ்.
28	குவாலிட்டி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், நெல் முண்டிக்கரை கிராமம், திருப்புவனம், இராமநாதபுரம்.	திருப்புவனம்	... பேப்பர்.
29	லைட்லான் பிரைவேட் லிமிடெட், தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் இணையம், ஓசூர், தர்மபுரி மாவட்டம்.	ஓசூர் ...	... பாலிதிலின்.
30	மதுரை ஆயில் அண்டு பெர்டிலைசர் திண்டுக்கல், மதுரை மாவட்டம்.	திண்டுக்கல்	.. சால்வண்ட் எக்ஸ்ட்ராக்சன்.
31	மார்சல் அண்டு சன்ஸ், 9, கடற்கரை இரண்டாவது சந்து, சென்னை-1.	அம்பத்தூர்	.. கிரேன்ஸ்.
32	மெட்ராஸ் மோட்டார்ஸ் லிமிடெட், அணைக்கரைப்பட்டி, சிங்கம்புணரி அஞ்சல், இராமநாதபுரம்.	அம்பத்தூர்	.. கேஸ்டிங்ஸ்.
33	சென்னை வனஸ்பதி லிமிடெட், 18, பவர் ஹவுஸ் சாலை, விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டம்.	விழுப்புரம்	.. வனஸ்பதி.
34	நால்கோ மெட்டல் ப்ராடக்ஸ் பிரைவேட் லிமிடெட், 331-1-ஏ, நிலக்கோட்டை, மதுரை மாவட்டம்.	நிலக்கோட்டை	.. கிங்க் டஸ்ட் அண்டு அலுமினியம் பவுடர்.
35	நாசரத் டேனிங் கம்பெனி, 108, எம்.சி. ரோடு, ஆம்பூர், தென் ஆற்காடு மாவட்டம்.	ஆம்பூர் ...	... லெதர்.
36	நெய்வேலி கிராமிக்ஸ் அண்டு ரிப்ரேக்டரிஸ் லிமிடெட், வடலூர், தென் ஆற்காடு மாவட்டம்.	வடலூர் ...	... இன்சுலேட்டர்
37	ஓரியண்ட் விசன் லிமிடெட், 15 அண்டு 16 சிப்காட் தொழில் இணையம், ஓசூர், தர்மபுரி (மாவட்டம்).	ஓசூர் ...	... டி.வி. ரிசீவர்ஸ்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
38	பத்மா பாக்கேசஸ் பிரைவேட் லிமிடெட், ஓசூர் தர்மபுரி மாவட்டம்.	ஓசூர் ..	.. அகலமான படச்சுருள்
39	ரேவதி தசி. பி. எக்யுப்மெண்ட் லிமிடெட், பொள்ளாச்சி சாலை, முதுகுளம், கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர்	.. மைனிங் எக்யுப்மெண்ட்
40	சீதா லெஷ்மி மில்ஸ் லிமிடெட், மதுரை.	மதுரை	.. டெக்ஸ்டைல்ஸ்
41	சிவகாசி இண்டஸ்டிரியல் கோவாப்ரேட்டிவ் பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், விஸ்வநாதன் கிராமம், சாத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.	சிவகாசி	.. பிரிண்டிங்.
42	சுமதி பிராசஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், ராஜபாளையம், இராமநாதபுரம்.	இராஜபாளையம் ..	பிரிண்டிங்.
43	எஸ்.எஸ்.எம். புரோசசிங் மில்ஸ், குமாரபாளையம், சேலம்.	சேலம் ..	.. மினரல்ஸ்.
44	திரு. ராமநாராயணன் மில்ஸ் லிமிடெட், மேட்டுப்பாளையம் சாலை, ஆண்டலூர் கிராமம், பெரிய நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர்.	மேட்டுப்பாளையம் ..	டெக்ஸ்டைல்ஸ்.
45	சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அரக்கோணம் சாலை, சோளிங்கர், வட ஆற்காடு மாவட்டம்.	சோளிங்கர்	.. டெக்ஸ்டைல்ஸ்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
[illegible]	[illegible] டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், [illegible]பாளையம், சூலூர் அஞ்சல், கோயம்புத்தூர் (மாவட்டம்).		டெக்ஸ்டைல்ஸ்.
47	எஸ். என்.ஏ.பி. நேச்சுரல் அல்சினேட் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையம், ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை ..	சோடியம் அல்சினேட்.
48	எஸ்.ஏ.எஸ். கெமிக்கல்ஸ், பிளாட் எண் 33, சிப்காட் தொழில் இணையம், ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை ..	அலுமினியம்.
49	எஸ்.எஸ்.எம். சைசிங் சென்டர், எஸ். எஸ்.எம். தொழில் இணையம், சேலம் மாவட்டம்.	இடப்பாடி ..	டெக்ஸ்டைல்ஸ் பிராசசிங்.
50	எஸ்பிஜிசி மெட்டல் இண்டஸ்டரீஸ் பிரைவேட் லிமிடெட், குட்சட் சாலை, விருதுநகர், இராமநாதபுரம்.	விருதுநகர் ..	டின் கன்டைனர்ஸ்.
51	சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் லிமிடெட், "சிப்காட்" காம்ப்ளக்ஸ், ஹோசூர்.	ஹோசூர் ..	.. பைப் பிட்டிங்ஸ்.
52	சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் (பிரைவேட்) காமராஜ் காலனி, சேலம்.	சேலம் ..	.. டெக்ஸ்டைல்.
53	சதர்ன் கேஸ்டிங்ஸ் லிமிடெட், எ. 8, மறைமலை நகர், இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ், செங்கை மாவட்டம்.	மறைமலை நகர்	கேஸ்டிங்க்ஸ்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
54	ஸ்ரீ ராமகிருஷ்ணா மில்ஸ், கோயம்புத்தூர் லிமிடெட், சத்தியமங்கலம் ரோட், கணபதி அஞ்சல், கோவை.	கோயம்புத்தூர்	டெக்ஸ்டைல்ஸ்.
55	சதர்ன் அல்லாய் பவுண்டரீஸ் லிமிடெட், (பிரைவேட்), மாதவரம், சென்னை-60.	மாதவரம் ..	எஸ்.ஜி. அயர்ன் கேஸ்டிங்ஸ்.
56	எஸ். கே. செஞ்சான் செட்டியார் அண்டு சன்ஸ், 132, எம்சி ரோடு, வாணியம் பாடி, வட ஆற்காடு மாவட்டம்.	வாணியம்பாடி ..	....
57	தமிழ்நாடு கார்டு போர்டு அண்டு பேப்பர் மில்ஸ் லிமிடெட், பவானி சாகர் (அஞ்சல்) கோவை மாவட்டம்.	பவானி	பேப்பர் அண்டு போர்டு.
58	டியூபர் பார்மா கெமிக்கல்ஸ் லிமிடெட், ப்ளாட், எண் 3, ''சிப்காட்'' இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ்.	ராணிப்பேட்டை ..	பாஸ் சோடியம்.
59	டிட்டானியம் எக்யூப்மென்ட் ஆனோட் மானுபேக்ஸ்சரிங் கோ லிமிடெட், 55, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, சென்னை—4.	ராணிப்பேட்டை	எலக்ட்ரோலிடிக் சாமான்கள்.
	டூல்ஸ் இன்டர்நேஷனல் லிமிடெட், ''சிப்காட்'' இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் ஓசூர்.	ஓசூர்	கருவிகள்
61	தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், ஓமலூர் ரோடு ஜாகிரம்பாளையம், சேலம்—5.	சேலம்	டெக்ஸ்டைல்ஸ்
62	தூத்துக்குடி ஸ்பின்னிங்மில்ஸ் லிமிடெட், 106, பாளையங்கோட்டை ரோடு, தூத்துக்குடி.—3.	தூத்துக்குடி	டெக்ஸ்டைல்ஸ்
63	உஷா ஹைட்ராலிக்ஸ் லிமிடெட், ''சிப்காட்'' இண்டஸ்டிரியல் காம்ப்—ளக்ஸ், ஓசூர்.	ஓசூர்	ஹைடிராலிக் எக்யூப் மெண்ட்.
64	வரதலட்சுமி மில்ஸ் லிமிடெட் ராஜ கம்பீரம், மானாமதுரை, ராமநாதபுரம் மாவட்டம்.	மானாமதுரை	டெக்ஸ்டைல்ஸ்
65	விஜய ஸ்ரீ ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி ரோடு, திண்டுக்கல்.	திண்டுக்கல்	டெக்ஸ்டைல்ஸ்
66	வள்ளி காட்டன் டிரேடர்ஸ், பிரைவேட் லிமிடெட், நிலக்கொடி கிராமம், திருமங்கலம் தாலூக்கா, மதுரை.	திருமங்கலம்	டெக்ஸ்டைல்ஸ்
67	ஸ்ரீ வெங்கடேசா பேப்பர் அண்டு போர்டு பிரைவேட் லிமிடெட், சுவாமிநாதபுரம் புஷ்பத்தூர் கிராமம், மதுரை.	திண்டுக்கல்	பேப்பர் அண்டு போர்டு.

	கம்பெனியின பெயர்.	இடம்.	பொருள்.
	(2)	(3)	(4)
[illegible]	விஜயலட்மி என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், சங்கிலிபாளையம். என்.ஜி.ஓ. காலனி அஞ்சல், கோவை.	கோவை	என்ஜினீயரிங் சாமான்கள்
69	வோவின் இந்தியா லிமிடெட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை—58.	சென்னை	பிளாஸ்டிக்ஸ்
70	ஸ்ரீ நித்திய கல்யாணி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், சின்னக்காரமங்கலம், திருவாடனை, ராமநாதபுரம்.	ராமநாதபுரம்	டெக்ஸ்டைல்ஸ்
71	அரவிந்து டிஸ்டிலரி அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், 1/30 பார்தியன் ரோடு, எழும்பூர், சென்னை—8.	காதம்புலியூர் தென் ஆற்காடு.	இண்டஸ்டிரியல் ஆல்கஹால்.
72	ஆசியா க்ளு அண்டு கெமிகல், 61 அண்ணா நகர், மதுரை—20.	மணலூர் கிராமம், சிவகங்கை தாலூகா	அஸ்ஸீனியினை அண்டு டைகால்சியம் பாஸ்பேட்டு.
73	அப்துல் ரகுமான் கோ., சென்னை—3	துத்திப்பேட், வாணியம்பாடி.	பினிஷ்ட் லெதர் அண்டு ஷூ அப்பர்ஸ்.
[illegible]	பாரதி காட்டன் அஞ்சல், பெட்டி, ராஜபாளையம்.	ராஜபாளையம்	காட்டன்யார்ன்
75	கோவலாங் பீச் ஹோட்டல் (இந்தியா) லிமிடெட், 41, லிங்கி செட்டி தெரு, சென்னை—1.	கோவலாங் கிராமம் செங்கல்பட்டு.	ஹோட்டல் இண்டஸ்டிரி
76	சென்சுரி கெமிகல் அண்டு ஆயில்ஸ் பிரைவேட் லிமிடெட், 146 வடக்கு மெயின் ரோடு, மதுரை—1.	உசிலம்பட்டி கிராமம் திருமங்கலம் தாலூக்கா.	பருத்தி விதை எண்ணெய்.
77	காரனேஷன் கலர் பாக்கேஜிங் பிரைவேட் லிமிடெட், அஞ்சல் பெட்டி 196, 114, சாத்தூர் ரோடு, சிவகாசி.	சாத்தூர்	பாக்கிங் பொருட்கள்.
78	ஈஸ்டர்ன் குரோம் டேன்னிங் கார்ப்பரேஷன்	ஆம்பூர் வட ஆர்க்காடு.	பினிஷட் லெதர்.
79	ஜெனரல் ரிப்ளெக்ட்டர்ஸ் 44—எ/1, பர்கிட் ரோடு, சென்னை—17.	ஒசூர்	ரிப்ளெக்டர் பார் ப்ரொஜக்ட்டர்.
80	சீதா ஒட்டல் லிமிடெட், 21, கமாண்டர் இன்-சீப் ரோடு, எழும்பூர், சென்னை-8	சென்னை	உணவுப் பொருட்கள்.
81	ஹாம்படன் மேனர் அண்டு கோ, நோர் ஹுப், ப்ரூக் வியூ குன்னூர், நீலகிரி மாவட்டம்.	குன்னூர் கிராமம்	ஹோட்டல் இன்டஸ்டிரி.
82	ஜோதி மல்ஸீயயில் பிரைவேட் லிமிடெட், திருச்சி.	துவாக்குடி, திருச்சி.	ஹைடிராலிக் பிரேக் சிலிண்டர் டிராக்டர் அண்டு பாய்லர் காம்போனன்ட்ஸ்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
83	கோதாரி பிளான்டேஜன் அண்டு இண்டஸ்டிரீஸ் லிமிடெட், 642, கருணாநிதி நகர், மதுரை,	நகரி கிராமம் நிலக்கோட்டை மதுரை.	கால்சியம் சன்னேசைட் ஸ்கோபோலமைன் அட்ரோபைன் சல்பேட்
84	காவீஸ்வரர் மில், 'பி' யூனிட், காளையர் கோவில், ராமநாதபுரம்.	காளையர் கோவில் சிவகெங்கை தாலூக்கா.	காட்டன் யார்ன்
85	லல்லி ஆப்செட் பிரிண்டர்ஸ், 43—பி, வேலாயுதம் ரோடு, சிவகாசி, ராமநாதபுரம்.	சாத்தூர்	பிரிண்டிங்.
86	லாயல் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட் திருநெல்வேலி.	கோவில்பட்டி	[illegible] ஸ்பின்னிங் மில்.
87	மாகாராஜா பேப்பர் போர்டு, மாகாராஜபுரம் (வழி) வாட்ராப், ராமநாதபுரம்.	ராமநாதபுரம்	பேப்பர் போர்டு.
88	மெட்ராஸ் பேக் மைனின் அஞ்சல் பெட்டி 1, ராமநாதபுரம.	மண்டபம் ராமநாதபுரம்.	ஐஸ் அண்டு ப்ரோசன்
89	மரா மொகம்மது இஷாக் அண்டு கோ., 35, வி. வி. கோவில் தெரு, சென்னை—3.	பிஞ்சி கிராமம், ராணிப்பேட்டை.	பினிஷ்ட் லெதர்.
90	மொகம்மது இஸ்மாயில் அண்டு கோ, 1, குமரப்ப செட்டி தெரு, சென்னை-3	ராணிப்பேட்டை	பினிஷ்ட் லெதர்
91	மொகம்மது அப்துல்காதர், திண்டுக்கல், மதுரை.	பள்ளப்பள்ளி, திண்டுக்கல்.	செமி பினிஷ்ட் லெதர்.
92	மைக்ரோ ஆப்செட் பிரிண்டர்ஸ், 156, திருத்தங்கல் சாலை, சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூகா.	ஆப்செட் பிரிண்ட்டிஸ்
93	மெஷனரி ரீகன்டிஷனிங் கம்பெனி, பிரைவேட் லிமிடெட், வாலாஜாபேட், வட ஆற்காடு மாவட்டம்.	வாலாஜாபேட், வடஆற்காடு மாவட்டம்.	மெஷின் சாமான்கள்.
94	நெக்தார் ப்ரூட் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், "பயனீர் ஹவுஸ்", கோவை-641 001.	பகலூர் கிராமம்.	பழ உற்பத்தி.
95	தி நேஷனல் கோவாப்பரேடிவ் சுகர் மில்ஸ், லிட், மேட்டுப்பட்டி அஞ்சல், (வழி) அலங்காநல்லூர், மதுரை.	உருசேரி கிராமம், நிலக்கோட்டை தாலூக்கா, மதுரை மாவட்டம்.	சுகர் (சர்க்கரை).
96	நேஷனல் ஆக்ஸிஜன் லிமிடெட், 5/1/இ, கெல்லிஸ் ரோடு, சென்னை-10.	குளத்தூர் புதுக்கோட்டை.	02—வாயு கரைத்த அசிட்டிலின் வாயு.
97	தி பயனீர் மேட்ச் ஒர்க்ஸ், அச்சுத்துறை பூபதி பில்டிங்ஸ், சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூக்கா.	ப்ரிண்டிங் லேபில்கள், போஸ்டர்கள், காலண்டர்கள்.
98	ஸ்ரீ பாண்டியன் எலக்ட்ரோ கெமிக்கல்ஸ் (பி) லிட், 55, நாயக்கன் புதுத் தெரு, மதுரை-1.	சிவகங்கை தாலூக்கா	எக்ஸ்ட்ராக்ஷன் காட்டன் சீட் ஆயில்.—

(1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
99	பாபனாசம் பேப்பர் மில்ஸ் ..	கேலா அம்பை, திருநெல்வேலி மாவட்டம்.	க்ராப்ட் அண்டு ப்ளு மேட்ச் பேப்பர்.
100	பேயன் டால்ப்ரோஸ் லிமிடெட் ..	அம்பத்தூர்	ஆடோமோடிவ் கேஸ் கட்ஸ்.
101	பாண்டியன் ஆப்செட் பிரின்ட்டர்ஸ், அம்மன் கோயில்பட்டி தெரு, சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூகா.	ஆப்செட் பிரின்டிங்.
102	பயனீர் பிரஸ் (பி) லிட்., அ. பெ. 45, சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூகா.	பிரின்டிங்வொர்க்ஸ்.
103	ராமராஜூ சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிட்.	ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.	காட்டன் யார்ன்.
104	ராஜபாளையம் மில்ஸ் லிட்., சோமசிங்க புரம் சாலை, அ. பெ. 1, ராஜ பாளையம்.	ராஜபாளையம்	டெக்ஸ்டைல்ஸ்
105	ஸ்ரீராம் கேல்கெம் இண்டஸ்டிரீஸ் (பி) லிமிடெட், 36, ஸ்ரீராம் நகர், ராஜ பாளையம்.	இதயக்குளம், ராஜபாளையம்.	இண்டஸ்டிரியல் காஸ்.
106	எஸ். ரங்கசாமி நாடார் அண்டு சன்ஸ், தாடிக்கொம்பு ரோடு, சென்னமாணிக் ... அஞ்சல், திண்டுக்கல்.	செட்டி நாயக்கன் பாளையம், திண்டுக்கல்.	பருத்தி விதை எண்ணெய்.
[illegible]	ராமமூர்த்தி மெடல் டெகரேடிங் இண்டஸ்டிரீஸ் லிட்., 74/1, போலீஸ் ஸ்டேஷன் ரோடு, அ.பெ. 3, சிவகாசி.	சிவகாசி	டின் கன்டெய்னர் கேப்ஸ்டைட்ஸ்.
108	ருக்மணி மில்ஸ் லிட்., சிலைமான், மதுரை மாவட்டம்.	மணலூர்	காட்டன்யார்ன்.
109	சௌத் ஈஸ்ட் புட்வேர் லிட்., 4/5 வேப் பேரி நெடுஞ்சாலை, பெரியமெட், சென்னை-3.	சோலூர் கிராமம் வட ஆம்பூர், ஆற்காடு மாவட்டம்.	பாதணிகள்.
110	சீனிவாஸ் இண்டஸ்டிரீஸ், 35-பி, வேலாயுதம் ரோட், சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூகா.	பிரின்ட்டிங்.
111	ஸ்ரீ வில்லிபுத்தூர், கோவாப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிட். ஸ்ரீவில்லிபுத்தூர்.	ஸ்ரீவில்லிபுத்தூர்.	காட்டன்யார்ன்.
112	சதர்ன் அக்ரிபியூரேன் இண்டஸ்டிரீஸ் லிட், 50-பி, கிரீம்ஸ் ரோட், சென்னை-6.	விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டம்.	பர்பியூரல்.
113	ஸ்ரீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ், 35, வேலாயுதம் சாலை, சிவகாசி.	சாத்தூர்	பிரின்டிங்.
114	சௌத் ஈஸ்ட் புட்வேர், லிமிடெட்.	வாணியம்பாடி	பாதணிகள்.
115	தி சோபனா ஆப்செட் பிரின்டர்ஸ், 95, டி.சி.என். தெரு, சிவகாசி.	சிவகாசி, சாத்தூர் தாலூகா.	ஆப்செட் பிரின்டிங்.
116	சீதாலஷ்மி சர்ஜிகல் காட்டன் லிமிடெட், சீதாலஷ்மி மில்ஸ் காம்பவுண்டு, மதுரை.	சிவகங்கை	சர்ஜிகல் காட்டன் யார்ன்.

	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
	(2)	(3)	(4)
117	ஷார்ட்லோ இந்தியா லிட்., ஹாரூர் தோட்டம், சென்னை-32.	ஓசூர்	பினிஷ்ட் கிராங்க்ஷாப்ட்.
118	ஸ்ரீவாத்சா என்ஜினியர்ஸ், 16-17 சூப்பர்—ஏ, கிண்டி, சென்னை-32.	அணைக்கரைப்பட்டி, ராமநாதபுரம்.	அலுமினியம் அல்லாய் கிராவிட்டி அண்டு டைகாஸ்டிங்ஸ்.
119	சங்கர் சால்வண்ட் ஆயில் மில்ஸ் (பி) லிட்., 18-எ, செனெடோப் சாலை, சென்னை-18.	சாத்தூர் தாலூகா.	பருத்தி விதை.
120	சதர்ன் சால்வன்ட் எக்ஸ்டாக்ஷன் கோ (பி) லிட்., 51, சேலம் மெயின் ரோடு, தென் ஆற்காடு மாவட்டம்.	ராணிப்பேட்டை.	கிரைண்டர் டிரில்ஸ்.
121	சாம்கோ மெட்டல்ஸ் அண்டு அல்லாய்ஸ் (பி) லிட்., 45, டெனஸ் ரோட், சென்னை-15.	கணியம்பாடி, வேலூர் தாலுகா, வட ஆற்காடு மாவட்டம்.	ஸ்டீல், அல்லாய், ஸ்டீல், காஸ்டிங்ஸ்.
122	ஸ்டிரக்சர்ல் என்ஜினீயர்ஸ் அண்டு டெக்னீஷியன்ஸ் இண்டஸ்டிரியல் கோ ஆப்பரேடிவ் சொஸைட்டி, பட்டாபிராம் கிராமம், செங்கை மாவட்டம்.	பட்டாபிராம் கிராமம்.	ரிடக்ஷன் கியர்ஸ்.
	சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிட்., குளத்தூர் தாலூகா, புதுக்கோட்டை.	புதுக்கோட்டை ..	அசிட்டிக் ஆசிட், அசிட்டிக் அன்ஹைட்ரேட், சி.எம்.சி.
24	டான்சி, 4, வைட்ஸ் ரோடு, சென்னை-14 (மெஷின் லேஸ்).	ராணிப்பேட்டை ..	ப்வர் பேக் சாஸ் அண்டு பவர் டிரில்லிங் மிஷின்,
125	தமிழ்நாடு டிஸ்டில்லரி இண்டஸ்டிரியல் ஆல்கஹால் (பி) லிட்.	ஹோசூர்	இண்டஸ்டிரியல் ஆல்கஹால்.
126	ஸ்ரீதிருமலை எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிட்., 192, குமரன் ரோட், திருப்பூர்.	அரச நதி, ஒசூர் தாலூகா, தர்மபுரி மாவட்டம்.	ப்ளெயின்/மெட்டலயிஸ்டு ப்ளாஸ்டிக் பிலிம் கெபாஸிடர்ஸ்.
127	திருச்சி டிஸ்டிலரீஸ் அண்டு கெமிகல்ஸ் லிட்., 17/4, நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலை, சென்னை-34.	திருச்சி	ஆசிட்டில்டி ஹைடு அண்டு அசீட்டிக் ஆசிட்.
128	யுனைடெட் இந்தியா ஷூ கார்ப்பரேஷன், 10, வேப்பேரி ஹைரோட், சென்னை-3.	சோலூர் கிராமம், வாணியம்பாடி தாலூகா.	காலணி மேல் பாகம்.
129	யுனைடெட் லெதர் பினிஷர்ஸ் (பி) லிட்., 21, வி. வி. கோயில் தெரு, சென்னை-3.	தேவலாபுரம் கிராமம், வாணியம்பாடி தாலூகா.	பினிஷ்ட் லெதர்.

	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
	2	3	4
130	ஸ்ரீ வீரப்பசாமி ஸ்டீல் ரோலிங் மில்ஸ், 90, கூனி பஜார், பீமா நகர், திருச்சி.	மாத்தூர், குளத்தூர் தாலூகா, புதுக்கோட்டை.	எம். எஸ். ரோடு, ஆங்கிள் ஸ்கொயர்ஸ்.
131	தி வாணியம்பாடி லெதர் பினிஷிங் சர்வீஸிங் இண்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சொஸைட்டி.	வாணியம்பாடி ..	லெதர் பினிஷிங் சர்வீஸ்.
132	வேளாங்கண்ணி எக்ஸ்போர்ட்ஸ், 4 வித்யோதயா மெயின் ரோடு, சென்னை-17.	மண்டபம், இராமநாதபுரம்.	ப்ரீஸிங் பிளாண்ட்.
133	சுபைதா டேன்னிங் இண்டஸ்டிரீஸ், 15, குமரப்ப செட்டி தெரு, சென்னை-3.	துத்திப்பேட், ஆம்பூர், வாணியம்பாடி தாலூகா.	பினிஷ்ட் லெதர்.
134	மெட்ராஸ் போர்ஜிங்ஸ் அண்டு அல்லைடு இண்டஸ்ட்ரீஸ் லிட்., மேட்டுப்பாளையம் சாலை, காரமடை, கோவை மாவட்டம்.	கோயம்புத்தூர் ..	எஸ். ஜி. இரும்பு.
135	சுந்தரம் பாஸ்டனர்ஸ் லிட், 37, அண்ணா சாலை, சென்னை-6.	செங்கை ..	ஆடோமோடிவ் கோல்ட் பாம்டு எக்ஸ்டுரூடட் பார்ட்ஸ்.
	எல். ஜி. பாலகிருஷ்ணா அண்டு பிரதர்ஸ் லிட், இந்தியா ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர் ..	ரப்பர் பேண்டட் மெட்டல் ஆட்டோ பார்ட்ஸ்.
137	ஆர். எம். டி. டிரில் (பி) லிட், பிரைவேட் இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர் ..	வாட்டர் வெல்ரிக்ஸ் அண்டு ப்ளாஸ்ட்ஹோல் ரிக்ஸ்.
138	ஸ்ரீ ராமகிருஷ்ணா சிட்டி பம்ப்ஸ் லிட், 2/9, நேதாஜி சாலை, பாப்ப நாயக்கன் பாளயம், கோவை.	கோவை	க்ளாண்ட்லெஸ் பம்ப்ஸ் பார் எப்ளுவன்ட் சுயூவேஜ் கெமிகல்ஸ் வாட்டர்.
139	ஸ்ரீ எம். சௌந்தரராஜன் (பாலிமர் இண்டஸ்டிரீஸ்) ஏஹெச் 2, இண்டஸ்டிரியல் எஸ்டேட், ஈரோடு-2.	தர்மபுரி ...	எல்.ஐ.டி.பி.கு. அண்டு பாலிப்ரோபைலின் போம் சீட்/ப்ளாக்ஸ்.
140	தி நேஷனல் கோவாப்பரேடிவ் சுகர் மில்ஸ் லிட், அலங்கா நல்லூர் போஸ்ட், மதுரை.	மதுரை ...	சர்க்கரை.
141	கார்டன் வுட்ரோப் அண்டு கோ (மெட்ராஸ்) பிரைவேட் லிட், 1/21, நார்த் பீச் ரோடு, சென்னை-1.	தமிழ்நாடு ...	ஷூ அப்பர்.
142	பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் லிட், ஹிந்துஸ்தான் டைம் ஹவுஸ், 18–20, கே. காந்தி ரோடு, புதுடில்லி.	திருச்சி	சீம்லஸ் ஸ்டீல் டியூப்ஸ்.

	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
	2	3	4
143	அட்கோ இந்தியா லிட், எல் அண்டு டி ஹவுஸ், பல்லார்டு எஸ்டேட், பம்பாய்-38.	சென்னை ..	.. காஸ்ட் அண்டு போர்ஜ்ட் ஸ்டீல் அண்டு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேட், க்ளோசப் அண்டு செக் வால்வ்ஸ்
144	பெர்ரோ மேக்னட்ஸ் அண்டு அல்லய்டு ப்ராடக்ஸ் லிட், சாந்தி பில்டிங்ஸ், 9, அண்ணா சாலை, சென்னை-2.	ராமநாதபுரம்	.. ஹார்டு பெர்ரயிட் மேக்ரைட்.
145	தமிழ் நாடு தாதா பார்மசூடிகல்ஸ் லிட், 10, ஜெய்பூர் நகர், சென்னை-86.	செங்கல்பட்டு	.. டிரான்ஸ் ப்யூஷன் சொலுசன் பேஸ்டு அண்டெக்ஸ்டரர்ஸ் சலைன், ரிங்கர் பி.வி.பி.
146	தமிழ் நாடு கோவாப்பரேடிவ் மார்க்கட்டிங் பெடரேஷன் லிட், எக்ஸ்-401, 40-ஏ, செயின்ட் மேரி சாலை, சென்னை-18.	தென் ஆற்காடு மாவட்டம்.	விஜிடெபிள் ஆயில்.
147	சௌத் ஈஸ்ட் டேன்னிங் கம்பெனி 1-சி, நேவல் ஹாஸ்பிடல் ரோட், பெரிய மேட், சென்னை-3.	வட ஆற்காடு மாவட்டம்.	ஷூ அப்பர்.
148	மெட்ராஸ் போர்ஜிங்ஸ் அண்டு அல்லைடு லிட், மேட்டுப்பாளையம் ரோடு, அ.பெ. 9, காரமடை, கோவை.	கோவை ..	.. க்ளோஸ்டு டை-ஸ்டீல் போர்ஜிங்ஸ்.
149	இங்லிஷ் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா லிட், பல்லாவரம், சென்னை-43.	செங்கை	.. எலக்ட்ரானிக் வோல்ட் மீட்டர்ஸ் பிரீக்வன்ஸி கொளண்டர்ஸ்.
150	பெஸ்ட் அண்டு க்ராம்டன் என்ஜினீயரிங் லிமிடெட், 18/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1.	சென்னை ..	.. மெட்டல் க்ளாட் சாக் கெட்ஸ் அண்டு ப்ளக்ஸ்.
151	சிங்கர் டி. வி. எஸ். லிட், டி.வி.எஸ். பில்டிங்ஸ், மேற்கு வெளிவீதி, மதுரை.	மதுரை ..	.. தையல் மிஷின் ஊசிகள்.
152	மெட்ராஸ் போர்ஜிங்ஸ் அண்டு அல்லைடு இண்டஸ்டிரீஸ் லிட், மேட்டுப்பாளயம், ரோடு, காரமடை, கோவை மாவட்டம்.	கோவை ..	.. எலக்ட்ரிக் மோட்டார் ஸ்டாம்பிங்.
153	லூகாஸ் டி.வி.எஸ். லிமிடெட், பாடி, சென்னை-50.	தமிழ்நாடு	.. ஸ்டாட்டர்ஸ் ஜெனரேட்டர்ஸ், ரெகுலேட்டர்ஸ், ப்ளாஷர்ஸ் ஹெட்லேம்ஸ்.
154	செக்கிங் லெதர்ஸ் (பி) லிட், 7, ஷாபி மொகம்மது ரோட், சென்னை-6.	செங்கை	.. ஷூ அப்பர்.
155	சி அப்துல் ரஹ்மான் அண்டு கோ, 29, வி. வி. கோயில் தெரு, பெரிய மேட், சென்னை-3.	வட ஆற்காடு மாவட்டம்.	செமி பினிஷ்ட், லெதர் பினிஷ்ட் லெதர்.
156	இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், டி-3, ஹில்லாண்டர் ஹவுஸ், 8, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா-1.	செங்கை	.. சிக்னல் ஜெனரேட்டர்ஸ் டைஜனல் ஸினட்ரோமிஸ் ஸ்வீப் ஜெனரேட்டர்ஸ்.

	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
	(2)	(3)	(4)
[illegible]	அசோக் லேலண்ட் லிட், எண்ணூர் ..	செங்கை ..	இண்டஸ்டிரியல் என்ஜின்ஸ்.
[illegible]	பெனில் லெதர் கார்ப்பரேஷன், 1-சி, நேவல் ஆஸ்பிடல் ரோடு, பெரியமெட், சென்னை-3.	செங்கல்பட்டு ..	ஷூ அப்பர் (மேல்பாகம்)
159	சிம்கோ மீட்டர்ஸ் லிட், மீட்டர் பேக்டரி ரோடு, திருச்சி.	திருச்சி	ஹை எனர்ஜி பேட்டரிஸ்
160	ஏசியன் பேரிங்ஸ் லிட், 14, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.	தர்மபுரி ..	பால் பேரிங், சிலிண்டிரிகல் ரோலர், பேரிங்ஸ்
161	தி ராஜபாளையம் மில்ஸ் லிட், உப்பிலிப் பாளையம், சிங்காநல்லூர் அஞ்சல், கோவை.	கோவை	காட்டன் யார்ன் ஸ்டேபிள் பைபர் யார்ன்.
162	ஃபென்னர் (இந்தியா) லிட், அ.பெ. 117, மதுரை-1.	மதுரை .. —	சின்தெடிக் காட்ஸ் அண்டு ஏப்ரன்ஸ்.
163	சௌத் இண்டியா கார்பானிக் கேஸ் இண்டஸ்ட்ரீஸ் லிட், தன் பில்டிங்ஸ், 175/1, அண்ணாசாலை, சென்னை-2.	செங்கல்பட்டு ..	கார்பானிக் ஆக்ஸைடு வாயு.
164	தமிழ் நாடு கார்டு போர்டு அண்டு பேப்பர் மில்ஸ் லிட், 3, கதீட்ரல் ரோடு, சென்னை-86.	கோவை	ஸ்பெஷாலிடி பேப்பர்.
[illegible]	ஒரியண்ட் பாராமா (பி) லிட், பழைய டிரங்க் ரோடு, பல்லாவரம், சென்னை-43.	செங்கல்பட்டு ..	ப்ரான் டவல், ப்ரோமா ப்ரோபேன்.
66	நிஷா பேப்பர் அண்டு போர்டு மில்ஸ் (பி) லிட், அ.பெ. எண் 56, புதுக்கோட்டை.	புதுக்கோட்டை ..	ரைட்டிங் அண்டு பிரின்டிங் பேப்பர் போர்டு.
67	சேலம் ஸ்டீல் லிட், எஸ். எப். 1500, இ. ரெயில்வே, வெஸ்ட் சூரணி, சேலம்-5.	சேலம்	ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கோல்ட்ரோல்ட்.
68	ஹேக்ப்ரிட்ஜ் கேவிட்டிக் அண்டு ஈசன் லிமிடெட், 5–7, செகண்ட்லைன் பீச், அ. பெட்டி எண் 50, சென்னை-1.	செங்கல்பட்டு ..	லோடுடேப் சேஞ்சர்ஸ்.
9	பாண்டியன் கெமிக்கல்ஸ் லிட், நரசிங்கம் பட்டி, மேலூர் தாலூக்கா, மதுரை.	மதுரை	பொட்டாசியம் க்ளோரேட்.
70	ராணிபேட் லெதர் பினிஷிங் (பி) லிட், 17, வேப்பேரி ஹைரோடு, சென்னை-3.	வட ஆற்காடு மாவட்டம்	அனிலைன் அப்பர், கார்மென்ட் லெதர் லைனிங் லெதர்.
71	ப்ரஸ் மெட்டல் கார்ப்பரேஷன் லிட், 4, வாசன்ஜி ரோடு, அந்தேரிகுர்லா ரோடு, பம்பாய்-59.	அம்பத்தூர் தொழிற் பேட்டை.	ப்யூயல் டேங்க்ஸ், ட்ரிம் ஷாப் ஐடம்ஸ் ஏர்வெண்ட் ஸ்டம்ஸ்.
72	தூத்துக்குடி ஆல்காலின் கெமிகல்ஸ் லிட், 77, அண்ணா சாலை, கிண்டி-32.	தூத்துக்குடி ..	சோடா ஆஷ், அம்மோனியம் க்ளோரைடு.

	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
	(2)	(4)	(3)
73	சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் லிட், 13, 240, திவான் பகதூர் ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்.	ஹோசூர் ..	.. ஸ்பெஷலைஸ்டு புட் வெல்ட் டைப் அண்டு சாக்கட் வெல்ட் டைப் டைப் பிட்டிங்ஸ்.
4	ஆனைக்கார் ஷூ கம்பெனி, 163, பிராட்வே (இரண்டாம் மாடி), சென்னை-600 001.	வட ஆற்காடு மாவட்டம்.	ஷூ அப்பர்ஸ் (மேல் பாகம்).
5	ஈஸ்ட் கோஸ்ட் லெதர் பிரைவேட் லிட், 11, ஹால்ஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை-10.	ஏகத்தூர், செங்கல்பட்டு.	பினிஷ்டு லெதர்.
6	சிவானந்தா ஸ்டீல்ஸ் லிட், அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-58.	அம்பத்தூர் ..	.. சென்ட்ரிப்யூகல் அல்லாய் காஸ்டிங்ஸ்.
7	சிம்கோ மீட்டர்ஸ் லிட், அ.பெ. 46, மீட்டர் பேக்டரி ரோடு, திருச்சி-20.	திருச்சி ..	.. ஹை எனர்ஜி பேட்டரிகள்
8	பைமெட்டல் பேரிங்ஸ் லிட், 2, ஆர்ட்ஸ் காலேஜ் ரோடு, கோவை-8.	கோவை ..	.. பை-மெட்டல்.
179	மல்லாக் லெதர்ஸ், வாலாஜா தாலுகா ராணிப்பேட்டை, வடஆற்காடு மாவட்டம்	வட ஆற்காடு மாவட்டம்.	பினிஷ்ட் லெதர் ப்ரம் கோட்ஸ்கின்ஸ்.
	ஆர். எம். டி. டிரில் (பி) லிட், பொள்ளாச்சி ரோடு, மாதுமச்சம்பட்டி, கோவை-21.	கோவை	லோடு-ஹால் டம்ப்ஸ்.
181	ப்ரேக்ஸ் இந்தியா லிட், 37, அண்ணா சாலை, சென்னை-6.	செங்கல்பட்டு ..	பர்மனட் மோல்ட் காஸ்டிங்ஸ்.
182	ஏ. ஆமினூர் ரெஹ்மான், 19, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை-3.	வட ஆற்காடு மாவட்டம்.	தோல் காலணிகள்.
183	இன்டியன் டிரக்ஸ் அண்டு பார்மாசூடிகல்ஸ் லிட், புதுடில்லி-49.	தமிழ்நாடு ..	டாப்லட்ஸ், ஆம்பௌல்ஸ் பவர் வயல்ஸ் கேப்ஸ்யூல்ஸ், லிக்விட்ஸ்.
184	தமிழ் நாடு கார்டுபோர்டு அண்ட் பேப்பர்மில்ஸ் லிட், 3, கதிட்ரல் ரோடு, சென்னை-86.	கோவை ..	ஸ்பெஷாலிடி பேப்பர்.
185	ஏ. கே. பூபதி, டெலிபோர்ஜ் (பி) லிட், 13, டி. வெங்கட்நாராயணா ரோடு, தி. நகர், சென்னை-17.	செங்கல்பட்டு ..	போர்ஜ்டு ப்ளாங்கஸ் போர்ஜ்டு பைப்பிடிட்டிங், வால்வ் காம்போனைட்ஸ்.
186	லஷ்மி கார்டு க்ளாதிங் மேனுபாக்சரிங் கம்பெனி லிட்., குப்புசாமி நாயுடுபுரம் போஸ்ட், பல்லடம், கோவை மாவட்டம்.	கோவை	ஆட்டோ வைன்டர்ஸ்.

(1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
187	ஏ. ஷபீக் அஹமது, 34, பிராட்வே, சென்னை-1.	வட ஆற்காடு ..	ஷூ அப்பர்ஸ் அண்டு காம்போனன்ட்ஸ்.
188	ஜி. வி. பாஷியம், சி/ஓ ஸ்டேட் எலக்ட்ரிக், 14-ஏ, கபாலி நகர், மயிலாப்பூர், சென்னை-4.	தர்மபுரி ..	மோல்ட் கேஸ் ஸர்க்யூட் ப்ரேக்கர்ஸ்.
189	டெக்ஸ்டூல் கம்பெனி லிட்., கணபதி அஞ்சல், கோவை-6.	கோவை ..	யூனிவர்சல் மில்லிங் மிஷின், ஹை ஸ்பீடு, மில்லிங் மிஷின்.
190	மார்ஷல் சன்ஸ் அண்டு கோ, மேனுபேக்சரிங் லிட், ப்ளாட், 33-34, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-58.	செங்கல்பட்டு ..	ஹைடிராலிக் செல்ப் ப்ரோப்பெல்ட் லோடர்ஸ்.
191	பரீதா ஷூஸ் (பி) லிட், 8, வி. வி. கோயில் தெரு, பெரிய மேட், சென்னை-3.	வட ஆற்காடு மாவட்டம்.	லெதர் ஷூ மேல்பாகம் லெதர் புட்வேர்ஸ்.
192	பார் ஈஸ்ட் டேன்னிங் கம்பெனி, 15/2, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை-3.	வட ஆற்காடு.. மாவட்டம்.	பினிஷ்ட் லெதர்.
193	இன்டியா பிஸ்டன் ராப்கோ லிட், 202, அண்ணா சாலை, சென்னை-2.	கக்கலூர், செங்கல்பட்டு.	பிஸ்டன் ரிங்கியர்ஸ்.

(1)	(2)	(3)	(4)
	இன்டியா மீட்டர்ஸ் லிட், 14, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-58.	அம்பத்தூர் ..	ரோடரி சிப்ஸ்டாண்டர்ட் இலோ வாட் ஹவர் மீட்டர்ஸ்.
195	மெட்ராஸ் மோட்டார்ஸ் லிட், 162, அண்ணா சாலை, சென்னை-2.	ராமநாதபுரம். ..	ஸ்டீல் போர்ஜிங்ஸ்.
196	நியூமேடிக் ஆடோமைசிங் மில்ஸ் (பி) லிட், 2/79, செம்புதாஸ் தெரு, மூன்றாம் மாடி, டி.வி.எஸ். மான்ஷன், சென்னை-1.	ராணிப்பேட்டை வடஆற்காடு மாவட்டம். ..	ஸ்டீம் கிரௌண்ட் மைகா.
197	சால்வெக்ஸ் ஆயில்ஸ் (பி) லிட், 18, க்ரெசன்ட் பார்க் தெரு, தி.நகர், சென்னை-17.	ராணிப்பேட்டை வடஆற்காடு மாவட்டம்.	சால்வென்ட் எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்ட்.
198	தமிழ்நாடு ஸ்மால் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிட், 4, வைட்ஸ் ரோடு, சென்னை-14.	ராணிப்பேட்டை வடஆற்காடு. மாவட்டம்	மிஷின் டூல்ஸ்.
199	ஸதர்ன் இண்டஸ்டிரியல் பாலிமர்ஸ் (பி) லிட்., 8-எ, ஸர். சி. பி. ராமசாமி ஐயர் ரோடு, சென்னை-18.	ராணிப்பேட்டை வடஆற்காடு மாவட்டம் ..	டை-க்ளைசிடல் ஈதர்ஸ் ஆப் பைஸ்பெனால் அண்டு ரெசின்ஸ்.
200	ஹைப்ரோ செயின்ஸ் (பி) லிட், 2/99, கோடௌன் தெரு, சென்னை-1.	ராணிப்பேட்டை வடஆற்காடு மாவட்டம்.	ட்ரான்ஸ்மிஷன் செயின்ஸ்
201	எம். எம். ரப்பர் கம்பெனி லிட், 748, அண்ணா சாலை, சென்னை-2.	வடஆற்காடு மாவட்டம்.	பைஆக்ஸிகல்லி ஓரியன்டட் பாலிப் ரொபைலின் பிலிம்ஸ்.

(1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
202	அகஸ்தியர் பேப்பர் போர்ட்ஸ், (பி) 5, வித்யோதயா, பர்ஸ்ட் கிராஸ் தெரு, சென்னை-17.	வடஆற்காடு மாவட்டம்	க்ராப்ட் பேப்பர் டியூப் ளெக்ஸ் போர்டு.
203	தமிழ்நாடு டூரிஸம் டெவலப்மன்ட் கார்ப்பரேஷன் லிட், 38, அண்ணா சாலை, சென்னை-6.	வடஆற்காடு மாவட்டம்.	ஹோட்டல்.
204	ஜே. எச். அலுமினியம் (பி) லிட்., 195, ராசப்ப செட்டி தெரு, சென்னை-3.	வடஆற்காடு மாவட்டம்	அலுமினியம் எக்ஸ்ட்ராக்ஷன்.
205	ஸ்டான்டர்ட் பாலிக்ராப் மெஷின்ஸ் (பி) லிட், 152, ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.	வடஆற்காடு மாவட்டம்	ப்ரின்டிங் மெஷினரி.
206	லஷ்மி ஆட்டோமேடிக் லூம் ஒர்க்ஸ் லிட், ப்ளாட் 39, சிப்காட் காம்ப்ளக்ஸ், ஹோசூர்-635 126.	ஹோசூர்	ஆட்டோமேடிக் லூம்ஸ்.
207	ஏசியா டுபேக்கோ. அண்டு, கோ லிட், 16 17, கல்லூரி சாலை, சென்னை-6.	ஹோசூர், தர்மபுரி	சிகரெட்.
208	இண்டிகார்ப் லிட், 64, பேலஸ் ரோடு, வஸந்த நகர், பெங்களூர்-52.	ஹோசூர், தர்மபுரி	ஹார்டு மெட்டல்.
[illegible]	[illegible] (இண்டியா) பிரைவேட் லிமிடெட், ப்ளாட்-29, சிப்காட்-காம்ப்ளெக்ஸ், ஹோசூர்-635126.	ஹோசூர், தர்மபுரி	ப்ருட் கேன்னிங் ப்ராஸெஸிங்
210	இண்டி மெஷின் டூல்ஸ் (பி) லிட், பள்ளிக்கரணை அஞ்சல், சென்னை-73.	ஹோசூர், தர்மபுரி	மெஷின் டூல் அக்சசரீஸ்.
211	கால்சியம் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் 16, பர்ஸ்ட் லைன் பீச், சென்னை-1.	ஹோசூர், தர்மபுரி	கால்சியம் க்ளுகனேட்.
212	லஷ்மி பேக்கேஜிங் (பி) லிட்., எப். 33 பேர்லேண்ட்ஸ், சேலம்-4.	ஹோசூர், தர்மபுரி	ப்ளெக்சிபிள் பேக்கிங் மெட்டீரியல்ஸ்.
213	ஈசன் ரீரோல் ரிலேய்ஸ் டிவைஸஸ் பிரைவேட் லிமிடெட், 5—7, செகன்ட் லைன் பீச், சென்னை-1.	ஹோசூர், தர்மபுரி	ப்ரொடக்டிவ் அண்டு ஆக்ஸிலரி ரிலேய்ஸ் அண்டு அக்சசரீஸ்.
214	உமா மகேஸ்வரி மில்ஸ் லிட். பி. 5, பார்க் ரோடு, பேர்லாண்ட்ஸ், சேலம்-4	ஹோசூர், தர்மபுரி	[illegible] ஸ்பின்னிங் மில்ஸ்.
215	ராஹுல்ஸ் வயர்ஸ் லிட்., 56, பாட்ரிக்ஸ் சர்ச், சி. ப்ளாக், ரெசிடென்சி ரோட், பெங்களூர்-560 025.	ஹோசூர், தர்மபுரி	ஜி.ஐ. வயர்ஸ் அன்னீல்டு வயர்ஸ்.
216	உன்னிரப்பர் அண்டு புட்வேர் லிட், கேர் ஆப்டைனமிக் ரப்பர் அண்டுப்ளாஸ்டிக், (பி) லிட், வைட்பீல்டு ரோடு, மகாதேவபுரா, பெங்களூர்.	ஹோசூர், தர்மபுரி	புட்வேர் அண்டு ரப்பர் ப்ராடக்ட்ஸ்.

[illegible]	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3) பொருள். (1)
261	ஒசுவால் ஆயில்ஸ் அண்டு வனஸ்பதி இண்டஸ்ட்ரியஸ், ஒசுவால் உல்லன் மில்ஸ் லிமிடெட், 17, காக்ரேன் பேஸின் ரோடு, சென்னை-21. சென்னை.	ஆக்ஸிஜன் காஸ்.
262	பத்மா பேக்கேஜஸ் லிமிடெட், பிளாட் எண். 1 எஸ். வசந்த் பிளேஸ், சாணக்கியபுரி, புதுடெல்லி. (ஒசூர்).	கோக்ஸ் ரூடட் பாலிதின் பிலிம்.
263	[illegible], 15, [illegible]கர் தெரு, சென்னை. (கத்திவாக்கம் நெடுஞ்சாலை, வண்ணாரப்பேட்டை).	[illegible]
264	[illegible] ஆர்ட்ஸ் காலேஜ் ரோடு, கோயம்புத்தூர் (கோயமபுததூா).	[illegible]
265	[illegible] இந்தியா லிமிடெட், செண்ட் தாமஸ் மவுண்ட், சென்னை-15. (லொகேஷன் சைதாப்பேட்டை).	(ஸ்பட்டானிஸியல் எக்ஸ் பான்ஷன்).
266	இந்தியா பிஸ்டன்ஸ் ராப்கோ லிமிடெட் 202, மவுண்ட் ரோடு, சென்னை-2. (காக்களூர்).	ப்ளைவில் ரிங்கியர்ஸ்.
267	சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் லிமிடெட், 13/24, திவான் பகதூர் ரோடு, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர். (ஒசூர்).	ஸ்பெசலைஸடு புட்வெல்டு டைப் மற்றும் சாகட் வெல்டு டைப் பைப் பிக்ஸ்சர்ஸ்.
268	சுந்தரம் பாஸ்ட்நர்ஸ் லிமிடெட், 180, மவுண்ட் ரோடு, சென்னை-6. (அருப்புக்கோட்டை).	எஸ். டி. பாஸ்ட்னர்ஸ்.
269	ஓரியண்ட் விஷன் லிமிடெட், 113, மவுண்ட் ரோடு, சென்னை-2. (ஒசூர்).	டி. வி. ரிசீவர்ஸ்.
270	கார்பேராண்டம் யூனிவர்சல், 11/12, நார்த் பீச் ரோடு, சென்னை-1, (சென்னை).	சூபர் ரிபாக்ட்டரிஸ், இன்குளுடிங் காஸ்டுல்ஸ், (ஸ்ப்டான்சியல் எக்ஸ்பான்ஸியன்).
271	ஈஸ்வரன் அண்டு சன்ஸ் இஞ்சினியர்ஸ் லிமிடெட், 5வது மாடி பாம்பே மீச் சுவல் கட்டிடம், என். எஸ். ஸி. போஸ் ரோடு மதராஸ்-1. (சென்னை).	எஸ்.டி.சர்க்யூட், பிரேக்கர்ஸ் அப்டு மற்றும் இன்குளுடிங் 220, கே. வி.
272	நீடில்ஸ் இண்டிஸ்டரீஸ் (இந்தியா) லிமிடெட், கெட்டி நில்கிரிஸ். (கெட்டி)	ஸ்னேப் பாஸ்ட்னர்ஸ்.
273	ஓரியண்ட் பார்மா (பிரைவேட்) லிமிடெட், ஓல்டு டிரங்க் ரோடு, பல்லாவரம் சென்னை-43. (பல்லாவரம்).	வேலித் மேட் ப்ரோமைடு பல்க் ட்ரை.
274	ஸ்ரீ சக்தி ஆயில்ஸ் அண்டு எக்ஸ்ட்ராக்ஷன் மாத்தூர். புதுக்கோட்டை.	ஸால்வண்ட் எக்ட்ராக்டட் ஆயில்டி ஆயில்டு மில்.

வரிசை எண். (1)	கம்பெனியின் பெயர். (2)	இடம். (3)	பொருள். (4)
275	ஏஸியாட்டிக் ஆக்ஸிஜன் லிமிடெட், 8, பிபிடி பாக் ஈஸ்ட் கல்கத்தா 1 சென்னை	நைட்ரஜன் கேஸ்.	
276	வி. குருவைய்யா நாயுடு அண்டு சன்ஸ் லெதர் (பிரைவேட்) லிமிடெட், 11, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, பெரியமேட் சென்னை-3, (கோயம் புத்தூர்).	பினிஸ்டு லெதர் (ஸ்ப்டான்சயல் எக்பான்ஸன் யூனிட்).	
277	ஓரியண்டல் ஹைட்ராலிக் (பிரைவேட்) லிமிடெட், 15, கற்பகம்பாள் நகர், மைலாப்பூர். சென்னை. (அலமாதி-ரெட் ஹில்ஸ்).	ஸிங்கில் காலம் ஹைட்ராலிக் பிராஸஸ் அப்டு 250 டன்ஸ்.	
278	ஸ்நாப் நேச்சுரல் ஆல்ஸினேட் ப்ராடக்டஸ் லிமிடெட், எக்செல் எஸ்டேட், எஸ்.வி.ரோடு, ஜார்ஜன் வெஸ்ட் பாம்பே. (ராணிப்பேட்டை-வட ஆற்காடு மாவட்டம்).	சோடியம் ஆல்ஸினேட்.	
279	லண்டன் ரப்பர் கம்பெனி (இந்தியா லிமிடெட் 35 ஓல்டு டிரங்க் ரோடு, சென்னை-43. சைதாப்பேட்டை-செங்கல்பட்டு மாவட்டம்	ரப்பர் கார்ட்ராசெப்டிவ் (பார் ஸப்டான்ஸி (சையல் யூனிட்).	
[illegible]	மேட்டூர் பியர்ட் செல் லிமிடெட் 3வது மாடி, பாம்பே மீச்சுவல் பில்டிங், என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை. (வேலப்பன் சாவடி-சைதாப்பேட்டை வட்டம்).	பொலூஷன் எக்யூப்மெண்ட.	
281	எல். ஜி. பாலகிருஷ்ணன் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், இந்தியா ஹ்வுஸ் திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-18.	டைமிங் செயின்பார் ஆட்டோ மேட்டிக் என்ஜின் எக்ஸ்ட்ரா.	
282	கோத்தாரி பிளான்டேஷன் அண்டு இண்டஸ்டிரீஸ் லிமிடெட், 8, இந்தியா எக்ஸ்செஞ்ச் பிளேஸ், கல்கத்தா-1. (நகரி மதுரை மாவட்டம்	பெர்டிலைஸர் கெமிகல்.	
283	அட்கோ இந்தியா லிமிடெட் மவுண்ட், பூந்தமல்லி ரோடு, மணப்பாக்கம் சென்னை-84. (ஸ்ரீபெரும்புத்தூர் செங்கல்பட்டு மாவட்டம்).	பால் வால்வ்ஸ் எல் டிவைசஸ்.	
284	திருச்சி டிஸ்டில்லரி அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், 109, என். ஹெச். ரோடு, (திருச்சி).	ஆகிடால் தைடு, ஆஸிடிக் ஆசிட், அகிடிக் மற்றும் அன் ஹைரைட் எதில் ஆஸிடேட்.	
285	சேலம் ஸ்டீல்ஸ் லிமிடெட் எஸ். ஏ. 150, ரெயில்வே வெஸ்ட் காலனி, சேலம்.	கோல்டு ரோல்டு ஸ்டென்லஸ் ஸ்டீல் ஹாட்ரோல்டு ஸ்டென்ல்ஸ் ஸ்டீல், எலக்ரிகல்ஸ், ஸ்டீல் ஹாட்ரேல்டு ஸ்பெஷல் ஸ்டீல், ஹாட் ரோல்டு எம்.எஸ். ஆர்ட்டு ரோல்ட்.	

வரிசை எண்.	கம்பெனியின் பெயர்.	இடம்.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
86	பிக்கன் ரோடு டிராக் கன்ட்ரோல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், 29, ராஜாஜி ரோடு, சென்னை-1. (அம்பத்தூர்).	ஆன்/ஆப் சர்வீஸ் டைப் ரோடார்க் வால்வு ஆக்சுலேட்டர்ஸ்.	
87	ஜூடி வெய்லர் (பிரைவேட்) லிமிடெட், கோபால் பாக் அவினாசி ரோடு, கோயம்புத்தூர்.	சென்ட்ரல் லேத் மில்லிங் மிஷின்ஸ்.	
88	தமிழ்நாடு காட்போர்டு அண்டு பேப்பர் லிமிடெட், 3, கதீட்ரல் ரோடு, சென்னை-86. (பவானி சாகர்).	ஸ்பெஷாலிடி பேப்பர்.	
89	தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ் லிமிடெட், 10, ஜெய்ப்பூர் நகர், சென்னை-86. (தாதா நகர்).	டிரான்ஸ் பூஸன் சொலுஸன் பேஸ்டு ஆன் டெக்ஸ்ட்ரோஸ் ரிங்கர் லாக்டேட் சலைன்.	
90	இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் இண்டஸ்டிரியல் எஸ்டேட் சென்னை-58. (அம்பத்தூர்).	மேக்ஸிமம் டிமாண்டு இன்டிகேட்டர்ஸ்.	
291	தி கிண்டி மெஷின் டூல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், பள்ளிக்கரணை, சென்னை.	எலெக்ட்ரோ மெக்கானிகல் ஆக்சுலேட்டர்ஸ்.	
[illegible]	சான்ஸ் கெமிகல் சென்னை லிமிடெட், ரத்தன் பஜார், சென்னை. (ராணிப்பேட்டை).	பெரிக் அலுமினியம்.	
293	ஒசூவால் ரீபைனிங் சென்னை லிமிடெட் சென்னை-1.	ரிபைன்டு ஈடபில் மற்றும் நான் எடிபில் விஜிடபில் ஆயில்.	
294	மெட்ராஸ் எலாஸ்ட்ரோமர்ஸ் லிமிடெட், சென்னை-18. (மறைமலை நகர்).	சாலிட் டயர்ஸ் புல்லிங் டாங் வீல்ஸ்.	
295	சேலம் ரீபிராக்டரீஸ் லிமிடெட், கரப்பூர், சேலம்-2.	டி.பி.மேக்னஸைட் பேசிக் ரிபாக்டரிஸ்.	
296	மேட்டூர் பியர்ட்ஸெல் லிமிடெட், என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை. (வேலப்பன் சாவடி).	பெல்டு ரோலர்ஸ், ஸ்க்ரு கன்வேயர்ஸ் ஸிஸ்டம் மற்றும் பக்கெட் எலிவேட்டர்.	
297	தி மெட்டல் பவர் கம்பெனி லிமிடெட், மறவன் குளம், மதுரை மாவட்டம்.	மக்னீஷியம் பவுடர்.	
298	தி மெட்டல் பவர் கம்பெனி லிமிடெட், மறவன் குளம், மதுரை மாவட்டம்.	சிங்டஸ்ட்.	
299	சக்தி சுகர் லிமிடெட் கோயம்புத்தூர், சக்தி நகர்.	தொழில் ஆல்கஹால்.	

இணைப்பு II.

(93 ஆம் பக்கத்தில் இவர் உரையைக் குறிப்பைக் காண்க.)

பொதுவாக தமிழ்நாட்டுக்கு ஒரு ஆண்டுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது. 1982 மார்ச் மாதம் முதல் மத்திய அரசு சிமெண்டின் மீதான கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்தியுள்ளது. கட்டுப்பாடு தளர்த்தப்படுவதற்கு முன்பு சராசரியாக ஒரு ஆண்டுக்கு 3.90 இலட்சம் டன் சிமெண்ட் மத்திய அரசால் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டு வந்தது. ஓரளவு கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட பின்பு ஒரு ஆண்டுக்கு 1.42 இலட்சம் டன்கள் ஒதுக்கப்பட்டு வருகிறது.

2. சிமெண்டின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒதுக்கப்படும் லெவி சிமெண்ட் கோட்டாவிலிருந்து அரசுத் துறை, சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் கடினமாக உள்ளது. எனவே ஒதுக்கப்படும் லெவி சிமெண்ட் போதுமானதாக இல்லை என்று கருதும் அரசுத் துறைகள்/சார்பு நிறுவனங்கள், தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வெளிச்சந்தையிலிருந்து வாங்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. அரசுத் துறையில் இரண்டும், தனியார் துறையில் ஆறும் ஆக மொத்தம் எட்டுத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளன. அவற்றின் ஆண்டு சிமெண்ட் உற்பத்தித் திறன் 38.72 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். புதிய கட்டுப்பாட்டு விதிகளின்படி, சிமெண்ட் தொழிற்சாலைகள் தமது உற்பத்தித் திறனில் மூன்றில் இரண்டு பங்கினை லெவி சிமெண்டாக அரசுக்கு அளிக்க வேண்டும். மீதமுள்ள ஒரு பங்கினை தொழிற்சாலைகள் வெளிச்சந்தையில் எந்தவித விலை அல்லது விநியோக கட்டுப்பாடுமின்றி விற்கலாம். இந்தியா சிமெண்ட், தாழையூத்து மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைகள் தமது உற்பத்தியில் 59 சதவிகிதத்தை பொதுச் சந்தையில் விற்பதற்கு மைய அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

4. மின்வெட்டு அமலில் இருப்பதால், சிமெண்ட் தொழிற்சாலைகள், தமது முழுமையாக உற்பத்தித் திறனை முடுக்க இயலவில்லை. ஆகையினால் தொழிற்சாலைகள் தமது உற்பத்தித் திறனில் சராசரியாக 20 சதவீதத்தைத் தான் உற்பத்தி செய்ய முடிகிறது.

5. மத்திய அரசின் புதிய இறக்குமதிக் கொள்கையைப் பின்பற்றி, இவ்வரசு உண்மையான நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்டை கொரியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அதன்படி மேற்சொன்ன நிறுவனம் 17—9—1982 அன்று டி.பி.ஆர். கொரியா நிறுவனம் திருவாளர்கள் கொரியா சிமெண்ட் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. எல்லா சிமெண்டும் 1983-ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் இறக்குமதி செய்யப்பட வேண்டும். இதுவரை 33,804 மெட்ரிக் டன் எடையுள்ள சிமெண்ட் இரண்டு கப்பல்கள் மூலம் சென்னை வந்தடைந்துள்ளன. இறக்குமதியான எல்லா சிமெண்டும் அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டது.

6. தேவைகள் அதிகரிப்பதனால், கூடுதலான சிமெண்ட் இறக்குமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது. இது குறித்து ஒரு முடிவு விரைவில் எடுக்கப்படும்.

பொருளடக்கம்.

	பக்கங்கள்.
1 வினாக்கள்—விடைகள்	199—218
2 ஒத்திவைப்புத் தீர்மானம்— தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு போதுமான அளவுக்கு அரிசி வழங்க வேண்டுமென வற்புறுத்தி தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதமிருப்பது குறித்து ..	219—232
3 கவன ஈர்ப்பு— மின் பயனீட்டாளர்களுக்கு, குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பயனீட்டுக் கட்டணத்திற்கும் அதிகமாக தஞ்சாவூர் நகராட்சி மின்சார கட்டணத்தை மாற்றியமைத்திருப்பது குறித்து	233—234
4 1982–83 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம்.	235—279
5 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்	280

CXCII No. 3.

9th February.

143132

D

V211,32'N83

N83·192·1–3

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1983 பிப்ரவரி 9.

தை 27, துந்துபி, திருவள்ளுவராண்டு-2014.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பண்ணை விஞ்ஞான மையங்கள்

*61 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ்நாட்டில் மூன்று பண்ணை விஞ்ஞான மையங்களை அமைக்க தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் இந்திய விவசாய ஆய்வுக்கழகத்திடம் அனுமதி கேட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதற்கான அனுமதி கிடைத்துவிட்டதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஐந்து வேளாண்மை அறிவியல் மையங்களை அமைக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் அனுமதியைக் கோரியுள்ளது.

(இ) நீலகிரி மாவட்டத்தில், செங்கல்பட்டு மாவட்டத்தில், வட ஆற்காடு மாவட்டத்தில், தென் ஆற்காடு மாவட்டத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய வேளாண்மை அறிவியல் மையங்கள் அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

(உ) இது இன்னும் இந்திய விவசாய ஆய்வுக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நேற்றைய முன் தினம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விழாவில் கூறியதாக ஒரு செய்தியைப் படித்தேன். மதுரையில் உள்ள விவசாயக் கல்லூரியை விவசாயப் பல்கலைக் கழகமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்ற செய்தியைப் பார்த்தேன். அதுபற்றிய விவரங்களை நான் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பல்கலைக் கழகமாக உயர்த்த வேண்டும் என்ற என்னுடைய விழைவைத் தெரிவித்தேன்,... பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவிக்கவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்த விஞ்ஞான மையங்கள் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்குமா அல்லது தனித்து இயங்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் நிலங்கள்

* 62 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் மொத்த நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(இ) அதன் ஒரு பகுதியில் பருத்தி, கம்பு போன்ற பயிர்கள் பயிரிடச் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) 5.984 லட்சம் ஹெக்டேர்.

(இ) இல்லை.

(உ) வினாவுக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தஞ்சாவூர் மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்திலே ஆறு மாதங்களுக்குத்தான் விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மீதி மாதங்களில் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன, அங்குள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இப்போது பரிசீலனையில் இல்லை விட்டாலும்கூட, அங்குள்ள 13 இலட்சம் ஏக்கர்களில் விளைகிற நெல், வறட்சி, புயல், வெள்ளம் காரணமாக அழிந்துவிடுவதால், அதைக் கருத்திற் கொண்டு,

இரண்டு இலட்சம் ஏக்கரில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, பம்புசெட்டுகளை உருவாக்கி மாற்றுப் பயிர்களை அதாவது பருத்தி, கம்பு போன்ற பயிர்களைப் பயிரிட அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: புதிய சம்பா அறுவடைக்குப் பிறகு குறுகிய காலப் பருத்தியைப் பயிரிடுகிறோம். சம்பா பயிரிட்ட தரிசு நிலத்தில் கம்பு பயிரிடப்படுகிறது.

திரு. ஆ. நல்லசிவன்: தஞ்சையிலே குறுவையில் எவ்வளவு பயிர் எதிர் பார்க்கப்பட்டது? அதில் எவ்வளவு பயிர் விளைந்திருக்கிறது? சம்பாவில் எவ்வளவு விளைந்திருக்கிறது? அதில் எவ்வளவு விளைவு வரும் என்று அரசு எதிர்பார்க்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: விவசாயத்திற்குரிய நிலத்தில் பருத்தியும், கம்பும் விளைவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு விஸ்தீரணத்தில் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன். அதை விரிவாக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: 1981-82 ஆம் ஆண்டில் நான்காயிரம் ஹெக்டேரில் குறுகிய காலப் பருத்தியும், நடப்பாண்டில் கம்பு 800 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளது. விரிவுபடுத்த ஆய்வு வேளாண்மைத் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: காவிரித் தண்ணீர் சரியான முறையில் கிடைக்காததால், குறுவைப் பயிருக்குப் போதுமான தண்ணீர் வசதி இல்லாமல் பல ஆண்டுகளில் குறுவை வீணாகப் போகும் நிலைமை தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே குறுவைப் பயிரில் ஒரு போகத்தை நிறுத்தி சம்பா பயிர் போடும் மாற்று யோசனையை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: காவிரித் தண்ணீர் கிடைக்காது என்று நாம் இப்போதே கைவிடத் தேவையில்லை. இருந்தாலும் நாம் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் குறைவாக இருந்தாலும், புதிய விஞ்ஞான முறை காரணமாக அதே அளவிற்குப் பயிர் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே காவிரி நீரை அதிகமாகப் பயன் படுத்துகிறோம் என்ற குற்றச்சாட்டு தவறு என்று தெரிகிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தண்ணீரை எவ்வளவு சிக்கனப்படுத்த வேண்டுமோ அப்படிப் பயன்படுத்தித்தான் தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: இரு போகம் பயிர் செய்தால், ஒரு தடவை மாற்றுப் பயிரை (ரொட்டேஷன் கிராப்பை) பயிர் செய்வதால், நிலமும் நெற் பயிருக்கு ஏற்ற வளமுள்ளதாக ஆகிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். நெல் விவசாயம் செய்கிறவர்கள் நெல்லோடு வியாபாரப் பயிர்களைப் பயிர் செய்தால், இலாபம் ஏற்படும் என்பதை மனதிலே கொண்டு இந்தப் பகுதியில் இரண்டு, மூன்று மாதங்களுக்காவது மாற்றுப் பயிரைப் பயிரிடுகிற முறையை விவசாயப் பல்கலைக் கழகத்தின் வழியாகக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அந்த வகையிலேதான் பருத்தி பயிரிடப்படுகிறது. அதனுடைய பரப்பை நாம் விரிவாக்க நினைக்கிறோம்.

தெருக்கூட்டும் இயந்திரங்கள்

* 63 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தெருக்களைச் சுத்தம் செய்வதற்காக தெருக்கூட்டும் இயந்திரங்களை வாங்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "இல்லை" என்று சொன்னாலும், சென்னை மாநகரத்தினுடைய தூய்மையை நிலைநாட்டும் பொருட்டு விஞ்ஞான ரீதியில் சுத்தம் செய்வதற்காக வேறு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா அல்லது அப்படி மேற்கொள்வதுகுறித்து மாநகராட்சியின் பரிசிலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே இதுபோன்ற மெக்கானிக்கல் சுவீப்பர்ஸ் என்ற இயந்திரத்தை வாங்கி மாநகராட்சியின் மூலமாக துப்புரவுப் பணியைச் செய்தார்கள். அது பழுதடைந்ததற்குப்

பின்னாலே அதைப் பழுது பார்க்க முடியவில்லை என்று சொல்லி அப்படியே நிறுத்திவிட்டார்கள். பழுதடைந்தது மட்டுமல்லாமல், இப்போது அதன் மீது துரு பிடித்து கொண்டிருக்கிறது. அதைத் துப்புரவு பண்ணக்கூடிய சூழ்நிலை தான் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இதுபோன்ற இயந்திரத்தால் துப்புரவுப் பணியைச் செய்வதால், ஏற்கெனவே இருக்கக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை இழப்பு நேரிடும். அவைகளையும் கருத்தில் கொண்டு இப்போது வாங்கத் தேவையில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஏற்கெனவே இந்தப் பணியில் இருப்பவர்கள் வேலை இழப்பது நியாயமில்லை. ஒருவரே இயக்கிச் செல்லும் இயந்திரத்தைத் தருவதன் மூலமாக அதிகத் துப்புரவுப் பணி செய்ய முடியும். அவர்களுக்கு வேலை தரவேண்டும் என்பதற்காக லாரிகளில் அவர்கள் எடுத்துச் செல்லும் போது, குப்பையை வழியெல்லாம் கொட்டிச் செல்கிறார்கள். ஆகவே விஞ்ஞான இயந்திரத்தைப் பயன்படுத்தி அப்படிக் கொட்டுவதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேல் நாடுகளில்கூட இப்படிப்பட்ட இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். இதை நான் நேரிலே பார்த்தேன். அப்படிப்பட்ட இயந்திரங்களை மாநகராட்சி போன்ற பெரிய நகரங்களில் பயன்படுத்துவது உதவிகரமாக இருக்கும். இருந்தாலும் இப்போது இருக்கின்ற பணியாளர்களையும் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் மாநகராட்சியில் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், லாரிகளில் எடுத்துச் செல்லுகிறபோது குப்பையை வீதியில் கொட்டிச் செல்லுகிற நிலைமை இருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. ஆகவே திறந்த லாரிகளில் கொண்டு போகாமல் தார்பாலின் போட்டு மூடி குப்பைகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9-40)

செல்வி ஆ. லீலாவதி: தெரு கூட்டுபவர்களில் சிலர் ஓய்வு பெற்றவர்கள், வேலையில்லாமல் இருப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே தெரு கூட்டுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது அரசினுடைய பரிசிலனையில் இருந்துவருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, சாலையில் உள்ள நடைபாதைகளில் எச்சிலைத் துப்புவதற்கும், குப்பைகளைப் போடுவதற்கும் பெருமளவுக்கு குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும், மக்களுக்கு அதைப் பயன்படுத்த வேண்டுமென்ற அந்தப் பழக்கத்தை ஏற்படுத்தினால், அவர்களுக்கு அந்த 'சிவிக் சென்ஸ்' ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும். அது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆங்காங்கே 'டஸ்ட் பின்ஸ்', அதாவது குப்பைத் தொட்டிகள் வைத்திருக்கிறோம். ஒரு சில இடங்களில் அந்தக் குப்பைத் தொட்டிகளை உடைத்து அதிலே இருக்கின்ற கம்பிகளை எடுத்துக்கொண்டு போய் விடுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமை பல இடங்களில் இருக்கிறது. அந்த நிலைமைகளைத் தவிர்க்க முடியாது இருக்கிறது. நாம் என்னதான் சொன்னாலும், அந்த நிலைமைகளைத் தவிர்க்க முடியவில்லை. ஒரு சில சமூக விரோதச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. சில நேரங்களில் குப்பைத் தொட்டிகளே காணாமல் போகின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம்: 'Waste is Wealth' என்ற அளவில் இந்தக் குப்பைகளைக் கொண்டு, கழிவுப் பொருட்களைக் கொண்டும் வெளிநாட்டில்—லண்டன் போன்ற நகரங்களில் எரி பொருள்கள் தயாரிக்கின்றார்கள். அந்த முறையில் நம் மாநகராட்சியில் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 'சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட்' என்ற முறையிலே ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்காகக்கூட ஒரு பொறியாளரை டோக்கியோ போன்ற நகரங்களுக்கு அனுப்பலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, in foreign countries, big tins with lids are kept for this purpose. Besides the tins, every house is supplied with five plastic bags per month for the purpose of putting the rubbish. After they are full, these plastic bags are put in the tins and, later, their contents are emptied into the truck and the plastic bags are given back to the persons concerned for further use for another 10 or 15 days after which they are destroyed. Can we not follow such a system here also because if the rubbish is put into plastic bags, it will be easy for the carts also to take these plastic bags and give them back subsequently?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, இங்கேயும் ஒரு திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்தினோம். கோட்டூர்புரத்திலும், தியாகராயநகர் பகுதியிலும் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டுவந்தோம். பிளாஸ்டிக் பக்கெட்டுகளை ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுப்பது என்ற திட்டத்தைக் கொண்டுவந்தோம். அந்தத் திட்டத்தின்படி மாநகராட்சி பக்கெட்டுகளைக் கொடுப்பது என்று இல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஒவ்வொருவரும், தாங்களே சொந்தமாக பிளாஸ்டிக் பக்கெட்டுகளை வாங்கி தங்கள் வீடுகளில் வைத்துக்கொண்டு, அங்கே ஏற்படுகின்ற குப்பைக்கூளங்களை அந்த பக்கெட்டுகளில் வைத்துக்கொண்டு, சாலையிலே வண்டிகள் வருகின்ற நேரத்தில் அவைகளை அந்த வண்டியிலே கொட்டிவிட்டு, மீண்டும் சுத்தம் செய்து அந்த பக்கெட்டுகளை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற முறையில் அந்தத் திட்டத்தை அணுகினோம். கோட்டூர்புரம் போன்ற இடங்களில் அது நன்றாக நடந்து வருகிறது. மாநகராட்சியிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் இதை விஸ்தரிக்கலாமா என்பது இன்று மாநகராட்சியின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

தூய்மைப் பகுதி

*64 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை காமராசர் சாலையைப்போல் மாநகரில் மற்ற முக்கிய பகுதிகளையும் தூய்மையாக வைத்திருக்கும் (Litter Free Zone) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அண்ணா சாலையைத் தூய்மையாக வைக்கும் திட்டம் உள்ளது.

(இ) இன்னும் ஓரிரு மாதங்களில் செயல்படுத்தப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணா சாலையைத் தூய்மைப்படுத்தும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அத்தோடு நில்லாமல், மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கின்ற பகுதிகள், கிரீன்வேஸ் சாலை, பெரியவர்கள் நினைவகங்கள் இருக்கின்ற பகுதிகள், சுற்றுலாப் ராஜாஜி, பெரியார், காமராஜர் நினைவகங்கள் இருக்கின்ற பகுதிகள், வெளிநாட்டிலேயிருந்து வந்து பகுதிகளாக இருக்கின்ற பகுதிகள், ஆகிய

பார்க்கின்ற பகுதிகள் ஆகியவற்றையாவது அண்ணா சாலையோடு சேர்த்து முன் உரிமை தந்து, அவைகளையும் தூய்மைப் பகுதியாக ஆக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதுபோன்ற தூய்மைப் பகுதித் திட்டத்தின்கீழ் (Litter Free Zone) இன்றைக்கு நாம் மெரினா கடற்கரைச் சாலையை வைத்துக் கொண்டிருக்கிறோம். நாம் எவ்வளவுதான் கண்டிப்பாக இருந்தாலும், ஒரு சில இடங்களில் கரும்புச் சாறு பிழிபவர்கள், கரும்புச் சாற்றைப் பிழிந்துவிட்டு அங்கே அந்தச் சக்கைகளைப் போட்டுவிட்டுப் போய்விடுகின்றார்கள். நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட 'பப்ளிக் கான்சியன்ஸ்' பொதுமக்கள் 'கான்சியன்ஸ்' என்ற முறையிலே இவைகளையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் ஒவ்வொரு பகுதியாக நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அடுத்ததாக அண்ணா சாலையை எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பெரியவர்கள் உறங்குகின்ற பகுதிகளையெல்லாம் தூய்மைப் பகுதிகளாக எடுத்துக்கொண்டு அவைகளைத் தூய்மையாக வைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: தூய்மைப் பகுதி என்று அறிவித்துவிட்ட பிறகு அந்தப் பகுதியிலே தூய்மைக் குறைகளை ஏற்படுத்துகின்றவர்களுக்கு, மற்ற பகுதிகளில் தூய்மைக் குறைவை ஏற்படுத்துகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனையைவிடக் கூடுதலான தண்டனையைக் கொடுக்கின்ற விதிமுறைகளை ஏற்படுத்தி, அதன் முக்கியத்துவத்தை உணரச்செய்ய வேண்டும். அதற்கு ஏதாவது ஆணை அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படிப்பட்ட திட்டம் இல்லை. அதிகமாகத் தண்டனை விதிக்கக்கூடாது. ஒரே நோக்கில் மக்களுடைய கவனத்தை ஈர்த்து குப்பைகூளங்களை நாம் பொது வீதிகளில் கொட்டக்கூடாது, அப்படி மீறிக் கொட்டுவதனால் சுகாதாரக் கேடுகள் விளைகின்றன என்று பெயர்ப் பலகைகள் ஆங்காங்கு வைக்கப்பட்டு, அதன்மூலம் பொதுமக்களை அறிவுறுத்திக்கொண்டிருக்கின்ற பணியிலேதான் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆகவே கண்டிப்பாக ஒரு சில ஆண்டுகளுக்கு இதை நடைமுறைப்படுத்திக்கொண்டு போனால், மக்களுடைய கவனத்தை ஈர்ப்பதோடு, அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாமல் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில் அரசு இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மற்ற பகுதிகளை சாதாரணமாக தூய்மைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவினும், தூய்மைப் பகுதி என்று அறிவிக்கின்ற பகுதியில் ஏற்படும் செலவிலும் வேறுபாடு ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

அந்தச் செலவில் எந்த அளவுக்கு வித்தியாசம் வருகிறது என்று அறியலாமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற கேள்விக்குப் பதில் சொல்கின்றபோது, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். ஆகவே அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு இல்லாமல், புதிதாக வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்வதற்கு இதை வாய்ப்பாகக் கருதி, அந்தத் தூய்மைப் பகுதிகளை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதிகமான துப்புரவுப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய வருமானத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஒரு ஆண்டுக்கு ரூ. 29 கோடியிலிருந்து ரூ. 30 கோடி தான் வருமானம் வருகிறது. ஆனால் மாநகராட்சியினுடைய ஜனத்தொகையைப் பார்த்தால், ஏறத்தாழ 35 லட்சம் மக்கள் இந்தப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு நாளைக்கு வருபவர்கள், போகின்றவர்கள் எண்ணிக்கை மட்டும் 10 லட்சம். ஆகவே, இவர்களுக்கெல்லாம் நாம் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய கடமை இந்த மாநகராட்சிக்கு இருக்கிறது. ஆகவே வருகின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்தால், கண்டிப்பாக எதுவுமே செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அரசாங்கத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை, தன்னிறைவுத் திட்டம் போன்ற மிகப்பெரிய திட்டம் உள்பட, இந்த மாநகராட்சிக்காக 265 கோடி ரூபாய் அளவில் நாம் கொடுத்திருக்கிறோம். ஒரு ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கத்தின் மூலமாக மானியமாகவே கொடுத்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், மாநகராட்சிப் பகுதிகளை தன்னிறைவுப் பகுதிகளாக மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தோடு இந்தத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூய்மைப் பகுதியை சிலர் அசுத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்படி அசுத்தப்படுத்துகின்றவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி எத்தனை பேர்கள் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. தண்டிக்கவும் இல்லை.

திரு. பா. ரா. தாமஸ்: ஏராளமான பயணிகள் தென் மாவட்டங்களில் இருந்தும் வட மாநிலங்களிலேயிருந்தும் வருபவர்களும் நம் மாநிலத்திலே யிருந்து வெளிமாநிலங்களுக்குச் செல்கின்றவர்களும் பயன்படுத்துகின்ற சென்ட்ரல் ஸ்டேஷன், எக்மோர் ஸ்டேஷனில் உள்ள இடங்களை சுத்தப் படுத்தக்கூடிய அளவுக்கு அரசாணையை அமைச்சர் அவர்கள் கொடுத்து அதை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முக்கியமான பகுதிகளில், எங்கெங்கு பயணிகள் அதிகமாக வருகின்றார்களோ, வெளியூர் சுற்றுப்பயணிகள் வந்து கொண்டிருக்கின்றார்களோ, அந்தப் பகுதிகளையெல்லாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணமும் மாநகராட்சிக்கு இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: சென்னையில் உள்ள காமராஜர் சாலை, வெளி மாநிலத்தவர், மற்றும் வெளி நாட்டுப் பயணிகள் எல்லாம் வரக்கூடிய பகுதியாக இருக்கிறது. அந்த அளவுக்கு மெரினா பீச் எல்லாம்கூட முக்கியத்துவம் அடைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தண்டனை கொடுக்காமல் அந்த உணர்வை வரச்செய்து இந்த இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். ஒருவேளை நம் மாநிலத்தைச் சேர்ந்தவர் களுக்கு அப்படி உணர்வை வரவழைக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால் பல வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற பஸ்கள், அங்கே வந்து தங்கி, அந்த பஸ்களை அங்கே நிறுத்தி வைத்து அதிலுள்ள பயணிகள் எல்லாம் அங்கே காலைக்கடன்களைக் கழிப்பதெல்லாம் அங்கேயே நடந்து கொண்டிருக் கின்றது. மற்ற சாலைகளைவிட, தூய்மையான பகுதி என்று சொல்லப் படுகின்ற பகுதிகளை அசிதாய்மைப்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது என்பதை அரசு உணர்கிறதா? அப்படிப்பட்ட இடங்களிலே தூய்மைக் குறைவு ஏற்படுத்துகின்றவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: காமராஜர் சாலையைப் பொறுத்த வரையில், மெரினா கடற்கரையில் பல்வேறு இடங்களில் கழிப்பறைகள் கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கத்தினர்கள் சொல்கின்றவைகளை கவனத்தில் கொண்டுதான், பொதுப் பணித் துறை மூலமாக 24 மணி நேரமும் தண்ணீர் இருக்கக்கூடிய கழிப்பறைகளை அங்கே வைத்திருக்கிறோம். அதைக்கூட உபயோகப்படுத்திக்கொள்ளவில்லை என்று சொன்னால், நாம் என்ன செய்வது என்று தெரியவில்லை.

Electricity from Bio-Gas.

* 65 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the Madurai Municipal Corporation has undertaken the scheme to generate Electricity from Bio-Gas; and

(b) if so, the present stage of the scheme?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இத் திட்டம் மதுரை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: இத்தகைய திட்டத்தைத் தீவிரமாக ஆய்ந்து நல்லதொரு முடிவெடுப்போமென்றால், இதே திட்டத்தை பல மாவட்டங் களிலும் விரிவாக்கி, அமுல்படுத்தினால், ஓரளவிற்கு நகராட்சிகளின், நகரங்களின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க முடியுமே. அந்த முறையில் தீவிரமாக இதை ஆய்வு செய்து, வெளி நாட்டு தொழில் நுட்ப வல்லுநர்களின் ஆலோசனையைக் கேட்டு, எல்லா இடங்களிலும் இதை விரிவுபடுத்தும் யோசனை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டத்தை—பயோ கேசிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன்மூலமாக ஏறத்தாழ 40 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்னமும்கூட அது பிரிமெச்சூர் ஸ்டேஜில்தான் இருக்கிறது. சிக்கிரமாகப் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாமா என்று முடிவு செய்யப்படும்.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, Sir, will the Hon. Minister consider that in several places in Karnataka, that is, in Bangalore, they have got these gobar-gas plants in many farms? This Government can take a lesson from them and find out how they are operating.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கர்நாடகத்தைப் பார்த்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய எந்த முக்கியத்துவமும் இல்லை என்று நான் நினைக்கிறேன். காரணம், சாண எரி வாயுத் திட்டம் நல்லமுறையிலே தமிழகம்

முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அது மைய அரசினுடைய 20 அம்சத் திட்டத்திலும் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 8,084 சாண எரி வாயுக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட 5,000 சாண எரி வாயுக் கருவிகளை அமைக்கும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே பிற மாநிலங்களைப் பார்த்து நாம் காப்பி அடிக்கத் தேவையில்லை. நம்முடைய மாநிலமே பல்வேறு திட்டங்களை இன்று நல்லமுறையில் செயல்படுத்தி வருகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மதுரை மாநகராட்சியில் புதிதாகக் கழிப்பிடங்கள் அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவை சிறப்பாக இயங்கி வருகின்றன. அந்தக் கழிப்பிடக் குழாய்களில் இருக்கிற மீத்தேன் வாயுவிலிருந்து மின்சாரம் தயாரிப்பதன் மூலம், மின்சாரத் தட்டுப்பாட்டில் அவதிப்படும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் ஷாக்கை உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொஞ்சம் ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மின்சாரம் என்றால் ஷாக் அடிக்கத்தான் செய்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதுபோன்ற திட்டம் மதுரை மாநகராட்சியில் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இப்போது சாணத்திலிருந்து எரி வாயு தயாரிக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் உள்ள பேட்டர்னுக்கு காதி கமிஷன் சப்சிடி கொடுக்கிறார்கள். அதைவிட நல்ல முறையில் நமது கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒரு திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த பிளான்டுக்கு மேலே ஐயர்ன் கவர் போடுகிறோம். அப்படியில்லாமல் சிமெண்ட், செங்கல் வைத்துக் கட்டுகிற ஒரு திட்டத்தை, அதில் பாதி அளவிற்குச் செலவாகிற ஒரு திட்டத்தைக் கண்டுபிடித்து, அதைப் பரிசோதனை செய்து, வெற்றிகரமாக எல்லா இடங்களிலும் பரப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த முறையில் கோபர் கேஸ் பிளான்ட் போடுவதாக இருந்தால் அதற்குக் காதி கமிஷன் சப்சிடி இல்லையென்று சொல்லுகிறார்கள். மாநில அரசு பரிசீலனை செய்து, அதற்குப் பிறகுதான் நாங்கள் சப்சிடி தர முடியும் என்று சொல்லுகிறார்கள். இதுபற்றி மாநில அரசுக்கும் எழுதியிருக்கிறேன், காதி கமிஷனுக்கும் எழுதியிருக்கிறேன். கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்தும் எழுதியிருக்கிறார்கள். இதை அரசு பரிசீலனை செய்து, நாம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைத்திருக்கும்

குறைந்த செலவில் செய்கிற கோபர் கேஸ் பிளான்டை மற்ற மாநிலங்களும் பின்பற்றும் நிலையில், காதி கமிஷன் அதை ஏற்றுக்கொண்டு, 50 சதவிகிதம் மானியம் கொடுக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதுபற்றித் தனிக் கேள்வி கேட்டால் நான் விவரமாகத் தெரிவிக்கிறேன்.

திரு. க. அருணாசலம்: கிராமப்புறங்களிலே கோபர் கேஸ் பிளான்டிலிருந்து எடுக்கிற மின் சக்தியை தண்ணீர் இயந்திரங்களை இயக்குவதற்கும், விளக்குகள் எரிப்பதற்கும் உபயோகிக்கிறார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து, அதை நம்முடைய மாநிலத்தில் அதிகப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அரசு முன்வரும். நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

காட்பாடி அருகே பேருந்தில் கொள்ளை

***66 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் காட்பாடி அருகே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று வழிமறிக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதனால் பாதிக்கப்பட்ட பயணிகள் எத்தனை பேர்? கொள்ளை போன பொருட்களின் விவரம் மற்றும் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்த 13 பயணிகள் இதனால் பாதிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து கொள்ளை போன பொருட்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 39,000 (ரூபாய் முப்பத்தொன்பதாயிரம்) ஆகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 1981-லே நடைபெற்ற இந்த சம்பவத்தைப் பற்றி அமைச்சரவர்கள் இப்போது சொன்னார்கள். அதிலே 13 பேர் பாதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். 39,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் களவாடப்பட்டதாகவும் சொன்னார்கள். அந்தப் பொருள்கள் மீட்கப்பட்டனவா? அந்தப் பதின்மூன்று பேர்களுக்கு அரசு நஷ்ட ஈடு தர முன்வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கொள்ளைக்காரர்களைப் பிடித்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்தப் பொருள்கள் மீட்கப்படவில்லை. அதுபற்றி முழு விவரம் என்னிடமில்லை. ஆனால் அவர்களுக்கு அரசு நஷ்ட ஈடு கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 1981-க்குப் பின்னாலே இதுபோன்ற சம்பவம் எதுவும் வேறு எங்காவது நடைபெற்றிருக்கின்றதா? மேலும், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க ஒவ்வொரு பேருந்திலும் துப்பாக்கியுடன் கூடிய காவலர்களை அனுப்பும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தை ஒட்டியுள்ள எல்லைப் பகுதியில் நடந்திருப்பதாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. துப்பாக்கியோடு காவலரை அனுப்புவது என்பது கடினமான காரியமாக இருக்கிறது. அதிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நாம் துப்பாக்கி கொடுக்கலாமா என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: தலைவரவர்களே, பேருந்துகளிலே ஆயுதம் தாங்கிய காவலரை அனுப்பாவிட்டாலும், ஹைவேயிலே ஆயுதம் தாங்கிய மொபைல் பார்ட்டி இருந்தால் நல்லதாக இருக்கும். அதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

செய்தி நிருபர்களுக்கு இலவச பேருந்து பயணச்சீட்டு

* 67 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செய்தி நிருபர்களுக்கு தற்பொழுது எத்தனை மாவட்டங்களில் பேருந்து இலவச பயணச்சீட்டு வழங்கப்படுகிறது?

(இ) இதனால் பயனடைந்துள்ள நிருபர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) நிருபர்களுக்கு மாநில அளவில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்துகளில் செல்வதற்கு இலவசப் பயணச்சீட்டு வழங்கும் கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(எ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(இ) சுமார் 461 செய்தி நிருபர்கள் பயனடைகின்றனர்.

(உ) இல்லை.

(எ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே. சில குறிப்பிட்ட நிருபர்கள் மாநில அளவில் செயல்பட வேண்டியிருப்பதால், அவர்களைப் பொறுத்த அளவில் மாநில அளவிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இலவசப் பயணச் சீட்டு வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்களால் இந்த அவையிலே சொல்லப்பட்டது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள், மாநில அளவில் செயல்படும் குறிப்பிட்ட சில நிருபர்களுக்கு மாநிலம் முழுவதும் பயணம் செய்ய இலவசப் பயணச் சீட்டை வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏறத்தாழ அத்தனை பத்திரிகைகளும் மாநில அளவில் சென்று செய்திகளைச் சேகரித்து வந்து, போட வேண்டிய வாய்ப்பு இருக்கிறதென்று கேட்பார்கள். எனவே அத்தனை பத்திரிகைகளுக்கும் கொடுப்பது என்பது சாத்தியமாகுமா என்பது யோசனைக்குரியதாக இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருப்பதால், மீண்டும் பரிசீலிக்கலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாவட்டங்களில் ஒரு பத்திரிகைக்கு ஒருவர் என்ற அளவில் [illegible] கூடலூர் போன்ற எல்லையோரத்தில் பணியாற்றும் நிருபர்கள் செய்திகளை அனுப்ப முடியாமல் இருக்கிறார்கள். எனவே எல்லையோரத்தில் இருக்கிற பத்திரிகைகளுக்கு இரண்டு நிருபர்களுக்கு இந்தச் சலுகையைத் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எல்லையோரம் என்று சொல்லும்போது, பக்கத்து மாநில எல்லையைச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த மாவட்டத்திற்குள் அங்கேகூட நிருபர் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த எல்லைப் பகுதிக்குப் போக எங்கே வேண்டுமானாலும் போகலாம். [illegible] நிருபர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்போது ஒரு மாவட்டத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகள் நடமாடுகின்றன. ஆனால் நிருபர்களுக்கு குறிப்பிட்ட ஒரு போக்குவரத்துக் கழகப்

பேருந்துகளில் மட்டும்தான் பயணச் சீட்டு தரப்படுகிறது. எனவே அந்த மாவட்டத்தில் ஓடுகின்ற அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அத்தனையிலும் அவர்கள் பயணம் செய்வதற்கு வசதியாக இந்தச் சலுகையை அமைச்சரவர்கள் விரிவுபடுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திலே எந்தப் போக்குவரத்துக் கழகம் தலைமையாகக் கொண்டுள்ளதோ, அதற்கு மட்டும் கொடுக்கிறோம். பக்கத்து மாவட்டங்களிலிருந்து வருகிற வேறு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே அதற்கும் இந்தச் சலுகையை நீட்டித்துக் கொடுத்து சங்கடத்தை உருவாக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, பத்திரிகைக்கு ஒருவர் என்று கொடுக்கும்போது, மாவட்டத் தலைநகர் செய்தியாளருக்கே வழங்கப்படுகிறது. அதனால் கூடலூரில் உள்ள நிருபர் வருத்தப்படுகிறார், மாநிலத்தில் இருவருக்கு அனுமதிச் சீட்டுகள் கிடைத்தால், தாங்களும் அதிகமான செய்திகளைப் போட, வெட்டி வந்து போக வசதியாக இருக்குமென்பதுதான். அதை அரசு பரிசீலிக்குமா ?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அவர்கள் தம்மிடத்திலே வருத்தப்பட்டுப் பயனில்லை. அந்தச் செய்திப் பத்திரிகைக்காரர்களே கூடலூரில் இருப்பவருக்குக் கொடுத்துவிட்டு தலைமை நிருபருக்கு இல்லை என்று சொல்லி விட்டால் நன்றாக இருக்கும்.

கர்நாடக எல்லையில் கொளுத்தப்பட்ட அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து

* 68 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1983 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் கர்நாடக மாநில எல்லையில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டு கொளுத்தப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

(உ) அதனால் அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

(எ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) கோகக் கமிட்டி கன்னட மொழியை கர்நாடக மாநில கல்விக் கூடங்களில் முதல் மொழியாக சிபாரிசு செய்துள்ளது. அதனைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என்ற காரணத்திற்காக, தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த அரசு போக்குவரத்து நிறுவனமான அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினை கன்னட மாணவர்கள் நிறுத்திக் கொளுத்தினார்கள்.

(உ) சுமார் 1,00,000.00 (ரூபாய் ஒரு லட்சம்).

(எ) இது சம்பந்தமாக பெங்களூர் வில்சன் கார்டன் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து நிறுத்தக் காரணமாய் இருந்த 9 மாணவர்களைக் கைது செய்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. இனி இம்மாதிரி சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும்படி கர்நாடக அரசு தலைமைச் செயலரைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : கர்நாடக மாநிலத்தில் அங்கே உள்ள மொழிக் கொள்கையில் ஓர் உணர்வு ஏற்பட்டு தமிழகத்திலிருந்து வரும் பஸ் கொளுத்தப்பட வேண்டும் என்ற நிலைமை இருப்பதால், 1 லட்சம் ரூபாய் இப்போது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து, இந்த 1 லட்சம் ரூபாய் நஷ்டத்தையும் நமக்குத் தர அவர்கள் முன்வருகிறார்களா ? நாமும் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோமா ? அங்குள்ள தலைமைச் செயலாளர் அவர்களிடமிருந்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இந்தச் செயல் அந்த அரசையும் மீறி நடந்த செயல் என்று அவர்கள் கருதுவதாக நினைக்கிறேன். 9 மாணவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதால், நஷ்டஈடு கொடுக்க முடியாத நிலை தான் இருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பது பற்றி யோசித்துப் பார்த்துத் தான் முடிவு எடுக்க வேண்டும்.

Veterinary Hospitals.

* 69 Q.—THIRU D. SANTOSHAM and THIRU V. V. V. ANANDAM : Will the Hon. the Minister for Social Welfare be pleased to stae :

(a) the number of Veterinary Hospitals, District-war which have facilities for admitting sick-animals as in-patients;

(*b*) whether there is any proposal with the Government to increase the number of such Hospitals; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) நோயுற்ற கால்நடைகள் தங்கி சிகிச்சை பெறுவதற்குரிய வசதிகளுடன்கூடிய கால்நடை மருத்துவ மனைகள் மாவட்ட வாரியாக பின்வருமாறு :—

1. செங்கற்பட்டு மாவட்டம்	3
2. வட ஆற்காடு மாவட்டம்	6
3. தஞ்சாவூர் மாவட்டம்	8
4. தென்னாற்காடு மாவட்டம்	3
5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்	4
6. திருநெல்வேலி மாவட்டம்	6
7. கோயம்புத்தூர் மாவட்டம்	6
8 பெரியார் மாவட்டம்	2
9. நீலகிரி மாவட்டம்	2
10. சேலம் மாவட்டம்	2
11. மதுரை மாவட்டம்	6
12. இராமநாதபுரம் மாவட்டம்	2
13. கன்னியாகுமரி மாவட்டம்	2
மொத்தம் ..	52

இவை தவிர 18 பிரதம மருத்துவமனைகளிலும் 3 கேந்திரகிராம நிலையங்களுடன் கூடிய மருத்துவ மனைகளிலும் கால்நடைகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் உண்டு.

(இ) மற்றும் (உ) ஒவ்வொரு வருடமும் 4 முதல் 5 கால்நடை மருந்தகங்கள் கீழ்க்கண்ட வசதிகள் உள்ளனவா என்று பரிசீலித்து மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன :—

1. நிரந்தர கட்டிட வசதி இருக்க வேண்டும்.

2. தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

3. அவ்விடம் தாலுக்காவின் தலைமையிடம் ஆகவும் அல்லது உதவி இயக்குநர் கால்நடை பராமரிப்பு தலைமையிடம் ஆகவும் இருக்க வேண்டும்.

4. இனசரி சராசரி கால்நடைகள் வருகையைப் பார்க்க வேண்டும். 1982-83 ஆம் ஆண்டில் ஐந்து கால்நடை மருந்தகங்களை மருத்துவ மனைகளாக தரம் உயர்த்த ஆணை இடப்பட்டுள்ளது.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை மருத்துவமனைகளிலே வைத்து சிகிச்சை செய்யும் வசதியை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தாலுகாவிலும் ஏற்படுத்துவதற்கு அரசு கருதுகிறதா? அதற்கு சாத்தியம் இல்லாத நிலைமை இருந்தால், கிராமங்களில் உள்ள கால்நடைகளை இம்மாதிரியான மருத்துவமனைகளுக்கு இட்டுச்செல்வதற்கென ஆம்புலன்ஸ் வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நான் என்னுடைய பதிலிலேயே கூறியிருக்கிறேன். மாவட்ட வாரியாக எங்கெங்கு மருத்துவ மனைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் கால்நடைகள் தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்ளும் அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல் நடமாடும் மருத்துவமனைகளும் வைத்து அதன் மூலமாகவும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு இல்லங்கள்

* 70 வினா.—**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விபசார சட்டத்தின்கீழ் கைது செய்யப்படும், தண்டிக்கப்படும் பெண்களுக்காக, அரசு பாதுகாப்பு இல்லங்கள் ஏதும் ஏற்படுத்தியிருக்கிறதா?

(இ) அவை எங்கெங்கு உள்ளன?

(உ) அவை அவர்களின் மறுவாழ்வுக்காக எவ்விதத்தில் பயன்படுகின்றன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : விவர அறிக்கையில் திருமணங்கள் மூலம் அளிக்கப்படும் மறுவாழ்வு மிகவும் சிறந்தது என சொல்லப்பட்டிருக்கிறது. மீட்பு இல்லங்களிலும், காப்பகங்களிலும் உள்ளவர்கள் எத்தனை பேருக்குத் திருமணமாயிற்று? இவர்களுக்குத் திருமணம் ஆவதற்கு முன்பு பார்க்கப்படும் மாப்பிள்ளை எப்படிப்பட்டவர் என்பதுபற்றி எச்சரிக்கை விசாரணை நடந்ததா? அப்படி மாப்பிள்ளையைத் தேர்வு செய்ய இருக்கும் வழிவகைகள் விதிமுறைகள் என்ன?

@ 280 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மீட்பு இல்லங்களில் தண்டனைக் காலம் முடிந்த பிறகு, அவர்கள் மகளிர் பாதுகாப்பு இல்லங்களில் வைக்கப்பட்டு அவர்களுக்கு பல தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு, அந்தத் தொழில்களில் அவர்களைத் தயார் செய்து, பிறகு அவர்கள் இந்த இல்லங்களைவிட்டு வெளியேறும்போது, அவர்கள் கற்றுக்கொண்ட அந்தத் தொழில்கள் மூலமாக தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், காப்பகங்களில் இருக்கும் பெண்கள் மற்றும் சிறுமியினர் தாங்கள் திருமணம் செய்துகொண்டு அதன் மூலம் தங்களுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அவர்களுக்கு அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு அரசாங்கம் நல்ல தகுதி வாய்ந்த ஆண் மகனைத் தேர்ந்தெடுத்து அந்தப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைப்பதோடு மட்டுமல்லாமல், பிற்காலத்தில் அவர்கள் திருந்தி வாழ்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த, அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்து, அதை அவர்கள் எப்படி விரும்புகிறார்களோ அதாவது பொருளாகவோ பணமாகவோ அப்படி அவர்களுக்கு சீதனப் பொருளாகக் கொடுக்கும் வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அந்த மகளிர்களுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்குப் பாதுகாப்பு இந்த அரசு கொடுக்கிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நான் கேட்ட கேள்வி என்னவென்றால், எத்தனை பெண்களுக்குத் திருமணம் ஆனது, பையன்களைத் தேர்ந்தெடுக்க என்ன எச்சரிக்கையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : எத்தனை பெண்களுக்குத் திருமணம் ஆனது என்ற விவரக்குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இல்லை. அந்த விவரங்களைப்பற்றி தனிக்கேள்வி போட்டால், கண்டிப்பாக பதில் கொடுக்கலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பாதுகாப்பு இல்லங்கள் பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களில், நீலகிரி மாவட்டத்தில் தான் இதுபோன்ற இல்லங்கள் இல்லை. ஆகவே, நீலகிரி மாவட்டம் ஒரு நல்ல மாவட்டம் என்று எடுத்துக்கொள்ளலாமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு போதுமான அளவுக்கு அரிசி வழங்க வேண்டுமென வற்புறுத்தி தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதமிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன், திரு. இராமமூர்த்தி, திரு. சங்கரலிங்கம், திரு. தாமஸ் ஆகியோர் தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு போதுமான அளவுக்கு அரிசி வழங்க வேண்டுமென வற்புறுத்தி தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் அனுமதி கோரியிருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உண்ணாவிரதம் இருப்பதையொட்டி எழுந்துள்ள பிரச்சினைகளை இந்த அவை விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன். தமிழ் நாட்டிலே குறுவை சம்பா இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, சுமார் 20 லட்சம் டன் உணவு தானியம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அரிசியின் விலை இப்போது ஒரு கிலோவுக்கு 5 ரூபாய் 20 பைசா என்ற அளவிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னது போல, இன்னும் 8 மாத காலத்திற்கு தமிழ் நாட்டிலே நாம் நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களிலிருந்து இப்போதே மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் மாதம் 80 ஆயிரம் டன் அரிசியும், நம்முடைய ரேஷன் கடைகளுக்கு 40 ஆயிரம் டன் கோதுமையும் வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கேட்கும்போது, மத்திய அரசு அதைக் கொடுக்காமல் இப்போது தமிழ்நாடு அரசின்பால் என்ன குறைகளைச் சொல்கிறது. தமிழகத்தின்பால் என்ன குறைகளைச் சொல்வது சரியோ, தவறோ. ஆனால் இப்போது தமிழ் நாட்டு மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை. விலைவாசி உயர்வதையும், அரிசி கிடைக்காமல் மக்கள் திண்டாடுவதையும் யாரும் மறுக்க முடியாது. தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ்காரர்கள் கூட இந்த நிலைமையை மறுக்க முடியாது. தமிழ் நாட்டு மக்களுக்கு அரிசி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் இப்போது பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் நிலைமை. அப்படி இருக்கும்போது 'மர்ச்சென்ட் ஆஃப் வெனிஸ்லே' வருகின்ற ஷைலக்கைப் போல 'பவுண்ட் ஆஃப் ஃப்ளெஷ்' கேட்ட ஷைலக்கைப் போல, அன்றைக்கு தப்பு செய்தீர்களே என்று சொல்லி இன்றைக்கு அரிசி கொடுக்க

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 பிப்ரவரி 9

முடியாது என்று சொல்வது எப்படி நியாயம்? மத்திய அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கை கூட வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல இருக்கிறது. 1982-லே பெப்ரவரியில் ப்ரக்யூர் செய்த அளவை விட இந்த 1983 பெப்ரவரியில் மிகவும் அதிகமாக ப்ரக்யூர் செய்திருக்கிறீர்கள். ஆகவே, தமிழ் நாட்டிலே வறட்சி இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். டெல்லியிலே இருப்பவர்களுக்கு கண், காது இருக்கிறதா என்பது தான்

(முற்பகல் 10-10)

தெரியவில்லை. மத்திய அரசின் அறிக்கையில் அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழ்நாடு அரசு அதிகமாகக் கொள்முதல் செய்திருப்பதால், தமிழ் நாட்டில் வறட்சி இருப்பதைப்போல தோன்றவே இல்லை என்று சொல்லும்படியாக அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கருநாடகத்திலிருந்து நமக்குச் சரியாகத் தண்ணீர் விடவில்லை என்ற நிலை. அதன் காரணமாக தமிழகத்தில் சரியான விளைச்சல் இல்லை. இப்போது சாப்பாட்டுக்கு அரிசி இல்லை என்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. 1943 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்தைப் போல் இங்கேயும் வந்துவிடுமோ என்று நாமெல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மத்திய அரசில் இருப்பவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அவையில் இன்று தான் இருக்கப் போகும் உண்ணா விரதத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கடங்கிய வானொலியில் நேற்று மாலையோ அல்லது இரவோ இதுகுறித்த செய்தி அறிவிக்கப்படவே இல்லை. பத்திரிகைகளைக் காட்டிலும் சக்தி வாய்ந்த வானொலி, டி.வி. போன்ற சாதனங்களை வைத்துக்கொண்டிருக்கிற மத்திய அரசினர் அவைகளை எப்படியெல்லாம் அரசியலுக்காகப் பயன்படுத்தி இருட்டடிப்பு செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மாநில முதலமைச்சர் உண்ணாவிரதம் இருப்பதைவிட ஒரு பெரிய செய்தி இருக்க முடியுமா? அதுவும் மத்திய அரசின் போக்கை எதிர்த்து ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பதை விட ஒரு பெரிய செய்தி வேறு என்ன இருக்க முடியும்? அதைக்கூட இருட்டடிப்பு செய்யும்போது, எப்படி நாம் சும்மா இருக்க முடியும்? எனவே, இப்படிப்பட்ட நிலைமையில்—தமிழ் நாட்டு மக்களின் வாழ்வா சாவா என்ற பிரச்சினையில்—இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிப்பதற்காக அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1983 பிப்ரவரி 9] [மேலவைத் தலைவர்]

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற அவ்வளவு கடுமையான பஞ்சத்தின் விளைவாக, தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களே * உண்ணாவிரதம் இருக்க வேண்டிய காரியத்துக்கு உள்ளாகியிருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, நான் மெத்தவும் வேதனைப் படுகிறேன். தமிழகத்து மாபெரும் பஞ்சம் கவ்விக் கொண்டிருக்கிற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சம் என்பது ஒரு நாளில் வந்து விடுவதல்லாது *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்களில் ஒருவரான மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமிழக முதல்வர் அவர்கள் * உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார் என்று சொல்வது எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் சமாதியை இழிவுபடுத்துவதாக இருக்கிறது. ஏற்கெனவே இந்த மேலவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு அண்ணா கொள்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா சமாதியை நாங்கள் ஒரு புனித தலமாகக் கருதிக்கொண்டிருக்கிறோம். எனவே அந்த வார்த்தை * என்பது சரியல்ல. தயவுசெய்து அந்த வார்த்தைகளை அவர் வாபஸ் பெற வேண்டும் அல்லது மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, இந்தப் பிரச்சினையை நாம் இங்கே விவாதத்திற்கு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. இப்பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைத்தான் தகவலாக நான் உங்களிடத்திலிருந்து கேட்க வேண்டும் என்று அனுமதித்திருக்கிறேன். எனவே பிரச்சினை குறித்த விவாதம் வருகிறபோது குற்றச்சாட்டுகள், பரஸ்பரக் குற்றச்சாட்டுகள், கேள்விகள், எதிர்க் கேள்விகள் ஆகியவைகளை வைத்துக்கொள்ளலாம். இப்போது நடைபெறுவது பிரச்சினை மீதான விவாதம் அல்ல. எனவே பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது குற்றச்சாட்டுகள் எதுவுமில்லாமல், இதற்கான அவசியம் எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் குறிப்பிட்டுச் சொன்னால் போதும். மற்றவைகளைப் பற்றிப் பேச வேண்டாம். அதோடு மற்றவர்களும் குறுக்கிடு செய்வதை நிறுத்திக் கொள்வது நல்லது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1983 பிப்ரவரி 9

(மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பேச எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதோடு * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது *

திரு. க. இராமமூர்த்தி : அவைக்கு வெளியே என்பது வேறு. பேரறிஞர் அண்ணா அவர்களின் மீது இவர்களுக்கு எவ்வளவு பற்றுதல் இருக்கிறது என்பது வேறொன்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எப்படி அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொன்னால் போதும். மற்றதை விட்டுவிடலாம்.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய வார்த்தையை மட்டும் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட்டு, பிரச்சினையைப்பற்றி மட்டும் பேசு என்றால் எப்படி? என்னுடைய வார்த்தை எப்படி (Unparliamentary) அன்-பார்லிமெண்ட்டரி என்றாவது சொல்லுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான்தான் என்னுடைய தீர்ப்பைச் சொல்லியாகிவிட்டதே. அது ஒரு புனிதமான இடம். எதற்காக இன்னொருவர் மனம் புண்படுகிற வகையிலே வார்த்தைகளைச் சொல்ல வேண்டும்? அதை ஏன் மாண்புமிகு உறுப்பினர் அனுமதிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் யார் மனதையும் புண்படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்லுகிறேன். உறுப்பினருக்கு அந்த நோக்கமில்லை என்று சொல்லிவிட்டுப் போகலாம்.

திரு. க. இராமமூர்த்தி : அது ரெக்கார்ட்டில் இருக்க வேண்டுமே.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது உறுப்பினரின் நோக்கம் அல்ல என்பது கண்டிப்பாக ரிக்கார்டில் இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : தற்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை ஒன்றைத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. அதாவது சென்ற சனவரி மாதம் 24 ஆம் தேதிதான் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டத்தை ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்துப் பேசினார்கள். அப்படி உரையாற்றும்போது இப்படிப்பட்ட மோச

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1983 பிப்ரவரி 9] [திரு. க. இராமமூர்த்தி]

மான நிலைமை தமிழ் நாட்டில் இருக்கிறது என்று அவர் அறிவிக்கவில்லை. மாறாக என்னுடைய அரசு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற உணவுப் பற்றாக்குறை நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருக்கிறது—மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி அல்லது அவர்களோடு தொடர்பு கொண்டு சமாளித்துக் கொண்டிருக்கிறது என்று 24 ஆம் தேதிதான் அறிவித்தார். ஆனால் இந்த மாதம் 9 ஆம் தேதியன்று ஏதோ மிகப் பெரிய நெருக்கடி வந்துவிட்டது போலவும் மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை என்று சொல்லுவதும் எப்படி நியாயம் என்றுதான் புரியவில்லை.

அதுமட்டுமல்ல, இந்த அவையிலே வந்து திடீரென்று நெருக்கடி வந்துவிட்டது என்பதும் மத்திய அரசிலிருந்து அதிலும் குறிப்பாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் தமிழ் நாட்டு அரசுக்கு அறிவுரை கூறுகிறதே தவிர பிரச்சினையை. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் . மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அசல் பிரச்சினைக்குள்ளேயே போய் தேதி, நேரம், ஒருவருக்கொருவர் கொடுத்த பதில் ஆகியவைகளையெல்லாம் பேசி விவாதத்தையே தொடங்கிவிட்டார். தயவு செய்து அவையின் மரபுக்கு ஏற்ப ஒத்துழைத்து சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பஞ்சம் குறித்து காலவட்டத்தில் ஒவ்வொரு நேரத்திலும், இந்த மன்றத்திலும் சரி வெளியேயும் சரி கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இந்த அரசை எச்சரித்தும்கூட விளைவுகளைப்பற்றி உடனடியாகக் கவலைப்படாமல், அதற்கான நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாமல் இருந்து விட்டு பிரச்சினையைத் தவிர்ப்பதற்கான வகையில் செயல்பட அரசு தவறிவிட்டது. இந்த நிலையில் இடைக்காலத்தில் இந்த மாநிலத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது, அல்லது கடத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலை அரசுக்கே தெரியும். பல லட்சக் கணக்கான டன் அளவுக்கு அரிசி வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இப்படி நிலைமைகள் வளருவதற்கு விட்டுவிட்டு இன்றையதினம் திடீரென்று நாட்டில் பஞ்சம் வந்து விட்டது, அரசாங்கத்தால் எதையும் செய்ய முடியவில்லை என்ற நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அரசாங்கத்தையும் இதற்குரிய துறையையும் சரியாகக் கவனிக்காமல், ஏற்பட்டுவிட்ட நிர்வாகக் கோளாறுகளைச் சரிப்படுத்த முனையாமல், இதையே ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்றி, இதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருப்பதன் மூலமாக இன்றைக்கு மாநிலத்தில் விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்கு

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 பிப்ரவரி

தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே இருக்கக் கூடிய உணவு நிலைமை, மழை நிலைமை, தண்ணீர் இல்லாத நிலைமை ஆகியவைகளைப்பற்றி நான் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. நாம் எல்லோரும் அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒன்று அது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று உண்ணாவிரதம் இருக்கப் போவதாக இங்கே அறிவித்து இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நேற்றும், இன்று காலையும் பத்திரிகைச் செய்தியின் வாயிலாகவும், ரேடியோவின் வாயிலாகவும் மத்திய அரசு பதில் அளித்திருப்பதிலிருந்து ஒரு விவாதத்தை இந்த இரண்டு அவைகளும் முறையாக நடத்தியாக வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் ஆளும் கட்சியின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைத் தந்தார்கள். மத்திய அரசு இன்னுமொரு அறிக்கையை மாற்றாகத் தந்திருக்கும்போது, இந்த மாநிலத்தின் நலனைக் காக்க தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் நாம் கண்ணை மூடிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்க முடியாது. உண்மை என்ன என்பதை அறிய இந்த விவாதிப்பதைத் தவிர, வேறு வழி இடையாது. மற்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்களைப் போல் அல்ல இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம். அதற்கப்பால் உள்ள பிரச்சினை இது.

இன்னுமொன்று, இதிலே மாநில அரசு நடந்துகொண்டது சரியா அல்லது மத்திய அரசு நடந்து கொண்டது சரியா என்ற பிரச்சினையில் யார் தவறு செய்திருந்தாலும், அதற்காகத் தமிழக மக்களைத் தண்டிப்பது சரியல்ல. மாநில அரசே தவறு செய்திருந்தாலும், தமிழக மக்களுக்கு உணவு தரமாட்டேன் என்று மத்திய அரசு சொல்வதில் எந்தவிதமான நியாயமும் இல்லை. மத்திய அரசு, எல்லா மாநிலங்களும் எங்களுக்குத் தந்தால்தான் நாங்கள் அரிசியைத் தருவோம் என்று சொல்லலாம். அந்தப் பிரச்சினையைச் சொல்லி விட்டு, அவர்களிடத்திலே அரிசி இல்லை என்றால், வெளிநாட்டிலிருந்து வாங்கி அனுப்பித் தர வேண்டும். ஆகவே இத்தகைய பிரச்சினையை விவாதிக்க வேண்டியது மிக இன்றியமையாதது. உணவு இல்லையெனில், சோறு இல்லையெனில், இந்த நாட்டில் எந்தவிதமான நாகரீகமும் பண்பும் இருக்கப் போவதில்லை. இது அத்தகைய முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இதிலே இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட மரபைப் பார்க்காமல், எப்படி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிக்கலாம், அவர்கள் எப்படி நடக்க வேண்டும், அதன் மூலம் எப்படி அரிசியைப் பெறுவது என்ற முடிவு செய்ய இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க ஆளும் கட்சி ஒத்துழைக்க வேண்டும், தலைவர் அவர்களும் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

1983 பிப்ரவரி 9]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றி நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் இன்றைய தினம் மேற்கொண்டிருக்கிற உண்ணாவிரதத்தைக் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் இங்கே குறிப்புகளை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப் பேசுகின்றபோது, "மாநில அரசு ஏதோ தவறு செய்து விட்டதைப் போலவும், இருந்தாலும் பரவாயில்லை. மாநில அரசு தவறு செய்து விட்டதற்காக தமிழக மக்களை தண்டிப்பதா." என்று கேள்வி கேட்டு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பல முறை உடன் சென்று இந்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தியவன் என்ற முறையில் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் தமிழகம் என்று சொல்லுகிறபோது, பருவ மழை சாதாரணமாக இருந்தால், தன்னுடைய தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளக் கூடிய மாநிலம்; வறட்சி ஏற்பட்டால் பற்றாக்குறை ஏற்படும்; ஆனால் மழை அதிகமாய் பொழிந்தால் உபரி உண்டாகும். கேரள மாநிலம் என்றைக்கும் பற்றாக்குறை மாநிலம். ஆந்திர மாநிலம் என்றைக்கும் உபரி மாநிலம். இன்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உண்ணாவிரதத்தைக் குறிப்பிட்டு மத்திய அரசு இது "துரதிருஷ்டவசம் Unfortunate" என்று சொல்லி அந்த அரசின் சார்பில் ஓர் அறிக்கை வந்திருக்கிறது. அதிலே அவர்கள், "மத்திய அரசினுடைய தொகுப்புக்கு எல்லா மாநிலங்களும் கொடுத்தால்தான் மத்திய அரசு தர முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே மிகவும் வருத்தப்படுகிறேன். எல்லா மாநிலங்களும் மத்திய தொகுப்புக்குத் தர முடியாது. உபரி மாநிலங்கள் மட்டும்தான் மத்திய தொகுப்புக்குத் தர முடியும். ஒரு மாநிலம் தரவில்லை, ஆகவே, தரமாட்டோம் என்றால் கேரளாவிற்கு எப்படித் தருகிறார்கள்? கேரள மாநிலம் கொள்முதல் பண்ணி கொடுத்திருக்கிறதா? இது அடிப்படையிலேயே தவறானது. பற்றாக்குறை மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்து அனுப்புவது எப்படி? உபரி மாநிலத்திலிருந்து வாங்கி பற்றாக்குறை மாநிலத்திற்குத் தருவதுதான் மத்திய அரசின் கடமை. அந்தக் கடமையைச் செய்யத் தவறி விட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழகம் உபரியாக இருந்த ஆண்டுகளில் உணவுப் பொருள்களை தானே வைத்துக்கொண்டதா என்றால் இல்லை. எப்போதும் கொடுக்காததைப் போல பேசுகிறார்கள். கடந்த ஆண்டுகளைப் பார்த்தால், எந்தெந்த ஆண்டுகளில் நல்ல மழை பெய்து

[திரு. ச. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 9

காவிரியில் வெள்ளப் பெருக்கு வந்ததோ அந்த ஆண்டுகளில் தாராளமாகக் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக 1975-ஆம் ஆண்டு நீர் வளம் இருந்தது. ஆளுநர் ஆட்சிக் காலம் 1976-ஆம் ஆண்டில் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டிருந்தது. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் வறட்சி நிலை இருந்தது. அப்போது மத்திய அரசாங்கம் கொடுத்தார்களா? ஆகவே வறட்சிக் காலத்திலே தமிழகத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அப்போது பற்றாக்குறை ஏற்படுகிறபோது, ஆகவே மத்திய தொகுப்பிலேயிருந்து கொடுக்க வேண்டிய பொறுப்பு உண்டு. ஆண்டுக்காண்டு நிலைமை மாறும் நிலை தமிழகத்திலே இருக்கிறது. தமிழகம் என்றைக்கும் ஆந்திராவைப் போல் உபரியாக இருந்ததில்லை; என்றைக்கும் பற்றாக்குறையாக கேரளத்தைப் போலவும் இல்லை. இந்த நிலைமையை மத்திய சர்க்கார் உணவு அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களை நேரில் பார்த்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் தெளிவாக எடுத்து விளக்கினோம். இந்த ஆண்டு பற்றாக்குறை ஆண்டு. வறட்சியுள்ள ஆண்டு. பருவ மழை தவறிய ஆண்டு. ஆகவே உதவி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இப்போது அற்புதமான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். "நீங்கள் ஏராளமாகக் கொள்முதல் செய்திருக்கிறீர்கள்" என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட அதைச் சுட்டிக்காட்டினார்கள். ஏன் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டோம்? மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, என்னைக் குறிப்பிட்டார்கள். கேரளாவிற்கு அரிசி போகவில்லையா என்று கேட்டார். இந்தியா ஒரு உணவு மண்டலம் என்றால் என்ன பொருள்? அதைத் தடுக்க மாநில அரசுக்கு உரிமையுண்டா? ஆனால் அவர்கள் தருவார்களோ, தரமாட்டார்களோ என்ற ஐயம் ஏற்பட்டதற்குப் பிறகு கேரளாவிற்குப் போவதைத் தடுக்க அனுமதி வேண்டும் என்று கேட்டோம். ஆனால் மத்திய அரசு அனுமதி தரவில்லை. அரிசி போவதைத் தடுக்கவில்லையென்றாலும், நெல் போவதைத் தடுக்க வேண்டும் என்று தடுத்திருப்பது, எப்படியாவது கொள்முதல் செய்து ஏழையெளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். உணவுப் பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஆந்திராவிலிருந்து வர வேண்டியதும் வரவில்லை. ஒரு வேளை ஆளுநர் ஆட்சிக் காலம் இருந்திருந்தால் தருவார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருப்பதால் தரமாட்டார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. 1977-ஆம் ஆண்டு வறட்சி நிலைமை ஏற்பட்ட போது மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசியைத் தந்தார்கள், கோதுமையைத் தந்தார்கள். இப்போது தரமாட்டார்களோ என்ற ஐயத்தால் நாம் ஏழைகளை

1983 பிப்ரவரி 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஓரளவிற்குக் கையிருப்பை அதிகப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது "காதும் கேட்கமாட்டேன் என்கிறது, கண்ணும் தெரிய மாட்டேன் என்கிறது" என்று சொன்னார்கள். இந்த இரண்டும் இயங்காவிட்டாலும் பரவாயில்லை, மத்திய அரசுக்கு இதயம் இருந்தால் போதும். இன்று சாதாரண மக்கள் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

கேரளத்துக்கு நாம் அனுப்பினோம் என்று இந்திரா காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். அது சரியல்ல. கேரள மாநிலத்திற்கு எடுத்துப் போகும் உரிமை அவர்களுக்கு இருந்தது. இன்னும் சொல்லப் போனால், கேரள உணவு அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், "வர வேண்டிய அரிசி வரவில்லை" என்று கூக்குரல் எழுப்பிய சம்பவங்களும் ஏராளமாக உண்டு. Injudicious management of food distribution என்று சொல்லுகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்தச் சர்க்கார் தன்னுடைய கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் நியாய விலைக் கடைகளை வைத்திருப்பது இந்த ஒரு மாநிலத்தில் தான். மற்ற மாநிலங்களில் அரசாங்கத்தில் வாங்கி தனியார் வியாபாரிகளிடத்திலே தருகிறார்கள். அதை தனியார்தான் விநியோகிக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் பல ஆயிரம் நியாய விலைக் கடைகளை வைத்து விநியோகம் செய்கிறோம். இது விவேகமற்ற நிர்வாகமா? இது இன்ஜுடிஷியஸ் மேனேஜ்மென்டா? அதுவும் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக மாத வருமானம் உள்ள குடும்பத்தினருக்கு மட்டும் விநியோகம் செய்கிறோம். எல்லோருக்கும் நாம் தரவில்லை. ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இப்படிச் செய்கிறோம். இது என்ன இன்ஜுடிஷியஸ் மேனேஜ்மெண்டா? முதியவர்களுக்கு ஒரு கிலோ அரிசி, குழந்தைகளுக்கு அரை கிலோ அரிசி என்று மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி தருகிறோம். இது என்ன இன்ஜுடிஷியஸ் மேனேஜ்மெண்டா? இந்த நிலைமைகளையெல்லாம் புரிந்து கொள்ளாமல், எடுத்துச் சொன்னாலும் அதையும் ஏற்றுக் கொள்ளாமல் வேண்டுமென்றே அரிசியை வைத்துக்கொண்டு தரமாட்டேன் என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகும் திரும்பத் திரும்ப பிரதம அமைச்சரிலிருந்து அத்தனை பேரையும் சந்தித்துச் சொன்ன பிறகும், அண்மையிலே நடந்த திட்டக் குழு பேச்சுவார்த்தையின் போதும் கூட எடுத்துச் சொன்ன பிறகும், இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 9

(முற்பகல் 10-30)

யென்றால், ஒரு மாநில அரசு என்ன செய்யும்? சொல்ல முடியும். போய் நேரிலே பார்த்து விவரங்களை நாம் விளக்க முடியும். அதற்குப் பிறகும், சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றலாம். அதைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட நேற்று குறிப்பிட்டார்கள். நாம் எல்லாம் கூடிப்பேசிச் செய்யலாம் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைப் பற்றியும் தெரிவித்தார்கள். நான் கேட்பதெல்லாம், ஒரு அரசு என்ன செய்ய முடியும்? மனு போடலாம், கடிதங்கள் அனுப்ப லாம், நேரிலே போய் கேட்கலாம், வற்புறுத்தலாம். அதற்குமேல் சட்ட மன்றத்திலே தீர்மானங்கள் நிறைவேற்றலாம். மன்றத்திலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அவைகள் எல்லாம் என்ன ஆயின என்பதற்கு வேறு பட்டியல் இருக்கின்றது. இவ்வளவும் ஆன பிறகு ஒரு முதலமைச்சர் என்ன செய்வார்கள்? ஆந்திராவிலேயிருந்து அரிசி வாங்க முடியாது. கேரளாவிற்குப் போவதையும் தடுக்க முடியாது. இருப்பதை வாங்கி வைத்தால், நீங்கள்தான் வாங்கி வைத்திருக்கிறீர்களே என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் "கையிலே இருப்பதையெல்லாம் பறித்துக் கொண்டீர்களே" என்று வருத்தம் தெரிவிக்கிறார்கள். இந்த மாதிரியான ஒரு உணர்வினை ஏற்படுத்துகின்றபோது வேறு வழியில்லாமல்தான், தன்னைத் தானே வருத்திக் கொள்வதற்குத்தான், தமிழக முதல்வர் அவர்கள் இப்போது இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். வாயும் இல்லாத கையும் இல்லாத ஊமையன் என்று சொல்வார்கள். அதாவது தேன் சொட்டுகிறது என்றாலும் கூட, சொட்டுகிறது என்று சொல்வதற்கு வாயும் இல்லை, அதை எறி எடுப் பதற்குக் கையும் இல்லை என்று அவர்கள் உதாரணம் சொல்வார்கள். அதைப் போல ஒரு மாநில அரசு ஆக்கப்படுவதன் விளைவாகத்தான், இந்த உண்மை களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இது முக்கியமான பிரச்சினை என்பதிலே நம்மிடையே கருத்து வேற்றுமை இல்லை. ஆகவே இன்றைக்கு அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்ற நிலைமைக்கு நிச்சயமாக அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினைபற்றி அனைத் துக் கட்சித் தலைவர்களும் கூடிப்பேசி என்ன செய்யலாம் என்று ஒரு தீர் மானத்தைக்கூட கொண்டுவரலாமா என்று நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்த அடிப்படையிலே ஆலோ

1983 பிப்ரவரி 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

சனைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்று மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் அலுவல் களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதி மறுக்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி சார்பில் கொடுக்கப்பட்ட தீர்மானம் ஏற்றுக்கொள்ளப் படாத நிலையில் தமிழகத்தின் உணவுப் பிரச்சினை தீராத அளவில், அதை அடிப்படையாகக் கொண்டு இதை விவாதிக்க முடியாத நிலையில் நானும் என் னுடைய கட்சி உறுப்பினர்களும் வெளி நடப்பு செய்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான் கேட்கிறேன். என்னை அவை தவறாக எண்ணிவிடக்கூடாது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதை அவர்கள் மறுக்கவில்லை. தலைவர்கள் எல்லாம் கூடிப்பேசி, அதற்கு நாளை வைத்து, விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இல்லை என்று யார் மறுத்தார்கள்? யார் மறுத்தார்கள் என்று சொல்லுங்கள். ஆகவே அங்கத்தினர் அவர்கள் அங்கேயே உட்கார்ந்துகொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'வெளிநடப்பு செய்கிறோம்' என்று சொன்னார்கள். தலைவர் அவர்கள் அவர்களை 'உட்காருங்கள்' என்று சொன்னார்கள். அவர்கள் அப்படியே அமர்ந்துவிட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்கள் தலைவருக்கு அந்த அளவுக்குக் கட்டுப்படுகிறார்கள். நீங்களும் அதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதைப் பின்பற்ற வேண்டும்.

திரு. பா. ரா. தாமஸ் : இப்படிதான் இதுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இல்லை, இல்லை. வெளிநடப்பு செய்யவில்லை என்று அவர்கள் சொல்லவேண்டும். வெளிநடப்பு என்று சொல்லிவிட்டு அங்கேயே அமர்ந்து கொண்டார்களே என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தலைவரை மீறிச் செல்லச் சொல்கின்றார்கள். இது உரிமைப் பிரச்சினையாக ஆகிவிடும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உறுப்பினர் வெளிநடப்பு செய்வதாகச் சொல்லி, தலைவர் அவர்கள் உட்காருங்கள் என்று சொல்லி, அங்கத்தினர்கள் உட்கார்ந்ததாக வரலாறு இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்களுக்கும் வழி காட்டலாமே என்றுதான் அவர் நினைத்தார் என்று கருதுகிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மின் பயனீட்டாளர்களுக்கு, குறிப்பாக சிறுதொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பயனீட்டுக் கட்டணத்திற்கும் அதிகமாக தஞ்சாவூர் நகராட்சி மின்சாரக் கட்டணத்தை மாற்றியமைத்திருப்பது குறித்து.

THIRU G. SWAMINATHAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the revised selling rate of Thanjavur Municipality to the consumers of electricity especially to Small Scale Industries who use power, much above the selling rate of the State Electricity Board to such consumers and the consequent suffering and hardship caused to a large number of Industrial units and citizens in the town.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, I would like to know from the Hon. Minister how many Municipal Towns in Tamil Nadu have been affected like Thanjavur. I learn that there are many Municipal Towns which have revised the price just as Thanjavur Municipality has done. Why should the Municipalities penalise the industries, while the Government of Tamil Nadu want to encourage small scale industries? In this process

@ 283-303ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

they are charging 90 NP. in respect of small scale industries, while the Electricity Board wants to give concessions to the small scale industries. In the Governor's Address as well as in all other pronouncements, the Government have expressed their desire to encourage the small scale industries. While the Electricity Board has increased the charge from 36 NP to 50 NP, why should the Municipality increase it from 45 NP to 90 NP? Many industries are suffering on account of this. Will the Hon. Minister kindly consider giving some sort of relief to small scale industries as per the pronouncements and policy of the Government of Tamil Nadu?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவில், மின்சாரத் துறையிலிருந்து உயர் அழுத்த மின்சாரம் பெற்று, தாழ்வு அழுத்த மின்சாரமாக ஐந்து நகராட்சிப் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் இன்று மின்சாரத் துறையின் மூலமாக நாம் பெறுகின்ற கட்டணத்தையும், அதற்குப் பின்னாலே நகராட்சிகளுக்கு ஏற்பட்ட இழப்பையும் கருத்தில் கொண்டுதான், கடந்த 1—6—1982-லிருந்து இருக்கக்கூடிய நிலைமைகளை அனுசரித்து, நாம் போடுகின்ற டேரிப்பை அதிகப்படுத்தியிருக்கிறோம். சிறு தொழில்களை பாதிக்கும் என்கின்ற நிலையினை எண்ணி அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். அதன்மீது தடைகள் விதிக்கப்பட்டு, அந்தத் தடைகள் எல்லாம் இப்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கு உயர்நீதி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், அந்த முடிவுக்கு ஏற்பதான் நாம் என்னென்ன நிலைமைகளை அனுசரிக்க முடியுமோ அதை அனுசரிக்கிறோம். சிறு தொழில்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. அதை அனுசரித்து பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வழக்கு மன்றத்திற்கு எல்லா சிறு தொழில் அதிபர்களும், போகவில்லை. யாரோ சில பேர்கள் போனார்கள். போனவர்கள் என்ன சொன்னார்கள்? அங்கே இருக்கின்ற எலக்ட்ரிசிடி போர்டு 50 பைசாதான் போடுகிறார்கள். இவர்கள் 90 பைசா போடுகிறார்கள். இது 'இன்விடியஸ் டிஸ்டிங்ஷன்' என்று தான் சொல்கிறார்கள். அதை அவர்கள் கேட்பதாக இல்லை. அந்தக் காரணத்தினாலேயே எல்லோரையும் பாதிக்க வேண்டும்

234 மின் பயனீட்டாளர்களுக்கு, குறிப்பாக சிறுதொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பயனீட்டுக் கட்டணத்திற்கும் அதிகமாக தஞ்சாவூர் நகராட்சி மின்சாரக் கட்டணத்தை மாற்றியமைத்திருப்பது குறித்து.

[1983 பிப்ரவரி 9

என்றில்லை. யாரோ அப்படி இரண்டு பேர் வழக்கு மன்றம் போனதாலேயே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழில்கள் பாதிக்கப்பட வேண்டு மென்ற கருத்தில்லை. அரசினுடைய கொள்கைக்கு மாறுதலாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தமாதிரி 90 பைசா அளவிலே போட்டிருக்கிறார்கள். அதனாலே தமிழகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவானேன் என்றுதான் நான் கேட்கிறேன். அதுதான் என் முக்கியமான கேள்வி. அரசாங்கத் தினுடைய கொள்கைக்கு ஏற்ப தாங்களே எதாவது செய்தால், நலமாக இருக்கும். வழக்கு இருப்பதால், அதுவரை தள்ளிப்போட முடியாது. ஏனென்றால், அது இரண்டு, மூன்று வருடங்கள் ஆகும். அதனால் பாக்கி பேர்கள் பாதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லி, அதற்காக அமைச்சர் அவர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த நகராட்சி மின்சார வாரியத்திலேயிருந்து பெறக்கூடிய உயர் அழுத்த மின்சாரத்தை தாழ்வழுத்த மின்சாரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அதை அவர்கள் என்ன நினைத்துக் கொடுக்கிறார்களோ அதை அனுசரித்துத்தான் நகராட்சிகளுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தஞ்சை நகராட்சியைப் பொறுத்த வரையில், நமக்கு ஒரு ஆண்டுக்கு 2½ லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக் கிறது. அதைச் சரிக்கட்டுகின்ற வழியிலே இப்போது இந்த உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமைகளை எடுத்துச்சொல்வதால், அதை அரசாங்கம் கண்டிப்பாகப் பரிசீலனை செய்யும்.

(திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இரண்டு கேள்விகளுக்கு மேல் கேட்க முடியாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், நேற்றையதினம் 220 கோடி ரூபாய் இழப்பு என்று கணக்கு சொன்னார்கள். அந்த அளவுக்கு இழப்பு உள்ளவர்களே சிறு தொழில்களுக்கு 50 பைசாவுக்கு மின்சாரம் கொடுக்கிறார்கள். தஞ்சை மாநகராட்சியில் 2½ லட்சம் ரூபாய் இழப்பு என்று சொல்கிறீர்கள். இரண்டரை லட்சம் ரூபாய் இழப்புக்காக 90 பைசா என்று போடவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

4. 1982-83 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை குறித்தும், 1981-82 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் ஆற்றவேண்டிய உரையை @ நூல் வடிவில் தந்துள்ளேன். நான் அதை ஆற்றியதாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குறைவழுத்த மின் இணைப்புகளைப் பொறுத்தவரையில், 20 பரித்திறனுக்குக் குறைவாக உள்ள தொழில்களுக்கும் அதுபோலவே வணிக நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் 15 கிலோ வாட்டுக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்கும் மின் வெட்டிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப் பட்டிருக்கின்றது. சிங்கிள் பேஸ், ஒரு முனை சர்வீஸ்களுக்கு ஏற்கெனவே அவர்கள் என்ன பயன்படுத்தினார்களோ, அந்த அளவுக்கு முடக்கம் செய்யப் -ருந்தது. அது அறவே நீக்கப்பட்டுவிட்டது. அதே போல பொது -வனங்கள், அற நிலையங்கள் இவைகள் பயன்படுத்தும் மின்சார -விற்கும் மின் வெட்டிலிருந்து நீக்கம் தரப்பட்டுள்ளது. இவைகளை -லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்களது மேலான -துரைகளை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. -irman, Sir, I am indeed happy to speak on the Financial -ements of the Electricity Board.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

I would like to bring to the notice of the Hon. Minister through you, that some time back, when speaking on the Electricity Board Budget, I brought to the notice of the Hon. Minister the need for issuing identity cards to all the meter-readers. We have seen in the papers that in areas like Pallavaram, under the guise of nothing down the meter-readings, some undesirable persons got into the houses of the residents there. Therefore, I would like identity cards with photo to be issued to all the meter-readers. Moreover, if we have the meters outside the houses, as they do in Western countries, it will solve this great problem.

@ 285-303 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thirumathi Mandakini Krishnamurthi] [1983 பிப்ரவரி 9

Sir, we are thankful for the removal of curbs that were placed on the consumption of electricity by educational institutions, hospitals and other institutions. At the same time, I would like to request the Hon. Minister to show concession in the tariff applicable to educational institutions and hospitals. They have to pay 87 paise per unit and this, no doubt, places a strain on the finances of the educational institutions. If a concessional tariff is not possible, I would request the Hon. Minister at least to show concession. Just as they do in the Telephones Department, the first 200 units are there but here they can be charged at the rate of 45 paise and the units consumed above 200 units can be charged at the rate of 87 paise. This will also encourage, to some extent, a saving in electricity consumption.

Sir, I would also like to suggest to the Hon. Minister that some interesting hand-bills, posters and charts on the need for conserving electricity may be prepared and distributed. It very often happens that, whenever electricity goes off, people do not switch off the lights and later leave the house forgetting about it. When the supply of electricity is restored while they are away from the house, the lights keep on burning. If a hand-bill urging the necessity to conserve electricity on different counts is prepared and kept attached to the meter-card, it will be of great help.

Sir, I am quite sure that the Hon. Minister will think of the difficulties that are faced by the housewives and also the educational institutions and I would, once again, plead on behalf of them. Thank you.

(முற்பகல் 10-40)

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீதும், 1981-82 ஆம் ஆண்டுக்கான அனை ... அறிக்கைமீதும் ஒருசில கருத்துக்களை இங்கே சொல்வதற்கு ... நம்முடைய நாட்டிலே இப்போது மின்சாரப் பற்றாக்குறை ... பேசாதவர்கள் இடையாது. பொதுவாக வேறு எந்தக் காலத்திலும் ... முடியாத அளவிற்கு இப்போது மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிரு... இதற்குப் பருவ மழை பொய்த்தது ஒரு காரணம் என்று சொல்லப்...

1983 பிப்ரவரி 9] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

...பருவ மழை பொய்த்து வருவது அரசுக்கு அவ்வப்போது தெரிவதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்திருக்க வேண்டும். அடுத்து, மின் நிலைய இயந்திரங்களில் பழுது ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது. அதனால் மின்சார உற்பத்தி குறைவுபட்டது என்று சொல்லப்படுகிறது. அதுகூட காலாகாலத்தில் பழுது பார்க்கும் பணியைச் செய்யாத காரணத்தால் ஏற்பட்டதென்று நினைக்கத் தோன்றுகிறது. அடுத்து, தரமான இயந்திரங்கள் இல்லையென்று சொல்லப்படுகிறது. இதை முன்னாலேயே கண்டு பிடித்து, நடவடிக்கை எடுத்திருப்பதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை இப்போதுதான் சொல்லுகிறார்கள். நிலக்கரி கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இது இப்போதுதான் திடீரென்று தெரிய வருகிற நிலையல்ல. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, காலத்திலே செய்ய வேண்டியவைகளைச் செய்திருந்தால், இந்த அளவிற்கு மின் வெட்டு ஏற்பட்டிராது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மின்சாரத் துறையில் பணியாற்றியவர்கள், பொறியாளராக இருந்தவர்கள், மின்சாரம் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள். அப்படிப்பட்டவர் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தும், வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு நூற்றுக்கு நூறு மின்வெட்டு ஏற்படுத்தி இயலாமைக்கு நூற்றுக்கு நூறு மார்க்குகள் பெற்ற பெரிய சாதனை நம்முடைய மின் துறை அமைச்சரவர்களின் சாதனை. இந்தப் பெருமை வேறு யாருக்கும் இருக்க முடியாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும்கூட, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி நிலையங்கள், அற நிலையங்கள், பொது இடங்கள், மருத்துவ மனைகள் இவைகளுக்கு மின் வெட்டை முழு அளவிற்குத் தவிர்த்திருப்பதாக அறிவித்தார்கள். அதைப் பாராட்டுகிறேன். கல்வி நிலையங்கள் போன்றவற்றுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிப்பதோடு, மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து வசூலிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற முயற்சி எடுத்திருக்கிறார்கள். நேற்றையதினம் அவையிலே பேசுகிறவர்கள் அதைப்பற்றி அதிகமாகப் பேசக்கூடாதென்று சொன்னார்கள். இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருக்கிறது. ... பெற்றுக்கொண்டு மின்சாரத்தைத்தர ஆலோசனை செய்துகொண்டிருந்த ...கோளம், இன்றையதினம் 'முடியாது' என்று சொல்லிவிட்டதாகவும், ... காரணம் காட்டி, அங்கேயே 40 சதவிகிதம் மின் வெட்டு இருக்கிறதென்று ... இதனால் எதிர்க் கட்சிகள் கிளர்ச்சி செய்வதாகவும் செய்தி வந்திருக்கிறது.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 பிப்ரவரி 9

மின்வெட்டு மேலும் நமக்கு அதிகமாகுமென்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அது சீராகும் என்ற நிலை நமக்கில்லை. இதற்கு அரசு மாற்று ஏற்பாடு செய்தாக வேண்டும். அது மாத்திரம் முக்கியமல்ல. மத்திய அரசு ஒத்துழைப்பு தர மறுக்கிறது என்று சொல்வதில் நியாயம் இருந்தாலும், அது ஒத்துழைப்பு தர மறுக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்து, அதற்கேற்ப என்ன செய்யலாமென்று தீவிரமாகத் திட்டமிட்டிருக்க வேண்டும், செயல்பட்டிருக்க வேண்டும். அதில் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சாரத்தை உற்பத்தி செய்வது மட்டுமல்ல, செலவு செய்வதிலே, அதைத் தயாரித்து வழங்குவதிலே, பராமரிப்பதிலே நஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஊழியர்கள் மன நிறைவோடு பணியாற்றும் நிலைமையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அட்டைப் பட்டியல் முறை இங்கே 1—1—1982 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டுவந்த காலத்திலே அந்தத் தொழிலாளர்களிலே எந்தப் பிரிவினரும் அதை எதிர்க்கவில்லை. சத்துணவுத் திட்டத்தை யாரும் எதிர்க்கவில்லை. அதைப் போல அட்டைப் பட்டியல் முறை நல்ல முறை. எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதிலே உள்ள சிக்கல்களைத் திருத்தவில்லை. அதிலுள்ள சிக்கல்களைத்தான் எடுத்துச் சொன்னார்கள். சிக்கல்களைத் திருங்கள் என்று எடுத்துச் சொல்ல சில சங்கங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. சில அங்கீகார சங்கங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோமென்று எழுதிக் கொடுத்து, அதற்கு வேண்டிய ஆட்களைத் திரட்ட முடியாமல் இருக்கிறார்கள். இன்றைக்கு மைனாரிட்டி பிரிவினராக, ஆட்களைக் கொடுக்க முடியாத அளவிற்கு அவர்கள் இருக்கிறார்கள். 2,000 ஊழியர்களை அட்டைப் பட்டியல் தயாரிக்க நியமிக்கப் போகிறோமென்று சொன்னார்கள். நியமனம் செய்ததாகச் சொன்னது 1,300 பேர்கள்தான். அவர்களும் சேர்ந்தார்களா என்றால் இல்லை. இன்றைக்கு என்ன நிலை என்றால், அந்தப் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள், திரும்பவும் நாங்கள் பழைய இடத்திற்கே, பழைய பணிக்கே போகிறோம், விட்டுவிடுங்கள் என்று சொல்லும் நிலை இருக்கிறது. அவர்களை விட மாட்டோம் என்று வாரியத் தரப்பில் சொல்லும் நிலை இருக்கிறது. வறட்டுக் கௌரவத்தில், மற்றவர்களை அழைத்துப் பேசக் கூடாதென்று மின் வாரியம் இருக்கிறது. தான் சொல்வதைக் கேட்கும் சங்கத்தினரை வைத்து சாதித்து விட முடியுமென்று அரசு நிர்ணயித்த நிலையில், அட்டைப் பட்டியல் திட்டம் இன்றைக்குத் தோல்வி அடைந்து கொண்டிருக்கிறது. அதில் அசெசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கிளார்க் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றால், அவர்களுக்கு ஆறு மணி நேரம் வேலை; களப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றால் எட்டு மணி நேரம்

1983 பிப்ரவரி 9] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

வேலையாற்ற வேண்டும். அசெசர்கள் அப்படிப் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. நகரத்தில் 120-லிருந்து 140 வீடுகளுக்குச் சென்று வெள்ளைக் கார்டில் எழுதித் தந்து, பச்சைக் கார்டில் விவரத்தைக் குறித்துக் கொண்டு வர வேண்டியிருப்பதால், அவர்கள் அவ்வளவு பணியையும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் பார்க்க வேண்டிய வீடுகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அவர்கள் எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்பதை ஆய்ந்து பார்த்து, அதற்குரிய அளவிலே குறைக்க வேண்டும். 1—1—1982 முதல் என் சொல்கிறேன் என்று சொன்னால்,

(முற்பகல் 10-50)

கொண்டுவரப்பட்ட திட்டத்திலே இதுவரை மாதாமாதம் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று இருந்த நிலைமை மாறி, மூன்று மாதம், இரண்டு மாதம் அல்லது நான்கு மாதம் ஒருமுறை செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி நான்கு மாதத்திற்கு ஒருமுறை. அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறை செல்லும்போது, கட்டண நிலுவை அதிகமாகிவிடுகின்றது. ஏழைகள் குடியிருக்கும் வீடுகளுக்கு நான்கு மாதம் கழித்து சென்று நான்கு மாதக் கட்டணத்தையும் மொத்தமாகக் குறித்து ஒரு வாரத்திற்குள்ளே செலுத்த வேண்டும் என்று சொன்னால், எப்படி அத்தொகையை ஏழைகளால் செலுத்த முடியும்? ஏன் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன? அங்கே பணியாற்ற போதுமான அளவுக்கு ஆட்கள் இல்லை. அதுதான் நிலைமை. காரணம் சொல்ல அனைத்துச் சங்கங்களையும் அழைத்து வாரியம் நிலைமைகளைச் சொல்ல வில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இப்போது வாரியத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அங்கே பணியாற்றி வந்த காசாளர்கள் மூன்று ஆயிரம் பேர்களை நீக்கி யிருக்கிறார்கள். அவர்கள் வழக்கு மன்றம் சென்றார்கள். இன்றைக்கு என்ன நிலைமை? அவர்களாலே இன்றைக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் வீட்டிலே இருக்கிறார்கள். வாரியம் அவர்களுக்கு ஊதியம் தந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே கர்ணம்களுக்கு ஊதியம் எப்படி கொடுக்கப்பட்டதோ அதைப்போல இவர்களுக்கும் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள் இருப்பதால்தான், மின்சார வாரியத்திலே இப்போது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகச் சீர்கேட்டினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 220 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வீட்டிலே உட்கார வைத்துவிட்டு மூன்று ஆயிரம் பேர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஏன் அவர்களை அழைத்துவைத்து, பேசி ஒரு முடிவுக்கு வர இயலவில்லை? இந்த விஷயங்களை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த

நிலைமைகளுக்கு முடிவு ஏற்படுத்தி அந்த ஏழைகள் பரிதவிப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஏதோ, முன்பு இருந்ததைப்போல அதே அளவுக்குப் பணம் வருகிறது. அது எப்படி வருகிறது என்று சொன்னால், 15—9—1981 முதல் மின் கட்டணத்தில் செய்யப்பட்ட சில மாறுதல்கள், மற்றும் 1—5—1983 முதல் மின் கட்டணத்தை உயர்த்தியதால் ஏற்பட்ட விளைவுதான் இந்த வருமானம். இதையெல்லாம் சேர்த்து இப்போது முன்பு வந்ததுபோல் அதிக அளவு பணம் வந்துகொண்டிருக்கிறது. இன்றையதினம் பணம் கட்டு கின்றவர்கள், பணம் கட்டாதவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் அந்த வாரியத்திலே இருக்கிறதா என்றால் இல்லை. இதை நான் ஒரு சேலஞ்சாகவே சொல்கிறேன். எத்தனை பேர்கள் கட்டினார்கள், எத்தனை பேர்கள் கட்ட வில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும் போது சொல்ல முடியுமா? அதுபற்றிய விவரங்கள் உங்களிடம் இங்கே இல்லை. ஏனென்றால் அந்த விவரங்களை வாரியத்தால் தயாரிக்க முடியவில்லை. அப்படி அந்தப் புள்ளிவிவரங்களைத் தயாரிக்க இயலாத சூழ்நிலை இந்தத் திட்டத்தின் மூலமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம் இங்கே அசசர்களாகப் பணியாற்றுபவர்கள் எப்பொழுது பணியாற்ற வேண்டும் என்று நேரம், காலம் அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் எப்போது வேண்டுமானாலும், போகலாம், வரலாம். அவர்கள் வேலை செய்வது மின் துறையிலே, அவர்கள் எப்போது வேலை பார்க்கிறார்கள், எப்போது வேலை பார்க்கவில்லை என்ற நிலைமை இல்லை. அவர்கள் திடீரென்று ஒரு ஆக்ஸிடென்டிலே இறந்துவிடுகின்ற நிலைமை வந்தால், அவர்கள் சார்பானவர்கள் நஷ்டஈடு கூட கேட்டுப் பெற முடியாத அளவுக்கு அவர்களுடைய வேலை நிலைமைகள் இப்போது இருக்கின்றன. இதுதான் அவர்களுடைய வேலை நேரம் என்று எந்த ஒரு நேரத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு அவர்கள் எப்போது வேண்டு மானாலும் போகலாம் வரலாம் என்ற நிலைமை தான் இப்போது இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். இப்போது இருக்கும் சூழ்நிலையில் இந்த நிலைமை பற்றி முடிவு செய்ய முடியாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது ஆகிவிட்டாலும், நஷ்ட ஈடு கேட்டுப் பெற முடியாது. ஆகவே, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வேலை நேரத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இரண்டு சங்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு சங்க

எது என்று பார்த்தால்—ஏறத்தாழ அங்கே இப்போது 40 சங்கங்கள் இருக்கின்றன. அதிலே சிஐடியூ, ஏஐடியூ, எல்பிஎப், ஐஎன்டியூசி, ஜனதா, அண்ணா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தோடு இணைந்து உள்ள மற்ற சங்கங்கள். அதிலே 1968-லே ஏஐடியூ என்ற சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இப்போது சிஐடியூ என்ற சங்கம் அதிலேயிருந்து பிரிந்து அதிலே பெரும்பான்மையானவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அந்தச் சங்கம் இப்போது மைனாரிட்டி சங்கமாக இருக்கிறது. கணக்காயர் சங்கம் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையிலேயிருந்து பிரிந்து போனதற்குப் பிறகு, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் என்று உருவாகியது, இன்றைக்கு இருக்கும் அங்கீகாரம் பெற்ற சங்கங்கள் இரண்டும் மைனாரிட்டி சங்கங்களாகத்தான் இருக்கின்றன. இந்த அங்கீகாரம் பெற்ற சங்கங்களைத்தான் அழைத்துப் பேசுவோம் என்று சொல்கிறார்கள். வேறு சங்கங்களுக்கும் அங்கீகாரம் தாருங்கள் என்று கேட்டால், அதுபற்றி எந்தவிதமான பரிசீலனையும் இல்லை. அங்கீகாரமும் இல்லை. எத்தனையோ சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே இருக்கும் அதிகாரிகளையும், தொழிற் சங்கப் பிரதிநிதி களையும் அழைத்து வைத்து "இதற்கு ஒரு சட்டம் செய்தால் என்ன? ஏன் அந்த இரண்டு சங்கங்களுக்கும் தான் அங்கீகாரம் தரவேண்டும்?" என்ற நிலைமை இருக்கிறது. கேரளாவிலே நான்கு சங்கங்கள் இருக்கின்றன. அப்படித் அவர்கள் நான்கு சங்கங்களுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். ஏன் அதிலே தந்துவிடுவதால் என்ன குடி முழுகிப்போய்விட்டது? ஏன் இந்தத் அரசியலைப் பார்க்க வேண்டும்? அரசியலைப் பார்ப்பதாலே தான் இந்தத் துறையிலே நஷ்டம் வருகிறது. திமுக, ஐஎன்டியூசி, கம்யூனிஸ்ட் என்றெல்லாம் பார்க்காமல் எந்தச் சங்கத்திற்கு பெரும்பான்மை இருக்கிறது, எந்தச் சங்கத்திற்கு ஊழியர்களிடம் மதிப்பு இருக்கிறது என்று பார்த்து, அவர் களுக்கு அங்கீகாரம் அளித்து, அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்களை அழைத்து வைத்துப் பேசி முடிவு செய்தால், நல்ல முறையில் நிலைமைகள் ஏற்பட்டு உற்பத்தி பெருகாதா? இப்போது ஏற்பட்டிருக்கும் நஷ்டம் குறையாதா? ஏன் இதிலே போய் ஒரு வறட்டுக் கௌரவம் பார்க்க வேண்டும்? குஜராத் மாநிலத்தில், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் எல்லாம் சங்கங்களுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். தனிச்சட்டமே உருவாக்கியிருக்கிறார்கள். அங்கெல்லாம் (Recognised) என்று சொல்வதே இல்லை. (Approved Union) என்று சொல்லி அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். எனவே அந்த முறையில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர் நல அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து பேசி, தேவையான சட்டங்களை இயற்ற வேண்டும்

என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சட்டமியற்றும் போது அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்கக்கூடாது. அந்த உணர்வு ஆளுவோர் தரப்பிலே இருந்தால், அந்தத் துறையிலே இருப்பவர்களுடைய ஒத்துழைப்பு அரசுக்குக் கிடைக்காது. எங்களுடைய சங்கத்தைப் பொறுத்தவரையில் கூட நாங்கள் அங்கீகாரம் அன்றைக்குக் கேட்டோம். அப்போது 'ஆசிரியராக நீ பணியாற்றிக்கொண்டிருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். நான் சட்டப்படி ஆசிரியராகச் சேர்ந்தேன். ஆனால் பிறகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், 'நீ அரசியல் பின்னணியிலே இருக்கின்றாய்; ஆகவே, தரமாட்டேன்' என்று சொல்கிறார். அதேநேரத்திலே நான் கேட்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவே இங்கே இருக்கிறார்கள், அவர்கள் இங்கே உறுப்பினராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அதை எப்படி அனுமதிக்கிறார்கள்? அதுகூட வேண்டாம். ஆளும் கட்சியின் சார்பிலே செல்வி லீலாவதி அவர்கள் இங்கே உறுப்பினராகவும் இருந்து கொண்டு கார்ப்பரேஷன் பள்ளியிலேயும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர்களை எப்படி அனுமதித்திருக்கிறார்கள்? நான் சுயேச்சையாக இருக்கிறேன். ஆனால், நான் அரசியல்வாதி என்று சொல்லி அனுமதி மறுக்கப்படுகிறது. நான் அரசியல் கட்சியைச் சார்ந்தவன் என்று சொல்லி அனுமதி மறுக்கிறார்கள். காரணம் எங்களுடைய சங்கம் மிகவும் வலிமையாக இருக்கிறது, ஆகவே, அச்சப்பட்டுக்கொண்டு அங்கீகாரம் தரக்கூடாது என்று இப்படியெல்லாம் சொல்கிறார்கள். அதைப்போல சொல்லாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு ஆளாகாமல், இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நல்லமுறையில் இந்த மின்சார வாரியம் செயல்பட வழி ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். மின்சார வாரியத்திலே விளையாட்டு என்ற பெயரிலே பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் இப்போது வீணே செலவழிக்கப்பட்டிருக்கின்றன. நான் கேட்கிறேன், மின்சார வாரியத்திற்கும், விளையாட்டிற்கும் என்ன சம்பந்தம்? வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் இருக்கலாம். இப்படியெல்லாம் செய்து அவருடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கிறோம் என்றெல்லாம் சொல்லலாம். அந்த எண்ணத்தை வரவேற்கிறேன். ஆனால், விளையாட்டு என்று சொன்னால், அங்கே பணியாற்றிக்கொண்டு இருக்கும் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து,

நடக்கும் விளையாட்டுகளிலே அவர்களைக் கலந்துகொள்ளச் சொல்லியிருந்தால், நல்லது. ஆனால், இந்த விளையாட்டுக்கு என்று கடந்த மூன்று ஆண்டுகளிலே 300 பேர்களை டைரக்ட்டாக (நேரடியாக) 'அப்பாயின்ட்' செய்திருக்கிறார்கள். கல்லூரியிலே படித்தவர்கள், படிப்பை முடித்தவுடனே, போடப்பட்டிருக்கிறார்கள். 'எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச்' மூலமாகக் கூட போடப்படவில்லை. அவர்கள் வேலைவாய்ப்பு தேடித்தரும் அலுவலகங்களிலே பதிவு செய்யப்படாதவர்கள். மின்சாரத் துறையில் இருக்கும் பணிகள் என்னவென்றே இவர்களுக்குத் தெரியாது. வெறும் விளையாட்டுக்கு என்றே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வேண்டியவர்களுக்கு வேலை தருவதற்கு இது ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்திலே உள்ளவர்களுக்கே இப்போது வேலையில்லை. அப்படியிருக்க அவர்களில் பலர் வெளிமாநிலங்களிலே இருந்து வந்தவர்கள். யாருக்குத் தந்தால் தங்களுக்குப் பலன் வருமோ அப்படிப்பட்டவர்களுக்கு தான் தந்திருக்கிறார்கள். இந்த மாதிரி விஷயங்களைத்தான் அரசு செய்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இப்படியே காரியங்களைச் செய்தால், எப்படி பல கோடி ரூபாய் நஷ்டம் வராமலிருக்கும்? அந்தத் துறையிலே ஏற்கனவே பணியாற்றிக்கொண்டிருப்பவர்களை எடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடாதா?

மற்றொரு விஷயத்தையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு எஞ்சினியர். எஞ்சினியராக இருந்தவர். அதன் காரணமாகவே அந்தத் துறையிலே மேல்மட்டத்திலே உள்ள பதவிகள் தான் நாளுக்கு நாள் அதிகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அடிமட்டத்திலே உள்ள பதவிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. கீழ் மட்டத்திலே தெருவிலே போய் லைட், சுவிட்ச் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து காரியங்களைச் செய்ய வேண்டியவர்களின் பதவியிடங்களை மிகவும் அதிகமாகக் குறைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் காலத்திலே ஐந்து சீப் எஞ்சினியர்கள் இருந்தார்கள். அப்போது அந்தப் பதவிகள் வேண்டியவர்களுக்குக் கொடுக்கத்தான் ஏற்படுத்தப்பட்டன என்று உங்களாலே பேசப்பட்டது. இன்றைக்கு அங்கே 12 சீப் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். இப்போது அதிலே மூன்று பேர்களின் பதவிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. திரு. விஜயராகவன் அவர்கள் தலைவராக வந்ததற்குப் பிறகு பல சிக்கன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார். அவர் அங்கேயே இருந்து நல்லமுறையில் செயல்பட வேண்டும். அவருடைய செயலைப் பாராட்ட வேண்டும். இன்றையதினமும் ஒன்பது பேர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பேர்கள் கூட தேவைதானா என்றும் பார்க்க

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 பிப்ரவரி 9

வேண்டும். இந்த ஒன்பது பேர்களும் அண்ணா சாலையில் தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று நிலைமைகளைப் பார்த்து ஏதாவது செய்கிறார்களா என்றால், ஒன்றுமில்லை. நான் உதாரணத்திற்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். இங்கே கிளாஸ் ஒன்று, அதாவது முதல்நிலை ஊழியர்கள், அதாவது சீப் எஞ்சினியர், சூப்பிரண்டண்டிங் எஞ்சினியர், டிவிஷனல் எஞ்சினியர் போன்றவர்கள் இவர்களிலே 267 பேர்கள் 1975-லே இருந்தார்கள். அதன்பின் அதாவது 1981-லே 505 பேர்கள் இருக்கிறார்கள். கிளாஸ் இரண்டு அதாவது ஏ.இ.ஈ., ஏ.ஈ.ஈ., ஏ.ஈ. போன்றவர்கள் முன்பு 3,523 பேர்கள் இருந்தார்கள். இப்போது அவர்களின் எண்ணிக்கை 5,438 என்ற அளவிலே உயர்ந்திருக்கிறது. கிளாஸ் மூன்று என்ற நிலைப் பதவிகளிலே 18,288 பேர்கள் 1975-லே இருந்தார்கள். அது 1981-லே 21,450 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஏன் இந்த எஞ்சினியர்கள் பதவிகள் மேல்மட்ட அதிகாரிகள் மட்டும் இப்படியே அதிகமாகிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது? இங்கே குறைக்கப்பட்டவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று பார்த்தால் கிளாஸ் நான்கு பிரிவிலே தான். அதாவது 22 ஆயிரம் பேர்கள் குறைக்கப் பட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இது எஞ்சினியர்களுக்கு என்று மட்டும் இருக்கும் அமைப்பா? கீழே இருப்பவர்களின் பதவிகளும் தேவைகளுக்கு

(முற்பகல் 11-00)

ஏற்ப அதிகப்படுத்தப்பட வேண்டாமா? நிலைமை இப்படி இருந்தால் எப்படி மின் வாரியத்தில் நட்டம் ஏற்படாமலிருக்கும் என்பதால் இவைகளையெல்லாம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். மின்துறை ஊழியர்களுக்கு பென்ஷன், ஓய்வூதியம் வழங்கப் படும் என்று முன்பே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். ஆனால் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல அவர்களின் வாரிசுகளுக்குக் கல்வித் தகுதி இல்லாவிட்டால்கூட வாரியத்தில் வேலை அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் மன்றத்திலேயே உறுதி அளித்தார்கள். அதுகூட இன்னும் நிறைவேற்றப்பட வில்லை, அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும், மின்வாரியச் செலவைச் சிக்கனப்படுத்த வேண்டும், நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும், ஊழலைத் தவிர்க்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

1983 பிப்ரவரி. 9]

* THIRU A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, as one who has followed the fortunes or the misfortunes of the Tamil Nadu Electricity Board for over seventeen years in this Council, I am grateful to you for having called me early in this debate to offer my remarks on the Financial Statements that have been placed before this House for discussion.

Sir, my first plea is that, as we have designated the Education Department as the Department of Science, Technology and Education and as the Central Government have designated a Minister for Energy, our Minister also, instead of being designated as Minister for Electricity, should be placed in charge of all energy resources in the State. This has some relevance because, today, with the power cut, we have a number of generators that are using petroleum products and it is only a Minister for Energy who has a total concept of the energy shortage who can deal with these problems. There are a number of people who have purchased kerosene generators. When I approached the Secretary of the Food and Civil Supplies Department and told him that there was practically no allocation of kerosene for generators because kerosene was being allotted only for lighting and cooking purposes, the Food Secretary informed me that, as per the instructions of the Government of India, kerosene could not be given for use on generators. I think there are over 10,000 generators in Tamil Nadu. There are small sets of 500 KW, 1000 KW or 1500 KW which are using petroleum products and, more particularly, kerosene. These people have to adopt surreptitious methods to get kerosene for use in their generators. I wanted to bring this to the notice of the Hon. the Minister for Electricity because, as Minister for Energy, he would be able to have a concept of the energy needs of the State and, perhaps, move the Secretary of the Food Department in the Government of Tamil Nadu itself to allocate kerosene for some generators.

Sir, my next request is about the early presentation of these Financial Statements. As I have mentioned for the past five years, the Legislature has been discussing these Statements as late as in January or February of the next year when it is the normal practice to adopt these Statements in August of each year. I do not know why these delays are occurring. The Hon.

[Thiru A. R. Damodaran] [1983 பிப்ரவரி 9

Minister may feel that Members of the Legislature are repeating the same demands that they have made in the past and that, therefore, no useful purpose is served by having this debate. That is an entirely different view; but my point is this. It is not only the Members of the Legislature who are concerned with the debates on the power situation or on these Financial Statements but there are also the 4.8 million consumers amongst whom are small-scale industrialists and large-scale industrialists. The grave misconceptions that these people have about the working of the Electricity Board can be removed only if these Statements are placed in time and they have an opportunity of studying these documents. Therefore, I would reinforce my plea that these Statements must be placed in August or September, as was done in the past, for discussion by Members of the Legislature.

My third plea is this. We have a Consultative Committee on Power. This Consultative Committee met in August 1982 and it was expected to be held in Coimbatore to celebrate the 50th Year of a Power House and it was so conveniently arranged that the members of the Committee could visit the Power House and see its functioning also. After August, it was summoned twice and adjourned and we have had no discussion in the Consultative Council on Power regarding the critical power situation that is developing. I would request the Hon. Minister to bear in mind that if the Electricity Board wants better-informed legislators, if it wants them to know what is happening in the Board and if it wants them to review the performance of the Board, he must have this Committee to meet once in three months and preferably on fixed dates and at fixed places, instead of having these meetings at places according to the convenience of a few which makes it very difficult for us to attend.

Having said this, may I now pass on to some of the areas which are causing concern and which the Hon. Minister has also high-lighted in his Note regarding the financial statements that have been placed before the House? The present power crisis is one for which the Electricity Board cannot be blamed at the present moment. With the failure of the monsoons and total failure of the hydro-systems, we are now entirely dependent on our thermal stations and on Neyveli Lignite Corporation for the

1983 பிப்ரவரி 9] [Thiru A. R. Damodaran]

production of power and I must confess—and I must congratulate the Board also—that the situation was desperate in December when there was heavy load-shedding throughout the State. We did not know when we would have power and when there would be power cut. But since January, there has been a marked improvement in the generation of electricity and in its distribution. I would like to thank the Electricity Board particularly for the concessions that have been announced day before yesterday in the Lower House that power cuts would be removed for certain sectors which were hard hit by the cuts that were imposed in the past.

One suggestion that has been made—and I do not know if it is feasible technically and I want the Electricity Board to examine this—is whether in view of the inadequate supply of power, the supply of power to industries could be made on a zonal basis. We are generating about 1100 MW or thereabout including the 500 MW that is being supplied by Neyveli, 600 MW that is being generated in Ennore, Tuticorin and Basin Bridge Plants. If our peak capacity is only 1100 MW, would it be possible to introduce a zonal system of supply to industries, small scale, medium scale and large scale, and impose certain restrictions, of course, on the continuous process industries which are heavy consumers of electricity. We have so many substations and we are only having 50 per cent of the required power. So far as supply to domestic consumers, public lighting, water supply, etc. is concerned, it should be done on the usual basis. But so far as industries are concerned, would it be possible to supply power to industries on zonal basis, dividing the State into three zones and then supply firm power and full power for, say, 8 to 10 hours in the day, so that factories and industries can plan their production schedule and also their lay-offs in a more scientific and rational manner because a lay-off is absolutely necessary, espicially in the continuous process industries? I do not think the Aluminium and Caustic Soda industries will be able to work during the power cut because the present cut is 75 per cent of the demand. I heard from many industries that they were not able to utilise even the small power that was being … demand cut was. not given to these indus

working well at all.

be investigated whether it would be feasible for us in view of the circumstances in which the Electricity Board is situated today and which situation is likely to continue till the end of July, perhaps even till August. If we are not able to get our hydro systems helped by the South-West Monsoon, in Kerala we will have to wait for the other monsoon before the position eases completely because the demand on the agricultural sector is likely to increase after the South-West monsoon. I would like, therefore, the Hon Minister in view of the long time for which we are going to have this power cut, to have this investigated and to let us know whether this is possible.

(முற்பகல் 11-10)

Sir, right from 1967 when I have been a participant in the discussions on the Electricity Board budget, we have been requesting that the generation of thermal power should be increased in Tamil Nadu. But, unfortunately, one factor has not been stressed or has not been adequately stressed. Even amongst my friends, the industrialists who today are complaining of power shortage and of various shortcomings of the Electricity Board, when a question was asked of them whether, in view of the fact that thermal power was likely to be five times or six times as costly as hydro-power, they were prepared to discuss with the Electricity Board a rational tariff policy, nobody was able to answer this in positive terms. I would like to make it clear that, if we are to be dependent on thermal power, whether it is coal-based or lignite-based or even nuclear power-based, there is no getting away from the problem that there has to be a revision in power tariff. While I do not wish, at this moment, to deal with the issue of which sector can be taxed more heavily, I think the Hon. the Electricity Minister or the Hon. the Minister for Energy must have a continuous and fruitful dialogue with all consumers, whether they belong to the small-scale industry or to other industries or to the continuous-process industries, and evolve a rational tariff policy which would enable the Electricity Board to break-even.

Sir, a number of complaints have been made that thermal generation in Tamil Nadu was bad some time ago and that we require more expert attention to be paid to our thermal station generation. It is true that we are depending on equipment supplied by BHEL. Our 210 MW units are all supplied by BHEL. But, may I ask a question of the Hon. Minister? When our country enters into international agreements with international electric-equipment suppliers like Siemens or other parties, there is a guarantee clause in every purchase contract that every such unit supplied by the international suppliers will perform according to a specific guarantee, and that if that performance is not achieved, either the supplier will have to replace the equipment or carry out modifications so as to ensure the guarantee. May I ask whether such an agreement exists between BHEL and the Tamil Nadu Electricity Board and, if so, why it is not insisted upon? The fact that BHEL may belong to the Government of India, or rather a public sector undertaking in the Government of India, and that the Tamil Nadu Electricity Board may belong to another Government sector should not, in my opinion, result in a very casual approach to the contracts that are being entered into by the suppliers. I would request the Electricity Board to ensure that such a thing is not done. This information is not available with me and, probably, the Hon. Minister may be able to enlighten us and say, if there is a guarantee clause, why it is not insisted upon and, if there is no guarantee clause, why a guarantee clause is not included.

Sir, the other point is about coal. I think that all of us realise that the supply of coal is subject to various difficulties. Strikes in coal mines result in coal not reaching the wagons. In fact, the thermal stations in Tamil Nadu are having a wagon-to-boiler existence. There is no coal stock and alarming reports have come in of there being coal stocks to last for only $1\frac{1}{2}$ days or two days when, normally, a thermal station should have stocks to last for at least 60 days. I do not know how this problem is going to be solved because a number of agencies are involved. The coal-mining people are there; then there are the transport people, the Board people handling this coal, etc. This requires very top-level discussions among the various authorities concerned. I realise that they have sent in some proposal for purchase of steamers. It is not likely to materialise at the present moment in view of various circumstances. There is a slump in the

international shipping industry. Perhaps the possibility of chartering—time chartering a 10000 tonnes bulk carrier for transporting coal from Haldia to our thermal plants may be investigated because if they are able to build up a good stock by having such large vessels, it may possibly benefit our thermal plants to plan their generation in a better way.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

The Note also mentions that the poor quality of coal is responsible—the high ash content is responsible for the low generation in our thermal stations. This is one thing.

THIRU J. M. MIAKHAN: The hon. Member is mentioning about the chartering of bulk carriers from foreign countries. Many ships come to Indian ports and go empty and they are prepared to take coal from Haldia to Tuticorin at half the cost and we can charter them. The Government of India do not permit us.

THIRU A. R. DAMODARAN: I am sorry the hon. Member is not in the Union Cabinet. But, nonetheless, I was not aware of all these difficulties. I was offering a solution and these are all matters which should be resolved by discussion. I hope the Hon. Minister will have discussions with the concerned Ministers of the Central Government and achieve a rational solution of the problem.

In spite of all these difficulties, we know that coal is having a high ash content; we know that BHEL equipment has certain defects. But we have to live with these problems because importation of equipment or coal from foreign countries on a permanent basis is an absolute impossibility. We know the danger of importing them on a permanent basis. If it is considered as a temporary measure, then it is welcome as an immediate relief to our thermal stations. Although discussions are already on, I want this to be considered by the State Electricity Board, the Central Electricity Authority as well as various authorities connected with power field and I hope the Hon. Minister will be able to resolve this by discussion.

One other point I would like the Hon. Minister and the State Electricity Board to examine is this. Our Tamil Nadu Electricity Board has got very experienced Engineers in the field of

hydro generation and it is felt that we must have a separate cadre for Engineers in thermal plants because our experience is rather limited in the thermal sector. We must remember that we had only the Basin Bridge power station about 10 to 15 years ago. The Ennore thermal station was a recent development in the past decade and Tuticorin plan is even more recent. We are thinking of not 210 MW plants but of 500 MW plants. I would, therefore, request the Hon. Minister to consider whether we should not have a separate cadre of Engineers for thermal generation because this requires a vast deal of experties and training in that field. In fact, I think Power Engineers Society is already conducting a training programme in this line. I would request the Electricity Board to consider this aspect also.

A reference was made by the Hon. Minister to the various plan schemes that had been put up to the Government of India for sanction. While I do not wish a situation to develop where our Power Minister will also have to go on a hunger strike to get the plan sanctioned, I would like to stress that there should be a feeling of urgency in the sanctioning of plan projects for Tamil Nadu. The Central Government have established a National Thermal Power Corporation and huge projects are contemplated. In fact, there are Four very big thermal stations coming up in India. I think they are to be situated in Singrali in U.P.—M.P. border, in Korba as well as in Ramagundem in Andhra Pradesh and another station in Farrakha. West Bengal, where the installed capacity is of the order of 2100 MW. The Hon. Minister has raised some degree of controversy when he has said that in the Nevveli Expansion of 600 MW which is likely to come up in two or three years, the Central Government are asking for a share for the southern States and has very correctly mentioned in the note that the expansion of Neyveli Lignite Project–600 MW project and 410 MW or 420 MW in Kalpakkam was considered as part of the State plan and many schemes were refused by the Central Government on the ground that they were having

(முற்பகல் 11-20)

expansion of these sectors. It is not right to give retrospective effect to a decision that is taken about sharing the power from the Central sector projects with other States. I, therefore, fully

[Thiru A. R. Damodaran] [1983 பிப்ரவரி 9

endorse the view of the Hon. Minister that, as far as the 600 MW station at Neyveli is concerned and as far as the 420 MW generation in Kalpakkam is concerned, these are to be exclusively reserved for Tamil Nadu. It is a matter for discussion whether future expansion proposals of Neyveli should be shared with other States. In fact, I think we may have to agree to this because if we do not agree to this, we will lose even the share that we are likely to get from Ramagundam in Andhra Pradesh where Tamil Nadu is likely to get a share. While I endorse the plea of the Hon. Minister regarding the exclusive use of Neyveli and Kalpakkam power as at present constituted, I would not be so dogmatic in my support in saying that all future expansion proposals must be given to Tamil Nadu because that may delay the sanction of various plans that we have in the Central sector also. In the interest of Tamil Nadu itself, I would like a policy formulation by the Cabinet regarding the sharing of Power in future expansion proposals, as distinct from the present proposals that we have in Tamil Nadu.

Sir, we are having a lot of peaking problems. One of the problems that we are having is that the demand rise for certain requirements is such that we are in serious trouble. Therefore, the proposal to import 6 x 50 MW gas turbines is the only short-term solution that we have to solve the power crisis in Tamil Nadu. We are short of power by over 1200 MW and, therefore, I would strongly endorse the plea, especially when it has been sanctioned for West Bengal and Bombay. Although these are based on petroleum fuel, there is no other alternative excepting for the Government of India to permit the import of these gas turbines on an emergency basis and to ensure that a short-term solution is provided to meet the power crisis and to solve the peaking problem

Sir, there is another difficulty that we are likely to have in the field of power and, especially, in respect of the various schemes that have been mentioned by the Hon. Minister. He has mentioned the schemes in his Policy Note. All these schemes put together are for 1500 MW or 1800 MW. He has mentioned about the Madras North Thermal Station scheme for 1050 MW, the Mettur Scheme for 400 and odd MW and the scheme for

1983 பிப்ரவரி 9] [Thiru A. R. Damodaran]

additional 720 MW or 730 MW at Tuticorin. These schemes are likely to cost over 1500 to 1600 crores of rupees. The Hon. Minister has been extremely silent on the aspect of finance. Even if these schemes are sanctioned, I do not know where we are going to get the funds for the development of these schemes which are so expensive. I mention this because Minister after Minister, including the Hon. the Finance Minister, has stated that our Plan outlay is not likely to suffer at all because of various welfare schemes that have taken place. I would like the Hon. the Minister for Power to ensure that, at least in the power sector where we will require immediately additional resources of more than Rs. 400 crores or Rs. 500 crores, the Hon. the Finance Minister will be able to give him the allocation that he desires if some of these plans are sanctioned by the Government of India because we have to go ahead with the implementation of these projects.

Sir, I would like to make a suggestion regarding power saving. Instead of conducting publicity campaigns and instead of printing hand-bills, as was suggested by the hon. Member Thirumathi Mandakini Krishnamurthi, I would like the Electricity Board to evolve a scheme in this matter. If they want the agriculturists having agricultural pumpsets to install capacitors in their pumpsets, may I request the Electricity Board to formulate a scheme either that the original manufacturers must have these equipments fitted on to the pumpsets, or, if this is not legally possible, at least to ensure that they supply these equipments to various consumers and recover the cost on an annual basis, say, on a Five-Year Plan or a Six Year Plan? Because anything new that is introduced is likely to be resisted, possibly the Electricity Board could think of this also.

Sir, one last word and that is about the labour situation in the Electricity Board. My hon. Friend was referring to the grievances of labour. May I also voice the grievances of consumers and state that as a public utility concern, we want better service from the Electricity Board, better billing methods? In fact, I have been suggesting that even this spot billing could be avoided. The domestic consumers can be charged at an average rate and the reading can be taken once in six months

and they may be asked to pay the difference. Why should we waste time employing 20 and 30 thousand people on an unproductive and useless task? You may keep these people as we have kept them in various fields in Government departments and I am sure that 10 per cent of the sector is idling drinking coffee and tea in the canteens as has been noticed by a neighbouring Chief Minister. We may not do away with them because we will lose their votes. We need not dispense with their services. As consumers, when the rates are increasing year after year, is there anything wrong in our asking that the services of the Electricity Board should be improved? I am not blaming the officers because the officers are today a demoralised lot. I imagine what they were doing for the past few years. They were doing the unproductive task of accompanying the Sub-Collectors, Collectors and District Superintendents of Police for removing fuses and putting on fuses. Is this the type of work that we have to entrust to the officers of the Electricity Board? They have become unproductive, ruinous and demoralised. But we have got to do this because of various decisions that have been taken. In fact, the Engineers of the Electricity Board are not attending to operation and maintenance. They are attending to this type of work and in filing advertisements in newspapers stating that the farmers have become rich, owning cars and tractors, etc. We expect better service from the engineers and staff of the Electricity Board. A great deal of this unnecessary and hazardous work should be minimised and they should be left to work in productive fields which will produce the results we want. On behalf of the consumers, I would like to say that we do not mind the Hon. Minister giving one hundred rupees more as wages or Rs. 200 as amenities or providing every worker a house, etc. These are all necessary and every public sector concern has to do it. In the interest of the consumers who are worried about fluctuation in voltage, load shedding, power cuts, increase in tariffs, etc., may I plead for co-operation among the various sectors in the Board—not merely the officers and the Chairman and the members of the Board but also every worker in the Electricity Board. Last year the Hon. Minister mentioned that there were 99,666 employees. I have not gone through the f[illegible] this year and it might have crossed one lakh of persons. Mo[illegible]

request equal co-operation from the workers and engineers in the Electricity Board to see that Tamil Nadu, during this period of crisis, is able to work in a united sense and to ensure that in addition to food shortage which is already going to cripple the State as far as adminstrative activities are concerned, we do not complicate the situation further by creating a situation in the power sector which may lead us to additional difficulties? Thank you, Sir.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். இன்றைக்கு மக்களுக்கு மிகத் தேவையாக இருக்கின்ற, பெருமளவுக்குத் தேவையாக இருக்கின்ற நீர், நிலக்கரி, மின்சக்தி போன்ற எல்லாவற்றிலுமே இயற்கையினுடைய தடை காரணங்களினால், தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில், மாநில அரசு தான் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்தும் மாநில அரசினுடைய முயற்சிகள் வெற்றி பெறாமல் போனதற்கான காரணங்களைக் கூறியும், மாநில அரசினுடைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தந்து, அனுமதி தந்து, ஆதரவு தந்து, அதை வெற்றிகரமானதாக ஆக்கவேண்டிய பொறுப்பேற்று இருப்பவர்கள், அதிகாரத்திலே இருப்பவர்கள், டெல்லியிலே இருப்பவர்கள், அதற்கு பல்வேறு வகையிலே முட்டுக்கட்டைகளைப் போடுகின்ற அளவுக்குச் செய்கின்றார்கள். அவர்கள் கொடுக்கின்ற பல இடையூறுகளையும் பற்றி அரசின் சார்பாகத் தெரிவிக்கும்போது, நமக்கு ஒரு கவலை வருகிறது. எனக்கு ஒரு நினைவும் வருகிறது. பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபோது, அவர் தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு முதலமைச்சர் என்ற நினைவின்றி, தமிழகத்தின் நலன்தான் மற்றவற்றைக் காட்டிலும் முக்கியமானது என்று கருதி, மத்தியிலே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தாலும், அப்போது மத்தியிலே ஆட்சியிலே இருந்தவர்களைத் தட்டிக்கேட்கத் தயங்காமல் செயல்பட்டார்கள். அவர் முதலமைச்சராக இருந்தபோது, அப்படிச் செய்தார்கள். அவர்கள் முதலமைச்சராக இல்லாத சமயத்திலேகூட, அவர் அந்தப் பதவியிலே இல்லாத சமயத்திலேகூட, தமிழ் நாட்டின் நலன்கள் என்று வரும்போது, தமிழ் நாட்டினுடைய நலன்களைக் காப்பாற்ற எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள். அந்த உணர்வு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்களுக்கு வர வேண்டுமென்பது என் போன்றவர்களுடைய அன்பான வேண்டுகோள். தமிழகத்தினுடைய பொது நலன் என்று வரும்போது, அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள், தடையாக இருப்பவர்கள் யாராக

இருந்தாலும், அதைப் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும் என்று சொல்லி, அந்த முயற்சியை [illegible] எடுக்க [illegible] முயற்சியைச் செய்தவர்களாக இருந்தாலும், அது [illegible] பொறுப்பு, கடமை என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நேரத்தில், குழுநிலையில் [illegible] இருக்கிறார். [illegible] முக்கியமான பொருள்களுக்கு [illegible] ஏற்பட்டிருக்கின்ற [illegible] மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்ற காலகட்டத்தில் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது [illegible] விவாதம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சபையிலே [illegible] கருத்துக்களை. [illegible] விரும்புகிறேன். இப்படிப்பட்ட தட்டுப்பாடு [illegible] எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் [illegible] தட்டுப்பாடு [illegible] சிக்கலைத் [illegible] கடுமையான நடவடிக்கை [illegible] மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் [illegible] சரி, பகுதியில் இருப்பவர்களும் [illegible] அவர்களாக இருந்தாலும் சரி, மின்சாரத்தை [illegible] பயன்படுத்த வேண்டுமென்பது [illegible] வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். [illegible] சார்ந்த [illegible] சாதாரண பாமர மக்கள் என்ன நினைக்கிறார்கள்? [illegible] ஒரு புறம் இருந்தபோது. இப்படிப்பட்ட ஆடம்பரமான விளக்குகள் தேவைதானா என்று நினைக்கிறார்கள். [illegible] பார்க்கிறார்கள். அதுபோலவே பொது விழாக்களாக இருந்தாலும் சரி, [illegible] விழாக்களாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட [illegible] இப்படி தட்டுப்பாடு இருக்கிற நேரத்திலே சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆடம்பர விளக்குகளையும், ஆடம்பர அலங்காரங்களையும் தவிர்க்க வேண்டும். அது அவர்கள் கடமை. அதற்கும் மின்வாரியம் [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலிருந்து [illegible] குறைவது இருக்கட்டும். [illegible] தகுதியும் இல்லை என்று நினைக்கிறேன். [illegible] அலுவலகங்களில்கூட நான் பார்க்கிறேன். [illegible] மின் விசிறி ஓடிக்கொண்டிருக்கின்ற [illegible] பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு பொறுப்பில் இருப்பவர்கள், பதவியில் இருப்பவர்கள்கூட சிக்கனமாக இல்லை என்றால் இந்த நாட்டு ஏழை எளிய

மக்களுக்கு, விவசாயிகளுக்கு எப்படி இந்த மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும், சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வதற்கு நமக்குத் தகுதி எப்படி வரும் என்று நாம் பார்க்க வேண்டும். இதை நான் அறிவுரையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'பப்ளிக் சென்ஸ்' என்று சொல்வார்களே, அந்த பண்பாட்டை மக்களிடையே கொண்டுவர

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(மணி 11-30)

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாமர மக்கள் வாழும் நாட்டிலே மந்திரிகள் அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

நெய்வேலி அனல் மின் நிலையத்தைப்பற்றி இந்தக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கும்போது தமிழக அரசு தனக்குச் சொந்தமாக அனல் மின் நிலையம் ஒன்றைக் கட்டப் போகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அது மாத்திரம் போதாது. தமிழகத்திலே இருக்கிற நில வளத்தைப் பயன்படுத்தி, நெய்வேலியில் அமைக்கப்பட்டிருக்கிற அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை தமிழகத்திற்கு முதலில் கொடுத்து, மீதம் தேவை போக எஞ்சியதை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கலாமென்ற முறையில் அரசு வாதாட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. மத்திய அரசு சார்பாக நெய்வேலியில் அமைக்கப்பட்டிருக்கும் அனல்மின் நிலையங்களையும் தமிழக அரசுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் தமிழக அரசு தெளிவாக மத்திய அரசிடம் சொல்லி, அதைப் பெற போராட வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டுமென்பதும் என்னுடைய கருத்து. இப்படி இயற்கை வளத்தை எதிர்பார்த்து, பருவ மழையை நம்பியுள்ள நாம், நம்முடைய நாட்டின் இயற்கைச் செல்வமான நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின் நிலையங்கள் அனைத்துமே தமிழகத்திற்குச் சொந்தமாகும் வகையில், மைய அரசு அதனுடைய பொறுப்பிலிருந்து தமிழக அரசின் பொறுப்பு நிர்வாகத்தின்கீழ் அதை மாற்றித் தரும் வகையில் முயற்சி எடுக்க வேண்டும். அதற்காக நமது அரசு வாதாட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். இலங்கை போன்ற நாடுகளிலிருந்துகூட மின் சக்தியைப் பெறலாமென்ற செய்தியைப் பார்த்தேன். அண்டை மாநிலங்களிலிருந்து மின் சக்தியைப் பெற வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு வாய்ப்பு இருந்தால்,

அதைப் பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறதா, அல்லது வேறு ஏதேனும் இடையூறுகள் இருக்கிறதா என்ற விவரங்களை மாநில அரசு சார்பில் இங்கே எடுத்துச் சொன்னால், இந்த அவை புரிந்து கொள்ள உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று நான் சொல்ல ஆசைப்படுவது, மின்சாரத் தேவையைப் பொறுத்தவரையில், ஒன்று அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படும் மின்சாரம், மற்றொன்று லக்சுரியஸ் என்று சொல்லப்படும் ஆடம்பரத்திற்குப் பயன்படும் மின்சாரம் என்று இருக்கிறது. இப்போது மின்சாரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நேரத்தில், மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு எல்லாம் 80 சதவிகித மின் வெட்டு ஏற்பட்டு, அவைகள் எல்லாம் இயங்காத நிலையில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆடம்பரத்திற்கு அனுமதிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். அதை எந்த வகையில் தடுத்து நிறுத்தலாமென்று மின் துறை அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் மாநில அரசு எடுத்துள்ள முயற்சிகளுக்கு எங்களுடைய ஆதரவைத் தர தயாராக இருக்கிறோம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்தத் துறையிலே நிபுணத்துவம் பெற்றவர்கள், ஆற்றல் பெற்றவர்கள். அதற்கான கல்வித் தகுதி பெற்றவர்கள். எனவே இந்த நேரத்தில், இந்தத் துறையில் இந்த அமைச்சரைத் தவிர வேறு யாராக இருந்தாலும் செயல்படுவது கடினமானது என்று சொல்லி, மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் மின் வாரியத்தின் சார்பாக எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவைத் தெரிவித்து, அமைகிறேன்.

***டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஒரு தாய் நல்ல வசதியான வீட்டிலே பரிமாறுகிறபோது இருக்கும் நிலைமை வேறு. வசதி குறைந்த நிலையில் சட்டியிலே இருப்பதை அகப்பையிலே எடுத்து, குழந்தைகளைச் சமாளிக்கும் மிகப் பெரிய திறமையோடு மின் துறை அமைச்சரவர்களும், மின் வாரியத்தின் தலைவரவர்களும் பணியாற்றி வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இருக்கின்ற நெருக்கடியை நாமே புரிந்துகொண்டிருக்கிறோம். அதனால் அனைவரும் ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்ல விழைகிறோம். அந்த முறையில் பார்க்கிறபோது, நாம் முழுவதும் நம்பிக் கொண்டிருக்கும் மின் நிலையங்களில்

உள்ள நெருக்கடியை ஆராய்ந்து பார்க்க வேண்டும். டெல்லியிலே புனிடோ மாநாட்டில் 35 நாடுகள் கலந்து கொண்டன. அந்த மாநாட்டிலே வளரும் நாடுகளிலே டிரான்ஸ்மிஷன் லாஸ் போன்றவற்றிலே கவனம் செலுத்தினால், 30 சதவிகிதம் மிச்சப்படுத்த முடியுமென்று தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசியதைப் பார்த்தால், இதெல்லாம் இங்கே நடக்காது என்று சொல்லிவிடக் கூடும். அந்த அளவிற்கு எப்படி நெருக்கடியைப் போக்கலாமென்று நாம் முயலும்போது, அதை எப்படி அதிகப்படுத்தலாமென்று ஆலோசனை தந்தால், உள்ளபடியே அதிகாரிகள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆசியாட் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு, இந்த நாட்டை வென்றோம், அந்த நாட்டை வென்றோம். வெற்றி வாகை சூடினோம் என்று சொல்லி மகிழ்ச்சி கொள்வது உண்டு. உலக விளையாட்டுப் போட்டிகளில் ஒரு நாடு எவ்வளவு பதக்கங்களைப் பெற்றது என்பதில்தான் பெருமை. இந்த நிலைமையில், விளையாட்டுகளை மின் வாரியம் ஊக்கப்படுத்தியது தவறு என்று குறையாகச் சொன்னால், இனி எதற்கு விளையாட்டிற்கு ஊக்கம் தருவது என்று மிகுந்த மன வேதனையோடு அவர்கள் இருந்துவிடுவார்கள்.

(முற்பகல் 11-40)

இந்த முறையில் நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தன்னிறைவு பெற்றிருக்கிற இங்கிலாந்து நாடு, அதுவும் மின்சாரத்திலே **South Sea, North Sea** யிலேயிருந்து எல்லாம் மின்சாரம் எடுத்து தன்னிறைவு பெற்றிருக்கும் அந்த இங்கிலாந்து நாடு கூட, மற்ற வழிகளிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கும் எவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, நாமும் மற்ற வழிகளிலிருந்து மின்சாரம் பெற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கு பல வழிகள் சொல்லலாம். கழிவுக்கரி, சூரிய ஒளி, கடல் அலை, காற்று, மனித-மிருக சக்தி இவைகளையெல்லாம் சிறிய அளவிலேயாவது எடுத்து, நாம் திறமையாக உபயோகப்படுத்த முடியும். ஆனால் மத்திய அரசு இதிலே எந்த அளவுக்குத் துணையாக இருக்கிறது என்பதெல்லாம் ஆளுநர் அறிக்கை ஆண்டுக்காண்டு வரும்போது சிலவற்றைச் சொல்லியும், சிலவற்றை வற்புறுத்தியும், சிலவற்றை வற்புறுத்தாமலும் இருப்பதைப் பார்க்கும்போது கடல் அலையிலிருந்து, **Tidal waves** லேயிருந்து மின்சாரம் எடுக்கலாம் என்று நாம் சொன்னவுடன், இதைப்பற்றி மத்திய அரசு நமக்கு ஊக்கம் தரவில்லை என்று நான் கருதுகிறேன். நாம் கேட்டவுடனே அவர்கள் சொல்லிவிடுவார்கள், என்னவென்றால், மின்சாரத்தை வேறு வழிகளிலிருந்து எடுக்கிற முயற்சி, காற்று, கடல் அலை இவற்றிலிருந்து எல்லாம் எடுத்தால் அதற்கு அதிகமாகச் செலவாகும், அது ஆகாத காரியம் என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் எதைப் பார்க்க வேண்டும் என்று

[1983 பிப்ரவரி 9

டாக்டர் இரா. சனார்த்தனம்: அதேபோல இப்போது நாம் சவுக்கு மரத்தை எடுத்துக்கொண்டால், ஆரணி போன்ற இடங்களிலிருந்து சென்னைக்கு சவுக்குக் கட்டைகளைக் கொண்டு வருகிறார்கள். அதற்கு லாரி செலவு, பெட்ரோல் செலவு எல்லாம் விரயமாக ஆகின்றன. இங்கே அதை எரித்துத் தருகிறார்கள். அப்படியில்லாமல், அங்கேயே சவுக்கு மரத்தைக் கொண்டு இரண்டு மெகாவாட் அளவிலே மின்சாரம் தயாரிக்கும் ஒரு அமைப்பை உருவாக்கினால் ஆரணி, வாலாஜாபாத் போன்ற பகுதிகளுக்கும் அதன் பக்கத்திலே இருக்கும் தொழில் மையங்களுக்கும் நாம் அவற்றைப் பயன்படுத்த முடியும். இதற்கெல்லாம், Energy Conservation Cell என்று அமைத்தால் உலக வங்கி, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து அரசாங்கம், நம்முடைய தொழில் வல்லுநர்கள், வெளிநாடுகளிலே இருக்கும் நம்முடைய இளைஞர்களுடைய அறிவு இவைகளைப் பயன்படுத்தினால் நல்லது. இந்த வகையில் ஆராய்ச்சி நோக்கோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுகினால், நிச்சயமாக ஒரு ஆறு மாதகாலத்தில், இப்போது இருக்கும் பற்றாக்குறையிலே 15 சதவிகிதம் நாம் குறைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். காரணம் இப்போது கிடைத்திருக்கிறது. மின்சாரத் தட்டுப்பாடு என்றவுடன் 70 சதவிகிதம், 50 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம் என்று இருப்பதைச் சொல்லி விட்டுப் போவதிலே ஒரு பெரிய காரியம் இல்லை. ஆனால் ஆராய்ச்சி நோக்கோடு மின்வெட்டு இருந்தால், எவ்வளவு மக்கள் பாதிக்கப்படுவார்கள், பொருளாதாரத்திலே எவ்வளவு இழப்பு ஏற்படும் என்ற ஒரு அணுகுமுறை வேண்டும். காரணம் ஒரு [illegible] போனால் கெடுத்திருக்கிற தொழிற்சாலைக்கு இந்த ஆண்டு மின்வெட்டு காரணங்கள். அந்தத் தொழிலாளிக்கு போனஸ் வாங்கிய பணம் இருக்கிறது அல்லது பக்கத்தில் இருக்கும் வீட்டிலே போனால், அவனுக்குக் கடன் கொடுப்பார்கள். ஆனால், தொழிலாளியைப் ஏற்படும். அதைப்போல ஒரு கருத்தை நான் [illegible] வேண்டிய நிலைமை பொறுத்தவரையில் சொல்கிறேன். அங்கே தேயிலைத் தொழில் செய்கிறார்கள். 1972 வரை அதை ஒரு விவசாயப் பயிராக கருதிக்கொண்டிருந்தார்கள். 1972-க்குப் பிறகு அதைத் தொழில் பிரிவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். தொழில் பிரிவுக்குக் கொண்டு வந்ததால் இப்போது அது மின்சார வெட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டிருப்பதால் அங்கே ஆண்டுக்கு எட்டு கோடி ரூபாய் நஷ்டமாகிறது. ஆனால் நீலகிரி மாவட்டம் முழுவதற்கும் இருக்கிற தேயிலைத் தொழிலுக்கு ஒரு ஆலை அல்லது தொழிற்சாலைக்கு அல்லது எதனாலும் ஒரு மின்வெட்டுத் தாங்கும் மின்சாரம் எவ்வளவோ அவ்வளவுதான் தரும் நிலைமை இருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலே

1983 பிப்ரவரி 9] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

மின்சார வாரியத் தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர் களையும் நான் பாராட்டுகிறேன். காரணம் "INGO, TANTEA" தொடர்புள்ள அமைப்புகளுக்கு விதிவிலக்கு தந்திருக்கிறார்கள். அதே விதிவிலக்கை தேயிலை விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான நோக்கம். அது இல்லை என்றால், பெரிய பாதிப்பு நீலகிரி மாவட்டத்திலே ஏற்படும் என்பதும். அதனால் ஒரு நோக்கோடு, ஆராய்ச்சி நோக்கோடு இதிலே செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள், விளம்பரத்திற்காக செய்வதைப் போல—பொருட்காட்சி போன்றவற்றிற்கு மின்சாரம் செலவு செய்வதைப் பார்த்தால், மக்களுக்கு வேதனையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் கூட ஒரு ஆராய்ச்சிக் கண்ணோடு பார்க்க வேண்டும். ஒரு பொருட்காட்சி நடக்கிறது, அங்கே வருகின்றவர்களின் எண்ணிக்கை ஒரு 10 ஆயிரம் மக்கள் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் வீடுகளிலே இருக்கும் விளக்கை அணைத்துவிட்டுத் தான் வருகிறார்கள். அந்த மின்சாரத்தை விட பொருட்காட்சியிலே செலவாகும் மின்சாரம் எவ்வளவு? இதைக் கூட ஆராய்ச்சி நோக்கோடு பார்க்கவேண்டுமே தவிர ஏதோ பொருட்காட்சி நடக்கிறது, அதை விளம்பரம் அல்லது ஆடம்பரம் என்று கருதக்கூடாது. உலகத்தினுடைய வளர்ச்சி ஒவ்வொன்றையும் ஒரு ஆராய்ச்சிக் கண்ணோடு பார்க்கும்போது, அந்த முறையிலே மின்சார வாரியம் தேவையான நடவடிக்கைகள் எடுத்து மின்சாரத்தை மிச்சப்படுத்த வேண்டும். அதுகூட, பல நாடுகளில் விளம்பரப்படுத்துகிறார்கள். மக்களுக்கு அறிவிக்கிறார்கள். 'Save energy' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதனாலே மின்சாரத்தை மிச்சப்படுத்த மக்களுக்கும் தெளிவாக்க வேண்டும். அதே நோக்கிலே நாம் புதிய முறைகளிலே மின்சாரம் பெற அறிவுரை கூற அணுக வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அரியானாவில் "Solar Water Heating System" என்ற முறையிலே, தண்ணீரை 65 டிகிரி சூடாக்கி அதை வைத்து பாட்டில்களைக் கழுவி மின்சாரத்தை மிச்சப்படுத்தி உள்ளனர். Modern factory at Delhi யிலேயும் இதே முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கழிவுப்பொருட்களைப் பற்றித் தெரிவித்ததைப்போல, சாக்கடைக் கழிவிலிருந்து வரும் வாயுவைக் கொண்டு குறைந்தபட்சம் அந்தக் கழிவுச் சாக்கடை இருக்கும் இடங்களிலே யாவது விளக்கு அமைக்கலாம். அதனாலே இவற்றை ஒரு ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு செயல்படவேண்டும் என்பதும், இவ்வளவு நெருக்கடியான நேரத்தில் நம்முடைய மின்சார வாரியம் ஆற்றிக்

கொண்டிருக்கும் பணி மிகவும் மகத்தானது என்ற வகையிலே மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களையும், மின்சார வாரியத்தையும் பாராட்டி அமைகிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. ஏ. ஜே. தாஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததைப் போல் என்று பழமொழி சொல்வார்கள். அதைப்போல மின்சார வாரியத்தில் அட்டைப் பட்டியல் முறை என்ற ஒரு நல்ல திட்டம் மிகவும் அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டு, சரியாகச் செயல்படுத்தப்படாததன் காரணமாக அந்தத் திட்டமே இன்றைக்குச் செயலிழந்து, அதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு பல கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் பார்க்கிறபோது, பரிதாபமாக இருக்கிறது. இந்த முறையின் மூலம் அந்தந்த இடத்திலேயே மீட்டரைப் பார்த்துக் குறித்துக் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் காரணமாக பல கோடி ரூபாய் வசூலாகாமல் இருக்கிறது. அதற்காக இந்த மின்சார வாரியம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மின்சார வாரியம் வசூலிக்க வேண்டிய தொகையில் 30 சதவிதம் மட்டும்தான் தற்போது வசூலிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 70 சதவிதம் வசூலாகவில்லை. அதிலும் கூட இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை பலர் கையிலே இருந்துவிடுகிறது. ஒவ்வொரு வ.ச.-இடமும் ரூ. 1 முதல் 1½ லட்சம் வரை 15 நாட்களுக்கு இருக்கின்றது. இதற்கு முன்பெல்லாம் காலையில் வசூல் செய்த பணத்தை மாலையில் கட்ட வேண்டும் என்ற முறை இருந்தது. ஆனால் இன்றைக்கு வசூலிக்கப்படும் பணம் 15 நாட்கள் வரையில் அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள் கையிலேயே வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. அந்தப் பணம் 15 நாள் இடைவெளியில் எங்கே போகிறது, எப்படிப் போகிறது என்ற கணக்கே இல்லை. சப்ளிகையாளர்கள் கட்டுகிற பணத்திற்குத் தற்போது சரியான கணக்கே இல்லை. இதையெல்லாம் பார்க்கிறபோது அட்டைப் பட்டியல் முறை விரும்பத் தகாத நிலைமைகளை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் பல கோடி ரூபாயை மின்சார வாரியத்திற்கு நட்டமாக்கிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

அதோடு உலகத்திலேயே வேலை செய்யாமல் சம்பளம் வாங்குகிற ஒரு ஸ்தாபனம் இருக்கிறது என்றால், அது மின்சார வாரியம்தான். அதாவது மின் வாரியத்தில் 70 சதவிதம் பேர் வேலை செய்யாமலேயே சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நிறைய பண விரையம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் மின்சார வாரியத்திற்கு ரூ. 721 கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி திறமையில்லாமல் ஒரு நிர்வாகம் நடந்தால், எப்படி நட்டம் ஏற்படாமல் இருக்க முடியும்? ரூபாய் 721 கோடி அல்ல ரூபாய் 2,000 கோடி அளவுக்குக் கூட நட்டம் ஏற்படத்தான் செய்யும். இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தில் ஒரு ஆள் செய்த வேலையை தற்போது ஆறு பேர் செய்து வருகிறார்கள். அப்படியும் வேலை ஒழுங்காக நடப்பதில்லை. ஒவ்வொரு இலாக்காவுக்கும் ஒரு சீப் எஞ்சினியர். இதற்கு மட்டும் குறைவில்லை. அந்தக் காலத்திலெல்லாம் ஒரே ஒரு சீப் எஞ்சினியர்தான் இருந்தார். அவர் திறமையாக வேலை செய்வார். அதோடு வேகமாகவும் வேலை நடந்தது. இப்போது ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு சீப் எஞ்சினியர் என்று போட்டுவிட்டதால், ஒரு சீப் எஞ்சினியருக்குக் கடிதம் எழுதினால், அது தன்னிடம் இல்லை என்று அடுத்த இலாக்காவுக்கு அனுப்பி விடுகிறார். இப்படி பல சீப் எஞ்சினியர்களிடம் போய்கூட பல நேரங்களில் காரியம் நடைபெறுவதில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் முதலில் சீப் எஞ்சினியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மின்சார வாரியத்தில் 32 யூனியன்கள் இருக்கின்றன. இது தேவைதானா என்பதையும் பார்க்க வேண்டும். இப்படி அதிகமான அளவுக்கு உள்ள யூனியன்களையெல்லாம் ஒருமுகப்படுத்தி ஒரு சுமுகமான நிலைமையை மின்சார வாரியத்தில் ஏற்படுத்துவதன் மூலம் அந்த வாரியம் திறமையாக நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவரை ஏன் செய்யப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தின் சார்பில் பலமாடிக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பல வருஷங்களாக இந்தப் பணி நடந்து வருகிறது. அப்படிக் கட்டப்பட்டாலும்கூட, இன்னும் மின்சார வாரியத்தைச் சார்ந்த பல்வேறு அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களிலேயே செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. இதன் காரணமாக இரண்டு வகையில் மின்சார வாரியத்திற்கு

கேட்டார்கள். அப்படிக் கண்காட்சிக்கு வருகிறவர்கள் தங்கள் வீடுகளைப் பூட்டிவிட்டு விளக்கையும் அணைத்துவிட்டு வந்தால், மீண்டும் திரும்ப வீட்டிற்குப் போகும்போது வீடு காலியாகத்தான் இருக்கும். எங்கே பார்த்தாலும் தற்போது திருடு நடக்க ஆரம்பித்து விட்டது. விளக்கு இருக்கும்போதே திருடு போய்விடுகிறது என்றால், விளக்கை அணைத்து விட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மத்திய அரசோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல தொடர்புடையவர் என்பதால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு தற்போது ஒழுங்காக நமது மாநிலத்திற்கு நிலக்கரியைக் கொடுப்பதில்லை. அப்படியே கொடுத்தாலும், அது தகுதியில்லாத நிலக்கரியாக இருக்கிறது. எனவே தினந்தோறும் மாலையில் ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை டி.வி.-யில் தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பினால் மக்கள் அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதன் காரணமாக மின்சார உபயோகத்தில் சிக்கனம் ஏற்பட்டு மிச்சமேற்படும். எனவே மத்திய அரசோடு இதுகுறித்து அவர் கலந்து உதவி செய்தால், ஓரளவுக்கு மின் வெட்டைக் குறைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: நிலக்கரி கொண்டு வருவதில்தான் தவறு ஏற்படுகிறது என்பதை ஏற்கெனவே விளக்கமாகப் பேசியிருக்கிறோம் . . .

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் திரு. தாஸ் அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, மத்திய அரசோடு தொடர்புடையவர் என்று குறிப்பிட்டார். அப்படியானால் மாநில அரசுக்குத் தொடர்பில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதை அவரே சொல்லட்டும். அதில் ஏதாவது கோளாறு இருக்கிறதா?

திரு. ஏ. ஜே. தாஸ்: எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் மத்திய அரசிடம் வலியுறுத்துவோம். தமிழகத்திற்கு விரைவாக நிலக்கரியை அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்துவோம். தமிழக அரசிடமிருந்து சரியான முறையில் செயல்பாடுகள் இல்லை என்றுதான் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் நிலக்கரி தட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில், வேண்டியது கிடைக்கவில்லை என்று வேகன் தலையில் 'சாக்கைப்' போட்டுவிட்டு வேகன் கிடைக்கவில்லை என்பதால், கப்பலில் கொண்டுவர கப்பல் வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார். இப்போதே இருக்கிற கப்பல் கம்பெனியால் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் கப்பல் வாங்கினால் இன்னும் அதிகமான நஷ்டம்தான் ஏற்படும். ஏற்கெனவே மின்சார வாரியம் நட்டத்தில்

ஓடிக் கொண்டிருப்பது போதாதென்று கப்பல் கம்பெனியும் நட்டத்தில் ஓட வேண்டுமா? எவ்வளவுதான் நாம் நஷ்டத்தைத் தாங்குவது? புதிதாகக் கப்பல்களை வாங்குவதை விட்டுவிட்டு, இருக்கிற கப்பல்கள்மூலம் நிலக்கரியை ஏற்றி வந்தால் நல்லதாக இருக்கும். எனவே அதற்கான உத்தரவைப் போட வேண்டும் 'என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி கப்பல் மூலம் நிலக்கரியைக் கொண்டு வந்தால், இங்கே உள்ள அனல் மின் நிலையங்கள் சரியாகச் செயல்பட உதவியாக இருக்கும் என்று சொல்லி, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதிநிலை-அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் மின்சாரத்தைப் பற்றிய அதிருப்தி மிகவும் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக இப்படிப்பட்ட

(நண்பகல் 12-00)

நிலை எதனாலே ஏற்பட்டது என்பதை இந்த அவை சரிவரத் தெரிந்து கொள்வதற்கான முறையில் விவரங்களைத் தந்து விவாதித்திருந்தால் கொஞ்சம் பலன் அளித்திருக்க முடியும். செப்டம்பர் மாதம் இந்த அவை கூடியபோது, பெரியகுளம் தேர்தல் வந்தது, அதனாலே எல்லாக் கட்சிகளும் கூட அவையை ஒத்திவைக்கலாம் என்று கேட்கும் நிலை ஏற்பட்டு. விரைவிலேயே கூட்டலாம் என்றும் கூறப்பட்டது. இப்போது ஆண்டு இறுதியில் இந்த அறிக்கையைப்பற்றி விவாதிக்கிறோம். இத்தகைய குறைபாடு ஏதோ சந்தர்ப்பவசத்தால் மட்டும் ஏற்பட்டது என்று கருதிவிட முடியாது. இந்த நடைமுறையால் இந்த அவைக்குள்ள சில கடமைகள் சரிவர நிறைவேற்றப்பட முடியாமல் பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நான் முதலிலேயே வலியுறுத்தக் காரணம், நம்முடைய பாராளுமன்ற முறையிலே ஏற்படுத்தப்பட்ட அவைகள் தன்னுடைய பங்கை ஒழுங்காக ஆற்றினால்தான் அரசும் ஒழுங்காகச் செயல்பட முடியும். அந்த முறையிலே மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை காலத்திலே விவாதித்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்க முடியும். காலம் கடந்ததால் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவது கூட நடைமுறையில் பின்-பரிசீலனை (போஸ்ட் மார்ட்டம்) செய்யக்கூடிய அளவிற்கு வருகிறது.

திட்டங்கள் உண்டு. அவற்றை அவர்கள் மீற முடியாது. நான் சொல்லுவது பொது நியதிதான். பிரைவேட் ஏஜென்சி என்றால், பல காரியங்களைச் செய்ய முடியும். அந்த மாதிரி உபாயங்களைக் கையாள முடியுமா என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சிறந்த முறையில் ஆலோசனைகளைச் சொல்லி வருகிறார்கள். இருந்தாலும் மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு "உபாயங்கள்" என்றால் இன்னும் சரியாகத் தெரியவில்லை. அதைப்பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால், எங்களுக்கெல்லாம் பலன் உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதை விளக்குவதற்கு ஒரு உபாயத்தைக் கேட்கிறார்.

(பிற்பகல் 12-10)

திரு. ப. மாணிக்கம் : வியாபார ரீதியாக, செய்யக்கூடிய இடத்தில், தரவேண்டிய இடத்தில் தந்து செய்யவேண்டிய காரியத்தை அவர்கள் செய்து விடுகிறார்கள். அதைத் தான் நான் சொன்னேன். இதை இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால், சில இடங்களிலே இலஞ்சம் கொடுத்து காரியத்தைச் செய்துகொண்டுவிடுகிறார்கள். இலஞ்சம் என்று சொல்லும்போது பிரச்சினை எழுப்பலாம். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்த அமைப்பையேதான் ஒழிக்க வேண்டும். ... அது அவர்களுடைய திறமையைப் பொறுத்தது. காரியம் நடைபெற வேண்டுமென்பதற்காக எல்லோருக்கும் அப்படிச் செய்கிறார்கள். உதாரணம் சொன்னால், அது எல்லோருக்கும் தெரியும்.

திரு. ப. மாணிக்கம் : வியாபார ரீதியாக, செய்யக்கூடிய இடத்தில், தரவேண்டிய இடத்தில் தந்து செய்யவேண்டிய காரியத்தை அவர்கள் செய்து விடுகிறார்கள். அதைத் தான் நான் சொன்னேன். இதை இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால், சில இடங்களிலே இலஞ்சம் கொடுத்து காரியத்தைச் செய்துகொண்டுவிடுகிறார்கள். இலஞ்சம் என்று சொல்லும்போது பிரச்சினை எழுப்பலாம். ஒட்டுமொத்தமாகச் சொன்னால், தானால், லஞ்சமே இல்லாத அமைப்பில்லை. ஏனென்று சொன்னால், அதை இன்றுள்ள அமைப்பிலும் அது கட்டாயம் இருக்கத்தான் செய்யும். அதை ஒழிக்கவே முடியாது. அது வேறு பிரச்சினை. அந்த லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால், அந்த அமைப்பையேதான் ஒழிக்க வேண்டும். இது மின்சார வாரியத்தை மட்டும் உள்ளடக்கியது அல்ல. அது அவர்களுடைய திறமையைப் பொறுத்தது. காரியம் நடைபெற வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்கிறார்கள். உதாரணம் சொன்னால், அது எல்லோருக்கும் தெரியும். அது அவர்களுடைய திறமையைப் பொறுத்திருக்கிறது. அந்த முறையில் அவர்கள் காரியங்களைச் செய்துகொள்ள முயற்சிக்கலாம். பல்வேறு வியாபாரத் துறைகளிலே இருப்பவர்கள் அப்படிச் செய்து வேண்டியதைச் செய்துகொள்ள முடிகிறது. மொத்தத்தில் நமக்குக் காரியம் நடக்கிறது. தமிழ் நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. மின்சாரப் பற்றாக் குறைபற்றி பல பேர்கள் இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். அதனாலே நம்முடைய நாட்டில் தொடர்ந்து பிரச்சினையாக இருக்கிறது. இப்படியும் இதை எப்படியெல்லாம் சமாளிக்க முடியும் என்ற வகையிலே

முடியும் என்பதைப் பற்றி, மின்வாரியம் யோசிக்க வேண்டும். இப்படி சில வழிகளைப் பார்க்கலாமா என்று யோசிக்க வேண்டும். கரியைக் காலத்தில் கொண்டுவரலாம். இப்படி ஏதாவது காரியத்தைச் செய்வதன் மூலம், தரமான கரியைக் கொண்டுவரலாம். அதில் மத்திய அரசோடு சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே மத்திய அரசோடு இன்னும் கொஞ்சம் நெருக்கமாக, இணக்கமாக என்று சொல்லவில்லை, எப்படிப்பட்ட நிர்பந்தங்களைக் கொண்டுவரலாம் என்று பார்க்கலாம். நம்முடைய மின் உற்பத்தி நிறுவனங் களுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கும்போது, அது ஒரு டெக்னிக்கல் சப்ஜெக்ட், அது நமக்கு மட்டுமல்ல, இப்படி பல்வேறு மாநிலங்களுக்கும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அம்மாதிரி பிரச்சினைகளில், கொள்கை ரீதியாக மத்திய அரசை நிர்பந்திக்கின்ற முறையிலே இதை நாம் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இதிலே நாம் மட்டும் அல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள், சிக்கல்கள் ஏற்படுகின்றபோது, மற்ற மாநில அரசுகளோடு இணைந்து தீர்வு காணவேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். காரணம் மற்ற மாநிலங்களோடு சேர்ந்தால், மத்திய அரசு நிலை என்னவாகும்? இன்றுள்ள நிலையில், பல மாநில அரசுகளும் ஒன்று சேர்ந்து மத்திய அரசிடம் பல பிரச்சினைகளைப்பற்றி மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதே மாதிரி தரமான நிலக்கரி ஆகட்டும், வேகன்கள் பிரச்சினையாக இருக்கட்டும், கப்பல் பிரச்சினையாக இருக்கட்டும், அதில் ஒரு பாலிசி இருக்க வேண்டும். ஒரு பாலிசி சொல்கிறார்கள். இந்தியக் கப்பல்களைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு இந்தியக் கப்பல்கள் துறை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அப்படி இல்லை என்று சொல்லும்போது, நாம் அதைப் பயன்படுத்த முடியாது. எனவே அம்மாதிரி யான கொள்கைப் பிரச்சினையிலே சிக்கல் இருப்பதால், நம்முடைய மின்சார உற்பத்தி பாதிக்கப்படுவதாலே நம்முடைய தொழில் வளம் பாதிக்கப்படுகிறது. தமிழகத்திலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத கஷ்டங்கள் இருக்கின்றன. இங்கு விவசாயத்திற்கு என்று 10 லட்சம் பம்புசெட்டுகள் இருக்கின்றன. இந்தியாவிலேயே வேறு எங்கும் அப்படி கிடையாது. அப்போது நிர்பந்தத்தைக் கொண்டு வருவதாலேதான் செய்ய முடியும். நாம் மட்டுமல்ல, வேறு பல மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றபோது, அந்த அளவுக்கு நிர்பந்தத்தை அவர்களுடன் சேர்ந்து கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிறது. உறுப்பினர் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

[1983 பிப்ரவரி 9

திரு. ப. மாணிக்கம்: இப்போது இன்னொரு பிரச்சினை சொல்லப்பட்டிருக்கிறது. மழை பொய்த்துவிட்டது. தென் மேற்கு, வட கிழக்கு பருவ காற்று மழைகள் குறைந்து விட்டன. பெரும்பாலும் அணைகள் தென் மேற்கு பருவக்காற்றைத்தான் பிரதானமாக நம்பியிருக்கும். அது தவறிவிட்டது. அதனால் பல அபிவிருத்திகளை நாம் செய்ய முடியவில்லை. அப்படி இருக்கும்போது, நம்முடைய அனல் மின் நிலையங்களிலே உற்பத்தியைப் பெருக்க முன் உஷாராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவில் நாம் தவறியிருக்கிறோம். ஆனால் காலம் கடந்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது அவசரமாகச் செய்து அபிவிருத்திகளைக் கொண்டுவர முடிந்திருக்கிறது. இதை முன்கூட்டியே உஷாராக இருந்து செய்திருக்க முடியாதா என்றால், அப்படிச் செய்திருக்க முடியும். அதுமாதிரி செய்திருக்கலாம். இப்போது எப்படி சாத்தியமாக இருக்கும்? வேறு பல பிரச்சினைகள் சொல்லலாம். 'காம்போனன்ட்ஸ்', இயந்திர உறுப்புகள் சம்பந்தமாக பல பிரச்சினைகள் வந்திருக்கலாம். இதையே நெருக்கடி வந்தபோது செய்ததை, காலத்தில் செய்திருக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். காரணம் இவ்வளவு அவசரமாக, 15 நாட்களில் ரெக்டிபிகேஷன் செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னாடியே அப்படிச் செய்திருக்கலாம். இப்படிப்பட்ட ஆபத்து வரும் என்பது நமக்குத் தெரியும். ஏனென்றால் வட கிழக்குப் பருவ மழை மூலமாக நம்முடைய நீர் மின் நிலையங்கள், புனல் மின் நிலை சாத்தியம் இல்லை என்பது நமக்குத் தெரிந்ததுதான். அதனாலேதான் நாம் காலத்திலே செய்ய வேண்டும். அதைச் செய்ய தவறிவிட்டார்கள். இதனால் வரக்கூடிய காலத்திலேயாவது இப்படிப்பட்ட உஷார்த்தன்மையோடு இருக்கவேண்டும்.

புதிதாக உற்பத்திக்காக என்று பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்திலே மத்திய அரசு அந்தத் திட்டங்களுக்கு அனுமதி தரவில்லை. இன்னொன்று ராஜாத்யக்ஷா கமிட்டியினுடைய சிபாரிசுகள் இருக்கின்றன. இம்மாதிரி பிரச்சினைகள் குறித்து நாம் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பது இந்த மாதிரி சில நேரங்களில் மட்டுமல்லாமல், மின் உற்பத்தி, தண்ணீர், உணவு போன்ற மூன்றும் முக்கியமான பிரச்சினைகளாக இருப்பதால், அவர்கள் முழுமையான, ஏகோபித்த நிலையை மேற்கொள்வதற்கான முறையில், சில கொள்கைப் பிரச்சினை அடங்கிய முழுத் தீர்மானமாக கொண்டு வருவதன் மூலமாக காரியங்களைச் செய்யலாம். ஆனால் அதைப்பற்றி நிதி நிலை அறிக்கையிலே மட்டும் விவாதித்துவிட்டு, கருத்துக்கள் வழங்குவது என்று இல்லாமல், அதை முழுமையாக [illegible] கின்ற அளவில் ஒரு அரசியல் நிர்பந்தத்தை மத்திய அரசுக்குக் கொண்

வருகின்ற அளவுக்குச் செய்ய முடியும் என்று சொல்ல விரும்புகிறேன். அதனாலேயே இந்தக் கொள்கை சம்பந்தமான விஷயத்தை தனித் தீர்மானம் மூலமாக இரண்டு அவையிலும் எடுத்துக்கொள்வது உபயோகமாக இருக்கும். அதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்கின்ற யோசனை ஒன்று உள்ளது. சில தொழில்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது என்கிறார்கள். கிடைத்திருக்கின்ற விவரங்களை வைத்துக்கொண்டு பார்த்தால், அதிகமாக தொடர்ச்சியாக மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய இரசாயன தொழிற்சாலைகள், அலுமினியத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவர்களுக்கு மின்சார சார்ஜ் 45 பைசா அளவுக்கு அதிகமாக ஆவதால், எவ்வளவு பெரிய ஆபத்து என்று நாம் கவனிக்க வேண்டும். சில நேரங்களிலே பெரிய தொழில்கள் நடத்தக்கூடியவர்கள் அரசிடம் சலுகைகள் வாங்குவதற்கு இதைச் செய்யலாம் என்பதை நான் உணர்கிறேன். நமக்குக் கிடைக்கக்கூடிய விவரங்களை வைத்துக்கொண்டு பார்த்தால், இப்போது கடைசியாக நேற்று வரை வந்த விவரத்தை வைத்துப் பார்த்தால், திருநெல்வேலியில் தாரங்கதாரா கெமிகல்ஸ், ஏற்கெனவே பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரீஸ் மூடப்பட்டுவிட்டது. இது 25 பைசா என்று இருந்ததை 39 பைசா என்று அதிகரித்தது. இப்போது 45 பைசா அளவுக்கு அதிகரித்துள்ளது என்று சொல்லும்போது உற்பத்திச் செலவு அதிகமாகத்தான் ஆகிறது. அந்த மின்சாரத்தினாலேயே உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. ஆகவே அதிலே என்ன ஆபத்து வரும் என்று சொன்னால், அந்த வேலையை நடத்த முடியாத நிலை ஏற்படும், அப்படி தொழிற்சாலையை மூடுவதன் மூலமாக வேலைவாய்ப்பு என்பது மட்டுமல்ல, அப்படிப்பட்ட பொருள்கள் உற்பத்தியில் நஷ்டம் வருகிறது. எனவே இம்மாதிரி கன்டினுவஸ் ப்ராசெஸ் உள்ள இரசாயன, அலுமினிய தொழிற்சாலைகளுக்கு இந்த விஷயத்தில் என்ன சலுகைகளைத் தர வேண்டுமென்று பார்க்க வேண்டும். தொழிற்சாலைகளைக் காப்பாற்ற, வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமும் அளிக்க வேண்டும். இதில் அரசு நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன். இந்தத் துறையைத் திறமையாக நிர்வகித்து வரக்கூடியவர்கள் என்ற பெயரை தமிழகத்தில் இந்த அமைச்சர் அவர்கள் மக்கள் மத்தியிலே எடுத்திருக்கிறார்கள் என்பது உண்மை. நான் அவர்களுடைய திறமையைப் பாராட்டுகிறேன். ஆனால் தமிழகத்திலே மின்சாரம் இரண்டு அடிப்படைகளில்

உற்பத்தி செய்யப்படுகிறது. ஒன்று நீர் மின்சாரம். அதாவது புனல் மின்சாரம். இன்னொன்று, அனல் மின்சாரம். புனல் மின்சாரம் பருவ மழை பெய்து அணைகளிலே நீர் தேங்கியிருக்கும்போது நிறைய உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போது அதற்குச் சங்கடம். இரண்டு பருவக் காற்றுக்கள் பொய்த்து விட்டதால் சங்கடம் என்று இங்கே அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நிலக்கரியைப் பொறுத்தவரையில், இங்கே கொண்டு வந்து பயன்படுத்துவதில் ஏற்படக்கூடிய சங்கடங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். தரம் இல்லாத நிலக்கரி வருவதைப் பற்றியும், தரம் இல்லாத நிலக்கரியிலிருந்தே உயர்ந்த அளவுக்கு உற்பத்தி செய்திருப்பதையும் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே காலத்தினாலே, நெருக்கடி ஏற்பட்டிருக்கும் போது, இயற்கைக் கோளாறுகள் இருக்கின்றபோது, இந்த அளவுக்குச் செய்திருக்கிறார்கள். இந்த நிலை இன்று மட்டுமல்ல, நம் நாட்டிலே என்றைக்கும் இருந்திருக்கிறது. இந்த மின்சாரத் துறைக்கு இதில் அனுபவம் உண்டு. அப்படியானால் புதிதாக மின்சாரம் தமிழகத்திலே தயாரிக்க முடியும் என்ற அளவிற்கு ஏதாவது ஆராய்ச்சிப் பிரிவு இருக்கிறதா? இந்த மின்சாரத் துறையிலே அப்படி ஒரு பிரிவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த

(பிற்பகல் 12-20)

துறையிலே தமிழகத்தில் இருக்கக்கூடிய இயற்கைச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி எந்த அளவிற்கு மின்சாரத்தைத் தயாரிக்கலாம் என்று ஆய்வு நடத்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். சில நாடுகளிலே காற்றின் சக்தியை வைத்து மின்சாரம் தயாரிக்கிறார்கள். ஹாலந்து, பெல்ஜியம், ஜப்பான் போன்ற நாடுகளில் அப்படி மின்சாரம் தயாரிக்கிறார்கள். ரஷ்யா நாட்டிலே, [illegible] தூரத்தில் ஒதுங்கியிருக்கும் கிராமங்களிலேகூட, காற்றின் சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறைகள் இருக்கின்றன என்று அறிய வருகிறேன். தமிழகத்தில் எப்போதும் காற்று வீசும் பகுதிகள் இருக்கின்றன. மலைப் பகுதிகளில் அப்படி இருக்கிறது. கடற்கரைப் பகுதிகளில் அப்படி இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில்கூட எப்போதும் சுழன்று சுழன்று காற்று வீசும் பகுதிகள் இருக்கின்றன. சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஆராய்ச்சி நடந்து, அதை பொருளாதார ரீதியில் உற்பத்தி செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அதிகம் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். இப்போது விவசாயத்திற்கு காற்று விசையின்மூலம் நீர் இறைக்க பரிசோதனை நடந்து, விவசாயப் பல்கலைக் கழகத்தில் இரண்டொருவர் அதைச் செய்து வருவதாக அறிகிறேன். அதைப்பற்றி மின்சாரத் துறையிலே அதிகமாக ஆய்ந்து, நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்

கொள்கிறேன். மூங்கில் பாய்களையே அதன் இறக்கையாக வைத்து, பால் பேரிங்குகளைப் பயன்படுத்தி விண்ட் மில் தயார் செய்து, மின்சாரம் உற்பத்தி செய்தால், அதற்கு யூனிட்டுக்கு ஐந்து பைசாதான் செலவாகுமென்று அறிகிறேன். அந்த முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் சிக்கனமாக, குறைந்த முறையில் செய்ய முடியுமென்று அறிவதால், இதை மின்சாரத் துறை ஆராய்ந்து, அமுலுக்குக் கொண்டுவர முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிற்சாலைகள் பற்றிப் பேசப்படுகிறது. சிறு தொழில்கள், பெருந் தொழில்கள், அவைகளுக்கு மின்சாரம் தருவது பற்றிச் சொல்லப்பட்டது. சிறு தொழில்கள், பெருந் தொழில்கள் நடத்தக்கூடியவர்கள் ஜெனரேட்டர்கள் வாங்க பணம் பெற்றுக்கொள்ளலாம் என்று ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். மின்சாரம் இல்லாததால் பயிர்கள் காய்கின்றன, விவசாயிகள் ஆயில் என்ஜின்கள் வாங்க லோன் தருகிறோமென்று விளம்பரம் வரவில்லை. நான் வருத்தத்தோடு இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மில்லை 10 நாட்களுக்கு மூடிவிட்டால், உற்பத்தி கெடுகிறது. தொழில் அதனால் அழிவதில்லை. ஆனால் பயிர்கள் ஒரு முறை காய்ந்தால் மகசூல் போய்விடும். இதனால் ஆயில் என்ஜின்கள் 1,500, 2,000 ரூபாய் என்று உயர்ந்தாலும், ஒவ்வொரு விவசாயியும் பயிர் காயக்கூடாதென்று பல ஆயிரங்களை இழந்திருக்கும் நிலைமையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் மின்சாரத் துறையிலே அதிகத் தொடர்பு வைத்துள்ளவர்கள். கொஞ்சம் தடுமாற்றத்திற்குப் பிறகு அவர்களுக்கு மின்சாரம் விநியோகிப்பது ஒருமாதிரியாக இருக்கிறது. ஆனாலும் அவர்கள் ஆயில் என்ஜின்களில் முதலீடு செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனக்கேகூட அனுபவம் உண்டு. நல்ல தண்ணீர் இருக்கும் பகுதி என்னுடையது. அங்கே 8,500 ரூபாய் கொடுத்து என்ஜின் வாங்க வேண்டியிருக்கிறது. என்ஜின் கிடைக்காமல், அதற்கு க்யூவில் நின்றார்கள். இன்றைக்கு விவசாயத்தில் உற்பத்தி சரியாக இருந்தால், மத்திய அரசைக் கண்டித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிராது. இந்த நிலை இயற்கையால் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் காவிரி நீரை எதிர்பார்க்கிறோம். இப்போதுள்ள கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே, ஒரு அகில இந்தியக் கட்சியின் பொதுச் செயலாளர், அடுத்த மகசூல் வைக்காதே என்கிறார். மிக புத்திசாலித்தனமாகச் சொல்லுகிறார். ஒரு பக்கம் உணவு இல்லாமல் கஷ்டப்படும் மாநிலத்திற்கு, இன்னொரு பக்கத்தில் அடுத்த மகசூல் வைக்காதே

என்று சொல்லுகிறார். முதலமைச்சரைத் தவறாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கும் பயிர் காய்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லும்போது, கொஞ்சம் தண்ணீர் விடுகிறேன் என்று சொல்லாமல், அடுத்த மகசூல் வைக்காதே என்று சொல்லுவது எப்படி நியாயமாக இருக்கும்? இந்தியா ஒரே நாடு. ஒருமைப்பாடு பற்றிப் பேசுகிறோம். அப்படியிருக்கும் நிலைகளில் ஒரு மின் நிலையம் கட்ட முடியவில்லை. அதனால்தான் ஆசிரியர்கள் சங்க மாநாட்டில்கூட எல்லா நதிகளையும் தேசிய மயமாக்குங்கள் என்று தீர்மானம் போட்டோம். மாநிலப் பிரச்சினை, பிராந்தியப் பிரச்சினை உருவாகி, இந்திய நாட்டில் மாநில உரிமைக்காக நதி நீரை விட மாட்டேன், அப்போதுதான் நமக்கு வாக்கு கிடைக்கும் என்று குறுகிய எண்ணம் வளர்ந்துள்ளதால், பல மாநிலங்கள் வழியாக ஓடும் ஆறுகள் தேசிய மயமாக்கப்பட்டால், அதிலே அணையைக் கட்டி மின்சாரம் எடுக்க தகராறு ஏற்படாது. இந்த நிலையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில், மேற்கே பாய்ந்து சென்று வீணாகும் ஆறுகளையெல்லாம் கிழக்கே திருப்புவதால், விவசாயத்திற்கும் தண்ணீர் கிடைக்கும், மின்சாரமும் கிடைக்கும். [illegible] ஒப்பந்தம் செய்கிறோம். இன்றைக்கும் பேச்சளவில் வீணாகும் நீரைப் பற்றி வேளாண்மைத் துறையிலே பெரிய சர்வே எடுத்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தினால், எவ்வளவு நல்லது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு அடிப்படையாக மோட்டார்களுக்கு இணைப்பு தந்தாலும், அதற்கு சரியான விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயம் வீணானால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்து சேரும். எந்த உற்பத்தி குறைந்தாலும் நாட்டு மக்கள் சகித்துக்கொள்வார்கள். உணவு உற்பத்தி குறைந்தால், அதை சகித்துக்கொள்ள முடியாது. உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு எந்த நேரத்திலும் மின்சாரத்தை குறைபாடு இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று அரசுக்காக சிபாரிசு செய்ய விரும்புகிறேன். விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் குறைந்த சார்ஜில் கொடுக்கிறோம். அவர்கள், தங்களுக்கு ஏற்படும் செலவுகளுக்குக் கட்டுப்படியாகும் விலையைக் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். மின்சாரத்தைப் பயன்படுத்தும் சிறு தொழில் அல்லது பெருந் தொழில் எதுவானாலும், அவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலை, அதற்குப் பிறகு லாபம், அதற்குப் பிறகு வரி, அதற்குப் பிறகு [illegible] விற்பனையில் லாபம் இத்தனையும் பெற முடிகிறது. ஆனால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையைக் கொடுக்க முடியாமல் இருக்கிறோம். சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் விவசாயிகளுக்கு லாபம் தரும் விலையை நிர்ணயிக்க முடியாத நிலைமை ஒரு

ஜனநாயக ஆட்சிக்கு மாட்சிமையாகுமா? அதற்கு யார் பொறுப்பு என்பதைப் பற்றிக் கவலையில்லை. எந்த அரசுக்குப் பொறுப்பு இருந்தாலும், இரண்டு அரசுகளும் சேர்ந்து அதைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற வாதத்திற்குள் நான் போக வில்லை. ஒரேயொரு கருத்தை மட்டும் அவர்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விவசாயிகளுக்கு, நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை ஆண்டுக்காண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடி வந்திருக் கிறது. ஆனால் மின் கட்டணம் 12 பைசா என்று நிர்ணயித்திருக்கிறோமே. அது அந்தக் காலத்திலேயிருந்து அப்படியே நின்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மின்சாரக் கட்டணத்தை ஏற்றிவிட்டார்கள் என்றோ அல்லது ஏற்ற வேண்டுமென்றோ சிபாரிசு செய்ய வரவில்லை. இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குச் சரியான விலையில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதன் காரணமாக மின்சார இலாக்காவோடு அவர்கள் தகராறு செய்யும் அவசியம் ஏற்படுகிறது. பிரைவேட் இன்ஸ்டிட்யூஷனாக இருந்தால் கட்டியிருப்பார்கள். இதுதான் இருக்கும் நிலைமை. எனவே விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையை, லாபம் கிடைக்கும் விலையை நிர்ணயிக்க வேண்டும். இல்லை யென்றால் உணவுப் பஞ்சம் எதிர் காலத்திலும் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயத்திற்கு முதல் இடம் தர வேண்டும். அதற்குப் பிறகு மற்ற சிறு, பெருந் தொழில்களுக்கு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லி, புதிய முறைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வழி வகைகளைக் காண வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-29)

அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

141. The Audit Report on the Accounts of the Tamil Nadu Slum Clearance Board for the year 1979-80 (English). [Laid on the table of the House under section 41 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971) read with section 125(2)(a) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

B. Reports, Notifications and Other Papers.

22. Seventeenth Report of the Committee on Public Accounts on the action taken by Government on the recommendations of the Committee (1977-79) contained in its Sixth Report on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1973-74. (Tamil and English).

இணைப்பு

[217 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 70-க்கான விடையைக் காண்க.)

(அ) விபச்சார சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும், தண்டிக்கப்படும் பெண்களுக்காக அரசு பாதுகாப்பு இல்லங்கள் ஏதும் ஏற்படுத்தியிருக்கிறதா?

விடை.—ஆம். 1956-ம் ஆண்டின் பெண்டிர் சிறுமியர் விபச்சாரத் தொழில் ஒடுக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும், தண்டிக்கப்படும் பெண்டிர், சிறுமியர் மீட்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். விசாரணைக்காக பெண்டிர் தங்கும் குறுகிய கால தங்குமிடங்களே மீட்பு இல்லங்களாகும். விசாரணை முடிந்து, 1956-ம் ஆண்டின் பெண்டிர் சிறுமியர் விபச்சாரத் தொழில் ஒடுக்குச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களால் விதிக்கப்படுகின்ற தண்டனை பெற, இவர்கள் நீண்ட கால தங்குமிடங்களான காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

(இ) அவை எங்கெங்கு உள்ளன?

விடை.—மகளிர் மீட்பு இல்லங்களும், மகளிர் காப்பகங்களும் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் அமைந்துள்ளன:

1. அரசினர் மீட்பு இல்லம், கச்சேரி தெரு, மைலாப்பூர், சென்னை.

2. அரசினர் மீட்பு இல்லம், பெசண்ட் தெரு, சின்ன சொக்கிகுளம், மதுரை.

3. அரசினர் மீட்பு இல்லம், ரேஸ் கோர்ஸ் ரோடு, திருச்சி.

4. அரசினர் மீட்பு இல்லம், ஸ்ரீரங்கப்பாளையம் தெரு, ஹஸ்தம்பட்டி, சேலம்.

5. அரசினர் மீட்பு இல்லம், சின்னய்யன் செட்டி தெரு. செட்டிபாளையம், கோயம்புத்தூர்.

6. அரசினர் மீட்பு இல்லம், ஆபீசர் லைன், வேலூர்.

7. நிறைகாப்பு கழகத்தின் கீழியங்கும் மீட்பு இல்லம், தஞ்சாவூர்.

தண்டிக்கப்பட்ட பெண்டிர், சிறுமியருக்கான இல்லம் (நீண்ட கால நிறுவனங்கள்)—

1. அரசினர் மகளிர் காப்பகம், கச்சேரி தெரு, சென்னை-4.

2. ஸ்திரி சதனா, கச்சேரி தெரு. சென்னை-4.

3. அரசினர் மகளிர் காப்பகம், பெசண்ட் தெரு, சின்னசொக்கிகுளம், மதுரை.

4. அரசினர் மகளிர் காப்பகம், ரேஸ் கோர்ஸ் ரோடு, காஜா மலை, திருச்சி.

5. அரசினர் மகளிர் காப்பகம், ஸ்ரீரங்கபாளையம் தெரு, ஹஸ்தம்பட்டி. சேலம்.

6. அரசினர் மகளிர் காப்பகம், சின்னய்யன் செட்டி தெரு, செட்டிபாளையம், கோயம்புத்தூர்.

(உ) அவை அவர்களின் மறுவாழ்வுக்காக எவ்விதத்தில் பயன்படுகின்றன?

விடை.—மகளிர் காப்பகங்களில் இல்லவாசிகள் எட்டாம் வகுப்பு வரை படிப்பதற்கான கல்வி வசதிகள் அமைந்துள்ளன. இல்லத்தில் அனுமதிக்கப்படும்பொழுது எட்டாம் வகுப்புக்கு மேல் கல்வித் தகுதி பெற்ற இல்லவாசிகளும் இல்லத்திலேயே படித்த எட்டாம் வகுப்பு முடிக்கப் பெற்ற இல்லவாசிகளும்

அவர்களுடைய கல்வியைத் தொடர அருகில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

பொதுக் கல்வியைத் தவிர கைத்தொழில் கல்விகளான நெசவு, தையல், பாய் நெசவு, பூத்தையல் போன்ற ஏனைய கை வேலைப்பாடுகளும் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், ஊதியம் அளிக்கக்கூடிய பணிகளை வியாபார நிறுவனங்களிடமிருந்து பெற்று, அப்பணிகளை முடிக்கும் வகையில் கிடைக்கும் தொகையில் ஒரு பங்கினை அவ்வேலையை முடிக்கும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக, அம்பர்சர்க்கா பகுதி சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் செயல்பட்டு வருவதைக் கூறலாம். இப்பகுதியில் பணிபுரியும் இல்லவாசிகளுக்கு, அப்பணி மூலம் கிடைக்கும் தொகையில் 50 சதவீதமும் அரசுக்கு 50 சதவீதமும் பிரித்து அளிக்கப்படுவதின் மூலம். இல்லவாசிகள் பயிலும்பொழுதே பொருள் ஈட்ட உதவி புரிகிறது. இவ்விதமாக இங்கு அம்பர்சர்க்கா பகுதியில் பெறும் பயிற்சியினால், இம்மாநிலத்தில் உள்ள தொழில் துறைகளிலும் இல்லவாசிகள் வேலை வாய்ப்புகளை, குறிப்பாக கிராமப்புறங்களில் பெற வாய்ப்பு உள்ளன. இதற்கு பாலமாக, தையல், பாய் நெசவு, பாட்டு ஆகிய தொழிற் கல்விகளில் பயிற்சி பெறும் இல்லவாசிகள் பல்வேறுவிதமான அரசு தொழில் நுட்பத் தேர்வுகள் எழுத வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர். எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேறிய இல்லவாசிகளுக்கு பேறுகால உதவியாளர் பயிற்சி, இடைநிலை ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி, வணிகக்கல்வி ஆகிய பயிற்சிகளும் அளிப்பதன் மூலம், அவர்கள் இல்லத்திலிருந்து நீங்கிய பின் அவர்களின் நல்வாழ்விற்கு உதவி புரிகிறது.

தண்டனைக்காலம் முடிந்து நிறுவனத்திலிருந்து நீங்கும் இல்லவாசிகள் அவர்களின் பெற்றோர் அல்லது உறவினர் அல்லது கணவனிடம் ஒப்படைக்கப்படுகின்றனர். சில இல்லவாசிகளுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்பவும், சில இல்லவாசிகளுக்கு பெற்றோர்களின் விருப்பத்தின்படியும் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது. அவ்விதம் திருமணம் நடத்தப்படும் இல்லவாசிகளுக்கு சீதனமாக அரசு ரூ. 1,000 பெறுமான பாத்திரங்கள் போன்றவற்றை தம்பதிகள் குடும்பம் நடத்த மான்யமாக அளிக்கிறது.

பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் இல்லாத இல்லவாசிகளின் தண்டனைக்காலம் முடிவுற்றவுடன், அவர்களின் பாதுகாப்பு வசதியினை முன்னிட்டு அவர்கள் வேலூரிலுள்ள, அரசினர் மகளிர் காப்பில்லத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அங்கு அவர்கள் துணிகள் மற்றும் படுக்கைத்தலுமான பயிற்சி அளிக்கப்படுகின்றனர். விடுதலை செய்யப்பட்ட இல்லவாசிகள் தகுதி வாய்ந்தவர்களாக இருப்பின், வேலை வாய்ப்பகத்

தினரின் சிபாரிசின் மூலம் சமையற் பணியாளராகவும், கடைநிலை ஊழியர்களாகவும், பெண் செவிலியராகவும், மூதாய்களாகவும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். திருமணத்தின் மூலம் அளிக்கப்படும் மறுவாழ்வே, சிறந்த மறுவாழ்வாக விளங்குகிறது. மேற்கண்டவாறாக அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இணைப்பு

232ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தஞ்சாவூர் நகராட்சி தன் மின் திட்டத்தை ஏற்று நடத்தி வருகிறது. தமிழ்நாடு மின் வாரியத்திலிருந்து உயர் அழுத்தத்தில் மின்சாரத்தை பெற்று, பலதரப்பட்ட நுகர்வோர்களுக்கு தாழ்வு அழுத்தத்தில் விற்பனை செய்கிறது.

2. தமிழக அரசு ஆணை எண் 861, பொதுப்பணித்துறை, நாள் 30—4—1982-ன்படி மின் விலை விகிதங்களில் மின் ஏற்பு திட்டங்களுக்கு வழங்குதல் உட்பட 1—6—1932 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 1—6—1982-க்கு முன் தமிழ்நாடு மின்சார வாரியம் நகராட்சி மின் திட்டதிற்கு அளித்த மின் விலை விவரம் கீழே தரப்பட்டுள்ளன :—

யூனிட் ஒன்றுக்கு 0.20 பைசாவும் அதிகபட்ச கேட்பு விலையாக ஒரு கே.வி.ஏ-க்கு ரூ. 25-ம் ஆகும். இதை கணக்கிடுங்கால் ஒரு யூனிட்டுக்கு 0.34 பைசா ஆகிறது.

3. மேற்கூறிய அரசு ஆணைக்கிணங்க தமிழ்நாடு மின்வாரியம் தனது விற்கும் விலையில் 1—6—1982 முதல் கீழ்க்கண்டவாறு ஏற்றம் செய்துள்ளது :—

யூனிட் ஒன்றுக்கு 0.33 பைசாவும் அதிகபட்ச கேட்பு விலையாக ஒரு கே.வி.ஏ-க்கு ரூ. 30-ம் ஆகும். இதைக் கணக்கிடுங்கால் யூனிட் ஒன்றுக்கு 0.54 பைசாவாகிறது.

4. இவ்விலை ஏற்றத்தினால் யூனிட் ஒன்றுக்கு 0.20 பைசா கூடுதலாக தஞ்சை நகராட்சி மின்வாரியத்திற்கு செலுத்தும் வகையில் மாதம் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 2½ இலட்சம், முன்பு வாங்கிய அதே அளவு மின்சாரத்திற்கு, தற்போது அதிகமாக செலுத்த வேண்டியுள்ளது. இது தவிர ஊழியர்கள் ஊதியம், மின் கசிவு, பராமரிப்பு ஆகிய இதர செலவுகளும் உள்ளன. 1980-81-ம் ஆண்டில் இந்த நகராட்சிக்கு ரூ. 2,16,860.70 நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

5. மேற்கூறிய காரணங்களால் நகராட்சியும் தான் விற்கும் விலையை ஏற்றம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆகவே கீழ்க்கண்ட விலை ஏற்றங்களை 1—6—1982 முதல் செய்துள்ளது :—

வரிசை எண்.	மின் உபயோகிப் போரின் வகை.	1—6—82-க்கு முன் நிலவிய விலை விவரம் ஒரு யூனிட்டுக்கு பைசாவில்.	1—6—82-க்கு பிறகு மாற்றம் செய்த விலை விபரம் ஒரு யூனிட்டுக்கு பைசாவில்.
		ரூ.	ரூ.
1.	வீட்டு உபயோகம்	0.40	0.55
2.	தொழில் பிரிவிற்கு	0.45	0.90
3.	வணிகம்	0.80	1.00
4.	விவசாயம்	0.12	0.12
5.	தெரு விளக்கு	0.35	0.55

இதேபோல் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய விலையில் மாற்றம் செய்துள்ள விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

	1—6—82-க்கு முன் நிலவிய விலை விவரம் ஒரு யூனிட் பைசாவில்.	1—6—82-க்குப் பிறகு அமுலில் உள்ள விலை ஒரு யூனிட் பைசாவில்.
தொழில் பிரிவிற்கு	0.36	0.50
வணிகம்	0.73	0.82

6. மேற்கண்ட பல்வேறு விலை மாற்றங்கள் மின்சார வாரியத்தின் விலை ஏற்றத்தை சரிக்கட்டவே ஆகும்.

7. ஆலை முதலாளிகளின் சங்கம், வணிகர்கள் சங்கம், மற்றும் ஒரு தனி நபரும், இந்த விலையேற்றத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மூன்று ரிட் மனுக்களை தாக்கல் செய்து மேற்கண்ட விலை ஏற்றத்தை அமுல் நடத்தாவண்ணம் இடைக்கால தடை உத்தரவு பெற்றார்கள். உயர் நீதிமன்றம், இரு தரப்பின் வாதங்களையும் கேட்டு தடை உத்தரவை நீக்கம் செய்து விட்டது. இந்த ரிட்மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணை செய்து இறுதி முடிவு இன்னமும் வழங்கவில்லை.

இணைப்பு

2 5 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் 1981-82 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61-ம் பிரிவிற்கேற்ப அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கருத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பப் பட்டுள்ளது.

3. மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களில் மின் சக்தி வழங்கப்படும் நிலைமையே மேலோங்கி நிற்கும் என்பது இயல்பானதே. நம்முடைய பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும், அது வேளாண்மைத் துறையாக இருப்பினும், தொழில் துறையாக இருப்பினும், வணிகத் துறையாக இருப்பினும் அனைத்திற்கும் மின்சாரம் இன்றியமையாததாய் இருப்பதுதான் இதற்குக் காரணம். 1981-82 ஆம் (ஜூலை-ஜூன்) ஆண்டில் இம் மாநில அரசு மின்சார தட்டுப்பாட்டினை பெருமளவில் சமாளித்து விட்டது. அக்கால அளவில் 1982 மார்ச் முதல் நான்கு திங்கள் கால அளவிற்கு உச்ச மின் தேவையில் 25 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலுந்தான் மின்வெட்டு அமுலில் இருந்தது. மின்சக்தியில் வெட்டு இல்லை. இரண்டு எம்.வி.எ. மின் திறனுக்கு மேல் மின்சுமையுள்ள குறிப்பிட்ட சில தொழில்களுக்கு மட்டுமே, இந்த உச்ச மின் தேவையின்மீது மின்வெட்டு செயல்படுத்தப்பட்டது. பருவ மழை தொடங்கியவுடன் 1—7—1982-ல் மின்வெட்டு தளர்த்தப்பட்டது.

4. 1981-82 ஆம் ஆண்டில் கிடைத்த மின்சக்தி அளவு குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

	ஜூலை ஜூன்.	ஏப்ரல்—மார்ச்.
	(மில்லியன் யூனிட்)	
புனல் மின்சாரம்	4,936	4,658
அனல் மின்சாரம்	3,204	3,173
நெய்வேலி	2,846	2,686
கேரளா	996	993
பிறவாயில்கள்	126	144
	12,108	11,654

5. நம்முடைய மாநிலத்தின் மின் உற்பத்தி நிலை நீர்த் தேக்கங்களில் நீர் நிரம்பி இருத்தல், வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிலை, நெய்வேலியிலிருந்து கிடைக்கக் கூடிய மின் சக்தி, கேரள மாநிலத்திலிருந்து வாங்கப்படும் மின்சக்தி ஆகியவைகளைப் பொறுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவை அனைத்திலிருந்தும் கிடைக்கும் மின்சக்தியின் அளவு நமது மாநிலத்தின் பெருகிவரும் மின்சக்தித் தேவையளவை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

6. மின்சக்தியைப் பொறுத்தமட்டில், 1982-83 ஆம் ஆண்டில் இம்மாநிலம் எதிர்நோக்கியுள்ள இடர்ப்பாடான சூழ்நிலையை பின்வரும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

(1)	1981—82-ன் புள்ளி விவரம். (2)	1982—83-ல் எதிர் பார்ப்பு. (3)	சதவீதம் உயர்வு (+) குறைவு (—) (4)
(ஜூலை—ஜூன்) (மில்லியன் யூனிட்டுகள்)			
(அ) புனல் மின்சக்தி மேட்டூர் தவிர.	4,080	2,449	(—)40.0
மேட்டூர் ..	856	200	(—)76.6
	4,936	2,649	(—)46.[illegible]

(1)	(2)	(3)	(4)
(ஆ) அனல் மின்சக்தி—			
பேசின் பிரிட்ஜ் ..	239	255	(+) 6.7
எண்ணூர் ..	1,457	1,750	(+)20.1
தூத்துக்குடி ..	1,508	2,386	(+)58.2
	3,204	4,391	(+)37.0
(இ) நெய்வேலி ..	2,846	2,676	(—) 6.0
(ஈ) கேரளாவிலிருந்து வாங்கப்படுவது.	996	45	(—)95.5
ஏனையவை ..	126	70	(—)44.4
	3,968	2,791	(—)29.7
மொத்தம் ..	12,108	9,831	(—)18.8

புனல் மின் உற்பத்தி அளவில் பெருஞ்சரிவிற்குக் காரணம் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததும். இவ்வாண்டு தென்மேற்குப் பருவ மழை வடகிழக்குப் பருவமழை ஆகிய இரண்டும் பொய்த்ததுந்தான். கீழே கொடுக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்வரத்து, அவற்றில் உள்ள நீர்மட்டம் போன்ற விவரங்களிலிருந்து இது புலனாகும்.

(இருப்பு மில்லியன் யூனிட்டுகளில்)

(1)	1981—82-ன் புள்ள விவரங்கள். (2)	1982—83-ல் எதிர் பார்ப்பு. (3)
1—7—1982-ல் உள்ளபடி இருப்பு ..	715	286
நீர்வரத்து—		
நீலகிரி மலைப்பகுதிகளில் ..	2,247	1,204
பரம்பிக்குளம்-ஆளியாறு மலைப்பகுதிகளில்.	707	339
பெரியாறு ..	580	251
கோதையாறு ..	283	138
பாபநாசம் ..	124	62
சுருளியாறு ..	91	41
மொத்தம் ..	4,032	2,035

காவிரியாற்றிலிருந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குக் கருநாடகம் போதுமான அளவில் நீர் விடாததாலும், கேரளத்திலிருந்து பெறும் மின்சாரத்தின் அளவு பெரிதும் குறைந்ததாலும் நிலைமை மிகவும் மோசமாயிற்று. பருவ மழை பொய்த்ததனால் இவ்வாண்டு கேரளமும் பெரும் இடர்ப்பாட்டிலுள்ளது.

7. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் திறனுள்ள மூன்றாம் நிலையம் இவ்வாண்டு (1982 ஏப்ரலில்) செயல்படத் தொடங்கியது. இதன் முதல் ஆண்டு இயக்கத்தின் மூலம் 525 மி. யூனிட் மின் சக்தி கிடைக்க கூடும். எனினும் மின்சாரம் இருப்பு குறைந்தும் தேவை பெருகியுமிருந்த காரணத்தால் தேவையளவை ஈடு செய்ய முடியவில்லை. இவ்வாண்டில் புனல் மின் நிலையங்களின் உற்பத்திக் குறைவினாலும் கேரள மாநில மின்சக்தி யின்மையாலும் 3,238 மில்லியன் யூனிட்டுகள் பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

	மி.யூ.
1. புனல் மின் உற்பத்தியில் பற்றாக்குறை	1,631
2. மேட்டூர் உற்பத்தியில் பற்றாக்குறை	656
3. கேரளத்திலிருந்து பெறும் மின்சார அளவில் பற்றாக்குறை	951

8. மத்திய அரசுத் துறையைச் சேர்ந்த நெய்வேலி நிலையத்தையும் அனல் மின் நிலையங்களையும் மட்டும் இப்பொழுது நம்பியிருக்க வேண்டியுள்ளதால், 1983 ஜனவரி முதல் ஜூன் வரையிலான கால அளவில் தொடர்ந்து மின் வழங்கல் நிலைமை கடினமாகவே இருக்கும். இயந்திர வடிவமைப்பிலுள்ள குறைபாடுகளால் இயந்திரங்கள் அவ்வப்போது நின்றுவிடுகிற நிர்ப்பந்த மிருப்பினும், வழங்கப்படுகிற நிலக்கரியின் தரம் மோசமானதாக இருந்த போதிலும் இம்மாநிலத்திலுள்ள அனல் மின்நிலையங்களில் இவ்வாண்டு உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு 37 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

9. 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எந்தவிதத் தடைகளுமின்றி முழு அளவிற்கு மின்சக்தி விநியோகிக்கப்படும் நிலையில் தமிழ்நாடு மின் இணைப்பு 2,100 மெ.வா. உச்சத் தேவையளவை எட்டியது. நாளொன்றுக்கான மின்சாரப் பயனீட்டளவு 38.5 மிலியன் யூனிட்டாக இருந்தது. மின்சக்தி உற்பத்தி நிலை, மின்தேவை நிலை ஆகிய இவ்விரண்டிலும் ஏற்பட்டிருந்த கடும் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்து மின்வெட்டுக்களும், மின்வழங்கு கட்டுப்பாடுகளும் விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தென்மேற்குப் பருவ மழை பொய்த்தபோது அனைத்து உயரழுத்தத் தொழிற்சாலை 75-ம் அதற்கும் மேலும் பரித்திறன் கொண்ட குறைவழுத்தத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மீது 3—10—1982-லிருந்து மின் சக்தியில் 30 சதவித மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது. 18—11—1982-லிருந்து இம் மின் வெட்டு 45 சதவிதமாக உயர்த்தப்பட வேண்டியதாயிற்று. வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததால் மின் உற்பத்தி நிலை மேலும் மோசமடைந்ததால் 13—12—1982-லிருந்து மின் வெட்டு 60 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டதுடன் வீட்டு பயனீட்டாளர்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் மின்சக்தியின் மீதும் மேலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதையடுத்துத் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. அங்கே முதல் மின் நிலையத்தில் டர்பைன் குழாயில் நீராவிக் கசிவு ஏற்பட்டு உற்பத்தி தடைப்பட்டது. மூன்றாம் மின் நிலையத்தில் பீட் பம்பு இயங்கத் தவறியதால் உற்பத்தி நின்றது. இதே சமயத்தில் இரண்டாம் மின் நிலையத்திலும் முழு அளவில் செப்பனிடு வேலை நடந்துகொண்டிருந்தது. இவைகளினால் மின்சார உற்பத்தி அளவு மிகமிகக் குறைந்தது. எனவே பத்து இலட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு சீராக மின் சக்தியை வழங்கி, மின்சக்தி இன்றியமையாத விவசாயப் பணிகளையும் விளைபொருள்களையும் காப்பாற்றுவதற்காகவே 1982 டிசம்பர் 29-லிருந்து 15 நாட்களுக்கு எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்குவதை நிறுத்தும்படி அரசு ஆணையிட வேண்டி வந்தது.

தூத்துக்குடியில் பதினைந்து நாட்களுக்குள் இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டு, மின் உற்பத்தி நிலை சீர்செய்யப்பட்டது. எனினும், விவசாயத் துக்குப் போதுமான அளவு மின்சக்தி வழங்குவதை உறுதி செய்வதற்காக, உயரழுத்தத் தொழிற்சாலைகளின் தேவை மீதான மின்வெட்டு அளவு 75 சதவீதமாக உயர்த்தப்பட்டதெனினும், மின் வெட்டு அளவு 60 சதவீத நிலையிலேயே நின்றது. உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மேற்குறிப்பிட்ட அளவு மின்வெட்டும், குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 45 சதவீத மின் வெட்டும், வீடுகளுக்கும் பிறவற்றிற்கும் விதிக்கப்பட்டுள்ள வரம்புகளும் செயற்படுத்தப்பட்டால், மேலும் மின்வெட்டு கொண்டுவரும் அவசியமின்றி அடுத்த பருவமழைக் காலமான 1983 ஜூலை வரையில் நாம் நிலைமையைச் சமாளிக்கலாம்.

10. தூத்துக்குடியில் பெறப்படும் நிலக்கரியின் தரம் மோசமாயிருப்பது அங்கு மின்சக்தி உற்பத்தி மிகக் குறைந்திருப்பதற்கான மற்றொரு காரண மாகும். வங்காளம்-பீகார் பகுதிகளிலிருந்து ஹால்டியா துறைமுகம் வழியாக

இரயில்-கடல் வழியாக தூத்துக்குடிக்கு நிலக்கரி வருகிறது. ஹால்டியா துறைமுகம் செயல்படுவதிலுள்ள குறைபாடுகள் காரணமாக, மாத மொன்றுக்கு தேவைப்படும் 1.8 இலட்சம் டன் நிலக்கரி ஒதுக்கப்பட்டு அனுப்பப்படுவதற்கு மாறாக, சராசரி 80,000 டன் நிலக்கரி மட்டுமே தூத்துக்குடிக்கு வருகிறது. மின்சார தட்டுப்பாடு உள்ள ஆறு மாத காலத்தைச் சமாளிக்க வேண்டுமென்றால், தரமான நிலக்கரி போதிய அளவில் தூத்துக்குடிக்கு கிடைக்க வேண்டும். இந்நோக்கத்தை நிறைவு செய்திட உதவிடுமாறு, 1981-லிருந்து நாம் இந்திய அரசின் நிலக்கரி, மின்சக்தி, கப்பல் போக்குவரத்து, இரயில்வே திட்டத்துறை போன்ற பல்வேறு துறைகளை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். ஹால்டியா துறைமுகத்தின் செயல் திறனை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்துவருகிறது. இதன் பயனாக நிலக்கரி வழங்கும் நிலை ஓரளவுக்கு சீரடைந்தாலும் தேவைப்படும் அளவிற்கு இன்னும் சீரடையவில்லை. ஹால்டியா துறைமுகம் செம்மையாகச் செயல்படத் தொடங்கும் வரையில், நிலைமையைச் சமாளித்திட தூத்துக்குடியில் கையிருப்பாக வைத்துக்கொள்ள சுமார் ஐந்து இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதே இப்பிரச்சினையை சமாளிப்பதற்குரிய ஒரே வழி என்று நாம் கருதுகிறோம். இவ்வாறு இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம். நம்முடைய வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம். நிலக்கரி வழங்கும் நிலை சீரடையாவிட்டால், தூத்துக்குடியில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக எரிஎண்ணெயைப் பயன்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. எரி எண்ணெய்ச் செலவை ஈடு செய்வதற்காக உயரழுத்தப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மின்சக்திக்கு யூனிட் ஒன்றுக்கு 45 காசு எரிபொருள் சர்சார்ஜ் கட்டணமாக வசூலிக்கப்படும்.

11. எண்ணூரில் ரூ. 35 கோடி மதிப்பீட்டுச் செலவில் அந்த மின் நிலைய எந்திரங்களை மேம்பாடு செய்வதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது 1983-84 இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும். இதனால் குறைந்தளவு 50 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யமுடியும். எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் எந்திரங்கள் அவ்வப்போது நின்றுவிட்டபடியால் அங்கே முறையே 19.1 சதவீதத்திலிருந்து 29.8 சதவீதம் வரையும், 14.8 சதவீதத்திலிருந்து 40.9 சதவீதம் வரையும் முறையே உற்பத்தி அளவு குறையும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது, நாட்டில் மற்ற பகுதிகளில் இயங்கி வருகின்ற மின் நிலையங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் குறைவாக இருந்தபோதிலும், இதன் செயல்திறனை மேலும் மேம்படுத்த வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

12. **நடைபெற்று வரும் திட்டங்கள்.**—மத்திய, மாநிலத் துறைகளில் விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிற நடைமுறையில் உள்ள திட்டங்கள் வருமாறு :—

ஆண்டு.	கூடுதல் திறன்.	மின் நிலையத்தின் பெயர்.
1982–83	210 மெகாவாட்	தூத்துக்குடி 3-ம் பிரிவு (1982 ஏப்ரலில் மின் உற்பத்தி துவக்கப் பட்டது).
1983–84	235 மெகாவாட்	சென்னை அணுமின் நிலையம். முதல் பிரிவு (அணு).
	15 மெகாவாட்	கீழ் மேட்டூர் (புனல்).
1984–85	20 மெகாவாட்	சேர்வலாறு (புனல்).
	200 மெகாவாட்	கடம்பறை (உச்சத் தேவை) (புனல்).
	75 மெகாவாட்	கீழ் மேட்டூர் (புனல்).
	20 மெகாவாட்	குந்தா 5-ம் நிலை கூடுதல் பிரிவு (புனல்)
	16 மெகாவாட்	கீழ்பவானி, பைகாரா, வைகை—சிறிய நீர் மின் திட்டங்கள்.
	235 மெகாவாட்	சென்னை அணுமின் நிலையம் 2-வது பிரிவு (அணு).
	210 மெகாவாட்	நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது மின் நிலையம் (அனல்).
1985–86	30 மெகாவாட்	கீழ் மேட்டூர் (புனல்)
	30 மெகாவாட்	பார்சன்ஸ் பள்ளத்தாக்கு (புனல்).
	200 மெகாவாட்	காடம்பாறை (உச்சத் தேவை) (புனல்).
	210 மெகாவாட்	மேட்டூர் அனல் மின் நிலையத்தில் முதல் பிரிவு (அனல்).
	420 மெகாவாட்	நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாம் மின் நிலையம் (அனல்).

ஆண்டு.	கூடுதல் திறன்.	மின் நிலையத்தின் பெயர்.
1986-87	210 மெகாவாட்	மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு.

அனல்—அனல் மின் நிலையம்; புனல்—புனல் மின் நிலையம்; அணு—அணு மின் நிலையம்.

13. நெய்வேலி இரண்டாம் அனல் மின் திட்டம் உட்பட மத்திய மின் திட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் திறனைப் பங்கிடுவது குறித்து மத்திய அரசு வகுத்துள்ள நெறிமுறை கவலை தருவதாக உள்ளது. சம்பந்தப்பட்ட மாநிலங்களில் நிலவும் பற்றாக் குறையின் அடிப்படையில் மின் சக்தியைப் பங்கிடுவதற்குப் பதிலாக மத்திய அரசு மத்திய நிதி உதவி அடிப்படையில் நெறி முறை ஒன்றை வகுத்துள்ளது. கடந்த 27—8—1982 அன்று நடைபெற்ற மின்சார அமைச்சர்களின் மாநாட்டில் இது குறித்து நமது நிலையை வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

"புனல் மின் ஆதாரங்கள் அனைத்தையும் பயன்படுத்திவிட்ட நிலையில், தமிழ்நாடு தனது எதிர்காலத் தேவைகளுக்கு அனல் மின் நிலையங்களையே நம்ப வேண்டியுள்ளது. நிலக்கரிச் சுரங்கங்களின் அருகில் அமைக்கப்படும் பெரும்போனல் மின் நிலையங்கள் இச்சுரங்கங்களின் நிலக்கரியை முழுவதுமாகப் பயன்படுத்திடும் வகையில் வரையறைக்கப்படுவதால் புதிதாக அனல் மின்நிலையங்கள் தமிழகத்தில் ஏற்படுத்த நிலக்கரி கிடைக்காது. புதிய அனல் மின் நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் பெரும்போனல் மின் திட்டங்களின் மூலம் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள மின்சாரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் விரும்புவது இயற்கையே. மாநிலங்களிலும் மற்றும் மண்டலங்களிலும் நிலவுகின்ற மின்சார பற்றாக் குறையை கருத்தில் கொள்ளாமல் முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட மின் துய்ப்பு, மாநிலங்களுக்கான மத்திய அரசின் திட்ட நிதி உதவி ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசின் பெரும்போனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான கொள்கை 1978 ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது.

மத்திய அரசின் கொள்கை பகுத்தறிவிற்கு ஒவ்வாததாகவும் உண்மை நிலைக்குப் புறம்பானதாகவும் அமைந்துள்ளதால், மத்திய மின் திட்டங்களிலிருந்து பெறப்படும் மின்சாரம் மண்டலத்திலுள்ள மாநிலங்களில் மின் பற்றாக்குறை விகிதாச்சார அடிப்படையில் பகிர்வு செய்யப்பட வேண்டும் என

தமிழ்நாடு அவ்வப்போது, வலியுறுத்தி வருகிறது. இதனால், மின்சார வளர்ச்சித் திட்டங்களில் போதுமான முதலீடு செய்யாத மாநிலங்களும் பயன் அடைந்துவிடும் என்ற அச்சத்தினை மத்திய அரசு தெரிவித்தது. திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருந்தும், அதே சமயத்தில் போதுமான மின் உற்பத்தி ஆதாரங்கள் இல்லாத மாநிலங்களுக்கும், மின் உற்பத்தி ஆதாரங்கள் இருந்தும் மின்சார வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய விருப்பமில்லாத மாநிலங்களுக்கும் வேறுபாடு உள்ளது. திட்டக்குழு தான் ஆண்டு திட்டத்திற்கும், ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கிறது. வேண்டுமென்றே பற்றாக்குறை ஏற்பட அனுமதிக்கும் மாநிலங்களை திட்டக்குழு தான் கண்டிக்க வேண்டும். ஆனால் மின் திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருந்தும் அதற்கான வாய்ப்புகள் இல்லாத தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு மத்திய திட்டங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் பயனை மறுக்கக்கூடாது.

இது சம்பந்தமாக நெய்வேலி இரண்டாவது சுரங்க மின்சக்தி குறித்து கவனத்தை ஈர்க்க விழைகிறேன். நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டிலிருந்தோ, சென்னை அணுமின் நிலையத்திலிருந்தோ கிடைக்கும் மின்சாரம் முழுவதுமாக நமக்கே கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்கும் போதெல்லாம் குறுகிய மனப்பான்மையுடைய கோரிக்கை என தவறாகக் கருதப்படுகிறது. நெய்வேலி இரண்டாவது சுரங்கமும் சென்னை அணுமின் நிலையமும், இம்மாநிலத்தில் இருப்பதால் மட்டுமே இங்கு உற்பத்தியாகும் முழு அளவு மின்சக்தியையும் நமக்கே அளிக்க வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. ஆனால் தென் மாநிலங்களில் நமது பற்றாக்குறையே மிக அதிகமாக இருப்பதாலேயே இத்தகைய கோரிக்கையை எழுப்புகிறோம் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன். 1970 ஆம் ஆண்டுகளில் ஆரம்பத்தில் அதாவது, நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டுக்கு அனுமதி அளிக்கும் முன்பே நெய்வேலி இரண்டாவது சுரங்கவெட்டில் உற்பத்தி செய்யவிருக்கும் மின்சாரம் முழுவதையும் நாமே பெற்றுக் கொள்வோம் என்று உறுதிமொழி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டோம். நாமும் அவ்வாறே உறுதி அளித்தோம். 1970 ஆம் ஆண்டுகளில் நாம் புதிய திட்டங்களுக்கு அனுமதி கோரும் போதெல்லாம் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்தும், சென்னை அணு மின் நிலையத்திலிருந்தும் கிடைக்கவிருக்கும் முழு அளவு மின்சாரமும் இம்மாநிலத்தின் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நெய்வேலி இரண்டாவது சுரங்கம் மற்றும் சென்னை அணுமின் நிலையம் ஆகியவற்றின் முழு அளவு மின்சக்தியும் இம்மாநிலத்திற்குக் கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே ரூ. 128 கோடி மதிப்புள்ள காடம்பாறை நீர் ஏற்று மின் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நெய்வேலி

இரண்டாவது சுரங்க மின் திட்டத்திற்கு, அதற்குப் பின்னால் 1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட கொள்கையை அமுல்படுத்த முற்படுத்துவது முன்னுக்குப்பின் முரணானது; இது ஏற்புடையது அல்ல".

14. புதிய அனல் மின்திட்டங்களின் ஆதாவது மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் (2×210 மெகாவாட்) வட சென்னை அனல் மின் நிலையம் (5×210 மெகாவாட்) தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம் (1×210+1×500 மெகாவாட்) 6 எரிவாயு மின் நிலையங்கள் (ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறனுடையது) ஆகியவற்றை அமைப்பதன் தேவை 1981 நவம்பரில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாட்டில் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. மின்சக்தி அமைச்சகமும் மத்திய மின்சார அதிகார மன்றமும் இம்முடிவுக்குக் கட்டுப்பட்டவையாகும்.

15. இதனைத் தொடர்ந்து இத்திட்டங்கள் அனைத்திற்கும் உரிய திட்ட அறிக்கைகள் 1981 டிசம்பரில் மத்திய மின்சார அமைச்சகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு இசைவு அளிக்குமாறு அரசு அளவிலும் சென்னையில் 1981 ஜூலையில் மின் சக்தி அமைச்சகமும், 1982 ஜூலையில் திட்டக் குழுவும் நடத்திய ஆய்வுக் கூட்டங்களிலும், வலியுறுத்தப்பட்டது. பின்னர் 1981, 1982-இல் டில்லியில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாடுகளிலும், டில்லிக்கு செல்கின்றபோதெல்லாம் மேலும் அண்மையில் கூட 1983 ஜனவரியிலும் மத்திய மின்சக்தி அமைச்சரையும், நிதி அமைச்சரையும், இரயில்வே அமைச்சரையும், திட்டக் குழுவையும் இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்குமாறு மீண்டும் மீண்டும் கேட்டு வந்துள்ளோம். என்றாலும், மேட்டூர் அனல் மின் விரிவாக்கத் திட்டத்திற்கு மட்டுமே இசைவளிக்கப்பட்டுள்ளது. ஏனைய திட்டங்களுக்கு இசைவளிக்கப்படவில்லை.

16. ரூபாய் 113 கோடி மதிப்பீட்டு செலவில் 6×50 மெகாவாட் திறன் கொண்ட காஸ்டர்பைன் (எரிவாயு) மின் நிலையங்களை நிறுவுவதற்கு மத்திய அரசுக்குச் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளதாக கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டேன். எரி எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணி தேவைப்படுகிறதென்கிற காரணங்காட்டி, இந்நிலையங்களை அமைப்பதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. மராட்டிய மாநிலத்தில் காஸ்டர்பைன் (எரிவாயு மின்) நிலையங்களை (4×60 மெகாவாட்) இயக்குவதற்கு அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நமது திட்டத்திற்கு விரைவில் இசைவளிக்குமாறு நாம் மத்திய அரசை மீண்டும் அணுகியுள்ளோம். இத்திட்டம் மின் சுமையால் ஏற்படும் மின் நிறுத்தங் களையும் தடைகளையும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படும் நோக்கில் தேவைக் கட்டுப்பாடுகள் போன்ற நிலைமைகளையும் தவிர்க்கும்.

காஸ்டர்பைன்கள் (எரிவாயு மின்) மூலம் ஒரு சில நிமிடங்களில் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமாதலால் அனல் மின் நிலையங்களில் பிரிவுகள் எவையேனும் பழுதடைந்து விட்டால், தடையின்றி மின்சக்தியை வழங்கு வதற்கு காஸ்டர்பைன் (எரிவாயு) மின் உற்பத்தித் திட்டம் சிறந்ததொரு சாதனமாக அமையும்.

17. வருங்காலத்தில் மாநிலத்திற்கு இன்னும் அதிகம் மின்சக்தி தேவைப் படும் என்பதைக் கருதி நெய்வேலியில் மத்திய அரசு வெட்டவிருக்கும் மூன்றாவது சுரங்கத்திலிருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி தனது சொந்தச் செலவில் மின் நிலையம் ஒன்றை அமைக்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. நெய்வேலியில் 812 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 5×210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்துள்ளோம். இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தும்.

18. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளத்தில் இரண்டாவது அணு மின் நிலையத்தை அமைப்பதற்கு இம்மாநில அரசு மத்திய அரசை நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்துள்ளது. இந்த இடம், மத்திய அரசு இடத் தேர்வுக் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்ட இடமாகும். குழு தனது அறிக்கையை ஏற்கனவே மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது எனத் தெரிய வருகிறது. இம் மாநிலத்தின் உடனடி மின் தேவையை உணர்வதற்கறிகுறியாக இத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வர வேண்டும்.

19. ஒகேனக்கல் (800 மெகாவாட்), பாண்டியாறு-புன்னம்புழா (150 மெகாவாட்), நெல்லித்துறை (50 மெகாவாட்), போன்ற திட்டங்கள், பிற மாநிலங்களுக்கிடையே ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினை களுக்குத் தொடர்புள்ளவை. பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தவரையில் 1982 நவம்பர் திங்களில் கேரள-தமிழக அமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளில் சில முன்னேற்றங்கள் காணப் பட்டுள்ளன. ஒருமித்த உடன்பாடு ஏற்படலாமென நம்பப்படுகிறது. அதன் மூலம், மாநிலங்களுக்கிடையேயான திட்டங்களைச் செயல்படுத்த வழி ஏற்படும்.

20. மாநிலத் திட்டத்தில் மின் சக்தி மேம்பாட்டுக்கு எப்போதுமே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85), மின்சக்திக்கு ரூ. 1,022.80 கோடி (அதாவது, மின் உற்பத்திக்கு ரூ. 572 கோடி, மின் அனுப்புதல்-விநியோகத்திற்கு ரூ. 325 கோடி, ஊரக மின் வழங்குதலுக்கு ரூ. 115 கோடி, பல்வகைப் பணிகளுக்கு ரூ. 10.50 கோடியும்)

நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் ஆன செலவு முறையே ரூ. 158.61 கோடி, ரூ. 174.53 கோடியாகும். நடப்பாண்டின் (1982-83 ஆம் ஆண்டின்) திருத்த மதிப்பீடு ரூ. 220.25 கோடியாகும். 1983-84 ஆம் ஆண்டின் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 272 கோடியாகும். நடப்பாண்டு நிதி ஒதுக்கத்திற்கு மேலாக ரூ. 52 கோடி அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. மின் உற்பத்திக்கு மட்டும் இந்த நிதி ஒதுக்கத்தில் ரூ. 40.28 கோடி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும் அனைத்து மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து முன் நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும், மேலும் அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டிய தேவையை இது எடுத்துக் காட்டுகிறது.

21. கிடைக்கக்கூடிய எல்லா வாயில்களிலிருந்தும் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், மைக்ரோ, மினி மற்றும் சிறு அளவு நீர் மின் சக்தித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதில் நாம் முழு மூச்சுடன் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். ஏற்கெனவே ரூ. 11.71 கோடி மதிப்பீட்டு செலவில் 3 மைக்ரோ நீர் மின்சக்தித் திட்டங்களுக்கு, மத்திய அரசு இசைவளித்துள்ளது. இத் திட்டங்களுக்கு ஜப்பான் நாட்டு "யென்" கடன் வசதி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் தவிர, ரூ. 2.4 கோடி மதிப்பீட்டுச் செலவில் சிறுவாணியில் 3 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மைக்ரோ நீர்மின் திட்டம் ஒன்றுக்கான செயற்குறிப்பு, 1982 ஜனவரியில் மத்திய மின் கழகத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பாம்பிக்குளம்-ஆழியாறு தேர்குதியில் புனாச்சியில் ஒரு மெகாவாட் திறன் கொண்ட இரண்டு நிலையங்களுடன் மற்றொரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய மைக்ரோ, மினி நீர் மின்சக்தித் திட்டங்கள் பலவற்றிற்கு நாம் திட்டங்கள் தீட்டியுள்ளோம். அண்மையில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்களின் மாநாட்டில் கருத்து தெரிவித்தது போல், இந்த திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரங்கள் மாநில அளவில் ரூ. 1 கோடி என்று 1948-ல் நிர்ணயித்துள்ளதை இந்திய அரசு அதிகப்படுத்தி திட்டமொன்றிற்கு ரூ. 10 கோடி என்றாவது உயர்த்த வேண்டும்.

22. இம் மாநிலத்தில் இயற்கை வள வாயில்களைப் பயன்படுத்தி மின் உற்பத்திசெய்வது ஒரு வரம்புக்குட்பட்டேயுள்ளதால் மின் சக்தி பெறுவதற்கான மாற்று வாயில்களைப் பயன்படுத்துவதில் நாம் ஆர்வம் காட்டி வருகிறோம். இந்த வகையில் நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எனது முந்திய வரவு-செலவுத் திட்ட உரைகளில் எடுத்துக் கூறியுள்ளேன். செங்கல்பட்டு மாவட்டம், உத்தண்டி கிராமத்தில் ஒரு (போட்டோ வோல்டை) சூரிய ஒளிக்கதிர்களால் இயங்கும் பம்ப் ஒன்று 1982 மே திங்களில் செய்முறை

விளக்கத் திட்டமாக நிறுவப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த பம்பு இயங்குவது பெருமளவாக திருப்தி அளிப்பதாக உள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த பம்புகள் குறைந்த விலைக்குக் கிடைக்குமானால் மேலும் அத்தகைய பம்புகளை வாங்கி நாம் நிறுவலாம்.

23. 1982-83-ல் மின்சக்தி சேமிப்பு இயக்கம் ஒன்றை நாம் தொடங்கினோம். மின் அனுப்புகை முறையில் சிறு மாற்றங்கள் செய்வதன் மூலம் மின்சக்தியைச் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை, செங்கல்பட்டு மின் திட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் விசையேற்றங்களை ஆய்வு செய்வதன் மூலம் தெரியவந்துள்ளது. தொழிற்சாலை உரிமையாளர்கள் தாம் பயன்படுத்தும் மின் சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மின்சக்தி சேமிப்பின் தேவை குறித்துப் பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும், தொலைக் காட்சி மூலமும் மின் நுகர்வோருக்குப் பிரசாரம் செய்யப்படுகிறது. வீடுகளில் மின்சாரம் பயன்படுத்துவோர், வணிக நிறுவனங்கள், உழவர்கள் ஆகிய பல்வகை மின் நுகர்வோருக்குக் கருத்துரைகள் வழங்கும் வெளியீடு ஒன்று தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

24. மரக் கட்டையை எரிபொருளாகக் கொண்டு ஒரு மெகாவாட் திறனுள்ள அனல் மின்சக்தி நிலையமொன்றை நிறுவுவதற்காக நீர், மரம், நிலம் ஆகியவை கிடைக்குமா என்பது பற்றிய சாத்தியக்கூறு ஆய்வுகளும் புள்ளி விவரச் சேகரிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் நீர், நிலம், மரம் ஆகியவை எந்த அளவுக்குக் கிடைக்கின்றன என்பது பற்றிய ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. செட்டிநாட்டிலும், புதுக்கோட்டையிலும் ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 50 கிலோவாட் கோபர் வாயு மின்சக்திப் பிரிவுகள் இரண்டை நிறுவுவதற்கான செயற் குறிப்புகள், புது டெல்லி கிராமப்புற மின்சக்திக் கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

25. மின் அனுப்புகை-மின் விநியோக முறைகளை வலுப்படுத்தப் படுவதற்காக கடந்த சில ஆண்டுகளாக நாம் முக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம். இதற்கான நிதி ஒதுக்கீடு 1976-77-ல் ரூ. 13 கோடியாக மட்டுமே இருந்தது. நடப்பு ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 77.21 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் 407 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர் அமைக்கப்பட்டது. கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர் துணை நிலையங்கள் 12 தொடங்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டு திட்ட இலக்கு, 1,200 கிலோ மீட்டர் கூடுதல் உயரழுத்த மின்கம்பித் தொடர் அமைப்பதும், 34 துணை நிலையங்களை ஏற்படுத்துவதுமாகும்.

[1983 பிப்ரவரி 9

26. தமிழகத்தில் உள்ள 15,735 கிராமங்கள், 47,838 சிற்றூர்கள் ஆகியவற்றில் 1982 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வரை 15,611 கிராமங்களுக்கும், 47,468 சிற்றூர்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 1982-83-ல் 49 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 31—12—1982 அன்றைய நிலவரப்படி 15,627 கிராமங்களுக்கும், 47,485 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மின் வசதி அளிக்கப்பட வேண்டிய எஞ்சிய கிராமங்களும், சிற்றூர்களும் மலைப் பகுதிகளில் அமைந்துள்ளன. மேலும் அவற்றை அடைவதற்குச் சரியான சாலை வசதிகளும் இல்லை.

27. 1979 மார்ச் 31, முடிவிற்குள் ஆதித் திராவிடர் குடி இருப்புகளில் அன்றுவரை இருந்த 25,526 குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி அளித்துள்ள பெருமை தமிழ்நாட்டிற்குரியதாகும். 1—4—1979-க்குப் பின்னர் உருவான குடியிருப்புகள் உட்பட 31—12—1982 வரையில் 25,955 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய குடியிருப்புகள் தோன்றத் தோன்ற சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து தெரு விளக்குகள் போடுவதற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றதும் அப் புதிய குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்படும்.

28. 1981-82 ஆம் ஆண்டில் 26,209 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ளவாறு மொத்த விசையேற்றங்களின் எண்ணிக்கை 9,45,520 ஆகும். விவசாய பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வேண்டி இன்னும் விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. தற்போது மூன்று இலட்சம் விவசாய பம்பு செட்டுகளுக்கான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. தற்போதைய மின் பற்றாக்குறை நீங்கியதும், இவ்விண்ணப்பங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

29. கிராம ஊராட்சியிலுள்ள குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் சிறப்பு நல்வாழ்வுத் திட்டம் முதலில் 1979 மே திங்களில் தொடங்கப்பட்டது. 31—12—1983 வரையில் சுமார் 5.03 இலட்சம் குடிசைகளுக்கு மின் விளக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 31,726 தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே நிலுவையில் உள்ளன. 1980-ல் மின் வாரியம் தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டதிலிருந்து தெரு விளக்குகள் எரிவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரையில் 41,378 குண்டு பல்புகளை இரண்டு அடி குழல் விளக்குகளையும் மாற்றி நான்கு அடி குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

30. கடந்த ஆண்டில் செயல்படுத்தியதுபோல கிராமப்புற விநியோகத்தில் தொகுதி நேரக் கட்டுப்பாட்டின் காலங்களிலும் ... வழங்கும் பணிகளுக்கென இடைவிடாமல் தடையின்றி மின் சக்தி ...

1983 பிப்ரவரி 9]

பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட குடிநீர்ப் பணிகளுக்குத் தனி மின் கம்பித் தொடரை அமைப்பதற்கு ரூ. 150 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 40 குடிநீர் வழங்கும் பணிகளுக்குத் தனி மின் கம்பித் தொடர்கள் அமைக்கப்பட உள்ளது.

31. 1981-82 ஆம் ஆண்டில் கிராமப்புற மின் இணைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, ரூ. 8.61 கோடி கடன் வசதியை இந்திய கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நாம் பெற்றுள்ளோம். நடப்பு ஆண்டில் இக்கழகத்திடமிருந்து ரூ. 9 கோடி கடன் வசதிபெறக் கருதப்பட்டுள்ளது.

32. 1981—82, 1982—83 ஆகிய ஆண்டுகளுக்கான வரவு செலவு விவரங்களான:—

	1981—82 (திருத்த மதிப்பீடு).	1982—83 (வரவு செலவு திட்ட மதிப்பீடு).
(1)	(2)	(3)
	(ரூபாய்	கோடியில்.)
1. மின் சக்தி விற்பனை ..	276.26	304.88
2. பல்வகை வருவாய் ..	6.51	7.00
	282.77	311.88

செலவினங்கள்.	1981—82 (திருத்திய மதிப்பீடு).	1982—83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு).
(1)	(2)	(3)
	(ரூபாய்	கோடியில்.)
1. எரிபொருள், மின்சாரம் வாங்கியது, மின் உற்பத்திக்கான ஆயத்தீர்வை வகையில்.	215.56	286.11
2. நிர்வாகம், அனாமத்துச் செலவு உட்பட இயக்கிப் பராமரிக்கும் வகையில்.	99.73	123.27
3. தேய்மானம் ..	37.42	42.20
4. வட்டி ..	69.79	84.78
	422.50	536.36
வருவாயில் துண்டு விழும் தொகை ..	139.73	224.48

33. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 183.13 கோடியாக இருந்த வாரிய வருவாய் அளவு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 282.77 கோடி அளவுக்கு உயர்ந்த போதிலும், வாரியத்தின் நிதி நிலைமையில் முன்னேற்றம் இல்லை. ஏனென்றால், 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 210 கோடியாக இருந்த வாரிய செலவினங்களின் அளவு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 422.59 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. நிலக்கரி, உலை எண்ணெய், சரக்கு கட்டணம், வெளியிலிருந்து வாங்கும் மின்சாரம் ஆகியவைகளின் விலையேற்றம் காரணமாக வருவாய் தொடர்பான செலவினம் அதிகரித்துள்ளது.

34. 1977-82 ஆம் ஆண்டில் ரயில்வே சரக்குக் கட்டணம் தவிர, அனல் மின் நிலையங்களுக்குரிய எரிபொருள்கள் (நிலக்கரி, உலை எண்ணெய்) ஆகியவற்றின் விலைகள் மிக உயர்ந்துவிட்டன. நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 88 ஆக இருந்தது. டன் ஒன்றுக்கு ரூ. 194 ஆக உயர்ந்திருக்கையில், உலை எண்ணெயின் விலை கிலோ லிட்டருக்கு 1,024 ரூபாயிலிருந்து 2,691 ரூபாயாக அதிகரித்தது. நிலக்கரியை அனுப்புவதற்கான ரயில்வே சரக்குக் கட்டணம் டன் ஒன்றுக்கு 56 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக அதிகரித்துள்ளது. கடல் வழியாக நிலக்கரியை அனுப்புவதற்கான கடல் வழிச் சரக்கு கட்டணம், இதரக் கட்டணங்கள் டன் ஒன்றுக்கு ரூ. 197 ஆக இருந்தது, ரூ. 315 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாண்டில் எல்லா வகையான இவ்விலை ஏற்றங்கள் காரணமாக வாரியத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 124.57 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

35. மின் திட்டத்திலிருந்து கிடைக்கும் நிதியை ஒழுங்குபடுத்தி, வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு, நாம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தமிழகத்தில் மின் விநியோகத்தில் கிராமப்பகுதி, குறைவழுத்த மின் பங்கீடு பெரும்பகுதியாக அதாவது 75 சதவீதம் இருந்த போதிலும், 1974-75-ல் மின் கம்பி வழியான மின்சார இழப்பு 21.5 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டது. மின் இணையத்தில் தொடர்ந்து மின்சுமை அதிகரிக்கப்பட்டபோதிலும். திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாடு மின்வாரியம், 1974-75-ல் 21.5 சதவீதமாக இருந்த மின்சார இழப்பை 1981-82-ல் 18.9 சதவீதமாகக் குறைத்துள்ளது. இந் நாட்டிலுள்ள பிற மாநிலத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், அதாவது, இந்நாட்டிலுள்ள, மொத்த மின் அமைப்பில், தமிழ்நாட்டில் மட்டும் மூன்று இலட்சம் கிலோ மீட்டர் மின் கம்பித்தொடர் இருப்பதையும் இந்த மின் இணைப்பில் பல லட்சக்கணக்கான பம்பு செட்டுகள் இயங்குவதையும் கருத்திற்கொண்டு பார்த்தால், இந்த அளவுக்கு மின் இழப்பு குறைந்திருப்பது ஒரு மாபெரும் சாதனையாகும். இதர மாநிலங்களுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, 1979 ஆண்டின் புள்ளி விவரங்களின்படி ஆந்திரப்பிரதேசம் (22.8 சதவீதம்),

கருநாடகம் (21.2 சதவீதம்). ஹரியானா (28.1 சதவீதம்), மத்தியப் பிரதேசம் (22.5 சதவீதம்), பஞ்சாப் (19.8 சதவீதம்) ஆகும். மின் கம்பித் தொடர் இணைப்பும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கையும் தமிழகத்தைக்காட்டிலும் இம் மாநிலங்களில் மிகக் குறைந்திருந்தபோதிலும், அவற்றில் காணப்படுகின்ற மின் கம்பித் தொடர் இழப்பு அதிகமாகவே உள்ளது.

36. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மின்சக்தி திருட்டையும், தவறாகப் பயன்படுத்துவதையும் கண்டுபிடிக்க தீவிர முறையில் வரிவிதிப்பு செய்தல், மின் கட்டணப் பட்டியல்கள் ... பணம் வசூலித்தல், பணியாளர்களை ஆங்காங்கே வேலைக்குப் ... அனுப்புதல் போன்ற ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். மின்சக்தி திருட்டையும், மீட்டர்களைத் தவறான முறையில் இயங்கச் செய்வதையும் தடுப்பதற்காக முறையாகவும், அடிக்கடியும் சென்று ஆய்வு செய்வதன்மூலமும். பெருமளவில் திடீர்சோதனைகள் திடீர் ஆய்வுகள் நடத்துவதன் மூலம் தீவிரத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். 1981-82 ஆம் ஆண்டில் இத்தகைய முறைகேடுகள் 1.2 இலட்சம் அளவில் கண்டுபிடிக்கப்பட்டு, கூடுதலாக ரூ. 33.40 இலட்சம் வருவாய் கிட்டியது. நடப்பாண்டில், 56,010 மின் இணைப்புக்களில், முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டு, கூடுதலாக ரூ. 11.35 இலட்சம் வருவாய் கிடைக்க கட்டண விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

37. மின் கட்டணத்தை அந்தந்த இடத்திலேயே மின் கட்டண அட்டையில் குறிப்பிடுதல் பட்டியிட்டு கட்டணத் தொகை வசூலிக்கும்முறை 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டு அது இடைவிடாமல் மேம்பாடடைந்து வருகிறது.

38. கடந்த ஆண்டில் அரசுக்கும் மின்துறைப்பணியாளர்களுக்கும் இடையே பயனுள்ளவகையில் ஒத்துழைப்பு நிலவி வந்ததைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மின்துறையில் இவ்வாண்டு எந்த வகையான கிளர்ச்சிகளோ வேலைநிறுத்தங்களோ நடைபெறவில்லையென்பதே இந்த சுமுக உறவுக்கு எடுத்துக் காட்டு. பணியாளர்களின் பிரச்சினைகளை பரிவுடன் கவனித்தது நிர்வாகம். மின்துறை செவ்வனே இயங்க அக்கறையோடு பணி புரிந்தனர் தொழிலாளர்கள்.

39. மின் உற்பத்தியை பெருக்க மாபெருந் திட்டத்தை நாடு நீட்டியுள்ளது. இத்துறைப் இப்பணியில் மாநிலங்கள் பெரும் பங்கேற்க வேண்டியுள்ளது. இத்துறைப் பணிகளை மேன்மேலும் பரவலாக்கி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாகத்

தான் இம்மாபெரும் பணியை நாம் சாதிக்க முடியும். ராஜாத்யக்ஷா குழு அளித்துள்ள கருத்துப்படி, இத்துறையின் பணிகளை அளவுக்கு மீறி ஒரு இடத்தில் குவிப்பதால், மைய அரசுக்குப் பெருஞ்சுமையே ஏற்படும். அதன் விளைவாக திறமைக்குறைவு ஏதேனும் ஏற்படுமானால், இன் நாளடைவில் நாடு முழுவதும் சீர்கேடுகள் உண்டாகும். நாடெங்கிலும் மின் ஏற்பாடுகளை நிருவகிக்க ஆதாயம் தரும் சிறு அளவிலான அமைப்புகளை உருவாக்கி அவற்றைத் தேசிய அளவில் ஒருங்கிணைப்பதுதான் நல்லது. ராஜாத்யக்ஷா குழு பின்வரும் பெரும் மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கருத்து தெரிவித்துள்ளது. வட்டார மின் அதிகாரமன்றங்களை ஏற்படுத்துதல், மின்வழங்கல் சட்டம் முதலியவற்றிற்குத் திருத்தங்கள் கொண்டுவருதல், மாநில மின் வாரியங்களிடமிருந்து அவற்றின் மின் உற்பத்தியில் பெரும் பகுதியையும் மாநில மின் அனுப்புகை உயரழுத்த மின்கம்பி இணைப்புத் தொடர்களின் பெரும் பகுதியையும் எடுத்துக்கொண்டு, நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 45 விழுக்காட்டினை மத்திய அரசுத்துறையில் வைத்தல்போன்ற இப்பரிந் துரைகளை அக்குழு அளித்துள்ளது. வட்டார மின் அதிகார மன்றம் அமைத்தல் மின் ஏற்பாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதும், மின் உற்பத்தி நிலையங்களின் முழுப்பயனளவிற்கும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதும், புனல் மின் நிலையங்கள் அனல் மின் நிலையங்கள் அணுமின் நிலையங்கள் போன்ற மின் நிலையங்களின் மின் உற்பத்தியைத் தக்கவாறு இணைக்க வேண்டுமென்பதும், மின் திட்டங்களில் போதிய அளவில் முதலீடு செய்ய வேண்டுமென்பதும் அக்குழு தெரிவித்துள்ள முக்கியமான மேலும் சில பரிந்துரைகளாகும். மின் ஏற்பாடுகள் ஒருங்கிணைந்து செயல் படுவதற்கும், மின் உற்பத்தியை முழுப்பயனளவிற்கும் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு, தனக்கே சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஐரோப்பாவில் தனித்தனி நாடுகள் ஒன்றாக இணைந்து, தங்கள் மின் இணைப்புகளை ஒருங்கிணைந்த முறையில் இயங்கி வருகின்றன. அதேநேரத்தில் தத்தம் மின் நிலையங்களின் உடைமை உரிமையையும் அவை தங்களிடமே வைத்து வருகின்றன. எனவே, இ[illegible] வேண்டுவதெல்லாம் ஒப்புக்கொள்ளும் கோட்பாடுகளுக்கிணங்க மின் உற்பத்தி நிலையங்களைத் திறம்பட ஒருங்கிணைத்து. மாநிலங்கள் தங்களுக்குள் [illegible] ஒத்துழைப்பை உருவாக்குவதும், மத்திய அரசு பயன்தரத்தக்க [illegible] உறுதுணையாக இருப்பதும்தான். வட்டார மின்சார மன்றங்களைத் தோற்று விப்பது இதற்குப் பரிகாரமல்ல. இப்பொருள் பற்றி, இவ்வரசும், இம்மாநில மக்களும் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்சினையைப் பற்றி கடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் நான் குறிப்பிட்டு, மைய அரசு மின் உற்பத்தியில் பெரும்பகுதியையும், மின்சார அனுப்புகை ஏற்பாடுகளில் பெரும்பகுதியையும் எடுத்துக்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளிக்காது

என்பதையும் தெரிவித்துள்ளேன். முக்கியமான இப்பிரச்சினையின் மீது மாண்புமிகு உறுப்பினர்களின் ஆழ்ந்த கருத்துக்கள் பெரிதும் பயன்தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின் வாரியத்தின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை இப்பேரமன்றத்தின் முன் வைத்து அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை அறிய விழைகின்றேன்.

தமிழ்நாடு ... சென்னை-600 008.
143132
D
V211;32'N83
N83.192-1-3

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 .. Sitbaraman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Roa Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop No 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop 90, Amman Sannathi, Madurai-1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.